விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 06 தந்தி 44 ஞாயிற்றுக்கிழமை 30.09.2018 Sunday 30th September 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

இலங்கையின் பொருளாதாரத்தை சிதைத்தது இனவாதமே!

சபாநாயகர் கரு ஜயசூரியா

இந்துக்களும் பௌத்தர்களும் இணைந்து பயணிக்க வேண்டும்

சுதந்திரத்திற்கு முன் தமிழர்களும் சிங்களவர்களும் முரண்பட்டதாக வரலாறுகள் இல்லை

60களில் ஆனந்தாக் கல்லூரியில் விஞ்ஞான பாடம் கற்பித்தவர்கள் இந்தியத் தமிழர்களே

1947இல் ஆசியாவில் இரண்டாவது பெரிய தலா வருமானம் பெற்ற இலங்கை தற்போது 26 இடத்திற்கு தள்ளப்பட்டதற்கு காரணம் உள்நாட்டுப் பிரச்சினையே

1947	
ஜப்பான் தலா வருமானம்	90 டொலர்
இலங்கையின் தலா வருமானம்	89 டொலர்
2017	
தற்பொழுது இலங்கை 26ஆவது இடத்தில் உள்ளது	

ஆசியாவில் இரண்டாவது பெரிய தலா வருமானத்தைக் கொண்டிருந்த இலங்கை தற்பொழுது அதிலிருந்து சரிந்துள்ளது. அதற்குக் காரணம் இங்கு இடம்பெற்ற இனப்பிரச்சினையும் அதைத் தோற்றுவித்த இனவாதிகளுமே காரணம் என சபாநாயகர் கரு ஜயசூரிய கொழும்பு ஜெய்ஹில்டன் (Hilton) ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் யாழ்.இந்துக் கல்லூரிக்குமான விளையாட்டு விழாவின்

02ஆம் பக்கம் பார்க்க

மைத்திரியையும் மகிந்தவையும் ஓரணியில் இணைக்க முயற்சி!

இலங்கையில் தற்போது எழுந்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல் நிலைக்கு முகங்கொடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கூட்டு எதிரணியை இணைப்பதற்காக புதிய முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகின்றது. அரசாங்கத்தில் இருந்து விலகி சென்ற ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 15 உறுப்பினர்களின் பிரபலமான சிலரும், கூட்டு எதிரணியின் தலைவர் மத்தியில்

02ஆம் பக்கம் பார்க்க

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத சிறையிலுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்ய

ஜனாதிபதிக்கு சர்வதேசம் அழுத்தம்

தற்போது கைதாகி சிறை யில் இருக்கும் விடுதலைப்புலிகளின் அமைப்பின் உறுப்பினர்களை உடனடியாக விசாரணைக்குட்படுத்தி நிரபராதி என நிரூபிக்கப்பட்டால் விடுதலை செய்வதற்கு சர்வதேசம் ஜனாதிபதிக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளதால் அவர்களின் விசாரணைகளில் தீவிர கவனம் செலுத்த அரசாங்கம் தற்போது அவதானம் செலுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இதனிடையே சிறையில் இருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது குற்றம் இருந்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவ்வாறு இல்லையென்றால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவது தொடர்பில் கடந்த 26ம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும், எதிர்க்கட்சி தலைவர் ஆர். சம்பந்தன் அவர்களுக்குமான பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

02ஆம் பக்கம் பார்க்க

இளைஞர்களுக்கு ஐ.தே.க.வில் முக்கியத்துவம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியில் அனைத்து ஆசனங்களையும் இளைய உறுப்பினர்களுக்கு நியமிப் பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரியவ ருகின்றது.

வருகின்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக இளைஞர் களை களமிறக்குவதற்கு அவர் களுக்கு அரசியல் சம்பந்தமான அறிவூட்டவும், பயிற்சி அளிப்பது தொடர்பான பல வேலைத்திட் டங்கள் ஐக்கிய தேசிய கட்சியின் இளைய உறுப்பினர்களுக்காக ஆரம்பிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நவீன் திஸாநாயக்க, செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் , பிரதி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கட்சியின் பொது செயலாளர் கபிர் ஹசிம் போன்ற கட்சியின் பிரதான தலைமைகளின் கீழ்

02ஆம் பக்கம் பார்க்க

பொலிஸ் மா அதிபர் பூஜிதவுக்கு எதிராக

நம்பிக்கையில்லாப் பிரேரணை

பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்திரவுக்கு எதிராக நம்பிக்கை யில்லா பிரேரணை யொன்றை கூட்டு எதிரணி பாராளு மன்றத் திற்கு

02ஆம் பக்கம் பார்க்க

புதிய அரசியலமைப்பு தொடர்பில்

மக்களின் எதிர்பார்ப்பு குறைந்துள்ளது!

புதிய அரசியலமைப்பு தொடர்பான எதிர்ப்பார்ப்பு தற்போது மக்கள் மத்தியில் குறைந்து வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும் விதம் குறித்து தற் போதும் சிக்கல் நிலை நிலவுகின்றது. 20ம் அரசியமைப்பு திட்டம் தொடர்பில் விழிப்பு ணர்வோடு செயற்படுவதாகவும், திறந்த மனத்துடன் செயற்பட விரும்புவதாகவும் அக் கட்சி தெரிவித்துள்ளது. ஆனால் மீண்டுமொரு அரசியல மைப்பை தயாரிப்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் அதிப்தி அடைவதாக சிங்களவார பத்தி ரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுமந்திரன் மீதான கொலை முயற்சி குற்றச்சாட்டு சிலரது சுய நோக்கத்திற்காகவே சுமத்தப்பட்டது

கிளிநொச்சி ஊடகவியலாளர் சந்திப்பில் ஆனந்தசங்கரி

சிலரது சுய நோக்கத்திற்காக சுமந்திரன் அவர் களை கொலை செய்ய வந்ததாக கூறி அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. சுமந்திரனின் மனச்சாட்சிக்கு தெரியும். அவர்கள் சுமந்திரனை கொலை செய்ய வந்தார்களா என்பது அவருக்கு

"கைதிகள் விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாத கலந்துரையாடல் காலத்தை கடத்தும் செயல்"

ருக்கு அச்சுறுத்தல் இருந்ததா என்பதும் அவருக்கு தெரியும்.

இந்நிலையில் கொழும் பிற்கு சென்றவர்களை

02ஆம் பக்கம் பார்க்க

தலைவர் பிரபாகரனின் கொள்கைகளுக்கு விரோதமானவர் சம்பந்தன்!

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க இணைப்பாளர் ராஜ்குமார் சீற்றம்

அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டம் 16 ஆவது நாட் களாக நீடித்துக் கொண்டு இருகின்றது. தமிழ் கட்சி தலைவர்களும் அரசியல் வாதிகளும் மிகுந்த வேதனையில் இருகி றார்கள். கருணை இருந்தாலும் அரசியல் பதவி பறிபோய் விடுமோ என்ற பயம் அவர்களை சூழ்ந்துக் கொண்டு இரு கின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர் பாக கடுமையாக போராடிக் கொண்டி ருக்கும் நாங்கள் திருகோணமலை பூராக துண்டுபிரசுரங்களை இது தொடர்பாக பிரசுரித்து இருந்தோம். அதிலே நாங்கள் குறிப்பிட்டுள்ள விடயம், மரியாதையற்ற

02ஆம் பக்கம் பார்க்க

இலங்கையின் முதலாவது திரவவாயு மின் உற்பத்தி நிலையம்

இலங்கையின் முதலாவது திரவ வாயு மின் (LNG) உற்பத்தி நிலையம் அடுத்த மாதம் ஹம்பாந் தோட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சீனாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக இலங்கை மின்சார சபை வேலைத் திட் டத்தை முன்னெடுக்கிறது.

02ஆம் பக்கம் பார்க்க

பலமான காற்று வீசும்

இன்று காலை முதல் பாணந்துறையிலிருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரை யான கரையோரத்திற்கு

02ஆம் பக்கம் பார்க்க

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுஜன பெரமுன களத்தில்!

வருகின்ற ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் பொது ஜனபெரமுன தேர்தல் நடவடிக்கைகளை தற்போதே ஆரம் பித்துள்ளதாக தெரியவருகின்றது. அந்த மாகாணங்களில் பொதுஜன பெரமுன கட்சி அலுவலகங்களை அமைத்து தேர்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாக தெரியவருகின்றது. வைத்திய பரிசோதனைக்கு வெளிநாட்டுக்கு

02ஆம் பக்கம் பார்க்க

புல்மோட்டையில் இருசமூகங்களுக்கிடையில் பதற்றம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

புல்மோட்டை 13ம் கட்டை குஞ்சுக்குளம் பகுதியில் 1966 ம் ஆண்டு காலப்பகுதியில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு விவசாயம் மேற்கொண்டு வந்த நிலங்கள் கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் மீண்டும் மக்கள் போகமுடியாத நிலை இதற்கிடையில் புல்மோட்டை அரிசிமலை பௌத்த பிக்குவினால் கடந்த மாதம் குறித்த பகுதிக்குள் பௌத்த சமய பாடசாலை அமைப்பதற்காக கொழும்பு வன பரிபாலன அதிகாரிகளால் வன பரிபாலன திணைக்களத்திற்கு சொந்தமான என கூறி குறித்த அனுமதி பத்திர காணிக்குள் 80 பேர்ச் காணியை வழங்கிய கடித்ததோடு கடந்த சில நாட்களுக்கு முன் டோசர் இயந்திரமூலம் காணிகளை துப்பரவு செய்ய முற்பட்ட வேளை காணி சொந்த காரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் இயந்திரத்தை கொண்டு துப்பரவு செய்யப்பட்ட வேளை காணி சொந்தக்காரர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் பள்ளி தலைவர்கள் பிரதேச வாசிகள் குறித்த பகுதிக்கு சென்ற வேலை இரு சாராருக்குமிடையில் பதற்றம் ஏற்பட்டது.

காணி சொந்தக்காரர்கள் கொட்டகை அமைத்து இரவு தங்கியிருந்த வேலை காலை 3.30 மணியளவில் பௌத்த மதகுருவும் சில பெரும்பான்மையினரும் குறித்த பகுதிக்கு சென்ற வேலை முறுகல் ஏற்பட்டது பின்னர் பொலிஸார் குவிக்கப்பட்டு கலக்கம் அடக்கும் பொலிஸார் மேலதிகமாக திருகோணமலையில் இருந்து வரவழைக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் பின்னர் குறித்த பகுதிக்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர் எம் அன்வர் தவிசாளர் முன்னாள் உதவி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர் பின்னர் மாவட்ட அரசாங்க அதிபர்,மாவட்ட பொலிஸ் மா அதிபர்,குச்சவெளி பிரதேச செயலாளர்,பொலிஸ் உயர் அத்தியட்சகர் புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் குறித்த பகுதியில் கலந்துரையாடியதை அடுத்து இரு சாராரும் வெளியேற்றப்பட்டு அரசாங்க அதிபரால் தடை செய்யப்பட்டு பொலிஸ் மாவட்ட பொறுப்பதிகாரிக்கு அப்பகுதிக்குள் முழுமையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்க பணித்துள்ளார் அதனை இது விடயமாக ஜனாதிபதியின் தொழிநுட்ப பகுதிக்கு அழைக்கப்பட்டு ஆராயப்படும் எனவும் இது விடயமாக நியாயமான தீர்வு பெற்

றுத்தரப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மக்கள் அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட பொலிஸ் மா அதிபர் இடத்தில் தொடர்ந்தும் குறித்த பிக்குவினால் கிராமத்தில் பிரச்சினை ஏற்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

சுனாமியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 384 ஆக அதிகரிப்பு

இந்தோனேசியாவில் வெள்ளிக்கிழமை 7.5 என்ற அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 384 ஆக உயர்ந்துள்ளது.

சுனாமி பேரலைகளால் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்ட பலரது உடல்கள் தொடர்ந்து கரையொதுங்கி வருவதால் உயிரிழந்தோர் எண்ணிக்கையை சரியாக கணக்கிட இயலவில்லை என்று இந்தோனேசியா பேரிடர் மீட்புப் படையின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

பெரும்பாலான உயிரிழப்புகள் நிலநடுக்கத்தினால் ஏற்பட்டுள்ளதா அல்லது சுனாமியால் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்த தெளிவான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

சுலாவெசி தீவிலுள்ள பாலு என்ற பகுதியில் சுமார் 2 மீட்டர் உயரத்துக்கு எழுந்த சுனாமி அலைகள் அங்கிருந்தவர்களை கடலுக்குள் இழுத்து சென்றது.

இந்தோனேசியாவின் சுலாவெசி தீவின் மத்திய பகுதியை மையமாக கொண்டு பூமிக்கு கீழே 10 கிலோ மீட்டர் ஆழத்தில், உள்ளூர் நேரப்படி மாலை 6 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி அமைப்பு கூறியுள்ளது.

தலைவர்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

முதுகெலும்பில்லாத சம்பந்தர் எதிர்க்கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். பிரபாகரனின் கொள்கைகளுக்கு விரோதமானவரே சம்பந்தர்.

இவர் தமிழர்களின் அவமான சின்னம். 1960 ல் சத்தியகிரகம் நடைபெற்ற போது பலர் பொலிஸாரினால் சிறை வைக்கப்பட்டனர். சம்பந்தனை பொலிஸ் பிடித்த பொழுது தான் தமிழரசுக் கட்சி இல்லை என்று சொல்லி தப்பிய நரிதான் அவர். தற்போது எதிர்க்கட்சி தலைவராக உருவெடுத்துள்ளார். இவர்கள் போரின் பின்னர் தமிழர்கள் இழந்ததை பாராளுமன்றத்தின் விவாதிப்பதற்கு இவர்களுக்கு விருப்பமுல்லை. தமிழர்களுக்கு எதிர்க்கட்சியின் தலைவரினால் பயன் என்ன? அதிகமான தமிழர்கள் போரினால் கொல்லப்பட்டபோது இலங்கையின் போர்க்குற்றம், சர்வதேச நீதி விசாரணை, வடக்கு கிழக்கு இணைப்பு, கூட்டாட்சி என்பவற்றை எல்லாம் விட்டு தமது சுயநலனுக்காக வாழ்ந்த நபரே சம்பந்தன். எப்படி கருணாநிதியின் மரணத்திற்கு பின்னர் மக்கள் அமைதியாக இருகிறார்களோ அதேப்போல்தான் சம்பந்தரின் மரணத்திற்கு பின்னரும் மக்கள் அமைதியாக இருப்பார்கள். காணாமல் ஆக்கப்பட்டோரின் அவல நிலை, மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர், இலங்கை இராணுவத்தினால் தொடர்ச்சியாக பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகும் தமிழ் பெண்கள், சிங்கள மக்களால் தமிழர்களின் காணிகள் கைப்பற்றப்படுதல், சிங்களவர்களுக்கு கையளிக்கப்படும் தமிழர் பிரதேசங்களில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் அத்துமீறிய மீன்பிடிகள் ஆகியவை தமிழர்களை தொடர்ந்தும் வறுமையாக்குகின்றது. சம்பந்தனே சிங்களவர்களிடம் பிச்சை எடுத்தது போதும்? தமிழ் எம்.பி என்று கூறி தமிழர்களை விற்றது போதும், அவர் தீவிரவாதி, வாக்குகளை பெறுவதற்கு தமிழர்களுக்கு பொய் சொன்னார், பின்னர் எதிர்க்கட்சி தலைவர் பதவியை எடுத்து தமிழர்களை மேலும் தீவரமடைய வைத்தார். இவர் தலைமையில் தான் தமிழர்கள் அதிக இழப்புகளை இழந்தனர். இந்த துண்டுபிரசுரங்களை விநியோகிக்கும் போது முழு மக்களுமே இவர்களுக்கு எதிர்பாக இருந்தார்கள்.

இவரால் எந்தவித பிரயோசங்களும் இல்லை என்று கூறினார்கள். அரசியற் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் கவலையுடன் இருக்கிறார்கள். தமிழர்களுக்கு விடிவு காலம் வருவதற்கு மாற்று தலைமை ஒன்று வர வேண்டும்.

பலமான...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0 - 2.5 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் அக் கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது

புத்தளத்திலிருந்து கொழும்பு காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக் கடற்பிரதேசங்கள்கொந்தளிப்பாகவும்காணப்படும்.

வடக்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

விஜயம் செய்திருந்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் பசில் ராஜபக்ஷவின் தலைமையின் கீழே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகின்றது.

இலங்கையின்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இதன் மூலம் 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்சார வலைப்பின்னலுடன் ஒன்றிணைக்கப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கென அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அண்மையில் இந்த இடத்திற்கு விஜயம் செய்தார்.

பாராளுமன்றத்திற்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கொண்டுவந்தால் அரசாங்கத்தில் இருக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் சிலர் அதற்கு ஆதரவு வழங்க தயாராகவுள்ளதாக அரசியல் மார்க்க செய்திகள் தெரிவிக்கின்றன. 19ம் திருத்தச்சட்டத்திற்கு பிரகாரம் அரசியல் சாசன சபையினால் பொலிஸ் பதியை நியமிக்கவும், பதவி விலக்கவும் முடியாத நிலையில் பாராளுமன்றத்தில் பொலிஸ்மாஅதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைப்பதன் ஊடாக பதவி விலக்க முடியும். பொலிஸ்மாஅதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரவுள்ளதாக கடந்த வாரம் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளைஞர்களுக்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கலந்துரையாடலில் இது தொடர்பாக நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரியவருகின்றது.

குற்றச்சாட்டுகள்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாயகத்திற்கு திரும்பிய பின்னர் இது தொடர்பாக கலந்துரையாடப்படும் என தீர்மானம் எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல மற்றும் எதிர்க்கட்சி தலைவருமான கலந்துரையாடல் வருகின்ற செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

மைத்திரியையும்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

உள்ள பிரபலமான சிலரும் இதில் மும்முரமாக செயற்படுவதாக தெரியவருகின்றது.

தற்போது அரசாங்கத்தில் உள்ள பிரதான இரு கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கிடையிலான பொருத்தமின்மை காரணமாக தொடர்ந்து தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்து முடியாத நிலை தற்போது உருவாகியுள்ளதாக இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கான ஒரே முடிவாக அரசியலில் தற்போது நிலவும் சிக்கல் நிலையை தீர்த்து வைப்பதற்கு 2019 இற்கான வரவு - செலவு திட்டம் மற்றும் அதற்கு பின்னர் உடனடியாக அரசாங்கத்தில் இருந்து ஐக்கிய தேசிய கட்சியை விலக்கி கூட்டு எதிரணியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என இந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக அரசியல் மார்க்க செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது நல்லாட்சியின் நிலை தொடர்ந்தால் ரூபாவின் பெறுமதி குறைந்து டொலரின் பெறுமதி 200 வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் இது தொடர்பில் தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்பதே இந்த இரு தரப்பு சந்திப்பின் ஒரே குறிக்கோளாக இருக்கின்றது என தெரியவருகின்றது.

சுமந்திரன்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு கைது செய்து சிறையில் வைத்துள்ளனர்.

கொழும்பில் சுமந்திரன் கொலை முயற்சி சந்தேகநபர்கள் தொடர்பில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகள் மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளை நேரில் நான் சந்தித்தேன். குறித்த கைதிகள் மிக நீண்ட காலமாக சிறையில் வாழ்கின்றனர். சிறையில் உள்ள அரசியல் கைதிகள் சட்டம் தொடர்பில் அதிகம் அறிந்துள்ளார்கள். கைதிகளாக உள்ளவர்கள் நீண்ட காலமாக இருந்தால் அவர்கள் ஒருவாரம் வீடு சென்று திரும்பு வதற்கு சட்டத்தில் இடம் உள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறு சட்டத்தில் இடம் உண்டு என்றால் அதை ஏன் இவர்கள் அனுபவிக்க முடியாதுள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர்நாயகம் வீ.ஆனந்தசங்கரி நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

நேற்று பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தில் வீ.ஆனந்தசங்கரியால் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த ஊடக சந்திப்பில் அரசியல் கைதிகள் விடயம் மற்றும் யாழ்.நூலகத்தில் அமைந்துள்ள நினைவுகல்லை அகற்றல் தொடர்பில் மாநகர சபை தீர்மானம் தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக இவர்கள் சிறைவாசம் அனுபவித்துவிட்டார்கள். இந்த நிலையில் சுமந்திரன், சம்பந்தன், பிரதம அமைச்சர், நீதி அமைச்சர் என பலர் கூடி பேசினர். ஆனால் அங்கு தீர்மானம் எடுக்க முடியாது போயுள்ளதாகவும், பிறிதொரு தினம் தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அந்த கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்க கூடிய முக்கியஸ்தர்கள் இருந்தனர். ஏன் உங்களால் தீர்மானம் எடுக்க முடிய வில்லை. பிறிதொரு திகதியிடப்பட்டு நாள் குறித்து செய்வதற்கு இது ஒன்றும் காளிகோவில் விழா அல்ல. திருமண சடங்குகளோ அல்ல. அப்பாவிகளின் உயிரோடு சம்மந்தப்பட்டது. இவ்வாறு தீர்மானம் எடுக்க முடியாத கலந்துரையாடல்களில் ஏன் ஈடுபடுகின்றீர்கள் எனவும் குறிப்பிட்டார்.

சுமந்திரன் கொலை முயற்சி சந்தேக நபர்கள் தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார்.

சிலரது சுய நோக்கத்திற்காக சுமந்திரன் அவர்களை கொலை செய்ய வந்ததாக கூறி அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. சுமந்திரனின் மனச்சாட்சிக்கு தெரியும். அவர்கள் சுமந்திரனை கொலை செய்ய வந்தார்களா என்பது அவருக்கு தெரியும். அவருக்கு அச்சுறுத்தல் இருந்ததா என்பதும் அவருக்கு தெரியும். இந்நிலையில் கொழும்பிற்கு சென்றவர்களை இவ்வாறு கைது செய்து சிறையில் வைத்துள்ளனர். அவர்கள் பிணையினை மீறியிருக்கவும் இல்லை. எனவே சுமந்திரன் அவர்களை நான் வேண்டுவது, இவ்வாறு கொலை முயற்சி என் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை பார்ப்பதற்கு அங்கு சட்டத்தரணிகளோ, உறவினர்களோ இல்லை. அவர்களை பிணை விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கு முதலில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்.மாநகர சபை தீர்மானம் தொடர்பில் ஆனந்தசங்கரி இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

யாழ்.நூலகத்தில் உள்ள நினைவு கல்லை அகற்றுவது தொடர்பில் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிந்தேன். கல் அகற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இக்கருத்தை கூறவில்லை. ஆனால் அக்கல் அகற்றப்படும்போது உண்மையான காரணம் அடங்கிய கல் அங்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும். மாறாக தமிழரசு கட்சியை திருப்தி படுத்துவதற்கு அமைய கூடாது என குறிப்பிட்டார். யாழ்.மாநகர சபை தேர்தலில் அக்காலகட்டத்தில் யாரும் போட்டியிடுவது என்ற நிலை காணப்படவில்லை. இந்த நிலையில் வேறு யாரும் மாநகர சபையை கைப்பற்றி விடுவார்கள் என்பதற்காக நாம் அங்கு போட்டியிட்டோம்.

அதன்போது மாநகர சபை ஆட்சி அமைக்கப்பட்டது, இதன்பின்னர் யாழ்.நூலகம் அமைக்கப்பட்டது, நூலகம் அமைக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் நிறைவுற்ற நிலையில் குறித்த கட்டடத்தினை என்னை திறக்கும் படியாக சபையில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் அதற்கான கல்லும் கொண்டு வரப்பட்டது. இந்த நிலையில் இரவோடிரவாக காவலாளியை அச்சுறுத்தி நூலக திறப்பு எடுத்த செல்லப்பட்டது. இதன் பின்னணியில் சேனாதிராஜா அவர்களே செயற்பட்டார். இதன் காரணமாக அப்போதிருந்த அனைத்து உறுப்பினர்களும் ராஜினாமா செய்தார்கள். அதன் பின் வந்த ஒரு குழுவினர், எடுக்கப்பட்ட சபையின் தீர்மானத்தில் நியாயத்தை கண்டு அதே நினைவு கல்லினை அங்கு ஓரிடத்தில் அமைத்தனர்.

இந்த நிலையில் குறித்த கல்லை அகற்ற கூடாது என்று குறிப்பிடுவதற்காக நான் இவ்வாறான கருத்தை தெரிவிக்கவில்லை. அவ்வாறு குறித்த கல் அகற்றப்படும்போது அக்காலப்பகுதியில் சபையில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் உள்ளிட்ட அனைத்து உண்மைகளையும் உள்ளடக்கிய வகையில் கல் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் இவ் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

இலங்கையின்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

போது தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை சுதந்திரமடைந்த பொழுது ஜப்பானின் தலா வருமானம் 90 டொலராகவும் இலங்கையின் தலா வருமானம் 89 டொலராகவும் இருந்தது. அந்த ஒரு டொலர் வித்தியாசத்தில்தான் இலங்கை இரண்டாமிடத்தைப் பெற்றது. துரதிர்ஷ்டவசமாக இந்த நாட்டை மாறி மாறி ஆண்ட தமிழ், சிங்கள அரசியல்வாதிகளின் இனவாதப் போக்கினால் இந்த நாடு குட்டிச்சுவராகியுள்ளது.

இலங்கை உலக வரைபடத்தில் முக்கிய ஒரு கேந்திரநிலையத்தில் அமையப் பெற்றுள்ளது. அது இலங்கையர்களுக்குக் கிடைத்திருக்கின்ற வரப்பிரசாதம். இருந்தபோதும் அதனைப் பயன்படுத்துவதற்கு இலங்கையிலிருந்த, இருக்கின்ற அரசியல் தலைமைகள் தவறிவிட்டன.

இன்று சீனாவும், இந்தியாவும் இலங்கைக்காகப் போட்டிபோடுகின்றதென்றால் அதற்குக் காரணம் உலக வரைபடத்தில் இலங்கையின் அமைவிடமாகும். 1948 ஆம் ஆண்டு இலங்கை உலக வரைபடத்தில் நல்லஒரு இடத்தில் இருப்பதாக உலக நாடுகள் தெரிவித்தன. இருந்தபோதும் ஆசியாவில் பொருளாதார பலத்தில் இரண்டாவதாக இருந்த இலங்கை தற்பொழுது பின்தங்கிய இடத்தில் இருப்பதற்குக் காரணம் இனவாதக் கருத்துக்களைப் பேசி ஆட்சிக்கு

வருபவர்களும் இனவாதக் கருத்துக்கள் மூலமாக ஆட்சிக்கு வந்து அந்த மக்களுக்கு தீர்வுகளையோ, அபிவிருத்திகளையோ கொடுக்காமல் மக்களை ஏமாற்றுவதுதான் முக்கிய காரணம்.

மறுபக்கம் தெற்கில் இனக்கலவரங்கள், மதக்கலவரங்கள் போன்றவற்றை சிங்களத் தலைமைகள் உருவாக்கியது போன்றவையே பொருளாதாரத்தை சிதைத்ததற்கு முக்கிய காரணம். ஆனந்தா கல்லூரியில் நான் கற்கும்பொழுது கற்பித்த விஞ்ஞான ஆசிரியர்கள் அனைவரும் இந்திய தமிழர்களாகத் தான் இருந்தார்கள். தமிழர்கள், சிங்களவர்கள் என்று நாம் இலங்கையர்கள் என்று ஒன்றாக இருந்தோம். எங்கள் பாடசாலைகளைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்களாக இருந்தார்கள்.

நாங்கள் ஒன்றாகத்தான் இருந்தோம். எங்களிடம் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. இந்து மதத்திலும் பௌத்த மதத்திலும் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. நாளடைவில் அவை மங்கத் தொடங்கிவிட்டன. ஆனால் இன்று ஆனந்தாக் கல்லூரியும் யாழ்.இந்துக் கல்லூரியும் எடுத்திருக்கும் முயற்சியை நான் வரவேற்கின்றேன்.

நான் இந்த நாட்டில் முன்னிலை வர்த்தகராக இருந்து, அரசியல்வாதியாகி, இன்று சபாநாயகராக வந்துள்ளேன். ஆனால் இன்று நான் கவலையடைகின்றேன். எனது பிள்ளை, எனது பேரப்பிள்ளைகள், உங்கள் பிள்ளைகள், உங்கள் பேரப்பிள்ளைகள் இந்த நாட்டில் முன்னேற வேண்டுமென்றால் இனவாதக் கருத்துக்களைத் தவிருங்கள் என்ற கருத்தினை முன்வைத்திருந்தார்.

இந்துக்களும், பௌத்தர்களும் இணைந்து பயணிக்க வேண்டிய காலம் இது. அப்படி இணைந்து பயணித்தால் மட்டுமே இந்த நாட்டை முன்னேற்ற முடியும்.

யாழ்.இந்துக் கல்லூரியை எப்படி இந்து தலைவர்கள் உருவாக்கினார்களோ அதேபோல் ஆனந்தாக் கல்லூரியை பௌத்த தலைவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் 1946ஆம் ஆண்டு இந்த இரு தலைவர்களும் இணைந்து கொழும்பில் இணைந்த கூட்டங்களை நடத்தியுள்ளார்கள். எனவே இலங்கை சுதந்திரம் அடையும் வரை தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களுக்கிடையில் அடிபட்டதாக வரலாறுகள் இல்லை.

இன்று பொருளாதாரம் அழிந்துள்ளது. நாங்கள் கடன்சுமையில் தவிக்கின்றோம். இதற்கெல்லாம் காரணம் குறுகிய நோக்கம் கொண்டு இனவாதக் கருத்துகளைத் தெரிவிப்பதுதான் காரணம்.

விகாரைகளில் விஷ்ணு கோவில்கள் இருப்பதும், பிள்ளையார் சிலைகள் இருப்பதும், விஷ்ணுவையும், பிள்ளையாரையும் தனிக்கடவுளர்களாக இந்துக்கள் வழிபடுவதையும் நாங்கள் மறுக்க முடியாது. நாங்கள் மதத்தால் வேறுபடவில்லை. கலாச்சாரத்தால் நாங்கள் வேறுபடவில்லை. நாங்கள் மொழியால் வேறுபட்டுள்ளோம்.

ஆனால் இலங்கை சுதந்திரமடைந்தின் பின் தெற்கிலுள்ள ஆட்சிக்கு வரும் தலைவர்கள் இனவாதக் கருத்துக்களைக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும். இது அரசியலில்லை. நாங்கள் இனவாதக் கருத்துக்களை தமிழர்களுக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் என்றும் நான் தெரிவித்தது இல்லை. இதை இன்றும் தெரிவிக்கும் தலைவர்கள் இருக்கின்றார்கள். இவர்களின் குறுகிய நோக்கம் நாட்டை முன்னேற்றுவது அல்ல. இந்த நாட்டை சிதைப்பது.

அவர் உரையாற்றும் பொழுது முன்வரிசையில் ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் கோத்தாபய ராஜபக்ஷ, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கருணாகொட, அமைச்சர் மத்தும பண்டார உட்பட ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்களும், யாழ். இந்துவின் பழைய மாணவர்களும் சமூகமளித்திருந்தார்கள்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான யானை காப்பாற்றப்பட்டது

கந்தளாய் நிருபர்

திருகோணமலை கந்தளாய் பகுதியில் காட்டு யானையொன்றுக்கு துப்பாக்கி சூடு இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டதால் காயமடைந்த காட்டு யானையை வன ஜீவராசி அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கந்தளாய் வான்எல காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்று இருக்கலாம் எனவும் வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானை சேற்றில் புதையுண்டநிலையிலே மீட்டு சிகிச்சையளிக்கப்பட்டு பின்னர் விடுவித்ததோடு அந்த யானைக்குட்டிக்கு நான்கு வயது ஆக இருக்கலாம் எனவும் வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை வைத்துக்கொண்டு அரசியல் நடத்த வேண்டாம்

மீனோடைக்கட்டு நிருபர்

மக்களுக்கு உண்டாகும் பிரச்சினையை வைத்துக்கொண்டு யாரும் அரசியல் செய்ய முனைய வேண்டாம். மக்கள் எம்மை நம்பி வாக்களித்தவர்கள். அவர்களை ஏமாற்றுவதும், அவர்களின் பிரச்சினையை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதும் ஒரு மனிதாபிமானமற்ற ஒரு செயற்பாடாகும். இந்த விடயங்களில் இருந்து தவிர்ந்து நடந்துகொள்ளவேண்டும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், நுகர்வோர் அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் தெரிவித்தார்.

ஒலுவில் மீன் பிடி துறைமுகத்தின் துறைமுக நுளைவாயில் மண்ணால் மூடப்பட்டுள்ளதால் மீன் பிடியாளர்கள் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்ற விடயத்தை மீனவ சங்கங்கள் மற்றும் மீனவ அமைப்புக்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அந்த மண்ணை உடனடியாக அகழ்வதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் 05 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒலுவில் மீன் பிடி துறைமுகத்தில் துறைமுக நுளைவாயில் மண்ணால் மூடப்பட்டுள்ளதால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாகவும் அந்த மண்ணை அகழ்வது தொடர்பான மீனவ சங்கங்கள் மற்றும் மீனவ அமைப்புக்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்

கிடையிலான கலந்துரையாடல் ஒலுவில் மீன் பிடி துறைமுக வளாகத்தில் இடம்பெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மீன் பிடி துறைமுகத்தின் துறைமுக நுளைவாயின் மண்ணை அகழ்வதாக இருந்தால் துறைமுக அதிகார சபையின் அனுமதி எமக்கு கிடைக்கவேண்டும். அந்த அனுமதியைத்தான் எதிர்பார்த்வண்ணம் அமைச்சரும், நானும் இருக்கின்றோம். அவ்வாறு அனுமதி கிடைத்தால் மண்ணை அகழ்வதுற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுப்போம்.

மீனவர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்த விடயத்தில் சில அரசியல்வாதிகள் அரசியல் செய்ய முனைகின்றனர். இது அரசியல் செய்யும் நேரமல்ல என்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமல் நடந்து வருகின்றனர். மக்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல் நிலைமையை போக்குவதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதா? இல்லை மக்களின் பிரச்சனையை வைத்து அரசில் செய்ய முனைவதா? இவ்வாறு அவர்கள் ஏன் நடந்து கொள்கின்றார்கள் என்பதை பொதுமக்களாகிய நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், மக்களுக்கு உண்டாகும் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளில் அமைச்சர் றிஷாட் பதியீதீன் ஈடுபட்டு அந்த விடயங்களை முன்னெடுத்து செயற்பட்டு வருகின்றபோது, அந்த விடயங்களை சில அரசியல்வாதிகளும், அந்த கட்சியின் தலைமைகளும் அவர்களின் அரசியல் இலாபம் கருதி அந்த விடயங்களை மறைமுகமாக தடுத்து வருகின்றனர். அதுபோலவேதான் இந்த மண் அகழ்வு விடயங்களையும் மறைமுகமாக தடுக்க முயற்சி செய்து வந்ததை நாங்கள் கண்ணூடாகவே கண்டு விட்டோம்.

அன்றாடம் கடற் தொழிலை நம்பி வாழ்கின்ற மக்களின் வயிற்றில் நாம் ஒரு போதும் விளையாடக்கூடாது. அவர்கள் பாவப்பட்டவர்கள் என்பதேயும் அவர்கள் புரிந்துகொண்டு நடக்கவேண்டும் என்பதை அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

யார் என்ன செய்தாலும் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதே எங்களின் நோக்கமாகும். அந்த பிரச்சினைகள் உரிய நேரத்தில், உரிய காலப்பகுதிக்குள் நிறைவேறவேண்டும். அதில் இழுத்தடிப்புக்கள் இடம்பெறக்கூடாது என்பதே அமைச்சர் றிஷாட்டினதும், எனதும் கூற்றாகும். இதில் அமைச்சர் றிஷாட் செய்யக்கூடாது எவ்வளவு காலம் சென்றாலும் அதை நாங்கள்தான் செய்யவேண்டும் என்று சில அரசியல்வாதிகளும், அதன் தலைமைகளும் தடுக்க முனைவதும் எந்த விதத்தில் நியாயம் என்பதை நான் அவர்களிடத்தில் கேட்க விரும்புகின்றேன்.

யார் என்ன செய்தாலும் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதே எங்களின் ஒரே குறிக்கோளும், நோக்கமும், எதிர்பார்ப்புமாகும். இதில் ஒருபோது நாங்கள் அரசியல் செய்ய முனைய மாட்டோம் என்பதை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளட்டும் என்றார்.

மேலும் இக்கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திர படகு மீனவர் கூட்டுறவு சங்க தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.நசீல், கல்முனை கரையோர மாவட்ட மீன்பிடி சம்மேளன தலைவர் ஏ.பி.எம். றஹீம், படகு உரிமையாளர்கள், மீனவர்கள். கடற் தொழிலாளர்கள், மீனவ சங்கங்களின் பரதிநிதிகள், கடற்தொழிலாளர்கள் அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு இவ்விடம் சம்மந்தமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தனர்.

கருமலையூற்றுப் பள்ளிவாயல் காணி விடுவிப்பதாக தெரிவிப்பு

கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் முயற்சியின் பயனாக கடந்த வருடம் பள்ளிக் காணியில் 20 பேர்ச் அளவிலான காணியை விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு இனங்கியிருந்தது. ஆனால் பள்ளிக்குறிய காணி மொத்தமாக 134 பேர்ச் இருக்கின்றது.

மிகுதி காணியையும் விடுவிப்பது சம்மந்தமாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக

செயலாளர் திரு.ராஜபக்ஸ அவர்களை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தியதுடன் அடுத்த கட்ட பேச்சுவார்தை இராணுவ தலைமையகத்தில் காணிப் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கின்ற பிரிகேடியர் சந்திரசேகரோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ம் திகதிக்கு பிறகு பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.பஸீர், கருமலையூற்று ஜும்மாப் பள்ளியின் தலைவர் எம்.பி.ஆசாத், செயலாளர் ஏ.எச்.சுபையிரும் கலந்து கொண்டனர்.

கல்வியின் ஊடாக நல்ல பிரஜைகளை உருவாக்க ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

க.கிஷாந்தன்

சமூகத்திற்கு தேவையானதை பெற்றுக் கொடுக்க அரசியல்வாதிகள் இருக்கின்ற நிலையில் நல்ல ஒரு சமூகத்தை உருவாக்க கூடிய பொறுப்பு ஆசிரியர்களிடத்தில் தான் இருக்கின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொத்மலை, இறம்பொடை இந்து தேசிய கல்லூரியில் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொழில் நுட்ப ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலைகளில் போடப்படும் சிறந்த அடித்தளமே நாளைய சமூதாயத்தில் நல்ல பிரஜையாக உருவாக்க வழிவகுக்கின்றது.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரம் பத்து நாட்களுக்கு முன் பாடசாலை ஒன்றின் மைதானத்தில் இரு ஆசிரியைகள் மோதலில் ஈடுப்பட்டுள்ளனர். இவர்களின் மோதலை அப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சென்று விலக்கி வுள்ளனர்.

நல்லதோர் சமூதாயத்தை உருவாக்க கூடிய இவர்கள் இவ்வாறு நடந்துக்கொண்டமைக்கு எதிராகவும், இவர்களை உடனடியாக பணியிலிருந்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கும்படி கல்வித்துறை அமைச்சருடன் பேசியிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கும், கல்வியின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கும் பாடுபட கூடியவர்கள் ஒருபுறமும் இவ்வாறு சண்டைக் கொண்டு முழு ஆசிரியர் சமூகத்திற்கும் கெட்ட பெயர் வாங்கி கொடுக்கும் ஆசிரியர்கள் மறுபுறுத்திலும் உள்ளனர்.

இவ்வாறு மோதலில் ஈடுப்பட்டுக் கொண்டு ஆசிரியைகள் வைத்தியசாலைக்கு சென்றும் கூட அங்கும் மோதலில் ஈடுப்பட்டுக் கொண்டதாக எனது கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

இவ்வாறானவர்களின் ஊடாக எதிர்காலத்தில் கல்வி சமூகம் முன்னேற்றமற்ற பாதையை நோக்கி செல்ல கூடிய வாய்ப்புள்ளது.

இவ்வாறு சண்டையிடுப வர்களுக்கு பாடசாலை மைதானங்களில், குத்து சண்டை மைதானம் அமைத்து போட்டிகளும் நடத்தப்பட வேண்டும்.

எனவே கழித்தல் ரீதியில் சிந்தித்து நாடகம் ஆடாமல் கூட்டல் ரீதியில் சமூகத்தை முன்னேற்ற ஆசிரியர்கள் முன்வர வேண்டும் எனவும், எதிர்கால சமூகத்தை கல்வியின் ஊடாக முன்னேற்ற இதயசுத்தியுடன் செயலாற்ற முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப் படும் இளம் கவிதாயினியான செல்வி மாதவி உமாசுதசர்மாவினால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுதியான அவளும் நானும் நூல் வெளியீட்டு நிகழ்வு 30.09.2018 ஞாயிற்றுக் கிழமை மு.ப.9 மணியளவில் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் இல. 37 என்ற முகவரியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸின் ஹம்சியா மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகரும் எழுத்தாளருமான க. சிவகரன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரையினை யா/மானிப்பாய் சத்யசாயி பாடசாலையின் அதிபர் திருமதி கலாசுந்தரேசன் அவர்களும், மதிப்பீட்டுரையினை யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளரும் கவிஞருமான இ. த. ஜெயசீலன் அவர்களும், கருத்துரையினை கணினி மென்பொருள் பொறியியலாளரும் கவிஞருமான மு. மயூரன் அவர்களும், ஏற்புரை மற்றும் நன்றியுரையினை நூலாசிரியரான செல்வி மாதவி உமாசுதசர்மா அவர்களும் ஆற்றவுள்ளனர்.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ் மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

மஸ்கெலியா லக்கம் தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டிட திறப்பு விழா

க.கிஷாந்தன்

அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா லக்கம் தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய இரண்டு மாடி கட்டிட திறப்பு விழா பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் 94 இலட்சம் ரூபா செலவில் இந்த பாடசாலைக்கு புதிய வகுப்பறைக்கான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு மத்திய மாகாண பதில் முதலமைச்சரும், தமிழ் கல்வி அமைச்சருமான எம்.ரமேஷ்வரன், மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் திருமதி. செண்பகவள்ளி, அட்டன் வலய மேலதிக கல்வி பணிப்பாளர், அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

விருது வழங்கி கௌரவிப்பு

2018ம் ஆண்டுக்கான மத்திய மாகாண சாகித்திய விழா கடந்த 22ம் திகதி சனிக்கிழமை ஹட்டனில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வின் சிறப்பம்சமாக பல துறைகளில் கோலோச்சிய படைப்பாளிகளை தேர்வு செய்து சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அவ்வகையில் இவ்வருடத்திற்கான சிறந்த கவிதை நூலுக்கான சாகித்திய விருதினை சிறகுகளின் சப்தம் என்ற கவிதைத் தொகுதியை எழுதிய கவிஞர் மு.ராம்கி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் நுவரெலியா மாவட்டத்தின் அல்மா கிரேண்ட் எனும் ஊரைச் சேர்ந்தவராவார். விருது வென்ற சிறகுகளின் சப்தம் என்ற கவிதைத் தொகுதி கடந்த வருடம் இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகத்தில் தமிழ் இசை வட்டத்தின் அனுசரனையுடன் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கவிதாயினி பூர்ணிமா கருணாகரனின் பெட்டைக் காகங்களிடும் குயில் குஞ்சுகள் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்றபோது வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் செல்வி வைஷாலி யோகராஜன் தமிழ் வாழ்த்துப் பாடுவதையும் வைத்திய கலாநிதி சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் உரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதியையும் விருதையும் மேல் மாகாண சபை உறுப்பினர் சண். குகவரதனிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் அருகில் நூலாசிரியரையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

‘ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பதில் பிரச்சினை ஏற்படும்’

ஐயப்பா சேவா சங்கச் செயலாளர் ஐயப்பன் கருத்து

‘சபரிமலை ஐயப்பன் கோயிலில் ஆண், பெண் பாகுபாடு கிடையாது. அனைத்து வயதுப் பெண்களும் அங்கு வந்து வழிபாடு நடத்தலாம்’ என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதையடுத்து, ‘சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு என்று பாரம்பரியம் இருக்கிறது, அதை மறந்துவிடாதீர்கள்’ என்று சபரிமலையின் தலைமை தந்திரியும் பந்தள அரச குடும்பத்தினரும் அதிருப்தி தெரிவித்தனர்.

இந்நிலையில், சபரிமலையில் ஐயப்ப பக்தர்களுக்கு உணவு,மருத்துவம் உள்ளிட்ட அனைத்துவிதமான சேவைகளையும் செய்து வரும் அகில பாரத ஐயப்பா சேவா சங்கமும் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இந்தத் தீர்ப்பு நாங்கள் எதிர்பார்க்காத ஒன்று என கருத்துத் தெரிவித்திருக்கிறது.

இதுகுறித்து அச்சங்கத்தின் தமிழ் மாநிலச் செயலாளர் கே. ஐயப்பன் நம்மிடம் பேசும்போது, சபரிமலை தேவசம் போர்டுடன் எங்களையும் இந்த வழக்கில் சேர்த்துக்கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் எங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைத்தோம். எங்களுக்காக டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ராம மூர்த்தி உச்ச நீதிமன்றத்தில் வாதாடினார்.

சபரிமலை வழிபாட்டுக்கு என ஒரு பாரம்பரிய, ஆகம முறை இருக்கிறது. எக்காரணம் கொண்டும் அதைச் சிதைக்கக் கூடாது என்பது எங்களது எண்ணம். சபரிமலையில் எந்தவொரு சிறு மாற்றத்தை செய்வதாக இருந்தாலும் தேவ பிரசன்னம் பார்க்காமல் செய்ய மாட்டார்கள். பிரசன்னம் என்பது குறி கேட்பது அல்ல; தந்திரிகளும் மேல்சாந்தி உள்ளிட்டவர்களும் சந்நிதான வளாகத்தில் அமர்ந்து குறிப்பிட்ட அந்த விஷயம் பற்றி விவாதிப்பார்கள். அதில் மாற்றுக் கருத்துகள் அதிக அளவில் வந்தால் அந்த மாற்றத்தை அமல்படுத்த மாட்டார்கள். வழியில் ஒரு மரத்தை வெட்டுவதாக இருந்தால்கூட இப்படித்தான் முடிவெடுப்பார்கள்.

அப்படியிருக்கும்போது, இப்போது நீதிமன்றம் மூலமாக ஒரு முடிவு திணிக்கப்பட்டிருக்கிறது. இதை அமல்படுத்துவது குறித்து தேவசம் போர்டு என்ன முடிவு எடுக்கப் போகிறது என்று தெரியவில்லை. ஆனால், நீதிமன்ற உத்தரவு அமல்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும். பெண்களுக்கான அடிப்படை வசதிகள், தரிசனத்துக்கு தனி வரிசை உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டிய கட்டாயம் தேவசம் போர்டுக்கு ஏற்படும்.

பக்தர்களுக்கு வழியில் ஏதாவது உடல் நலக் கோளாறு ஏற்பட்டால் அவர்களை ஸ்ட்ரெச்சரில் வைத்து முதலுதவி சிகிச்சை மையத்துக்கு 4 ஆண்கள் தூக்கிச் சென்றுவிடுவார்கள். பெண்கள் அனுமதிக்கப்பட்டால் அப்படி எளிதில் எதுவும் செய்ய முடியாது. அதற்காக பெண் சேவகர்களை நாங்கள் வேலைக்கு அமர்த்த வேண்டி வரும். ஆண்களைப் போல பெண்களை சேவைசெய்ய வாரக் கணக்கில் சபரிமலையில் தங்கவைப்பது இயலாத காரியம் என்றார்.

நீதிமன்றத் தீர்ப்பு ஐயப்ப பக்தர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று அவரிடம் கேள்வி எழுப்பியதற்கு, காலையில் இருந்து என்னிடம் தொலைபேசி வழியாக பலரும் இதுகுறித்து பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு சிலர், ‘இனிமேலும் நாங்களெல்லாம் சபரிமலைக்குப் போக வேண்டுமா என்று யோசிக்கிறோம்’ என்கிறார்கள். இதனால் சபரி மலைக்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நிச்சயம் நாளுக்கு நாள் குறையும். அந்த அளவுக்கு ஐயப்ப பக்தர்களின் உணர்வுகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விஷயம். இன்னும் போகப் போக எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரியவில்லை என்றார் ஐயப்பன்.

காதலனை விரட்டிவிட்டு பெண்ணை பலாத்காரம் செய்த கும்பல்

ஏற்காட்டில் காதலனை விரட்டி விட்டு பெண்ணைப் பலாத்காரம் செய்த ஓட்டுநர்கள் இருவரை போலீஸார் கைது செய்து விசா ரித்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையைச் சேர்ந்தவர் வாசு தேவன், திருப்பூரில் பனியன் நிறுவனத்தில் கண்காணிப்பாள ராக பணியாற்றி வருகிறார். தன்னுடன் பணியாற் றும் தருமபுரியைச் சேர்ந்த 24 வயது இளம்பெண்ணை வாசுதேவன் காதலித்து வருகிறார். வாசுதே வன் ஏற்காடு காவல் நிலையத் தில், ஆட்டோ ஓட்டுநர்கள் தன்னைத் தாக்கி விட்டு, காத லியை பலாத்காரம் செய்ததாக புகார் அளித்தார்.

வாசுதேவன் இரண்டு தினங் களுக்கு முன்பு தனது காதலி யுடன் காரில் ஏற்காடு வந்து, தனியார் விடுதியில் அறை எடுத்து தங்கியுள்ளார். விடுதி யில் தங்கியிருந்தபோது, இர வில் காதலர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் இளம்பெண் கோபித்து கொண்டு நள்ளிரவில் விடுதி அறையை விட்டு வெளியே வந்துள்ளார். அண்ணாபூங்கா அருகே வந்த இளம்பெண் ணிடம் ஏற்காட்டைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் விஜயகுமார் மற்றும் கார் ஓட்டுநர் ஆரோக்கியதாஸ் இருவரும் பேச்சு கொடுத்துள்ளனர். காதலனுடன் கோபித்து கொண்டு வந்துவிட்டதாக கூறியுள்ளார். அப்போது அங்கு வந்த வாசுதேவன், ஓட்டுநர்கள் விஜயகுமார் மற்றும் ஆரோக்கியதாஸுடன் காதலி இருப்பதை கண்டு தகராறு செய்துள்ளார். விஜயகுமார், ஆரோக்கியதாஸ் இருவரும் வாசுதேவனைத் தாக்கி, அவரிடம் இருந்த மோதிரம், பணத்தைப் பறித்துகொண்டு விரட்டிவிட்டனர்.

விஜயகுமார், ஆரோக்கியதாஸ் இருவரும் ஆட்டோவில் இளம்பெண்ணை அழைத்துச் சென்றனர். பாதி வழியில் ஆரோக்கியதாஸ் இறங்கி கொண்டார். விஜயகுமார் இளம்பெண்ணை அழைத்துக் கொண்டு, வேறு ஒரு விடுதியில் தங்க வைத்து பலாத்காரம் செய்துள்ளது போலீஸார் விசாரணையில் தெரியவந்தது.

இதுதொடர்பாக வாசுதேவன் ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீஸார் விசாரித்து, ஆட்டோ ஓட்டுநர் விஜயகுமார் மற்றும் அவரது நண்பர் ஆரோக்கியதாஸ் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இன்ப அதிர்ச்சி: ஊழியர்களுக்கு ‘ரூ.3 கோடிக்கு பென்ஸ்கார்’ பரிசளித்த குஜராத் வைர வியாபாரி

கடந்த 25 ஆண்டுகளாக நிறுவனத்தில் விசுவாசமாக பணியாற்றிய 3 ஊழியர்களுக்கு தலா ரூ.ஒரு கோடி மதிப்பில் 3 பென்ஸ் காரை பரிசாக அளித்து குஜராத் வைரவியாபாரி இன்ப அதிர்ச்சி அளித்துள்ளார்.

குஜராத் மாநிலம், சூரத்தில் ஹரே கிருஷ்னா ஏற்றுமதி நிறுவனம் நடத்திவருபவர் சவ்ஜி தோலாகியா. இவரை சூரத் மற்றும் சவுராஷ்டிரா பகுதியில் சிவாஜிகாகா என்று அழைக்கிறார்கள். அம்ரேலி மாவட்டத்தில், தூத்லாலா என்ற சிறிய கிராமத்தில் தோலாகியா பிறந்தார்.

கடந்த 1977-ம் ஆண்டு தனது கிராமத்தில் இருந்து கையில் ரூ.12.5 காசுகளை பஸ் டிக்கெட் டுக்காக எடுத்துக்கொண்டு சூரத் புறப்பட்டார். அதன்பின் கடினமாக உழைத்து, வைரம் பட்டைத் தீட்டும் தொழிலில் இறங்கி இன்று ரூ.6 ஆயிரம் கோடி சொத்துக்கு அதிபதியாகியுள்ளார்.

தோலாகியா நிறுவனத்தில் தற்போது 5,500 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்த நிறுவனத்தில் 25 ஆண்டுகள் வேலைசெய்த 3 ஊழியர்களுக்கு கார் பரிசளிப்பது தோலாகியாவுக்கு புதிதல்ல. இதற்கு முன் ஊழியர்களுக்கு வீடுகளைப் பரிசாக அளித்துள்ளார், 1,200 ஊழியர்களுக்கு டாட்சன் காரை பரிசாக வழங்கியுள்ளார். ஆண்டுக்குஒருமுறை வீரர்களைச் சுழற்சி முறையில், நாடுமுழுவதும் ஏ.சி. ரயிலில் சுற்றுலாவும் அழைத்துச் சென்று உற்சாகப்படுத்துகிறார்.

இந்நிலையில், தனது நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்து 25 ஆண்டுகள் நிறைவடைந்த நிலேஷ் ஜடா(வயது40), மகேஷ் சந்திரபாரா (38), மகேஷ் சந்திரபாரா(38) ஆகியோரைப் பாராட்டி தலா ரூ.ஒரு கோடி மதிப்பில் பென்ஸ் ஜிஎல்எஸ் 350டி எஸ்யுவி காரை பரிசாக அளித்துள்ளார்.

இந்த 3 பேரும் நிறுவனம் தொடங்கும் போது சிறுவர்களாக பணிக்குச் சேர்ந்து வேறு எந்த நிறுவனத்துக்கும் மாறாமல் தொடர்ந்து இங்குப் பணி செய்துள்ளனர். பட்டைத் தீட்டுவதில் இருந்து, பாலிஷ் செய்வது வரை அனைத்துப் பணிகளையும் கற்று 3 பேரும் முக்கிய துறைகளுக்கு பொறுப்பாக இருக்கிறார்கள்.

சூரத்தில் நடந்த எளிமையான நிகழ்ச்சியில் இந்த 3 ஊழியர்களுக்கும் காரின் சாவியை முன்னாள் முதல்வர் ஆனந்திபென் படேல் வழங்கினார்.

டெல்லியில் ஆண்களைக் காட்டிலும் அதிகமாக மது அருந்தும், புகை பிடிக்கும் பெண்கள்

டெல்லியில் ஆண்களைக் காட்டிலும் அதிக அளவிலான பெண்கள் மோசமான உணவுப் பழக்கங்கள், அதிக மன அழுத்தம், கோபம், தூக்கப் பற்றாக்குறை, மோசமான தோற்றம் மற்றும் உடல் பருமனால் அவதிப்படுகின்றனர்.

டெல்லியில் ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்கள் எந்த அளவுக்கு ஆரோக்கியமாக இருக்கிறார்கள்? இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதிர்ச்சிகரமான பல உண்மைகள் வெளிவந்துள்ளன.

டெல்லி தலைநகரில் மேக்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தால் 1000 நபர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அதன் முடிவுகள் பின்வருமாறு:

ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிக அளவு புகை பிடிக்கிறார்கள், மது அருந்துகிறார்கள். மோசமான உணவுப் பழக்கங்களைக் கடைபிடிக்கிறார்கள். அதனால் இளம் வயதிலேயே இதய நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

மருத்துவ ரீதியில் பார்க்கும்போது பெண்களுக்கு இயல்பாகவே இதய நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி உண்டு. ஆனால் மாறி வரும் வாழ்க்கை முறையினால் இது சிதைந்து வருகிறது.

டெல்லியின் படித்த நகர்ப்புற பெண்களே மோசமான உணவுப் பழக்கங்கள், அதிக மன அழுத்தம், கோபம், தூக்கப் பற்றாக்குறை, மோசமான தோற்றம் மற்றும் உடல் பருமனால் அதிகம் அவதிப்படுகின்றனர்.

உயர் ரத்த அழுத்தத்தால் 36 சதவீதப் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 80% பெண்களுக்குப் போதுமான ஓய்வு கிடைப்பதில்லை. ரத்த அழுத்தத்தை முறையாகக் கண்காணிப்பதில் ஆண்களே முதலிடம் பெற்றுள்ளனர். 70% ஆண்களும், 56% பெண்களும் இதைச் செய்கின்றனர்.

40% பெண்கள் அடிக்கடி மது அருந்துபவர்களாக இருக்கின்றனர்.

30% பேர் எப்போதாவது மதுவை உட்கொள்கின்றனர். 21% பெண்கள் வாரத்துக்கு 6 குறைந்த அளவில் மதுவை எடுத்துக்கொள்கின்றனர். 8% பெண்கள் அதைவிட அதிகளவில் மது அருந்துகின்றனர். இந்த எண்ணிக்கை ஆண்களுக்கு 21% ஆக இருக்கிறது.

இதுதவிர ஆண்களைக் காட்டிலும் பெண்களே டெல்லியில் அதிகம் புகை பிடிப்பவர்களாக இருக்கின்றனர். நகர்ப்புற டெல்லியில் 32% ஆண்களும் 44% பெண்களும் புகை பிடிக்கின்றனர்.

இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடிவுக்கு வந்தது சர்ச்சை; 860 கிலோ ‘யானைப் பறவை’தான் உலகின் மிகப்பெரியது

உலகிலேயே மிகப்பெரிய பறவை எது ஆய்வாளர்கள் மத்தியில் நீண்ட விவாதம் எழுந்துவந்த நிலையில், மடகாஸ்கரில் வாழ்ந்த 860 கிலோ எடை கொண்ட யானைப் பறவைதான் உலகின் மிகப்பெரியது என்று தெரியவந்துள்ளது.

இதன் மூலம் ஆய்வாளர்கள் மத்தியில் நீண்டகாலமாக நீடித்து வந்த வாதம், ஆய்வுகள் முடிவுக்கு வந்துள்ளது.

உலகின் மிகப்பெரிய பறவையாக கருதப்படும் யானைப் பறவை வரோம்பி டைட்டான் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மடகாஸ்கர் தீவில் இந்தப் பறவை வாழ்ந்திருக்கலாம், அங்கு மனிதர்கள் மெல்லக் குடியேறியபின் அந்தப் பறவை அழிவைச் சந்தித்து இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வரோம்பி டைட்டான் பறவையின் எலும்புகள், முட்டைகள், எச்சங்கள் ஆகியவற்றை கைப்பற்றி நடத்தப்பட்ட ஆய்வில் இந்தப் பறவையின் எடை ஏறக்குறைய 860 கிலோ இருந்திருக்கலாம், சராசரியாக 650 கிலோ எடை வரை இருந்திருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதாவது ஒட்டச்சிவிங்கியின் உயரம் வரை இந்தப் பறவை இருந்திருக்கும், ஆனால், பறக்கும் சக்தி இந்தப் பறவைக்கு இருந்திருக்காது. இந்த யானைப் பறவையின் முட்டை, கோழி முட்டையைக் காட்டிலும், 160 மடங்கு பெரிதாக இருந்திருக்கும் என்று தெரிவிக்கின்றனர்.

தற்போது வாழ்ந்து வரும் நெருப்புக் கோழியைக் காட்டிலும் 20 மடங்கு பெரிதாக வரோம்பி டைட்டான் பறவை வாழ்ந்திருக்கலாம். இந்தப் பறவை 19-ம் நாற்றாண்டில் மடகாஸ்கர் தீவில் வாழ்ந்திருக்கலாம்,

இந்த யானைப் பறவை அப்யோர்னிதிடே குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தக் குடும்பத்தில் 15 வகையான பறவைகள் இருந்த நிலையில் அதில் ஒருவகை வரோம்பி டைட்டான். இந்த பறவைக் குடும்பத்தில் மிகவும் பெரிதானது இந்த வரோம்பி டைட்டான் ஆகும். இந்த அப்யோர்னிதிடே வகைக் குடும்ப பறவைகள் மடகாஸ்கர் தீவில் ஏறக்குறைய 10 ஆயிரம் ஆண்டுகள் வரை வாழ்ந்திருக்கலாம், இந்தப் பறவை இனம் அழிந்து ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் ஆகி இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வரோம்பி டைட்டான் பறவை குறித்த ஆய்வுகளை லண்டனில் உள்ள ஜுவாலிஜிக்கல் சொசைட்டியின் பேராசிரியர் ஜேம்ஸ் ஹேன்ஸ் போர்டு மேற்கொண்டார். இந்தப் பறவை குறித்த ஆய்வு அறிக்கை ராயல் சொசைட்டி ஓபன் சையின்ஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இந்த வரோம்பி டைட்டான் பறவை குறித்து ஆய்வாளர் ஜேம்ஸ் ஹேஸ் போர்டு கூறுகையில், 17-ம் நூற்றாண்டில் இந்தப் பறவை மடகாஸ்கர் தீவில் வாழ்ந்திருக்கலாம். உலகிலேயே இதுதான் மிகப்பெரிய பறவை இனம் வரோம்பி டைட்டான் என்பது நாங்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இலைகள், காய்கறிகள், சிறு உயிரினங்கள், ஆகியவற்றைத் தின்று இந்த டைட்டான் வாழ்ந்திருக்கிறது.

மனிதர்களின் செயல்பாடுகள், வேட்டையாடுதல் இயற்கை சீற்றங்களால் டைட்டான் பறவை அழிவைச் சந்தித்தது. வரோம்பி டைட்டானின் எச்சம்தான் தற்போதுள்ள நெருப்புக்கோழி, வாத்து இவ்வாறு ஹென்றி தெரிவித்தார்.

எவ்வளவு துயரமான வாழ்க்கை!

சீனாவின் ஹையுவான் பகுதியில் வசிக்கிறார் 38 வயது டியான் ஹைசெங். மனைவி, 2 குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். 4 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கோரமான கார் விபத்தில் இவரது வாழ்க்கை மாறிவிட்டது. நடக்க முடியாமல் போய்விட்டது. கைகளும் சரிவர இயங்காததால் தன்னுடைய சொந்த வேலைகளைக்கூடச் செய்ய முடியாத அளவுக்குச் சென்றுவிட்டார். இவரது மனைவி, மகனை மட்டும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார். 2 வயது மகளும் டியானும் ஆதரவின்றி தனித்து விடப்பட்டனர்.

இவர்களின் நிலையைக் கண்ட அக்கம்பக்கத்தினரும் உறவினர்களும் ஓரளவு உதவி செய்தனர். இந்த 4 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக வேலைகளைக் கற்றுக்கொண்டாள். 6 வயதில் சமைக்கிறாள், துவைக்கிறாள், பாத்திரங்களையும் வீட்டையும் சுத்தம் செய்கிறாள். அப்பாவுக்கு ஊட்டி விடுகிறாள். காயங்களுக்கு மருந்து போடுகிறாள். உடற்பயிற்சிக்கு உதவுகிறாள். விளையாட வேண்டிய வயதில் என் மகள் ஒட்டுமொத்த வேலைகளையும்

செய்யும்போது தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. ஆனால் அவளது கவனிப்பால்தான் என்னுடைய உடலில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அவளுக்குச் சிறிது நேரம் கூட ஓய்வு இருக்காது. ஆனாலும் கொஞ்சம்கூடச் சலிப்பின்றி அன்போடு ஒவ்வொன்றையும் செய்வாள். என் மகளின் சுமையைக் குறைக்க வேண்டும். மகளின் ஒப்பற்ற சேவையை உலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகவே சமூக வலைதளங்களில் இந்தப் படங்களை வெளியிடச் சொன்னேன். ஒட்டு மொத்த மக்களையும் என் மகளின் சேவை உலுக்கிவிட்டது என்கிறார் டியான்.

இறந்து பிறந்த குழந்தையை 5 ஆண்டுகளாக லாக்கரில் பூட்டி வைத்த தாய்

இறந்து பிறந்த குழந்தையை 5 வருடங்களாக லாக்கரில் பூட்டி வைத்திருந்த 49 வயது தாய் ஜப்பானில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து டோக்கியோ காவல்துறை செய்தித் தொடர்பாளர் கூறும்போது, ‘சம்பந்தப்பட்ட பெண் கடந்த ஐந்து ஆண்டுகளாக லாக்கரின் உள்ளே குழந்தையின் உடலை வைத்துள்ளார்.

உயிருள்ள குழந்தையைப் பெற்றெடுக்க முடியவில்லை என்பதால் பயந்ததாகவும் குழந்தையின் உடலை அடக்கம் செய்ய முடியாது என்பதால், உடலை லாக்கரில் வைத்ததாகவும் அப்பெண் கூறினார்.

வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வெளியே வந்த பெண், வீட்டில் இருந்து தன்னுடைய லாக்கரின் சாவியை எடுக்க மறந்துவிட்டார். இதனால் யாராவது சாவியைக் கொண்டு லாக்கரைத் திறக்கலாம்; அதனால் குழந்தையின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்று பயந்த பெண், காவல்துறையிடம் நடந்தவற்றைக் கூறினார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்’ என்று தெரிவித்தார்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 30.09.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

இலங்கையின் நிலைமாறுகாலம்

இலங்கையின் யுத்தம் முடிந்து ஒரு சாப்தத்தை அண்மிகின்ற காலகட்டத்திலும் நிலைமாறுகாலம் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது சர்வதேசம் , புலம்பெயர்ந்தோர் உட்பட அனைவரும் சிந்திக்கின்ற விடயமாகும். இங்கு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை எவ்வித நிதியும் கிடைக்கவில்லை. மாறாக போர்க்குற்றவாளிகளை காப்பாற்றும் நோக்கிலேயே ஆளும் அரசாங்கம் செயற்படுகின்றது. பொதுவாக தென்னாபிரிக்கா உட்பட சர்வதேச நாடுகளின் நிலைமாறுகால செயல் ஒழுங்குகளை அவதானித்தும் அதன் அனுபவங்களை இலங்கையுடன் ஒப்பிடும் போது இலங்கை மிகவும் தொலைவில் இருப்பதை உணரமுடிகின்றது.

இலங்கையின் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களை சார்பில் குற்றமிழைத்தவராக கருதப்படும் எவரும் தண்டனை வழங்குவதற்கு உயிருடன் இல்லை. மாறாக யுத்தக்குற்ற மீறல்களிலும் , மனித உரிமைமீறல்களை ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினர் சில அடையாளங் காணப்பட்டாலும் அவர்களுக்கு தண்டனை வழங்கும் அரசியல் சூழலே நீதிக்கட்டமைப்போ இலங்கையில் தற்போது இல்லை. தேர்தல் அரசியலுக்கான பேரினவாத அரசாங்கம் குற்றமிழைத்த இராணுவத்தைக் காப்பாற்றும் முயற்சியிலேயே உள்ளனர். இதனை முன்னைய அரசாங்கம் மட்டுமன்றி தற்போதைய நல்லாட்சியும் அதனையே செய்கின்றது. இதனால்தான் இலங்கையில் தற்போது நிலவுவது நிலைமாறுகால நீதியல்ல என்பது பலதரப்பட்டோரின் வாதமாகும். நிலைமாறு காலத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிதியைப் பெற்றுத் தரக்கூடிய அரசியல் சூழல் இன்னமும் கனித்து வரவில்லை என்றே கூறலாம். பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு இன்னமும் யுத்தவடுக்களோடு எந்தவொரு நிதிநிவாரணங்களையும் பெறாது இன்னல்களோடு வாழ்கின்றன. இதில் நிதியை வலியுறுத்தி அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய சர்வதேச அழுத்தங்களும் போதாமல் இருக்கின்றன. இறமையுள்ள இலங்கையில் இந்தியா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச அழுத்தங்களை தணிக்கும் முயற்சிலேயே ஈடுபடுகின்றன.

இலங்கையின் சர்வதேச அழுத்தங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை பிரேரணையுடன் தங்கியுள்ளது. சர்வதேச சமூகமும் தமது பிராந்திய நன் சீனாவுடன் ஆன வெளிநாட்டு உறவுகளின் பலத்தின் இருந்து இலங்கையை நவிவடையச் செய்வதற்காக ஆட்சி மாற்றத்துக்காக ஐ.நா பிரேரணையையும் , யுத்தத்தையும் பயன்படுத்தியதோடு தவிர பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பின் பொதுநலன் இங்கு முக்கியத்துவப்படுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும். மீண்டும் சர்வதேசம் இந்தியா போன்றன , ஆளும் நல்லாட்சியையும் பலவீனமடைய வைக்கலாம். எது எவ்வாறு அமைந்தாலும், தமிழர்களுக்கான நிலைமாறுகால நீதி கிடைக்கவில்லை என்றே கூறலாம். குறிப்பாக பேரினவாத மக்கள் மத்தியில் மனநிலை மாற்றம் ஏற்பட வேண்டும். பேரினவாத அரசியல்வாதிகள் , தமது வாக்குவேட்டைக்காக இனவாதம் பேசாது தமிழ் மக்களின் அடிப்படையை பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் . அதற்கு ஊடகங்களும் பிற சக்திகளும் உதவியாக இருப்பது காலத்தின் தேவையாகும்.

அதன் பின்னரான நிலைமாறுகால நீதிக்கான பொறிமுறைகளை நகர்த்த வேண்டும். நிலைமாறுகாலத்தின் அடிப்படையில் சித்தார்த்தமே உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இதனால்தான் தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் , ஆணைக்குழு உருவாக்கப்பட்டாலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட காணாமல் போனவரைக் கண்டறியும் ஆணைக்குழுக்கும், உண்மையை கண்டறிவதன் மூலமே குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யார்? யாரால் காணாமல் ஆக்கப்பட்டனர்? போன்ற உண்மை விடயங்கள் வெளிவரும் போதே நிலைமாறுகால ரீதியில் சாத்தியப்பாடுகள் வலுவடையும்.

இலங்கையின் தற்போதைய அரசியல் கட்டமைப்பில் பாராளுமன்ற அனுமதியோடு கலப்பு நீதிமன்ற உருவாக்கம் சாத்தியப்பட ஒரு விடயமாகிவிட்டது. இந்நிலையில், ஏனைய பொறிமுறைகளில் தமிழர் அரசியல் தரப்பு கவனம் செலுத்துவது அவசியமாகும். சர்வதேச அளவில் இலங்கையில் நிலைமாறு காலத்தில் நீதிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளும் அரசாங்கம் பொறுப்புக் கூறல் அவசியமாகும். நல்லாட்சியில் இருகட்சிகளும் தொங்கு நிலையில் ஆட்சியமைத்த காலக்கட்டத்தில் பொறுப்புக்கூறுவது மிகவும் கடினமான போக்கையே வெளிகாட்டுகின்றது. நீண்டகால இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழர் தரப்புக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாக நிலைமாறுகாலத்தை மாற்றியமைக்க வேண்டும். அதற்காக ஆளும் அரசாங்கம் பின் அடிவருடிகளாக தமிழ் அரசியல் தரப்புக்கள் செயற்படக் கூடாது. சர்வதேச அழுத்தங்களை உண்டுபண்ண கூடிய இராஜதந்திர நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைமைகளும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களும் ஈடுபட வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளில் அனுகுமுறையை மாற்றி புதியதோர் அரசியல் பயணத்தில் நகர்ந்தால்தான் தமிழர் தரப்புக்கு நிலைமாறும் நீதி கிடைக்கும்.

நாளைய வட, கிழக்கும் நல்லினைக்கமும்

மக்களது பிரச்சினைகள் தமக்கு எவ்வித இலாபத்தையும் பெற்றுத் தராமையால், அரசியல்வாதிகள் இதனை புறந்தள்ளி செயற்படுகின்றனர். ஆனால் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை கடவுளாக எண்ணி நினைத்த வரத்தை பொய்யான வாக்குறுதிகளை வழங்கி பெற்றுக்கொள்வதில் தமது சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் போலியான பகட்டான வாக்குறுதிகளை நம்பி மக்களும் ஏமாந்த வரலாறுகளே அதிகம். இதனை இன்று வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் இடம் பெற்று வரும் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் முதலியவை எடுத்தியம்புகின்றன. இந்நிலையில் எதிர்பார்ப்பு மற்றும் நோக்கம் என்ற ஒன்று இல்லாத போது மக்கள் வாழ வேண்டும் என்ற கட்டாயத்திற்காக வாழ்கின்றார்கள். வேறு விதத்தில் கூறினால் மனிதர்களை, வாழ்க்கை வழி நடத்துகின்றது என்றே கூறவேண்டும். இதற்கு மற்றுமொரு பிரதான காரணம் நம் நாட்டில் சிவில் சமூகமானது வலுவிழந்து காணப்படுகின்றமையே ஆகும். இதுவே இன்று எமது நாடு எதிர்கொண்டுள்ள துர்தி;டம் என்றே கூறலாம். மக்கள் நாட்டின் எதிர்கால சந்ததிக்காக அரசியல், பொருளாதார, சமய, கலாசார கல்வி நிலையில் இருந்து தெளிவடைந்து, அவர்கள் இச் சமூகத்தை போணீக்க தவறுகின்றமையே இந்த நிலை ஏற்படப் பிரதான காரணமாகும் என்பதும் நம் நாட்டைப் பற்றிச் சிந்தித்திருப்போருக்கு நன்கு தெரியும்.

இந்நிலையில் வட கிழக்கின் எதிர்கால நகர்வுகள், நல்லிணக்க செயற்பாடுகள், அவற்றின் நிலைப்பாடுகள் குறித்து சிந்திக்கும் போது அவை எதிர்காலத்தில் கேள்விக்குறியாய் நிற்கும் பதில் இல்லா வினாவாகவே அமையலாம் என்றே சிந்திக்க தோணுகின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு சமூகத்தை புறந்தள்ளிவிட்டு இன்னும் ஒரு சமூகம் தனியாக பயணித்து வெற்றி பெற முடியாது என்பதனை கடந்த 30 வருட காலமாக நடைபெற்ற நிகழ்வுகள் நம் எல்லோருக்கும் உணர்த்தி வந்தது. அத்துடன் நாட்டில் கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலினூடாக ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போதும் சிறுபான்மையின மக்களின் ஒன்றினைந்த வாக்குப்பலத்தினூடாகவே நாட்டில் நல்லாட்சியை தோற்றுவித்துள்ளமையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின்பின் சிறுபான்மையினத்திடையே பிளவுகளை ஏற்படுத்தி தங்களின் அரசியல் இருப்பிடத்தை தக்க வைக்கும் நோக்குடன் இனவாத கருத்துக்களை தூண்டி வரும் சில பேரினவாத அரசியல்வாதிகள் இவைகளை நிறுத்திவிட்டு பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாடுகளுக்கு தங்களது ஒத்துழைப்புக் களை வழங்க வேண்டியதே மக்களின் எதிர் பார்ப்பாக உள்ளது. தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதன் ஊடாகத்தான் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நாம் எதிர் பார்க்கும் நிரந்தரமான இன உறவுகள் நீடித்து நிலைத்து நிற்கும் நிலையுடன் கூடிய வட கிழக்கு இணைப்பு உருவாகுவதுடன், நீண்ட காலம் தீர்க்கப்படாமல் (கடந்த 30 ஆண்டுகாலமாக) உள்ள அரசியல் தீர்வு விடயத்திலும் நல்லாட்சியில் ஒற்றுமைப் பட்டு செயற்பட்டு சிறுபான்மை சமூகங்கள் திருப்தி அடையும் வகையில் நமக்கான அதிகாரங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளில் தேசிய அரசாங்கம் ஒற்றுமைப்பட்டு செயல் பட வேண்டிய காலம் உருவாகி உள்ளது.

இந்த நாட்டில் இரண்டு தவணைகளுக்கு மேல் யாரும் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் வாய்ப்புக்கள் இருந்ததில்லை. தவணைக்கட்டுப்பாட்டை நீக்கி ஆயுள் பூராவும் ஆட்சியில் இருக்கலாம் என்ற நோக்கில் ஒரு ஜனநாயக நாட்டில் செயற்படுவது ஆபத்தானது என்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலமாக மிகத் திட்டவட்டமாக நிரூபிக்;கப்பட்டுள்ளது. ஊழல், மோசடி, குடும்ப ஆட்சி போன்ற குற்றச் சாட்டுக்கள் மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அது பெரும்பான்மை மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தைப் போன்றே சிறுபான்மை மக்கள் யுத்த வெற்றிக்குப் பிறகு மிக மோசமாக நடத்தப்பட்டோம். அடிப்படையற்ற வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகின்ற போது ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தீவிரவாதக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதில் உதாசீனப் போக்குடன் நடந்து கொண்டமை போன்ற விடயங்கள் ஒட்டுமொத்த சிறுபான்மையினங்கள் கடந்த ஆட்சியாளருக்கு எதிராக வாக்களிக்கின்ற சூழலையும் உருவாக்கியிருந்தது.

இன்று கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை சாய்ந்த மருதை தரம் உயர்த்த வேண்டும் என முஸ்லிம் தலைமைகள் சிலர் பாடுபடும் அதேவேளை தமிழ்ப்பிரிவை தரமுயர்த்த முனையும் போது முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என மக்கள் மத்தியில் பரவலாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. கல்முனை தொகுதியில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகப்பிரிவில் வாழும் மக்கள் தங்களுக்கான தனியான பிரதேச சபையை அமைத்து தரு மாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த கோரிக்கை நியாயமானதாகும் என முஸ்லிம் தலைமைகள் சிலர் கூறிவருகின்றனர். அத்துடன் முஸ்லிம் பிரதேசங்களுக்கு தனியான பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படும் வேளையில் தமிழ் பிரதேசங்களில் தங்களுக்கான தனியான பிரதேச சபை அமைய வேண்டும் என கோரிக்கை விடுப்பதும் நியாயமானதாகும் என்பதை கருத்திற் கொண்டு தமிழ் முஸ்லிம் மக்களிடையே இனநல்லுறவை பாதிக்காதவகையில் இந்த விடயங்களில் முஸ்லிம், தமிழ் தலைவர்கள் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் கலந்துரையாடி புரிந்துணர்வோடு செயல்பட்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும். இதனாலேயே இப்பிரதேசங்களில் நிரந்தர இன உறவை கட்டி வளர்க்கலாம். இதன் மூலம் நல்லாட்சியின் இனங்களுக்கிடையேயான தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு வழிவகுத்துக் கொடுக்க முடியும். இதன் மூலமே ஏனைய சமூகமும் இணைந்து நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து மக்கள் பிரதிநிதிகளும், புத்திஜீவிகளும் இணைந்து தமிழ், முஸ்லிம் நல்லுறவுகளை வளர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை முன் எடுக்க வேண்டும். குறிப்பாக சந்தேகங்கள் நீங்கி, புரிந்துணர்வோடு செயல்பட்டு, தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு முஸ்லிம் மக்கள் மதிப்பளித்து உதவி புரிவதுடன், தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு முஸ்லிம் மக்கள் மதிப்பளித்து உதவி புரியும் நிலமையினால் மாத்திரமே சிறுபான்மையிடத்தில் பிளவுபடாத ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

முஸ்லிம் மக்களின் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கும் தமிழ் மக்களின் செயற்பாடுகளில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வைப்பதற்குமான சூழ்நிலையை குறித்த இரு இனங்களினாலும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு சமூகப் பிரதிநிதிகளுமே உருவாக்க வேண்டும். முஸ்லிம் மக்களுடன் இன உறவை பேண வேண்டும் என யதார்த்தமான கருத்துக்களை முன்வைத்துள்ள தமிழ் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஏற்பாடுகளை வட கிழக்கில் மேற்கொள்ளவேண்டும்.

பல்லின மக்கள் வாழும் நமது நாட்டில் கடந்த 03 தசாப்த காலமாக நடை பெற்ற நிகழ்வுகள் எல்லா சமூகங்களுக்கும் குறிப்பாக தமிழ்மக்களுக்கு பெரும் படிப்பினையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நமது நாட்டின் ஜனாதிபதிகளாகவும், பிரதம மந்திரிகளாகவும் செயற்பட்டனர். குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்கள் நீண்ட காலமாக ஆளும் கட்சியில் அமைச்சர்களாக பதவி வகித்தனர். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளும், தமிழ் ஆயுதக் குழுக்களும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வடக்கு - கிழக்கு மாகாணங்களை கொண்டு வருவதற்கும் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இந்நிகழ்வுகளால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மூவின மக்களும் நிம்மதி இழந்துடன், இலங்கை முழுவதும் வாழும் சகல இன மக்களும் நிம்மதி இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை நம் எல்லோருக்கும் ஏற்பட்டது என்பதனை நாம் மறந்து விட முடியாது. எனவே, சகல இனங்களின் நியாயமான உரிமைகளை நாம் எல்லோரும் மதித்து செயல்படும் போது தான் சகல இன மக்களும் நிம்மதியாகவும் நிரந்தரமான இன ஐக்கியத்துடன் வாழும் சூழ் நிலை உருவாகும் என்பதை யாரும் மறுக்கவியலாது.

முஸ்லிம் சமூகம் தொடர்பாக கசப்பான உணர்வுகளை தமிழ் மக்கள் மத்தியில் தூண்டி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் - முஸ்லிம் சமூகங்களை நிரந்தரமாக பிரித்து வைத்துப் பார்க்கும் செயற்பாடுகளில் சில பேரினவாத அரசியல் வாதிகள் ஈடுபட்டு வருவது குறித்து நாம் எல்லோரும் கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 03 தசாப்த காலமாக நிலவிய கொடூர யுத்தத்தின் காரணமாக சமூக ரீதியில் பிரிந்து வாழ்ந்த இரண்டு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட இன ஐக்கியம் நிலையானதாக அமைவதற்கான செயற்பாடுகளில் நாம் ஈடுபட வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கும் தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் சமூகங்களுக் கிடையில் உள்ள பிரச்சினைகளை பேச்சு வார்த்தையின் ஊடாக நிரந்தரமான தீர்வுகளை காண வேண்டும். இல்லையெனில் நமது இரு சமூகங்களையும் மோதவிட்டு நிரந்தரமாக நமது சமூகங்களை பிரிப்பதற்கான ஏற்பாடுகளை நமது நாட்டில் உள்ள இனவாதிகள் மேற்கொள்வார்கள். அவர்களுக்கு வழிவகுத்த வர்களாக காலம் எம்மை பழி கூறாமல் தமிழ் அரசியல்வாதிகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஜெனிவாவில்

சிங்கள தரப்பை எதிர்கொள்ளும் ஆற்றல் தமிழர் தரப்பிடம் இல்லை

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 39ஆவது கூட்டத்தொடரும் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.பொதுச்சபையின் 73ஆவது கூட்டத்தொடரும் நிறைவடைந்திருக்கின்றன.

இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா.மனித உரிமை பேரவையின் 39ஆவது கூட்டத்தொடர் 3வாரங்கள் நடைபெற்றன. கடந்த வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி அக் கூட்டத்தொடர் நிறைவடைந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73ஆவது கூட்டத்தொடர் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகி 25ஆம் திகதி நிறைவடைந்திருக்கிறது. 9 நாட்களை கொண்ட இக் கூட்டத்தொடரில் ஐ.நா.பொச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் உரையாற்றினர்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடர் வேறு. நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா.பொச்சபை கூட்டத்தொடர் வேறு என்பதை புரியாது இரண்டும் ஒன்றுதான் என எண்ணுபவர்கள் பலர். சாதாரண பொதுமக்கள் மட்டுமல்ல சில தமிழ் ஊடகங்களுக்கும் இது பற்றிய சரியான விளக்கம் தெரிவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 39ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் சட்டத்திற்கு புறம்பாக தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பற்றி ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசேட அறிக்கையாளர்கள் சமர்ப்பித்த அறிக்கையை தவிர வேறு விவாதங்கள் நடைபெறவில்லை. இலங்கை அரசாங்க தரப்பு பிரதிநிதிகளாக ஜெனிவாவில் உள்ள தூதரக அதிகாரிகளே கலந்து கொண்டனர். கொழும்பிலிருந்து வெளிவிவகார அமைச்சரோ அல்லது அமைச்சு மட்ட அதிகாரிகளோ கலந்து கொள்ளவில்லை.

வழக்கமாக தமிழர் தரப்பு பிரதிநிதிகள் மனித உரிமை பேரவையின் பக்க அறைகளில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள். இம்முறை இலங்கையிலிருந்து பிரதான தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளின் வரவு குறைவாகவே காணப்பட்டது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களான பிரித்தானியா தமிழர் பேரவை, பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் உட்பட சில அமைப்புக்கள் கலந்து கொண்டன. பக்க நிகழ்வுகள் சிலவற்றையும் நடத்தியிருந்தன.

இலங்கையிலிருந்து சர்வதேச பௌத்த சங்கத்தின் பிரதிநிதியும் முன்னாள் படைஅதிகாரியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தலைமையில் இலங்கையிலிருந்தும் இத்தாலி, லண்டன், பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சிங்களவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் பக்க நிகழ்வுகள் பலவற்றை நடத்தியிருந்தனர்.

விடுதலைப்புலிகள் போர்க்குற்றங்களை செய்தனர். சிறுவர்களை படையில் சேர்ந்தனர். எல்லைக்கிராமங்களில் உள்ள சிங்கள மக்களை படுகொலை செய்தனர். உலகில் மிகப்பெரிய பயங்கரவாத அமைப்பாக விடுதலைப்புலிகள் காணப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கையேட்டை விநியோகித்து பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு முன்னால் உள்ள மைதானத்தில் சிறிலங்கா இராணுவம் செய்த படுகொலைகள் என படங்கள் தமிழர் தரப்பால் வைக்கப்பட்டிருந்தது. அங்கு வந்த சிங்களவர்கள் சிலர் இந்த படுகொலைகளை விடுதலைப்புலிகளே செய்தனர் என வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு பிரசாரம் செய்தனர். அதனை வீடியோ எடுத்து உலகம் எங்கும் பிரசாரம் செய்தனர். அதனை தமிழர் தரப்பு சரியாக எதிர்கொள்ள முடியாமல் கைகட்டி நின்றனர்.

சரத் வீரசேகர தலைமையில் வந்த சிங்களவர்களை எதிர்கொள்ளும் ஆற்றல் தமிழர் தரப்பிடம் இல்லை என்பதே உண்மையாகும்.

ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு முன்னால் உள்ள மைதானத்தில் இலங்கை இராணுவம் செய்த படுகொலைகள் என படங்கள் தமிழர் தரப்பால் வைக்கப்பட்டிருந்தது. அங்கு வந்த சிங்களவர்கள் சிலர் இந்தப் படுகொலைகளை விடுதலைப்புலிகளே செய்தனர் என வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு பிரசாரம் செய்தனர். அதனை வீடியோ எடுத்துமிலகம் எங்கும் பிரச்சாரம் செய்தனர். அதனை தமிழர் தரப்பு சரியாக எதிர்கொள்ள முடியாமல் கைகட்டி நின்றனர். சரத் வீரசேகர தலைமையில் வந்த சிங்களவர்களை எதிர்கொள்ளும் ஆற்றல் தமிழர் தரப்பிடம் இல்லை என்பதே உண்மையாகும்

தமிழர் தரப்பு ஜெனீவா தொடர்பாக ஒருங்கிணைந்த முடிவொன்றை எடுத்து ஒரே இலக்குடன் பயணிக்காமையே தமிழர் தரப்பின் பலவீனத்திற்கு காரணமாகும்.

2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமை பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவோம் என சிறிலங்கா தரப்பும் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. இந்த பிரேரணைக்கு சிறிலங்காவும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்நிலையில் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத்தொடரில் சிறிலங்காவுக்கு மேலும் இருவருடகால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த இரு வருடகாலத்தில் போர்க்குற்ற விசாரணைகள், காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணை, காணிவிடுவிப்பு, வடக்கிலிருந்து படையினரின் வெளியேற்றம், மீள்குடியேற்றம் என 20க்கு மேற்பட்ட விடயங்கள் அதில் சொல்லப்பட்டிருந்தன.

இருவருட காலஅவகாசம் நிறைவடைவதற்கு இன்னும் 5 மாதங்களே உள்ளன. 2015ஆம் ஆண்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இந்த பிரேரணையில் சொல்லப்பட்ட பிரதான விடயங்கள் எதனையும் சிறிலங்கா நிறைவேற்றவில்லை. போர்க் குற்றத்தில் ஈடுபட்ட படையினர் மீது பன்னாட்டு நீதியாளர்களை கொண்ட விசாரணை நடத்தப்பட வேண்டும், காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான பொறிமுறையை அமைக்க வேண்டும், வடக்கில் படையினர் விலக்கி கொள்ளப்பட வேண்டும், பொதுமக்களின் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகள் உட்பட 20க்கு மேற்பட்ட விடயங்கள் இதில் அடங்கியிருந்தன.

இதில் பொதுக்களின் காணிகள் சொற்ப அளவில் விடுவிக்கப்பட்ட போதிலும் ஏனைய விடயங்கள் பற்றி சிறிலங்கா அரசாங்கம் அக்கறைப்படவே இல்லை.

முக்கியமாக போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினர் மீதான விசாரணை என்பதை சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் அமைச்சர்களும் மறுதலித்தே வந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73ஆவது கூட்டத்தொடரில் பேச செல்வதற்கு முதல் கொழும்பில் பத்திரிகை ஆசிரியர்கள் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இலங்கை படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து - அவர்களை விடுவிப்பதற்கான யோசனைகளை ஐ.நா.பொதுச்சபையில் முன்வைக்கப்போவதாக தெரிவித்திருந்தார். ஜெனிவா தீர்மானத்தை எதிர்த்து அதில் சில திருத்தங்களை செய்யும் பிரேரணையை முன்வைப்பேன் என்றும் தெரிவித்திருந்தார்.

எனினும் இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டிருந்த உரையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா.பொதுச்சபையில் உரையாற்றினார் என கூறப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள பின்னணியில் போருக்குப் பின்னரான பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றிவரும் இந்த சந்தர்ப்பத்தில் எமது தாய்நாட்டை புதிய தோர் கோணத்தில் பாருங்கள் என மைத்திரிபால சிறிசேனா உலக மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

நாங்கள் ஒரு சுதந்திர நாடு. எங்கள் மீது யாரும் ஆதிக்கம் செலுத்துவதை நாம் விரும்பவில்லை. எங்கள் பிரச்சனைகளை எமது மக்களே தீர்த்துக் கொள்ள அனுமதியுங்கள் என சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா உலக நாடுகளின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

மோசமான பயங்கரவாதிகளை தோற்கடித்து எமது நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் அமைதியையும் ஏற்படுத்திய எமது துருப்புக்களை எமது தேசம் வணங்குகிறது என சிறிலங்கா படையினருக்கு நற்சான்றிதழ் ஒன்றையும் வழங்கிய மைத்திரிபால சிறிசேனா ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் போர்க்குற்றம் புரிந்த படையினர் மீது பன்னாட்டு நீதியாளர்கள் முன்னிலையிலான நீதி விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என மறைமுகமாக சுட்டிக்காட்டினார்.

2015ஆம் ஆண்டு இலங்கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்னின்று வழிநடத்தியது அமெரிக்கா ஆகும். ஆனால் அமெரிக்கா தற்போது ஐ.நா.மனித உரிமை பேரவையிலிருந்து விலகி விட்டது.

அமெரிக்காவின் ஜனாதிபதி ரம் ஐ.நா.மனித உரிமை பேரவை மீது கடுமையான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகிறார். கடந்த வாரம் ஐ.நா.பொதுச்சபையில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ரம்பின் உரை தெளிவு படுத்துகின்றது.

இந்நிலையில் ஐ.நா.மனித உரிமை பேரவையில் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் 40ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா.மனித உரிமை பேரவையின் ஆணையாளர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளார். 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் அதற்காக 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம், அக்காலப்பகுதியில் சிறிலங்கா இப்பிரேரணையில் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்றியிருக்கிறதா என்பது தொடர்பான விரிவான அறிக்கையாக இது அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், சிறிலங்கா வழங்கிய வாக்குறுதிகளையும் சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது ஐ.நா.மனித உரிமை பேரவையில் உள்ள நாடுகளுக்கு தெரியும்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாது காலம் கடத்தி வரும் சிறிலங்கா மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுதான் இப்போது பிரேரணையை முன்னின்று வழிமொழிந்த நாடுகளிடம் உள்ள கேள்வியாகும்.

இப்பிரேரணையை வழிமொழிந்த நாடுகளில் அமெரிக்கா இப்போது ஐ.நா.மனித உரிமை பேரவையிலிருந்து விலகி விட்டது. அமெரிக்காவின் பொறுப்பை இன்று பிரித்தானியாவே எடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆணையாளர் சிறிலங்காவுக்கு தண்டனை வழங்க கூடிய அதிகாரம் கொண்டவர் அல்ல. சிறிலங்கா மீது காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு உறுப்பு நாடுகளிடம் தான் உள்ளது.

சர்வதேச நீதிபதிகள் அடங்கிய நீதிவிசாரணையை நடத்தப்போவதில்லை என்றும் படையினரை தண்டிக்கப்போவதில்லை என்றும் சிறிலங்கா ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் சிறிலங்காவின் சர்வதேச குற்றங்கள் மீது, சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை நோக்கியே சர்வதேச நாடுகளை நகர்த்த வேண்டிய பொறுப்பு தமிழர் தரப்பிடம் காணப்படுகிறது.

சிறிலங்காவுக்குள் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில்தான் நீதி கிடைக்க வாய்ப்புண்டு. சிறிலங்காவைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்புமாறு கோரும், 1.7 மில்லியன் மக்களின் கையெழுத்து அட்டையை அண்மையில் ஐ.நா.பொதுச்சபையிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அமைப்பு சமர்ப்பித்திருந்தது.

தமிழர்களின் மனித உரிமைகளை சிறிலங்கா அரசு தொடர்ந்து மீறி வருவதாகத் தெளிவாக்குகிறது. அது தொடர்ந்து சித்திரவதையைப் பயன்படுத்துகிறது என்பதையும், உள்நாட்டளவில்

08 ஆம் பக்கம் பார்க்க....

அடையாள அரசியலில் இலங்கை

பகுதி 04

கலாநிதி சு.சிவரெத்தினம்

சென்ற பகுதியில் 'சிங்களப் பௌத்தம்' எனும் கருத்து நிலை கிறிஸ்த்தவத்துக்கு எதிராக 1883ம் ஆண்டிலும் முஸ்லீம்களுக்கு எதிராக 1915ம் ஆண்டிலும் நிகழ்ந்தமை பற்றிக் கூறியிருந்தேன்.

1890ம் ஆண்டுகளிலிருந்த மாக்ஸ்சிசச் சிந்தனைகள் இலங்கைக்கு அறிமுகமாயின. இக் காலப்பகுதியில் தொழிற்சங்க இயக்கங்களும் தொழிற்சங்கப் போராட்டங்களும் முனைப்புப் பெற்றதைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர்கள் தங்களுக்கிடையிலான இனம், மதம், மொழி, சாதி, பிரதேசம் என்பற்றைக் கடந்து வர்க்கங்களாக அணிதிரண்டனர். உதாரணமாக 1893ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தைக் குறிப்பிட முடியும். இதில் சிங்களவர், தமிழர், பறங்கியர்கள் சங்க உறுப்பினர்களாகவும் தலைமைப்பீடத்தின் உறுப்பினர்களாகவும் இருந்தனர். இது போன்றே 1906ம் ஆண்டு இடம் பெற்ற வண்டித் தொழிலாளர் வேலை நிறுத்தத்திலும் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் என அனைவரும் ஒன்று பட்டு கொழும்பு மாநகர சபையின் சட்டங்களை எதிர்த்தனர். இந்தப் போராட்டத்தின் ஒற்றுமையினை 'சிலோன் இன்டிப்பென்டன்ட்'என்ற பத்திரிகை பாராட்டியது. அதில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதத்தில் வண்டித் தொழிலாளரின் வேலை நிறுத்தம் எல்லா இனத்தவருக்கும் ஒற்றுமையின் பெறுமதி பற்றிய பாடத்தைப் புகட்டியுள்ளது. வண்டிக்காரர் பல்வேறு சாதியையும் இனத்தையும் சேர்ந்தவர்கள். ஆனால் அவர்கள் சகல இன மத வேறுபாடுகளையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி மிக வெற்றிகரமாக ஒன்றுபட்டுள்ளனர். (மேற்கோள் குமாரி ஜயவர்த்தன) எனக் குறிப்பிட்டு எழுதியது.

இதுபோன்றே 1912 இல் நடந்த ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தமும் சிங்கள,தமிழ், மலையாள, பறங்கியர் இனத்தவர்களின் ஒற்றுமையின் மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை நிலைகுலையச் செய்யலாம் என்பதற்கு உதாரணமாக இருந்தது.

1917ம் ஆண்டின் ரஷ்யப் புரட்சி மாக்சிச சித்தனையாளர்களுக்கும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டேர்ருக்கும் புத்துயிர் அளிப்பதாக இருந்ததினால் 1890 களிலிருந்து 1930 கள் வரையுள்ள 40 பெருமளவுக்கு இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து தொழிலாளர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் தங்களது ஒட்டுமொத்த தொழிலாளர் நலன்களுக்காகவும் அணிதிரண்டு தொழிலாளர் ஒற்றுமையினை எடுத்தக்காட்டினர்.

1919ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கம் உருவாக்கப்பட்டது இதன் தலைவராக சேர். பொன். அருணாச்சலம் தலைவராகவும், இந்திய வம்சாவளியைச் சோந்த பெரிசுந்தரம் செயலாளராகவும் செயற்குழுவில் பௌத்த மது விலக்குத் தலைவர்களும் பல இனத்தவர்களும் அங்கம் வகித்தனர்.

1920 களில் ரெயில்வேத் தொழிலாளர்களை இணைத்து தொழிற்சங்கம் அமைக்கும் ஆரம்பக் கூட்டம் சிங்களம், தமிழ், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரெயில்வேத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

1922 இல் ஏ.ஈ.குணசிங்கா தலைமையில் இலங்கைத் தொழிற்சங்கம் உருவாகியது. இது 1923ம் ஆண்டு 20000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியும் ஈட்டியது. இலங்கைத் தொழிற் சங்கத்தின் பல்லினத் தன்மையை அதன் தலைமைத்துவம் பிரதிபலித்தது. சிங்களத் தலைவர்களான குணசிங்கா, சி. ஏச். சற். பெர்னான்டோ, ஜோர்ச் ஈ.டீ. சில்வா, விக்டர் கொரியா போன்றோருடன் இலங்கைத் தமிழரும் சங்கத்தின் நடவடிக்கைகளிற் கூட்டாக ஈடுபட்டனர். ஏ.பி. தம்பிஜயா இச்சங்கத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைத்து ஊர்காவற்றுறைத் துறைமுகத் தொழிலாளரை அமைப்பு ரீதியாக ஒழுங்கமைத்தார். 1929ம் ஆண்டு ஜேம்ஸ் ரத்தினம் நுவரெலியா 'கிறாண்ட் மோட்டர்' வேலை நிறுத்தத்துக்குத் தலைமை தாங்கினார். இந்தியத் தமிழரும் பத்திரிகையாளரும், சட்ட சபை உறுப்பினருமான கே. நடேச ஐயர் சங்கத்தின் உப தலைவர் பதவியை வகித்தார். மாநகரசபை உறுப்பினரும் சங்கத்தின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவரும், பேச்சாளருமான எம்.எல்.உம். றியால் வழக்கறிஞாகளான எம்.என்.என் ஹனிபா, காசிம் இஸ்மாயில் போன்ற முஸ்லிம்களும் இத்தொழிற்சங்கத்தின் முக்கியஸ்த்தர்களாக விளங்கினர். சங்கத்தின் தலைமைப் பதவியும் பௌத்த சமயத்தவரின் தனி உரிமையாக இருக்கவில்லை. சி.எச்.சற். பெர்னான்டோ, வலன்ரைன் பெரேரா, விக்டர் கொரியா, ஜேம்ஸ் ரத்தினம் போன்ற கிறிஸ்த்தவர்களும் இப்பதவியில் இருந்தனர். ஏ.ஈ.குணசிங்காவின் தலைமையில் 1928 இல் இலங்கைத் தொழிற் கட்சி நிறுவப்பட்டபோது அதன் நிர்வாகக் குழுவில் பல சிங்களவரும் ஏ.மகாதேவா, டொக்டர் முத்தையா, திரு.திருமதி சத்தியவாகீஸ்வர ஐயர் போன்ற தமிழர்களும் அங்கம் வகித்தனர். (குமாரி ஜயவர்த்தன)

ஏ.ஈ.குணசிங்கா சகல நாடுகளினது தொழிலாளர் வர்க்கத்திடையே ஒற்றுமையை வேண்டி இந்திய தொழிற்சங்க இயக்கம் உட்பட வேற்று நாட்டு தொழிலாளர் இயக்கங்களுக்கு தோழமை வாழ்த்து அனுப்பி தொழிலாளர் இயக்கத்துக்கு 'சாதி, இன, நிற, வேறுபாடு இல்லை என்று உறுதியாகக் கூறினார். (குமாரி ஜயவர்த்தன)

1929ம் ஆண்டு இடம்பெற்ற 150 ட்ராம் வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தொழிலாளர்களின் மோதல்களும் வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்தவையாகும். இவ் வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி எழுதிய பிலிப் குணவர்த்தன தொழிலாளர் தமது வர்க்க நலன்களைப் பாதுகாக்கவும் முதலாளித்துவ அதிகாரச் சின்னத்தை உடைத்தெறியவும், அசாதாரணமான புரட்சிகர உணர்வெழுச்சியுடனும் தியாக சிந்தையுடனும் எழுச்சியுற்றனர், நெருக்கடியான காலகட்டத்தை எதிர்கொள்ளும் அரிய திறனையும் உந்துதலையும் வெளிக்காட்டினர் எனக் குறிப்பிட்டார்.

இவாவாறு இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் பல முக்கியமான வேலை நிறுத்தங்களையும் போராட்டங்களையும் வர்க்க உணர்வுடனும் வர்க்க ஒற்றுமையுடனும் நடத்தியிருந்த போதும் 1930 ஆம் ஆண்டுகளில் அடையாள அரசியல் முன்னிலைப் படுத்தப்பட வர்க்க ஒற்றுமை சிதைவடையத் தொடங்கியது.

உலகின் பல பாகங்களிலுமுள்ள தொழிலாளர்கள் ரஷ்யப் புரட்சியினால் ஊக்கம் பெற்று தொழிலாளர் வர்க்கம் பலம் பெற்று வருகின்ற போது இலங்கையில் பலவீனப்பட்டுப் போவதற்கு அல்லது அதன் பலத்தினைப் பேணுவதற்கு இலங்கையின் முதலாளித்துவ முறைமையினையும் சமூகநிலைமையினையும் சரியாகக் கணிப்பிட்டு அதற்கேற்றாற் போல் மாக்ஸ்சிசத்தை நாம் கையாளவில்லை போல்த் தெரிகிறது. ஏனெனில் எங்களுடைய தொழிற்சங்கத் தலைவர்களும் மாக்ஸ்;சிசச் சிந்தனையாளர்களும் ஐரோப்பிய முதலாளித்துவ மாதிரியையும் அதன் போராட்ட வழிமுறைகளையுமே பின்பற்றியிருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக இலங்கைச் சமூகமானது சாதிரீதியானதாகவும் மதரீதியானதாகவும் இனரீதியானதாகவும் பிரதேச ரீதியாகனதாகவும் உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்து இயங்கி வந்த சூழலில் காலனித்துவ ஆட்சி ஒரு திணிப்பாக இலங்கையர்களுக்கு ஏற்படுகின்றது. இதன் மூலம் இங்கு அறிமுகமான முதலாளித்துவம் மேற்கு ஐரோப்பிய பெரு நகர மையங்களில் பொருளூற்பத்தியுடன் கூடிய வளர்ச்சி பெற்ற முதலாளித்துவம் அல்ல. இது வணிக முதலாளித்துவமாகும். இந்த வணிக மும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் பெருமளவுக்கு கொழும்பையே மையமாகக் கொண்டிருந்தன. இதன் காரணமாக ஏற்கனவே குறிப்பிட்ட தொழிலாளர் போராட்டங்கள் எல்லாம் கொழும்பையே மையங்கொண்டிருந்தன. கிராமங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பற்றியோ அல்லது அவர்களுடைய நலன்கள் பற்றியோ எந்தப் போராட்டமும் இக்காலப் பகுதியில் இடம்பெற்றதாக தகவல் இல்லை. இதனால் வர்க்கம், வர்க்க நலன் தொடர்பான பிரஞ்ஞை பெருமளவான இலங்கையர்களுக்கு இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த நிலையில் இந்த வணிக முதலாளித்துவத்தக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்களே இலங்கைத் தொழிலாளர்களாக கொள்ளப்படுகின்றனர். இந்தத் தொழிலாள வர்க்கத்தை பெருமட்டாக இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. வணிக முயற்சிகளுடன் தொடர்புடைய தொழிலாளர்கள். உதாரணம் ரெயில்வே தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், வண்டித் தொழிலாளர்கள், அச்சுத் தொழிலாளர்கள் போன்றோரைக் குறிப்பிட முடியும். இவர்களில் பெரும்பாலானோர் தங்களுடைய கிராமங்களில் இருந்து வந்து நகரில் தொழில் செய்தவர்கள் கிராமத்துடனும் அந்தப் பண்பாட்டுடனுமான தொடர்பை விலக்காதவர்கள்.

2. பெருந்தோட்டத் தொழிலாளர்கள். இவர்கள் தனிக்குழுமமாகவே கொண்டவரப்பட்டு குறியேற்றப்பட்டு தொழிலுக்கு அமர்த்தப்பட்டவர்கள். இவர்கள் தாங்கள் எந்தெந்த சமூகத்தில் என்ன என்ன பண்பாட்டு விழுமியங்களுடனும் மரபுகளுடனும் வந்தார்களோ அதே பண்பாட்டு விழுமியங்களையும் மரபுகளையும் தங்களுடைய புதிய தொழில் சூழலிலும் பேணினார்கள். அத்துடன் ஏனை பிரதேச தொழிலாளர்களுடனும் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கவும் இல்லை.

இந்த வணிக முதலாளித்துவம் மேற்கறிப்பிட்ட இருவகைத் தொழிலாளர்களைத் தவிர மேலும் ஒரு வர்க்கத்தை உருவாக்கியது. இன்று பெருமளவுக்கு எல்லோராலும் குறிப்பிடப்படுகின்ற மத்தியதர வர்க்கம் என்போர்கள். இவர்கள் ஆரம்பத்தில் ஆங்கிலம் கற்று தமது ஆங்கில அறிவை காலனியரசின் நிர்வாக இயந்திரத்துக்கு வழங்கியவர்கள். இதன் மூலம் ஓரளவு நல்ல வேதனத்தைப் பெற்றதுடன் சமூக ரீதியாக உயர் அந்தஸ்த்தைப் பெற்றவர்களாகவும் இருந்தனர்.

தொடரும்

நிர்வாகக் கட்டமைப்பில் பிளவுபடும் வட,கிழக்கு

வட கிழக்கு இணைக்கப்பட வேண்டும், வடகிழக்கு தமிழர்கள் ஒன்றாக நின்று தமிழர் களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்று கூறுகின்ற கிழக்கின் அரசியல் தலைமை கள் வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பால் எடுக்கப்படுகின்ற முடிவுகளை கிழக்கில் நடைமுறைப்படுத்த தவறிவருகின்றனர் என்பது அண்மைக்காலப் போக்குகளிலிருந்து அறியமுடிகின்றது. வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி வேறு கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சி வேறா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தற்போது மிகத்தீவிரமாக எழத்தொடங் கியுள்ளது.

முஸ்லிம் மக்களும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தமிழ் மக்கள் உள்ளங்களுடன் நல்லுறவுடன் இருந்து வந்துள்ளமை அரசியல் ரீதியாகவும் பல்வேறு பட்ட பண்பாட்டு கோலங் களிலிருந்தும் தெரியவருகின்றமை நாம் அறிந்த தொரு விடயமே. எனினும் இவ்வாறான தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் பல முரண்பட்ட கருத் துக்கள் இருந்துவருவது உண்மையே, எனினும் இருசமூகமும் அன்றும் இன்றும் சகோதரர்களா கவே நினைத்து கிழக்கில் செயல்படுகின்றோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நக்கீரர்

வடக்கு- கிழக்கு, மேற்கு, மத்திய மாகாணங் களில் தமிழ் மக்களுடன் இணைந்து வாழும் இரு சமூகமும் பல கசப்பான சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களே. இருப்பினும், பல முஸ்லிம் தலைவர்ளை தமிழ் சமூகம் அரசியல் ரீதியாக முதன்மை பெற பாரிய பங்களிப்பை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வட கிழக் கிற்கு வெளி மாகாணங்களில் குறிப்பாக தலை நகர் கொழும்பில், மற்றும் கண்டியில் முஸ்லிம் தலைமைகள் அரசியலில் வெற்றி பெற தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பும் உதவியதை மறுக்க முடியாது.

கிழக்கு மாகாணத்தில் மாகாணசபையில் அதிக ஆசனங்களுடன் த.தே.கூ இருந்தும் அர சியல் ரீதியாக முஸ்லிம் காங்கிரசை முன்னைய அரசு ஆசைகாட்டி மோசம் செய்து பிளவு படும் நிலையில் தத்தளித்த போது அந்த சமூக அமைப்பு சிக்கலில் இருந்து காப்பாற்றி சகோ தர பாசத்துடன் ஆதரவு வழங்கி தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த போதும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பான முதலமைச்ச ருக்கு ஆதரவு வழங்கி தனது நல்லெண்ணத்தை கடந்த வருடம் வெளிப்படுத்தியது..இதன் மூலம் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திற்கும் வடக்கு முதலமைச்சர் தமிழ் இனத்தையும், கிழக்கின் முதலமைச்சராக முஸ்லிம் இனத்தை உறுதிப்படுத்தியது த.தே.கூட்டமைப்பையே ச ாரும். அதற்கு கைமாறாக தமிழ் பேசும் மக்களின் நலன்நாடி கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களும், அரசியல் தலைமைகளும் ஒன்றிணைந்து எதிர் காலத்தில் வடகிழக்கு இணைப்பில் ஒற்றுமை காண முன் வர வேண்டும்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு இணையா விடின் கிழக்கு மாகாணம் விரைவில் பறிபோய் விடும் என்ற எச்சரிக்கையை பகிரங்கமாக விடுத் துள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் அதாவது வடக்கும் கிழக்கும் இணை யாது பிரிந்து செயற்படுமாயின் கிழக்கு மாகா ணம் விரைவில் பறிபோய்விடும். கிழக்கு மாகா ணமானது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிமை இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். அவ்வாறான நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் அண் மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றமை நாம் கேட்டும் அறிந்ததுமே. எனவே கிழக்கு மாகா ணம் பறி போவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் உடந்தையாக இருக்கக்கூடாது என்பதே கிழக்கு வாழ் மக்களது பாரிய எதிர்பார்ப்பாகும். எனவே இரு மாகாணங்களும் இணைக்கப்படவேண்டி யது அவசியமானது. அவசரமான தேவையுங்கூட என்றே கூறலாம். இந்த நிலைப்பாட்டிலேயே த.தே.கூட்டமைப்பு உள்ளது என்ற யதார்த்த பூர்வமான கருத்தொன்றை முன்வைத்துள்ளார் இரா.சம்பந்தன் அவர்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொ ழியை தாய் மொழியாகக் கொண்டுள்ள இஸ்லா மிய சகோதரர்களும் தமிழ் மக்களோடு ஒன்று சே ர்ந்து வாழ்ந்து வந்ததை வரலாற்றுச் சான்றுகளும் குடிசன மதிப்பீடுகளும் இலக்கிய வடிவங்களும் எடுத்துக்காட்டுவதால் தமிழ் மக்கள் போன்று இஸ்லாமியரது பாரம்பரியப் பிரதேசமாகவும் இருந்து வரும் இவ்விரு மாகாணங்களும் இரட் டைப் பிள்ளைகள் போல காணப்படும் தொன் மையின் அடிப்படை நிலையே சம்பந்தனின் தீர்க்க தரிசனமான கருத்து அமைந்திருக்கிறது என்றே புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நி லையில் அதாவது நல்லாட்சி அரசாங்கமானது சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிவரும் அடிப் படை மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந் தரமான தீர்வைக்காணும் நோக்கில் உருவாகவி ருக்கும் அரசியல் சாசன உருவாக்கத்துக்கு இன்று சவாலாக இருக்கும் விவகாரமாக பார்க்கப்படு வதும் பேசப்படுவதும் வட கிழக்கு இணைப்பு என்ற சூடான விவகாரமாகும்.

கிழக்கு மாகாணம் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணமாகும். அவை திருகோண மலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட் டப் பிரிவுகளை உள்ளடக்கி இன்று காணப்படு கின்றது. இவற்றுள் திருகோணமலை மாவட்டம் திருகோணமலை, மூதூர், சேருவில என்ற மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்டதாகவும் மட் டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய மூன்று தேர்தல் தொகுதியைக் கொண்டதாகவும் அம்பாறை மாவட்டம் அம் பாறை, கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய நான்கு தொகுதிகளைக் கொண்டதாகவும் மொத்தமாக கிழக்கு மாகாணம் 10 தேர்தல் தொகுதிகளைக் கொண்ட மாகாணமாகும்.

வடக்கில் வேறு நிர்வாகத்தையும் கிழக்கில் வேறு நிர்வாகத்தையும் நடாத்தி அரசாங்கத்தை திருப்திப்படுத்தவே தமிழ் தலைமைகள் முயற்சிக்கின்றார்கள்

மேற்படி மூன்று மாவட்டங்களில் மட்டக் களப்பு தவிர்ந்த திருகோணமலை மற்றும் அம் பாறை மாவட்டங்களின் போக்குகள் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதை நோக்குவோமாயின் சுதந்திரத்துக்குப் பின்னுள்ள பறிபோன தன்மை களைத் தெரிந்துகொள்ள முடியும். டி.எஸ்.சேனா நாயக்க காலத்தில் அபிவிருத்தியென்ற போர்வை யில் உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் சிங்களக் குடியேற் றங்களை உள்நோக்கமாகக் கொண்ட மாவட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்ற இனத்துவ தூரநோக்கு சிந்தனையுடன் அம்பாறை மாவட் டம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் 1961 ஆம் ஆண்டு (10.04.1961) உருவாக்கப்பட்டது.

இம்மாவட்டமானது கல்முனை, சம்மாந்து றை, அக்கரைப்பற்று, பொத்துவில், பாணம, அம்பாறை, உகன, தமண ஆகிய பிரதேசங்கள் பிரித்தெடுக்கப்பட்டு இவற்றுடன் பதுளை மாவட்டத்துடன் இருந்த மஹாஓயா, பதியத்த லாவ என்பவற்றினையும் இணைத்து அம்பாறை என்னும் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. இப்புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதன் கார ணமாக கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகத்துக்கு அரசியல் பலம் வலுவிழந்தது. பொருளாதார வளம் தொடர்ந்தும் சூறையாடப்பட்டு வருகின் றது.

காணிப் பறிப்புகள், இனம் சார் குடியேற்றங் கள் பெருக்கெடுத்துக்கொண்டிருக்கின்றன. இது மட்டுமன்றி மதவழிபாட்டு கெடுபிடிகள் நாளுக் குநாள் அதிகரித்து வரும் நிலைமையே அம் பாறை மாவட்டத்தில் கடந்த 55 வருடங்களாக கண்டு கொண்டிருக்கின்றோம். இம்மாவட்டத் தில் 1977 ஆம் ஆண்டு வரை இருந்த இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளே பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு இருந்துள்ளது.

திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு வரை தமிழர் ஒருவரே பாராளுமன்றம் செல்லும் நிலைமையும் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் பாராளுமன்றம் செல்லும் பூரண சந்தர்ப்பம் இருந்து வந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமையை அவதானித்துக் கொண்ட இலங்கை அரசாங்க பேரினத் தலை மைகள் 1977 ஆம் ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி உடைக்கப்பட்டு சேருவில எனும் புதிய தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. உருவாக் கப்பட்ட இத்தேர்தல் தொகுதியிலிருந்து எக்கா லத்திலுமே தமிழரோ முஸ்லிமே பிரதிநிதியாக வரமுடியாத அளவுக்கு மிக மதிநுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டது. இந்த தேர் தல் தொகுதி உருவாக்கப்பட்டதன் காரணமாக முதல்முதல் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு உரு வாக்கிக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமயம் என்ற எல்லாவகையிலும் பறிபோன ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்ற சூழ்நிலையில்தான் வடகிழக் கின் இணைப்பை வலியுறுத்த வேண்டிய தேவை தமிழ்த் தரப்பினருக்கு ஏற்பட்டது என்பது, வரலாற்று ரீதியான நியாயங்களும் உண்மைகளு மாகும். தமிழ் - முஸ்லிம் உறவு என்பது, நேற்று, இன்று உருவாக்கப்பட்ட ஒரு தற்செயலான சம்பவமுமல்ல, உறவுகளுமல்ல. அதற்கொரு வரலாற்றுப் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது என்பது இரு சமூகத்தவரும் ஏற்றுக்கொள்கின்ற உண்மையாகும்.

கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கும் தமிழர்க ளுக்கும் இரும்புத் திரையொன்று போடப்பட்ட காலம் 1985 ஆம் ஆண்டுகளை அண்டிய காலப்பகுதியென ஆழமான உண்மையொன்றை முடிச்சவிழ்த்துக் காட்டியிருந்தார் முஸ்லிம் பாரா ளுமன்ற உறுப்பினர். இவ்வகை உண்மைகளுக்கு அப்பால் வடகிழக்கில் நடந்தேறிய கசப்பான சமபவங்கள் ஒரு சமூகத்தையும் ஒன்றின் மீது ஒன்றை விரோதப் பார்வை பார்க்க வைத்தது என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உண்மையாகும். ஆனால் இச்சூழ்நிலையும் உடைவும் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென்று நினைக்கும் தென்னிலங்கை சக்திகள் ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல் சமூகப்பிளவுகளில் குளிர்காய நினைக்கிறார்கள் என்பதை அறிவு பூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது என்பது நியாயமாகும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவந்தபின் முன் னாள் ஆட்சியாளர்களால் குறிவைத்த சமூகம் முஸ்லிம் சமூகமென்பதற்கு பல ஆதாரங்கள் உரித்துடையதாகிறது. பொதுபல சேனா, சிங்கள ராவய ஆகிய தீவிரவாத அமைப்புகள் உருவாக் கப்பட்டன. முஸ்லிம் மக்களின் மனநிலையில் இன்று குடிகொண்டிருக்கும் பீதியென்;பது வடகி ழக்கு இணைப்பின் மூலம் எதிர்கொள்ளக்கூடிய, பீதிகள் எவையென்பதையும் நோக்கும்போது, வடகிழக்கு இணைக்கப்படுமாயின் நாம் இரண் டாந்தரப் பிரஜைகள் ஆகிவிடுவோம். அரசியல் பலமற்ற ஒரு சமூகமாக மாறும் நிலை உரு வாகும். பொருளாதார வளமற்ற ஒரு சமூகமாக தேய்ந்து போக நேரிடும். வேலைவாய்ப்பு, வளப் பங்கீடு, காணிப்பங்கீடு என்பவற்றில் தமக்கு பாரபட்சம் காட்டப்படும். பண்பாடு மற்றும் பாரம்பரியங்களினால் தாம் ஓரம் கட்டப்பட்டு விடுவோம். எல்லாவற்றுக்கும் அப்பால் வடகி ழக்கு இணைப்பு சம;டிமுறையிலான அதிகாரப் பகிர்வு முறையொன்று உருவாகுமாக இருந்தால் அது தமிழ் மக்களை காலப்போக்கில் தனிநாட் டுக்கான நகர்வுக்கு வழிவகுத்து விடும் என்ற காரணங்களின் பின்னணியிலேயே வடகிழக்கு இணைப்பை சில தரப்பினர் சிம்மசொப்பனமாக நினைக்கிறார்கள் என்பது அறியப்பட்ட விட யமே.

மேலே தரப்பட்டவை வெறும் கற்பனாவாத நினைப்புகளாக இருக்கலாம். மாறாகவே அவை உண்மையான காரணங்களாகவும் காட்டப்பட லாம். எவ்வாறு இருந்த போதிலும் மேலே குறிப் பிட்ட சட்டங்கள் எல்லாமே வெறும் கற்பனைப் பயங்களாகவே இருக்க முடியும். இதுபற்றி முஸ் லிம் சமூகம் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்பதை தமிழ்த் தரப்பினர் தெளிவாகவும் உறு தியாகவும் கூறிவருகிறார்கள் என்பது முஸ்லிம் மக்கள் அறியாத ஒரு விடயமல்ல.

வடகிழக்கு இணைப்பு என்பது நாங்கள் எதிர்பார்ப்பது போல் வெறும் அரசியல் யாப்பி னால் இணைந்துகொள்கின்ற அல்லது சர்வஜன வாக்கெடுப்பினால் நிறைவேற்றிக்கொள்கிற ஒரு வெறும் சம்பிரதாயமாக இருக்குமானால் இவ் விடயத்தில் இரு சமூகங்களும் தோற்றுப்போன சமூகமாகவே ஆகிவிடும். வெறும் அரசியல் யாப்புகளோ தேர்தல் வெற்றிகளோ இரு சமூகத் தின் இணைப்புக்கு பாலமாக இருக்க முடியாது. இம்மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் சமூகமானது வாழ்வியல் முறையாலும் உறவு முறையாலும் ஒன்றுபட்ட சமூகமாக மாறுகின் றபோதே பூகோள மயப்பட்ட இணைவுகள் ச ாத்தியமாக முடியும். வெறும் அரசியல் சம்பிரதா யங்களுக்கு அப்பாற்பட்டது.

சமூகங்களுடைய பண்பாட்டு கோலங்க ளும் இணக்கப்பாடுகளுமாகும். இவ்வகை நியதியில் பார்க்கின்றபோது இவ்விரு சமூகங்க ளின் இணைவை வலிதாக்குவதில் வடகிழக்கு இணைவு முக்கியமாக இருக்குமென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆணித்தரமாக எடுத்துக்காட்டி யுள்ளார். வடகிழக்கு இணைக்கப்பட்ட சுயாட்சி க் கொள்கையை வலியுறுத்தும் கிழக்கின் தமிழ ரசுக் கட்சி தொடர்ச்சியாக வடக்கின் அகிம்சை ரீதியான போராட்டங்களில் இருந்து ஒதுங்கியே செல்வதை அவதானிக்க முடிகின்றது. வெறு மனே அரசியலுக்காக வடகிழக்கு இணைப்பு தமிழர் தாயகம் என்று பேசும் கிழக்கின் தமிழ ரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பு தலைமைகள் அதனை நடைமுறையில் கையாண்டதாக தெரிய வில்லை.

இன்று வடக்கில் உள்ள அனைத்து நிர்வா கங்களும் முடக்கப்பட்டு தங்களது எதிர்ப்பைக் காட்டிநிற்கும் போது கிழக்கில் மட்டும் வழ மையான செயற்பாடுகள் நடைபெறுவதானது கிழக்குத் தமிழர்களின் பலவீனத்தையே காட்டி நிற்கின்றது. இதற்கான முழுப்பொறுப்பையும் கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களுமே ஏற்கவேண்டும். வடகிழக்கில் உள்ள தமிழர்கள் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் நிற்கின்றார்கள். வடக்கில் அடித் தால் கிழக்கில் வலிக்கிறது கிழக்கில் அடித்தால் வடக்கில் வலிக்கிறது ஆனால் வடக்கில் வேறு நிர்வாகத்தையும் கிழக்கில் வேறு நிர்வாகத் தையும் நடாத்தி அரசாங்கத்தை திருப்திப்படுத் தவே தமிழ் தலைமைகள் முயற்சிக்கின்றார்கள்.

அதாவது தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளையும் உரிமைகளையும் அரசாங்கத் திற்கு வெளிக்காட்டி அதனை திருப்திப்படுத்துவ தற்கான தீர்வைப் பெற முனையாது. தமிழர்களை அச்சமடையவைத்து அடக்குமுறைக்குள் வைத்து பயம் காட்டி அடிமையாக இருந்துகொண்டு தமிழர்களின் உணர்வுகளை அடக்கிவைத்துக் கொண்டு பெரும்பான்மையினரை திருப்திப்ப டுத்துவதற்காக தயாரிக்கப்படப்போகும் தீர்வு திட்டமானது வலிகளை உணராத கூட்டமைப்பு உறுப்பினர்களை திருப்திப்படுத்துமே தவிர அது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் காயங்களுக்கு தீர்வாக அமையாது என்பதே உண்மை.

ஜெனீவாவில்...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

இடம்பெயர்ந்த தமிழர்களை மீள் குடியமர்த்தம் செய்யத் தவறியதையும், வேறுபல மோசமான தோல்விகளையும் எடுத்துக்காட்டுகிறது. இவற் றுக்கெல்லாம் ஒருபோதும் யாரும் பொறுப்பாக் கப்படவே இல்லை. பாதிப்புற்ற தமிழர்கள் நீ தியை மேலும் நெருங்கவும், ஐநாவின் ஆணையுரி மையையும் நம்பகத்தன்மையையும் விழுமியங்க ளையும் பாதுகாக்கவும் பன்னாட்டுச் சமுதாயத்துக்கு கடப்பாடு உண்டெனவும் நாடுகடந்த தமிழீழ அர சாங்கத்தின் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், குறைந்தது ஐ.நாவின் மூன்று அறிக்கைகளில் ஆவணப்படுத்தியுள்ளவாறு, சி றிலங்கா அரசு புரிந்த மனிதநேயச் சட்ட மீறல்க ளையும், மானிட விரோதக் குற்றங்களையும், புல னாய்வு செய்யவும் ஆவணப்படுத்தவும் அவை மீது வழக்குத் தொடுக்கவும் நடுநிலையான, சுதந்திரமான அனைத்துலக பொறிமுறை ஒன்றைத் தோற்றுவிக் குமாறு,ஐ.நா பொதுமன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற இருக்கும் ஐ.நா.மனித உரிமை பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் முக்கிய பேசுபொருளாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த அர சாங்கத்தில் மட்டுமல்ல எதிர்காலத்தில் ஆட்சியில் அமரப்போகும் அரசுகளாலும் இலங்கையில் நீதி கிடைக்காது என்பதே யதார்த்தம். மகிந்த ராசபக்ச வின் செயற்பாடுகளைப் போலவே மைத்திரிபால சிறிசேனாவின் செயற்பாடுகளும் அமைந்திருக்கின் றன.

இன்னும் 5 மாதங்கள் கடந்த பின் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் 40ஆவது கூட்டத் தொடரிலும் சிறிலங்கா இன்னுமொரு கால அவகாச த்தை கோரலாம்.

சிறிலங்காவை காப்பாற்றுவதற்கு ஐ.நா.மனித உரிமை பேரவையில் சிங்கள தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முன்னால் தமிழர்கள் தோல்விய டைந்த தரப்பாகவே உள்ளனர்.

தொடரும் நில ஆக்கிரமிப்புகள்!

தந்திரமாக தமிழர் தாயகத்தை சிதைக்கு நல்லாட்சி தென்னிலங்கை அரசியல் களம் என்பது தமிழ் மக்கள் விடயத்தில் கட்சி, நிறம், அரசியல்வாதிகள் என்ற எந்த பேதமும் இன்றி ஒரே நேர்கோட்டில் சிங்கள கடும்போக்குவாதத்துடனே இயங்கிக் கொண்டிருக்கின்றது. சிங்களத் தலைவர்கள் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறுகின்ற போதிலும் தென்னிலங்கை அரசியலின் அடிப்படை தத்துவத்திலிருந்து ஒருபோதும் விலகிச் செயற்படுவதில்லை.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆரம்பத்தில் சிங்களக் கடும்போக்குவாதத்தைத் தேர்தல் களங்களில் கக்கிய சிங்களத் தலைமைகள், இன்று சிறுபான்மையினரை தம்பக்கம் ஈர்க்கும் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிப் பீடம் ஏறுவதும் பின்னர், தமது உண்மையான சுயரூபத்தைக் காட்டி விடுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், யுத்த மோதலைக் காரணம் காட்டி தமிழ் மக்களுக்குச் சொந்தமான வளமிகு பல ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவத்தின் பலத்தினை ஆக்கிரமித்துக் கொண்டு அதிலிருந்து பலன்களைப் பெற்றிருந்தது.

முன்னைய ஆட்சியாளர்கள் ஆயுத முனையில் தமிழ் மக்களை அச்சுறுத்தி அடாத்தாக செய்த காரியங்களை இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தந்திரமான முறையில் மேற்கொண்டு வருகின்றது.

ஓர் இனத்தின் இருப்பென்பது அவர்களின் நிலத்தொடரில் தங்கியுள்ளது. அந்த நிலத்தை பறிக்கும் போது அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் விரட்டி அடிக்கப்படும் போது குறித்த இனக்குழுவின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது. இவ்வாறு எதிர்காலம் கேள்விக்குறியாகின்ற போது, மெல்ல மெல்ல இனமே அழிந்துவிடுகின்றது. இலங்கையின் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க ஆரம்பித்த தமிழ் மக்களுக்கு உரித்த நிலங்களைப் பறிக்கும் ஆக்கிரமிப்பு அப்படியே தொடர்கின்றது ஆனாலும் அதன் வடிவம் மட்டும் மாறியுள்ளது. மகாவலி அபிவிருத்தி அபிவிருத்தி என்ற ஆரம்பித்து, இன்று வனஇலகா, தொல்லியல் திணைக்களம், என பல நில ஆக்கிரமிப்பு சக்திகள் உருவெடுத்துள்ளன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட கையுடன் இராணுவப் பிடியிலிருந்த காணிகளை கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்த நல்லாட்சி அரசாங்கம், மறுபுறத்தே வனஇலகா, தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி போன்ற நில ஆக்கிரமிப்பு பூதங்களை தமிழர் தாயகப் பகுதியில் தரையிறக்கி, தமக்கு ஏற்றால் போல் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கை தென்னிலங்கை ஆக்கிரமித்துவருகின்றது.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொல்லியல் திணைக்களமும், வனஇலகாவும் வகை தொகையின்றி தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகளை ஆக்கிரமித்துவருகின்றது.

யுத்த மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற மக்கள், தமது சொந்த நிலத்தில் மீண்டும் சென்று குடியேறி வாழலாம் என்றால், அவர்களின் காணிகளை காடு என அடையாளப்படுத்தி ஆக்கிரமித்து வைத்துள்ளது வனஇலகா. இதற்கான பல உதாரணங்களை வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தெளிவாக உணரலாம். இவ்வாறு குடியிருப்புக் காணிகளை அம்மக்கள் மீண்டும் குடியேறாமல் பறிப்பதானது அடிப்படை வாழ்வுரிமை மீறலுக்கு ஒப்பானது. ஆனாலும் அதனை தந்திரமான முறையில் வனவளப் பாதுகாப்பு, தொல்லியல் எச்சங்கள் மீதான பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் முட்டாள் ஆக்கி ஏமாற்றி தென்னிலங்கை செய்துவருகின்றது. முல்லைத்தீவில் மணலாற்றை அண்டிய பகுதிகளில் 3000 ஏக்கர் நிலப்பகுதியை அத்துமீறிப் பறித்து அதில் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பை சிதைப்பதற்கு மகாவலி எல் வலய அபிவிருத்தி என்ற சதிக்கோலினை நல்லாட்சி தற்போது கையில் எடுத்துள்ளது.

இதேபோல மன்னாரில், மாளிகைப்பிட்டி என்னும் தமிழ் மன்னன் ஒருவனின் மாளிகை இருந்ததாக அறியப்படுகின்ற இடத்தினை தொல்லியல் சுவடுகள் நிறைந்த பகுதி என்று அறிவித்து தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக அதனை அபகரித்து பௌத்தமயமாக்குவதற்கும், அதனை அண்டிய பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கும் மறைமுகமாக காய்கள் நகர்த்தப்பட்டுவருவதாக தெரியக்கிடைக்கின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியில் இராணுவம் நிலை கொள்ளும் மூலோபாயத்தைத் தற்போது தீட்டிவருகின்றது. அதாவது வலி வடக்கில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு முகாங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளை விடுவிக்க வேண்டுமானால், இராணுவம் தங்கியிருப்பதற்கு யாழ் கோட்டையினை வழங்க வேண்டும் என இராணுவத் தரப்பு கருத்து வெளியிட்டுள்ளது. இராணுவத்தின் கருத்தினைப் பார்த்தால், வடக்கிலிருந்து இராணுவத்தினைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் பலமாக தமது இருப்பினை ஏற்படுத்திக் கொள்ள முற்படுவது தெளிவாகின்றது.

இவ்வாறு தென்னிலங்கை அரசியல்வாதிகள், தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதாக காண்பித்துக் கொண்டு தமது சிங்களபௌத்தவாதக் கோட்பாட்டை நீண்ட கால நோக்குடன் நிறைவேற்ற முற்படுவது உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வாறு இராணுவம் யாழ் நகர்ப்பகுதியினை கையப்படுத்துமாயின் ஒட்டுமொத்த யாழ்.மாவட்டமும். தீவகப் பகுதிகளும் இறுக்கமான இராணுவ பிடிக்குள் கொண்டு செல்லப்படும்.

இலங்கையை பௌத்த நாடாகவும், சிங்களவருக்கே உரிய நாடாகவும் மாற்றுவதற்கான தென்னிலங்கையின் நோக்கம், விடுதலைப்புலிகளின் ஆயுத ரீதியான மௌனத்தின் பின்னர் வீரியம் பெற்றுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் தமிழர் தாயகப் பகுதியில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களை சிறுபான்மையாக்கி, அவர்களின் அரசியல் பேரம் பேசும் சக்தியினை குறைப்பதன் ஊடாக தமது சிங்கள தேசியவாத கொள்கையினை இலகுவில் நடத்தி முடித்துவிடலாம் என்பது சிங்கள அடிப்படைவாதிகளின் மனக்கணக்கு.
வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளில் அரசியல் நடத்துகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் அக்கறையுடன் பணியாற்ற வேண்டும்.

மேலும் தமிழ் மக்களின் இருப்புக்கு கேள்விக்குறியாகின்ற காரியங்களை முன்னெடுக்கின்ற வனஇலகா, தொல்லியல் திணைக்களம் மற்றும

வர்ணா

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அத்துமீறிய அடாவடித்தனமான நடவடிக்கைகள் குறித்து, கூர்ந்து கவனித்து அவற்றினைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்லாட்சியில் எதிர்கட்சியாக இருந்தாலும், அமைச்சரவையில் அங்கம் வகிக்காக அமைச்சர்கள் போன்று செயற்படுகின்ற கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து காலதாமதமின்றி காரியங்களை ஆற்ற வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தை எப்படியாவது கைப்பற்றி விட வேண்டும் என துடியாய் துடிக்கும் மஹிந்த தரப்பினர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக செயற்பட்டு, நல்லாட்சியினால் சிங்கள மக்களுக்கு விரோதமாக கொண்டுவரும் சட்டங்களையும், காரியங்களையும் எதிர்த்து போராடுகின்றார்கள் என்றால், அங்கிகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக செயற்படும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏன் தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நல்லாட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்கக் கூடாது.? ஆகவே தமிழ் மக்களின் நிலங்களைப் பாதுகாக்கவும், அவர்களின் இருப்பினை உறுதிப்படுத்தவும் அபிவிருத்திகளை தமிழர் தாயகத்தை நோக்கிக் கொண்டுவருவதற்கும் தேவையான பேரம்பேசும் சக்தியினை தமிழ் மக்கள் கொடுத்துள்ளதை நினைவில் வைத்துக் கொண்டு கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பில் காணப்படும் மெத்தனப் போக்கு நீக்கப்பட வேண்டும்

இலங்கையின் வரலாற்றில் இலங்கை வாழ் முஸ்லிம் சமுகமும் ஒரு வரலாற்றுச் சான்றுகளே. இலங்கையில் அந்நியர்கள் கால்பதித்த காலந் தொட்டே இஸ்லாமிய வரலாறு இலங்கையில் ஆரம்பமானதெனலாம். குறிப்பாக அராபியர்கள் தமது வியாபார நோக்கமாக இலங்கையில் வந்து பல்வேறுபட்ட இடங்களில் தமது வியாபார நடவ டிக்கைகளை மேற்கொண்டதுடன் அவர்கள் நீண்ட காலம் இலங்கையில் வாழ்ந்த வரலாறுகளும், அதற் கான தடயங்களும் இன்றும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக மன்னார் போன்ற இடங்களில் அதாவது எருக் கலம்பிட்டி மற்றும் பள்ளிமு னைப் பகுதிகளில் காணப்படும் பெருக்கு மரங்கள், மன்னார் எருக்கலம்பிட்டிக்கும் புதுக் குடிணிருப்புக்கும் இடையில் காணப்படும் வெளிச்ச வீட்டுக் கோபுரம் உள்ளிட்டவை அராபி யர்களால் இலங்கையின் ஆதி வரலாற்றில் நிறுவப்பட்ட ஆத ரங்களின் தடயங்களாக இன்று வரை காணப்படுவதைக் குறிப்பி டலாம். இதுபோன்று இன்னும் பல தடயங்கள் நாட்டின் பல இடங்களில் காணப்பட்டாலும் அவை மறைக்கப்பட்டு வரு கின்றமையும் ஒரு துரதிஸ்டவசமான ஒன்றாகவும் காணப்படுகின்றது.

சத்தார் எம் ஜாவித்

இவ்வாறு நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு சமுகமாக ஏனைய சமுகங்களுக்குள் இலங்கை வாழ் முஸ்லிம்களும் காணப்படுகின்றனர். ஆனால் தற்கால சூழ்நிலையில் இலங்கையில் புரையோடிக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினை என்ற ஒரு நோய் இலங்கை வாழ் முஸ்லிம் சமுகத்தின் வரலாற்றுத் தடங்களை இல்லாது செய்து இலங்கை முஸ்லிம் கள் இலங்கைக்கு உரித்துடையவர்கள் அல்லர் என்ற ஒரு வகையான இனவாத கருத்துக்கள் ஏனைய சமுக மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு முஸ்லிம் களை வித்தியாசமானதொரு கண்ணோட்டத்தில் அவர்கள் பார்க்கும் அளவிற்கு விலாபித்து வருகின் றமை முஸ்லிம் சமுகத்தின் மத்தியில் கவலை தரும் விடயங்களாகவே காணப்படுகின்றன.

இந்த இனவாத கருத்து வேறுபாடுகளும், பிரச் சாரங்களும் பேரினவாத சமுகத்தின் மத்தியில் ஒரு பேசுபொருளாக மட்டுமல்லாது ஒரு சமுகத்தினை நிந்தித்து அவர்களை விரோதிகளாக பார்க்கும் துர்ப் பாக்கிய நிலைமைகளை ஏற்படுத்தி வருவது இன நல்லிணக்கத்திற்கு சவாலானதொரு விடயமாகவே இருக்கின்றது என சமுக ஆர்வளர்கள் தெரிவிக்கின் றனர்.

குறிப்பாக கடந்த ஒரு தஸாப்த காலத்திற்குள் இலங்கை வாழ் முஸ்லிம்கள் சமய ரீதியாக பல கசப்பான சம்பவங்களை எதிர் கொண்டதுடன், உயிர்களையும், உடமைகளையும் இழக்க வேண்டி யேற்பட்டு விட்டது. முக்கியமாக முஸ்லிம்களை அழிக்க வேண்டும் என்று தொடங்கப்பட்ட அளுத் கம உள்ளிட்ட பகுதிகளின் முஸ்லிம்கள் மீதான கொலைக் கலாசாரம், அம்பாறை தேனீர்க்கடையின்



கொத்து ரொட்டி விவகாரம், கண்டி திகன

13 ஆம் பக்கம் பார்க்க....

முஸ்லிம்

தேசியத்தை பெறுவதற்கு கட்சிகள் ஏற்றுமைப்படுதல் அவசியம்

தந்திமகன்

கடந்தவாரம் கிழக்கில் பிரபல்ய மாக பேசப்பட்ட ஒரு விடயம் அக்க ரைப்பற்றில் தேசிய காங்கிரஸ் கட்சி யின் தலைவர் முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவின் அணியிலிருந்து அதன் தேசிய அமைப்பாளராக இருந்தவரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச் சருமான எம்.எஸ்.உதுமாலெவ்வை அவர்கள் அதா அணியிலிருந்து விலகி யமை பெரும் கதையாடல்கள் காணப் பட்டன. ஆயினும் இந்த விடயம் சம்பந்தமாக நம் எமது கட்டுரையின் அலசலின் இறுதியில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தோம். அதாஉல்லாவின் தேசிய காங்கிரஸ் கட்சியில் உதுமா லெவ்வையின் பங்களிப்பு மிகக் கனதி யானது. அந்தக் கனதியின் அளவு அதன் தலைவருக்குத் தெரியும். ஆதலால்தான் என்னவோ கிழக்கு வாசல் என்கிற அதா வின் மாளிகையில் முன்னாள் இருவ ரும் இணைந்து பேச்சுவார்த்தை நடாத் தப்பட்டிருக்கிறது. நிலைமை சுமுகமாக முடிந்திருக்கிறது. எனினும் பிரிந்தவர் கள் மீண்டும் சேர்ந்திடும்போது ஏற் படுகின்ற மகிழ்ச்சி அதிகமாக இருந் தாலும் இதன் பின்னராக காலங்களில் நம்பிக்கை ஈனம் என்கிற ஒரு விடயம் தலைத்தோங்கியே இருக்கும். மனம் என்பது அலைகின்ற குரங்குபோன்றது என்று பலரும் கூறியிருக்கும் நிலையில் நாம் இவர்கள் தொடர்பாக அலசிய போது இவ்வாறு எழுதியிருந்தோம். அந்தப் பந்தியை இங்கே தருகின்றேன்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக இதுவரை காலமும் பதவி வகித்து வந்த கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பையை, பிரதித் தலைவ ராக நியமிக்கப்படுகின்றார் என கட்சித் தலைவர் அதாஉல்லா அறிவித்தி ருந்தார். அந்தப் பதவியை டாக்டர் சியாவுக்கு வழங்குவதால் கட்சியின் அமைப்பு வேலைகள் துரிதமாகும் என நான் நினைக்கின்றேன் எனவும் அதா உல்லா அவ்வேளை கூறியிருந்தார்.

இந்தப் பேச்சு, உதுமாலெப்பை யின் ஆதரவாளர்களுக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. கட் சியின் அமைப்பு வேலைகள் இனித் தான் துரிதமாகும் என்றால், இதுவரை அமைப்பாளர் பதவியை வகித்து வந்த உதுமாலெப்பை, கட்சியின் அமைப்பு வேலைகளை துரிதமாக செய்யவில்லை யா? என, அவர்கள் கேள்வி எழுப்பி னர்.

இவ்வாறான சர்ச்சைகளுக்கு மத் தியில் இப்போது உதுமாலெவ்வை சுதந்திரமானவராக இருக்கின்றார். இதன் பின்னணியில் எது காணப் பட்ட போதிலும் உதுமாலெவ்வைக்கு அப்பிராந்தியத்தில் தனியாக மதிப்பும் மரியாதையும் உண்டு. அமைச்சர் அதா உல்லாவின் உறவு இதற்குத் தடையாக இருந்ததும் அவருக்கு நன்கு தெரியும். அந்த தடை இப்போது இல்லை. இனிமேல் அவர் சிறுதுகாலம் அமை தியாக இருப்பதையே அப்பிராந்திய மக்களில் அநேகமானோர் விரும்புகின் றனர். இதனை கைக்கொள்வார் என்று அப்பிராந்திய மக்களே கூறுகின்றனர். இப்போது உதுமாலெ;வை இல்லாத தேசிய காங்கிரஸ் இனி துடுப்பாட்டி இல்லாத படகைப்போன்று தத்தளிக்கப் போதவாகவும் உதுமாலெவ்வையின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

அக்கரைப்பற்றை மாத்திரம் கொண் டுள்ள தேசிய காங்கிரஸ் அந்த ஊரை விட்டு வெளியே செல்ல வேண்டுமாக இருந்தால் உதுமாலெவ்வை எனும் ஆளுமை காணப்படுதல் அவசிய மாகும். இந்தத் துடுப்பு இப்போது அதாஉல்லாவிடம் இல்லை என்கிற கருத்துக்களையும் உதுமாலெவ்வை யின் ஆதரவாளர்கள் கூறிவருகின்றனர். தேசிய காங்கிரஸ் கட்சி அட்டாளைச் சேனையில் பொதுமேடை அமைத்து பிரச்சாரக் கூட்டங்கள் வைப்பது தவிர்க் கப்படும். வீண் ஏச்சுக்களும், முரண்பா டுகளும் இல்லாத ஒரு பிரதேசமாக அட் டாளைச்சேனை காணப்படும் என்கிற ஆறுதலை ஒருசாராரும், ஒற்றுமையான அரசியல் பயணத்தில் இணைந்து ஊரை முன்னேற்றப் பாடுபடவேண்டும் என்று இன்னுமொரு சாராரும் கூறிவரும் நிலையில் முன்னாள் அமைச்சர் உதுமா லெவ்வையின் அரசியல் பயணம் இதன் பின்னர்தான் தெரியவரும் என்பதையும் நாம் இவ்விடத்தில் ஞாபகப்படுத்துகின் றோம் எனத் தெரிவித்திருந்தேன்.

இப்போது அமைதியான சுமூகமான நிலையில் கதை முடிந்திருக்கிறது. பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டிருக் கிறது. பழையதை வழங்கப்போவ தாகவும், கட்சியைப் பிரிக்க பலர் முயன்று தோற்றுப்போன நிலையில் உதுமாலெவ்வையைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாமா என்றொரு அச்சமும் இப்போது கட்சி க்குள் எழுந்துள்ள நிலையில் இப்போது அறிக்கையொன்றும் கடந்த சிலநாட்க ளுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. அதாவது, அதா - உதுமாலெவ்வையின் முறுகள் முடிவுக்கு வந்திருக்கிறது. இதன் உண்மைத்தன்மையை ஆராய ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப் களை ஏற்படுத்துபவர்கள் தொடர்பான உண்மையினை கண்டறியும் பொருட்டு விசாரனைக்குழு நியமிக்கப்பட்டு அக்குழுவின் அறிக்கையின் பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் பிரதித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மனத் தாக்கங்கள் தொடர்பில் தெளிவு காணப் பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த 20.09.2018 அன்று தனிப்பட்ட கார ணங்களுக்காக விலகியதாக எழு தப்பட்ட இராஜினாமா கடிதத்தை ஏற்கனவே தலைமைத்துவமும், கட்சியும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இச்சந்தர்ப்பத்திலும் மீளப்பெறுமாறு தலைமைத்துவமும், சபையோர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க கட்சியின் நலனுக்காகவும், போராளிகளின் உணர் வுகளுக்கு மதிப்பளித்தும் தொடர்ந்தும் அப்பதவிகளில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இணக்கம் காணப் பட்டதாக இப்போது புதிய செய்தி ஒன்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எது எப்படியோ கிழக்கில் குறிப்பாக சில நாட்களாக அம்பாரை மாவட்ட முகநூலாளர்களில் அதிகமானோர் உது மாலெவ்வைக்கு சார்பாகவே எழுதி யிருக்கின்றனர். சிலர் அக்கரைப்பற்று வாசத்தோடு எழுதியிருக்கின்றனர். முரண்பாடுகள் ஏற்படுவது என்னவோ சகஜம்தான் ஆனால் அதனைப் பயன்ப டுத்தி விசாலப்படுத்தப்பார்க்கின்றனர். இதுதான் கூடாத விடயமாகும்.

இவ்வாறு ஆளுக்காள் கட்சிகள் என் றும், முஸ்லிம் தேசியவாதம் என்றும் பிரிந்து இருப்பதன் காரணமாகத்தான் இன்று இலங்கையில் முஸ்லிம்களு டைய அதாவது முஸ்லிம்தேசியத் துவக் கட்சிகளின்மீது அரசுக்கே சி ங்கள பேரினவாதக் கட்சிகளுக்கோ, ஏன் தமிழர் கட்சிகளுக்கே நம்பிக்கை இழந்துள்ள நிலைமை தோற்றம் பெற்றிருக்கிறது. உண்மையில் இலங் கையில்வாழுகின்ற முஸ்லிம்கள் கடந்த சுதந்திரத்;தின் முன்னரும், பின்னரும் முஸ்லிம்கள் தேசியவாத் துடன் அதாவது தேசிய பெரும்பான் மைக் கட்சிகளுடன் ஒன்றிப்போய் தமது மக்களின் உணர்வுகளையும், சே வைகளையும் ஆற்றிவந்தனர். பின்னர் இனத்துவ ரீதியான கட்சிகள் ஏற்பட்ட போது சிறுபான்மையினராகிய தமிழ் இளைஞர்கள் தமக்கான உரிமைகளை பலப்படுத்த முடியாதபோது ஆயுதம் ஏந்தினர். இன்று அவர்களுடைய பிரச் சினைகளுக்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டும் என்று ஐநா சபை வரை சென்றிருக்கிறது. ஒவ்வொரு கால கட் டத்திலும் வருகின்ற அரசுகள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வினை முன்வைத்து தீர்வு வழங்கப்பட வேண்டும் என்கிற ஆர்வத்தில் வருகின்றன. பின்;னர் இனத்துவம் மேலாடுகின்றபோது அவற்றில் சிறிய தடங்கள் ஏற்படுவதும் பின்னர் தருவதாகக் கூறுவதும் இழுபறி நிலை தோன்றும்.

இன்றைய நல்லாட்சியில் அதனை முழுமையாக வழங்க முடிவாகிறபோது இருபக்க நியாயத்தை காரணம் காட்டி இழுபறிநிலையில் இனப்பிரச்சினை காணப்படுகின்றது. எப்படியோ இனரீதி யான பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை பெற்றுத்தர உலகமும், அதனை பெற தமிழ் மக்களும், திரிசங்கு நிலையில் வழங்க வேண்டிய கட்டாயத்தில் அர சும் காணப்படுகின்றபோது வெறும் பிராந்தியக் கட்சிகள் அல்லது முஸ்லிம் களுடையே காணப்படுகின்ற கட்சி களுக்குள் இருக்கின்ற உட்பூசலைத் தீர்க்க முடியாமலும், ஒருவரை ஒருவர் குழி தோண்டிப் புதைக்கும் நிலையில் காணப்படுவார்களாக இருந்தால் சி றுபான்மையினருக்கான தீர்வு வழங்கப் படுகின்றபோது முஸ்லிம்கள் புறக்க ணிக்கப்படுகின்ற ஒரு நிலைமையும் தோன்றலாம். எனவேதான் பெரும் பான்மையினருடன் ஒத்துப்போகின்ற வகையிலும், தனித்துவமான அடை யாளத்துடன் தேசியத்தை காப்பதற்கான ஒன்றினைவுடன் பேரினவாதத்திற்கு ச வாலின்றி திறந்த மனதுடன், சகலரு டனும் ஒத்துப்போகக் கூடிய விடயங்க ளுடன் ஒத்துழைத்தும், பிரிவினையற்ற நாட்டுக்குள் சிறந்த தீர்வொன்றை நாடுவதற்குப் பதிலாக நமக்குள் நாம் சண்டைபிடித்து அதற்காக முகநூல்க ளில் ஊர்வாதம், பிரதேசவாதத்தை முன் னிலைப் படுத்தி உதுமாலெவ்வையா? அதாஉல்லாவா? என்கிற பெரியதோர் மாயை ஏற்படுத்தி விளையாடி ஒருசில நேரம் சந்தோசமாக இருப்பதற்காக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த முஸ்லிம் காங்கிரஸை தோற்றுவித்தி ருந்தார்.

இதன் பின்னணியில் முஸ்லிம் கள்பட்ட துன்பங்கள், துயரங்கள், கிழக்கில் புட்டும் தேங்காய்ப்பூ போல வாழ்ந்தவர்களை குழப்பியவர்கள் யார், வடக்குக்கு நியாயமான தீர்வொன்றை வழங்குகின்றபோது தென்கிழக்கு அலகு எவ்வாறு வழங்கப்படவேண்டும் அது ஏனைய முஸ்லிம்களுக்கும் பாதகம் இன்றி வழங்கப்படுவதன் முக்கியத்துவம் யுத்தத்தின் முன்னர் பேசப்பட்டன. ஆனால் இன்று அதற் கான வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் தீர்வுக்கான முன்மொழிவுகள் உலா வருகின்ற இன்றைய காலகட்டத்தில் சமயரீதியான யுத்தம், இனரீதியான மௌனயுத்தம், இனத்திற்குள் குழப் புகின்ற யுத்தவாளிகள் உருவாகிக் கொண்டு வருகின்றனர். இதனை யெல்லாம் மறந்து முஸ்லிம் கட்சிகள் தங்களுடைய ஆதரவினை எவ்வாறு பெருக்கிக்கொள்ளலாம் என்பதிலும், கொந்தராத்தில் எவ்வாறு கொள்ளை அடிக்கலாம் என்றும், மக்களின் வாக் குகளை எவ்வாறு பெறலாம் என்றும், அடுத்தடவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தனது வருமானத்தை எவ்வாறு உயர்த்தலாம் அதற்காக மக் கள் செல்வாக்கை எவ்வாறு பெறலாம் அதற்கான பணத்தை எவ்வழியில் பெற லாம் என்பதையே குறியாகக் கொண்டு முஸ்லிம் கட்சிகளும், இன்னும் சில தலைவர்கள் என்று பிரதேசங்கள் தோறும் முகநூலில் எழுதிக் கொண்டும் மக்கள் ஆதரவை தேடுகின்றவர்கள் இருக்கும் வரையில் எவ்வாறு இந்த முஸ்லிம் சமூகத்தை ஒன்றுமைப்படுத் துவது?

எனவேதான் இன்று உதுமாலெவ் வையோ, அதாஉல்லாவோ, அமைச் சர்களான றஊப் ஹக்கீமோ, றிசாட் பதியுதீனோ முக்கியமல்ல. இவர்களின் செயற்பாடுகள் அடுத்த தலைமுறையி னர் வாழ்வதற்கான முன்பாதுகாப்புத் திட்டங்களை முன்மொழிந்து அதற் கான பரிகாரங்களை தேடுவதிலும்தான் குறியாக இருக்க வேண்டுமே தவிர வெறுமனே ஊர்வாதத்தை முன்னி லைப்படுத்தி ஒவ்வொரு ஊருக்கும் ஒரு மந்திரி இருந்து அவர்களின் ஊரை மட்டும் முன்னேற்றுவதில் எவ்வித மான பயனமில்லை என்பதைத்தான் நாம் கூறவிளைகின்றோம். ஆகவே தான் முஸ்லிம் புத்திஜீவிகள், அறிஞர் கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், மார்க்க வாதிகள், ஊடகவியலாளர்கள், ஊர்த்தலைவர்கள் போன்ற அனை வரும் ஒரே முகத்தில் ஒரு நேர்கோட் டில் வந்து தமக்குள்ளே இருக்கின்ற மனகசப்புக்களை ஒருபுறம் வைத்து விட்டு அனைவரும் இந்நாட்டில் எமது சந்தி சந்திகளும் ஒற்றுமையாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கான பதி வுகளை மேற்கொள்ள நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சிந்திக்கவேண்டும். அதனை விட்டுவிட்டு உதுமாலெவ்வை என்பக்கம்வா? அந்தக் கட்சிக்குள் போகாதே? இவ்வளவு பணம் கேட்டா ரா? அதாஉல்லா இனிமேல் எழும்பவே முடியாது? உதுமான் இல்லாத கட்சி இனிமேல் அவுட் என்றெல்லாம் வாக்கு வந்தபடி பேசுவதிலோ, எழுதுவதிலோ எத்தகைய அர்த்தமும் ஏற்படப்போவ தில்லை.

இது முஸ்லிம் சமூகத்தின் தலையில் மண்ணை வாரிப்போடுகின்ற நிலை மையைத்தான் தோற்றுவிக்கும் என்பது நமது வாதமாகும். பர்மா போன்ற நாடுகளில் முஸ்லிம்களுக்கு ஏற்பட் டுள்ள நிலைமை எமது நாட்டுக்குள் தோற்றம்பெறுவதற்கு முன்னர் முஸ் லிம் தேசியத்துவ வாதத்தின் ஊடாக நிம்;மதியான வாழ்வினை பெற்றுக் கொள்வதற்குரிய நகர்வுகளை அறிஞர் சித்திலெவ்வை போன்ற மன்றங்கள் ஊடாக அனைவரும் ஒற்றுமைப்படு வதே சாலச்சிறந்ததாகும்.

இந்திய அமைதிப்படையின் துரோகத்தால் எழுதப்பட்ட மாதம் அக்டோபர்

1987 ஒக்ரோபர் 10 இல் தான் இந்திய அமைதிப்படை தமிழ் மக்கள் மீது போர்ப்பிரகடனம் செய்தது. மறக்க முடியாத ஒக்ரோபரல்லவா இது! இந்திய அமைதிப்படை யாழ். நகர வீதிகளில் எத்தனை பொதுமக்களைச் சுட்டுவிழுத்தியது. யாழ். புகையிரத நிலையத்தில் பிரம்படியில், கொக்குவில் ரயில் நிலையத்தில், கொக்குவில் இந்துக்கல்லூரியில், சாவகச்சேரி சந்தையில் என தமிழர்கள் இழந்த உயிர்கள் கொஞ்சமா நஞ்சமா? 1987 ஒக்ரோபர் எங்களுக்கு குருதியால் எழுதப்பட்ட மாதம்! இந்திய அமைதிப் படையின் துரோகத்தால் எழுதப்பட்ட மாதம்! ஒக்ரோபர் விடுதலையின் மாதமாக அகிம்சையின் மாதமாக அழிவின் மாதமாக ஆக்கிரமிப்பின் மாதமாகவும் தன்னைப் பல்வேறு முகங்களில் வெளிக் காட்டியுள்ளது.

1987 செப்ரெம்பர் 26ம் நாள் தமிழீழம் எங்கும் ஒரு துயரம் தோய்ந்த சோகநாளாகவே அமைந்தது. திலீபனின் இழப்பு அனைத்து தமிழர் மனங்களையும் வாட்டி வதைத்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழீழத்தை ஆக்கிரமித்த இந்திய அரசின் வஞ்சகச்சதியால் மக்களுக்காக வாழ்ந்த அந்த ஒளி விளக்கு ஓய்ந்தது.

இத்தோடு முடிந்துவிட்டது என்று மக்களின் மனத்தில் எண்ணங்கள் ஓட, தமிழீழக் கடற்பரப்பிலே பயணித்துக் கொண்டிருந்த லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளைக் கைதுசெய்து அவர்களின் சாவுகளுக்கு இலங்கை - இந்திய அரசுகள் காரணமாகின. அது அனைத்து மக்களையும் இன்னுமோர் சோகத்தில் ஆழ்த்தியது.

1987ம் ஆண்டு யூலை 29ம் நாள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களிற்கு நன்மைகள் கிட்டும், இந்தியா எமக்கு ஒரு வழியைக்காட்டும் என நம்பியிருந்த மக்களிற்கு மாறாக துன்பங்களையும் துயரங்களையுமே இலங்கை அரசும், இந்திய அரசபடைகளும் சுமத்தின. பிராந்திய நலனையும் தேச நலனையும் கருத்தில் கொண்டு இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்கள் எந்தவொரு பலனையும் பெற வில்லை.

ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர், புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும், அந்த ஒப்பந்தத்தை ஏற்குமாறு இந்திய அரசாங்கம் நேரடியாக அழுத்தம் கொடுத்தது. பிரபாகரனும் விடுதலைப்புலிகள் அமைப்பின் இன்னும் சில முக்கியஸ்தர்களும் இந்திய அரசாங்கத்தால் விசேட ஹெலி மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்டார்கள். டெல்லியில் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில், இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கும்படி அவர் கோரப்படுகின்றார். பின், உங்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக வந்து வாழ்வதை நீங்கள் பார்க்க

வேண்டும் என்றெல்லாம் அதிகாரிகளால் மிரட்டப்பட்டார்.

எந்தவொரு இராணுவத்திலும் பணிபுரிபவர்கள், தங்கள் கடமையையே முதலில் நிறைவேற்றுவார்கள். குடும்பம் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். எனக்கு எனது மக்களின் விடுதலையே முக்கியம் என இந்திய அதிகாரிகளிடம் உறுதியாக எடுத்துக்கூறியிருந்தார். அன்று, சர்வதேசமே பிரபாகரனின் நெஞ்சுறுதியையும் கொள்கையையும் கண்டு வியந்தது. தமிழர்களின் உரிமைக்காக போராடி மடிந்த மாவீரர்களின் தியாகங்களை எண்ணியே அவர் அந்த தீர்க்க தரிசனமான முடிவை எடுத்திருந்தார். டெல்லியில் இரகசியமாக, பிரதமர் ராஜீவ் காந்தியுடனும் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அங்கு, எனது அமைப்பு மக்கள் இயக்கம். எனவே, அவர்களுடனும் பேசிவிட்டு முடிவை அறிவிப்பதாகக் கூறுவிட்டு தாயகம் திரும்பினார்.

இலங்கை அரசுடனான ஒப்பந்தப்படி பிரபாகரனை முதலமைச்சர் ஆக்குவது தான் இந்திய அரசாங்கத்தின் நோக்கம். அதற்கு நான் மறுப்புத் தெரிவித்து விட்டேன். இதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்றேன் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்பது தானே! இதைத் தான் பிரித்தானியா போன்ற பார்வையாளர்களுக்கும் நாங்கள் சொல்ல வருகின்றோம். எங்கள் அனுதியைப் பெற்று அந்த உடன்பாடு எட்டப்பட வில்லை. எனவே, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என ஈழம் வந்த பிரபாகரன் புலிகளின் தளபதிகளிடத்தில் கூறினார். இதைத் தான் டெல்லியிலும் தெரிவித்து விட்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

தாயகன்

ஆனாலும், விடுதலைப்புலிகளினதும் தமிழ் மக்களினதும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது ஒரு தலைப்பட்சமாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. மறுநாளே, இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழ் மண்ணில் கால் பதித்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றியும் அமைதிப்படை பற்றியும் தனது ஆயுத ஒப்படைப்புப் பற்றியும் எழுந்துள்ள புறநிலைக் காரணிகளை விளங்க வைப்பதற்காக 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதுமலைப் பிரகடனம் ஊடாக வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். தொடர்ந்து ஆயுத ஒப்படைப்பும் நிகழ்கின்றது.

ஆனால், அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்தியப் படையின் கோர முகம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்குகிறது. தமிழ் விரோதக்கும்பலின் ஆயுத அதிகரிப்பும் சந்தமில்லாமல் நிகழ்ந்து கொண்டிருந்த சிங்களக்குடியேற்றங்களும் புலிகளை சீண்டிப்பார்த்தன. அதன் பிரதிபலனாக இந்திய இராணுவத்தின் உண்மை நிலையை உலகிற்கு எடுத்துச் சொல்லும் முகமாக உண்ணாவிரதப் போராட்டமாக திலீபனால் அகிம்சை வழியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து நடத்தப்பட்ட அந்த அகிம்சைப் போராட்டம் தீர்வு பெறாமல் திலீபன் 1987, ஒக்டோபர் 26 அன்று வீரச்சாவடைந்தார். இந்திய அரசாங்கம் இதனையெல்லாம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல இன்னொரு துயரம். 1987ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் நாள் தமிழீழக் கடற்பரப்பிலே நிராயுத பாணிகளாக எதிர்கால எண்ணக் கனவுகளுடன் லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகள் படகில் பயணித்தனர். அன்று விடுதலைப் போராட்டம் முனைப்பு பெற்றிருந்த காலத்தில் மிகத்திறமையான படகோட்டிகள், ஆழ்கடலோடிகளாகச் செயற்பட்டவர்கள் இவர்கள்.

இலங்கை இராணுவத்தின் ஆதரவோடு தமிழீழக் கடற்பரப்பில் வைத்து இந்தியப் படைகளால் கைதுசெய்யப்பட்டனர். 1987ம் ஆண்டு ஒக்ரோபர் 3ம் நாள் இவர்களைக் கைதுசெய்து பலாலி இராணுவ முகாமிற்கு கொண்டுசென்று விசாரணைகள் நடாத்திவிட்டு, பின் கொழும்பு கொண்டுசென்று அதன் மூலம் ஒரு சதி நாடகத்தை அரங்கேற்றலாம் என எண்ணி இலங்கைப் பேரினவாத அரசு திட்டம் தீட்டியது.

பலாலி இராணுவ முகாமில் பன்னிருவேங்கைகளும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை அரசபடைகள் எதுவித பலனையும் அடையவில்லை. தமிழர்களின் காவலர்களாகவும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உயிர் நாடியாகவும்

15 ஆம் பக்கம் பார்க்க....

இலங்கையின் மீள்காடாக்கல் பசுமை நிறைந்த நாடொன்றிற்கு வித்திடும்

இலங்கை ஒரு விவசாயம் சார்ந்த நாடாக அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது முதல் சுதந்திர தேசம் வரை இருந்து வருகின்றது. எமது மக்களின் சமூக பொருளாதார நடவடிக்கைகளுடன் மனித ஆரோக்கியத்திற்கும் வனவளம் நேரடியாகவே அல்லது நேரடியற்ற வகையிலோ தொடர்புபட்டுள்ளன எனலாம். ஆகவே எமது மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் காட்டு வளத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமானதாகும்.

ஆங்கிலேயர்களின் வருகையினால் நாட்டின் காட்டுவளம் துரித இழப்பிற்குள்ளாவதிலும் வனச்சீரழிவு ஏற்பட்டு இன்று பல்வேறு இயற்கை சமச்சீரற்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். வனங்களின் அழிவு எமது நாட்டிலும் உலகளவிலும் பாரிய கால நிலை மாற்றங்களை தோற்றுவித்துள்ளது. அதாவது பசுமை இல்ல விளைவுகளிற்கான காரணங்களான மண்ணரிப்பு, நிலச்சரிவுகள், கழிவு நீரோட்டத்தின் ஒழுங்கற்ற பாச்சல், இயற்கையான நீர்சுனைகள் வற்றிப்போதல் நீரில் அமிலத்தன்மை அதிகரித்தல் , வரட்சி, அதிக மழையும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை சமசீர்களில் மாற்றம் ஏற்பட்டு மக்களின் இயல்பு நிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றுள் வன ஜீவராசிகள் தமது இருப்பிடங்களை இழந்து மக்கள் குடியிருப்பு பிரதேசங்களுக்கு வருவதும் மனிதர்களுக்கும் வன ஜீவராசிகளுக்குமிடையில் மோதல்களும் உருவாகி வருகின்றது.

இதனால் தான் மக்களது பல்வேறு நடவடிக்கைகள் காடுகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறைக்கப்படல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் சுதந்திரத்திற்கு பின் வந்த அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. காட்டு வளமுகாமை, திட்டமிடல், பாதுகாப்பு போன்றவற்றிக்கு வன பரிபாலனத் திணைக்களம் தோற்றுவிக்கப்பட்டதுடன் வன வளத்துடன் தொடர்புடைய வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் , அரச மரக்கூட்டுத்தாபனம் சுற்றாடல் அதிகாரசபை போன்றவற்றை ஏற்படுத்தியது எனலாம்.

இதன்மூலம் பெறுமதிமிக்க காடுகளை பாதுகாக்கவும் நிகழ்கால எதிர்கால சூழலில் மற்றும் பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும் முடிந்துள்ளது. இலங்கையில் காடுகளை பாதுகாக்கும் நோக்கிலான முதலாவது வள கொள்கை 1929 இல் பிரகடனம் படுத்தப்பட்டது. இது 1951 இல் உணவு மற்றும் விவசாய நிறுவனங்களில் நடவடிக்கைகள் மூலம் செயலுருவாக்கம் பெற்றது. மற்றும் 1995 இல் புதிய வளக்கொள்கை சூழல் பாதுகாப்பு அதற்காக மக்களது பங்குபற்றுதலுடன் பல நல்ல திட்டங்கள் மீள்காடாக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

மீள்காடாக்கம் இருவகையாக வரைறை செய்யப்பட்டுள்ளது. ஒன்று ஏற்கனவே காடுகள் இருந்து அழிவுற்ற தன் பின் அவ்விடங்களில் காடுகளை உருவாக்கும் முயற்சி. மற்றையது ஏனவே காடுகள் இல்லாத பரப்பு நிலங்களில் காடுகளது தேவை கருதி காடு உருவாக்கம்.

இலங்கையில் இவ்வாறான மீள் காடாக்க நடவடிக்கைகள் மிக நீண்ட காலமாகவே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது 1850 களிலேயே ஆரம்பிக்கப்பட்டாலும் 1950 களிலேயே முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. எமது நாட்டின் பல பிரதேசங்களில் மீள்காடாக்க நடவடிக்கைகளில் தேக்கு , மலைவேம்பு, யூகலிட்டஸ், பைனஸ், இபில்- இபில் , புளி மூங்கில் போன்ற பல மரங்கள் நடப்பட்டன. ஆனால் இவை மக்களுக்கு பயன் கொடுக்க நீண்ட ஆண்டு காலம் எடுப்பதுடன் மீள் காடாக்கத்திற்கும் அதிக காலம் சென்றுள்ளது. இதேநேரம் 19ம் ணற்றாண்டின் பிற்பகுதியில் குருணாகல் போன்ற இடை நிலை தாழ்நிலங்களில் மகொனி எனப்படும் பெரிய இலைகளைக் கொண்ட தாவர இனம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 1950 களில் யூகலிட்டஸ் என்னும் இனங்கள் இலங்கையின் ஈர உலர்வலய தாழ் நிலங்களில் காடாக்கல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டது. இது வெற்றி கண்டதால் யுகலிட்டஸ் இனங்கள் பல மாவட்டங்களிலும் நடப்பட்டன. இது சூழல் பேணலில் மட்டுமல்லாது விறகு மற்றும் கைத்தொழில் துறைக்கும் நன்கு பயன்மிக்கதாக இருந்துள்ளது.

மலைநாட்டுப் பகுதிகளில் மீள்காடாக்க நடவடிக்கைகளில் யூகலிட்டஸ் உட்பட அகாசியா, பைனஸ் இனங்கள் பயிரப்பட்டது எனலாம். இது பெரு வெற்றியை எமது பசுமைப் புரட்சிக்கு கொண்டு வந்திருந்தாலும் காடுகள் மீள் சமநிலை அடைய ஆகக்குறைந்தது 300 ஆண்டுகள் தேவை என புவியியலாரும் சுற்றாடல் அதிகார சபை வல்லுனர்களும் கூறுகின்றனர்.

நாட்டின் போர்ச்சூழ்நிலை வடகிழக்கு வரண்டவலய காடழிவிற்கு மூல காரணமாக அமைந்திருந்தது. இன்றைய சமாதான சூழ்நிலையில் கூட வன அழிவு கட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. யுத்த சூழ்நிலை காலத்தில் இருந்ததை விட தற்போது வன அழிவு வேகமாக முன்கொண்டு செல்லப்படுகின்றது. இதற்கு பொலிசாரால் அவ்வவ்போது கைப்பற்றப்படும் பெறுமதிமிக்க மரக்கடத்தல்களை கூறமுடியும். இதனுடன் இணைந்ததாக வன ஜீவராசிகள் களமாக வேட்டையாடப்படுவதும் நில ஆக்கிரமிப்புக்களும் வன அழிவிற்கு வித்திடுகின்றது.

எமது ஜனாதிபதி அவர்கள் இலங்கையின் வனப்பிரதேசங்களை அதிகரிக்கும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையினை எடுத்து வருகின்றார். இதன் மூலம் யுத்தக்காலத்தில் இழந்த வனப்பகுதிகளில் மீள்காடாக்க நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதுடன் வனப்பாதுகாப்பில் அதிக அக்கறையினை செலுத்தி வருகின்றார்.

உலக சுற்றாடல் நிபுணர்களின் கோரிக்கைக்கு அமைய இயற்கை சமநிலைபேண வனங்களில் பாதுகாப்பு இன்றியமையாததடிவாயகவே உள்ளன. காலநிலையில் தளம்பல் நிலை ஏற்படாது இருப்பதற்கும் , கடலின் நீர்மட்டம் உயராது இருப்பதற்கும் நன்னீரில் அமிலத்தன்மை ஏற்படாத்திருப்பதற்கும் நீர் முகாமைத்துவத்திற்கும் இவற்றிக்கும் மேலாக மனித சுகாதார நலனிற்கும் வனங்களின் அவசியம் இன்றியமையாதவையாக உள்ளன. எனவே இயற்கையினை பேண காடுகளை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரதும் கடமையும் பொறுப்புமாகும்.

நடராஜன்
ஆலையடிவேம்பு

சிறந்த சேவைகளாலேயே மக்கள் மனங்களில் வேரூன்ற முடியும்!

சிறந்த சேவைகளால் மக்கள் மனங்களில் வேரூன்றி இருக்கும் தர்ஹா நகரை பிறப்பிடமாகக் கொண்ட சமூக சேவையாளர் பேருவளை பிரதேச சபையின் நீண்ட கால உறுப்பினருமான பைசான் நைசர் தமிழ் தந்திக்கு வழங்கிய விசேட செவ்வி

நேர்காணல்: எஸ்.அஷ்ரப்கான்

கேள்வி: தர்ஹா நகர் பிரதேசத்தின் அபிவிருத்தியில் உங்களது பங்களிப்பு எவ்வாறுள்ளது?

பதில்: நான் இன்று நேற்றல்ல எப்போது அரசியலில் கால் பதித்தேனோ அன்றிலிருந்து எனது பிறந்த ஊருக்கு பல்வேறு வழிகளிலும் சேவைப் பங்களிப்பை செய்து வருகிறேன். வீதிகள் அபிவிருத்தி, வடிகான்கள் அமைத்தல், பிரதேச நீர்ப்பிரச்சினை, வாழ்வாதார உதவிகள் வழங்குதல், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு அபிவிருத்தியிலும் நான் பங்கு கொண்டு என்னால் முடியுமான சேவைகளை செய்து வருகிறேன். ஆனால் எமது பிரதேச உட்கட்டுமான அபிவிருத்தி செயற்றிட்டத்தினை அமுல்படுத்துவதற்கு பல்வேறு சவால்கள் உண்டு. அதனையும் தாண்டி நாம் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்.

கேள்வி: அபிவிருத்தியில் சவால்கள் உண்டு என நீங்கள் எதனை குறிப்பிடுகிறீர்கள்?

பதில்: தர்ஹா நகர் பிரதேசத்தை மட்டுமல்லாது பேருவளை பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் போதிய வருமானமின்மை, வளங்கள் இல்லாமை, ஆளணிப் பற்றாக்குறை என பல்வேறு பிரச்சினைகளுக்கு எமது பிரதேச சபை முகம் கொடுத்து வருகிறது.

இந்நிலையில் நாளாந்தம் சேரும் குப்பைகளை அகற்றுகின்ற பணியையும் சிறப்பாக செய்வதற்கு கடும் சிரமங்களை நாம் எதிர்கொள்கின்றோம். 7 நாட்களும் எமது சிற்றூழியர்கள் வேலை செய்கிறார்கள். என்றாலும் இதற்கான ஆளணியும், உபகரண தேவையும், மெசின்களும் எமது பணிக்கு கடும் சவாலாக உள்ளதை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

கேள்வி: எதிர்வருகின்ற மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கும் எண்ணமுண்டா?

பதில்: இதற்கு பதிலை என் மீது அன்பு கொண்டுள்ள ஆதரவாளர்கள் நண்பர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். எமது வட்டார பிரதேச மக்கள் என் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே மக்கள் என்ன தீர்மானம் எடுப்பார்களோ அதற்கு நான் கட்டுப்படுவேன். தேர்தலில் களமிறங்கும் தீர்மானம் எடுக்கப்பட்டால் நான் கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் மாகாண சபைத் தேர்தலில் எவ்வித சவால்களையும் எதிர்கொண்டு மக்களுக்காக களமிறங்க நான் தயாராக உள்ளேன்.

கேள்வி: பெருந்தேசிய பலம் வாய்ந்த கட்சிகளின் அரசியல் வாதிகள் இங்குள்ளபோது உங்களது அரசியல் செயற்பாடுகளுக்கு அது தடையாக இருக்காதா?

பதில்: நிச்சயமாக இல்லை. மக்கள் சேவை ஒன்றே எனது தேவையாக கருதி நான் செயற்பட்டு வருகின்றேன். அதனால் நான் அதிகாரத்தில் இல்லாத வேளையிலும் கூட மக்கள் தனது தேவைகளை நிறைவு செய்வதற்கு என்னை நாடி வருகின்ற போது அவர்களின் தேவைகளை நிறைவேற்றி கொடுப்பேன். இதனால் நான் என்றும் மக்கள் மனங்களில் வாழ்கிறேன். பிரதேச மக்களின் ஆதரவு எனக்கு தொடர்ந்தும் உள்ளது. இதனால் நான் எந்த சவாலையும் எதிர்கொள்ளும் மனோதிடத்துடன் இருக்கின்றேன். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட மக்களின் விருப்பப்படியே நான் தேர்தலில் குதித்து 1801 வாக்குகளை பெற்று வெற்றியும் பெற்றேன். மக்கள் என் பக்கம் இருக்கின்றபோது நான் ஏன் தயங்க வேண்டும். எனவே தான் எனக்கு பெரும்பாண்மை கட்சிகளினால் எவ்வித தடைகள் ஏற்பட்டாலும் அதனை நான் அலட்டிக் கொள்ளவில்லை. எனது நேர்த்தியான பாதையில் அரசியல் பயணம் சென்று கொண்டிருக்கிறது.

கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஊடாக உமது பிரதேசத்தில் செய்த அபிவிருத்திகள் என்ன?

பதில்: நான் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கமைய, இன்னும் ஒரு மாதத்திற்குள் மீரிப்பன்ன 2 கிலோ மீற்றர் வீதியை கார்பட் வீதியாக மாற்றியமைக்க உள்ளோம். அதுபோன்று அதிகார கொட, குருந்துவத்த பிரதேசங்களில் உள்ள வீதி, வடிகான், பாலர் பாடசாலைகள், முஸ்லிம் பாலிஹா வித்தியாலயம், வைத்தியசாலை போன்றவற்றுக்கான அபிவிருத்திகள் மற்றும் பிரதேச மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் என எமது சேவை தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்கு எமது கட்சியின் தேசியத் தலைவர் அமைச்சர் றவூப் ஹக்கீம் அவர்களும் சுமார் 20 இலட்சம் ரூபாய்களை ஒதுக்கித் தருகிறார். அது போன்று பிரதேசத்தின் ஆளுந்தரப்பு பிரதான அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்களின் உதவியுடனும் எமது பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட அபிவிருத்திகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அது போன்று மசூர் மாவத்தை வீதி அபிவிருத்திக்கு பிரதேச செயலக நிதி சுமார் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு தார் வீதியாக மாற்றப்படவுள்ளது. மேலும் தர்ஹா நகர் ஜெம் வீதி, ஸாஹிறா கல்லூரி வீதி, லோட்டஸ் வீதி ஆகியன மு.கா. தலைவர் அமைச்சர் றவூப் ஹக்கீம் அவர்களால் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி: பேருவளை பிரதேச அசம்பாவிதங்களின் பின்னர் முஸ்லிம் சிங்கள உறவு எவ்வாறு உள்ளது?

பதில்: இங்கு காலாகாலமாக இரு இன மக்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றோம். ஆனால் சில விசமிகளால் ஏற்பட்ட இனவாத தீ எமது அரசியல்வாதிகளாலும் சமூக முற்போக்குவாதிகளாலும் தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு களும் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் எமது முயற்சிகள் இரு இனத்திற்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் என்பது எமது நம்பிக்கையாகும்.

கேள்வி: நல்லாட்சியிலும் தற்போது மக்கள் நம்பிக்கையிழந்து வருவதாக கூறப்படுகிறதே இது பற்றி உமது கருத்தென்ன?

பதில்: சிறுபான்மைகள் நாங்கள் எந்த ஆட்சியாளர்கள் வந்தாலும் எமது இருப்பையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்வதில் கருத்தாக இருக்க வேண்டும். யார் ஆட்சி செய்தாலும் சிறுபான்மைகளின் ஆதரவில்லாமல் யாராலும் ஆட்சியமைக்க முடியாது. எந்த அரசாங்கம் வத்தாலும் நாட்டின் இந்த நிலைமை தொடராமல் இருப்பது கடினமே. அதற்குள் எமது மக்களின் நலனை நாம் பெற்றுக் கொண்டால் அதுவே பெரும் வெற்றிதான். எமது கட்சியும் கட்சித் தலைமையும் எமது பிரதேச மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினை பெற்றுக் கொடுத்து வருகிறது. புத்தி சாதுரியமாகச் சிந்தித்து எமது மக்கள் உரிமைகளை பெறுவதற்கும், மாற்று இன சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.

அரசியலுக்கு அப்பால் கிழக்கு தமிழர்களை அரவணைக்கும் அமைப்பே கிழக்கு தமிழர் ஒன்றியம்

தமிழ்த்தந்தி 26 ஆகஸ்ட் 2018 இதழில் 6ம் பக்கத்தில் சுவிட்சர்லாந்திருந்து இரா. துரைரத்தினம் என்பவர் எழுதியிருந்த 'கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கோரிக்கைகளின் நிராகரித்திருக்கும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகள்' எனும் தலைப்பினை கட்டுரையில் அவரால் குறிப்பிட்ட விடயங்களுக்குச் சில விளக்கங்களில் வெளிப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. காரணம் அவர் தனது கட்டுரையில் 'கேள்விச் செவியன் ஊரைக் கொடுத்தான்' என்பது போல இலங்கையிருந்து அவருடைய வார்த்தைகளிலேயே கூறுவதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு முக்கியஸ்தரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகனும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்புத் தொகுதி தமிழரசுக் கட்சித் தலைவருமான பா. அரியநேந்திரனும் காதிலே ஓதியதை வைத்துக் கொண்டு தனது கட்டுரையைச் சோடித்திருக்கிறார்.

கிழக்குத்தமிழர் ஒன்றியம் ஆனது அரசியலுக்கு அப்பால் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைக்கும் நோக்கத்தையே பிரதானமாக கொண்டது. அரசியல் கட்சி சார்ந்தவர்கள் அதில் அங்கம் வகிக்க கூடாது என்பதல்ல. கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் கதவுகள் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அனைவருக்கும் திறந்து விடப்பட்டுள்ளன. கட்சி அரசியலுக்கு அப்பால் அரசியல் கட்சிகளிலுள்ள அனைத்து தமிழர்களும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் பின்னணி பற்றி எடுத்துக் கூற வேண்டியுள்ளது.

1987 இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகவேணும் இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் 2007 ஆம் ஆண்டு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் பல மறைத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பு நாளாந்தம் கேள்விக்குள்ளாகி வருகிறது. இதனை தடுத்து நிறுத்தும் அல்லது மாற்றுவழியைத் தேடும் ஆத்மார்த்தமான அக்கறையோ அல்லது அரசியல் வல்லமையோ தற்போதைய தமிழர்தம் அரசியல் தலைமையிடம் இல்லை என்பதை அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் நிரூப்பித்துள்ளன. அதன் உச்சக்கட்டம் 11 ஆசனங்களில் பெற்றிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 07 ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸட கட்சியிடம் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஆட்சி அதிகாரத்தைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புறத்தள்ளிவிட்டுத் தாரை வார்த்துக் கொடுத்ததாகும்.

இந்த நிலையில் அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்பதற்கிணங்க கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்களை தற்காத்துத் தங்களின் எதிர்கால இருப்பைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்குரிய பொறிமுறையொன்றினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்காகப் பாடுப்படக்கூடியதாகக் கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் மயப்படுத்தப் பெற்றதும் வினைத்திறன் மிக்கதுமான பொதுமான பலமான மக்கள் அமைப்பொன்று முழுக் கிழக்கு மாகாணமும் தழுவியதாக இல்லை. இந்தப் பின்னணியில் தான் நண்பர் சிரேஸ்ட சட்டத்தரணி த. சிவநாதன் அவர்களும் நானும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் பொதுமக்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டமொன்றின் 06.01.2018 அன்று மட்டக்களப்பு , கல்லடி உப்போடையிலுள்ள துளசி மண்டபத்தில் கூட்டினோம். உண்மையில் எங்களுடைய வகிபாகம் யாதெனில் பூனைக்கு மணி கட்டுவது யார்? என்றிருந்த நிலையில் இக் கூட்டத்தை நாம் இருவரும் இணைந்து கூட்டியது தான்.

இக்கூட்டத்திற்குக் கட்சி அரசியலுக்கு அப்பால் சகல தரப்பினர்களும் சமூகமளித்திருந்தனர். கிழக்குத் தமிழர் ஒன்றியத்தை நாங்களிருவரும்தான் உருவாக்கினேனும் என்றில்லை. அன்று கூடிய பொது மக்கள்தான் விரிவான கலந்துரையாடலின் பின்னர் கிழக்குத் தமிழர் ஒன்றியம் எனும் அமைப்பை உருவாக்கினார்கள்.

ஒரு சமூக அரசியல் செயற்பாட்டாளன் தான் வரித்துக் கொண்ட தத்துவார்த்தத் தளத்தில் நின்று தேர்தல்களில் போட்டியிடுவதும் அத் தேர்தல்களில் தோல்வியுறுவதும் குற்றமா?

கடந்த காலங்களில் நண்பர் சிவநாதனும், நானும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளோம் என்று உண்மைதான். நண்பர் சிவநாதன் 2000 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் காலத்தில் அகில இலங்கை தமிழக் காங்கிரஸ் வேட்பாளராகவும், 2010 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி தமிழத் தேசிய கூட்டமைப்பு வேட்பாளராகவும் போட்டியிட்டவர்.

நான் 1989 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் அப்போதைய தமிழர்விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் ஈ.பி. ஆர். எல். எப் சார்பில் வேட்பாளராகவும், 1994 ஆம் , 2000 ஆம் ஆண்டுத் தேர்தர்களில் அம்பாறை மாவட்டத் தமிழர் சங்கச் சுயேட்சைக் குழுவுக்குத் தலைமை தாங்கியும், 201 5 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நான் தற்போது செயலாளராகப் பதவி வகிக்கும் அகில இலங்கைத் தமிழர் தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக அல்லது நான் அவாவி நிற்கும் மாற்றமொன்றிற்காக ஆயிரம் முறை தேர்தல்களில் போட்டியிடவும் ஆயிரம் முறை தோற்கவும் நான் தயார். அது வேறு விடயம். ஆனால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் போது இனி மேல் தேர்தல்களில் நான் போட்டியிடுவதில்லை எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளேன்.

மேலும், கடந்த காலங்களில் தேர்தல்களில் போட்டியிட்டுத் தெரிவாகாதவர்கள் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் எல்லோரும் தீண்டத் தகாத வர்களா?

தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

அப்படியானால் 1949 இலிருந்து 1977 வரை அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கீரியும் பாம்புமாகதானே அரசியல் செய்தன.

1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமரர் அ.அமிர்ந்தலிங்கம் அவர்களைச் செயலாளர் நாயகமாக கொண்டிருந்த அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஈரோஸ் அமைப்பு சுயேட்சைக் குழுக்களின் நிறுத்தி வெற்றியீட்டிருக்கிறார்களே. 1994 இல் தந்தை செல்வா உருவாக்கித் தந்து விட்டுப் போன தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து ரெலோ, புளோட், ஈரோஸ் இணைந்து ரெலோவின் சின்னமான வெளிச்சவீட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டார்களே ஈ.பி.ஆர்.எல்.எப் தனித்துப் போட்டியிட்டதே. 2000 ஆம் ஆண்டுப் பொதுதேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் சார்பில் நான் தலைமை தாங்கிய சுயேட்சைக் குழுப் பட்டியலில் ரெலோவின் சார்பில் ஹென்றி மகேந்திரனும் இடம் பெற்றிருந்தாரே . தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துத்தானே அம்பாறை மாவட்டச் சுயேட்சைக் குழு நிறுத்தப் பெற்றது.

1994 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்டத்தில் போட்டியிடாத காரணத்தால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா இடம்தேடி அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட போது வெளிமாவட்டத்தை சேர்ந்த அவரை எதிர்த்து அம்பாறை மாவட்டத் தமிழர்மகா சங்கச் சுயேட்சைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய பத்திரிகை எழுத்தாளராகிய நான் மாவை சேனாதிராஜாவின் வெற்றியைத் தடுத்து அம்பாறை மாவட்டத் தமிழர்களின் மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றியது தவறு? இத்தேர்தலில் முன்னைய பந்தியில் குறிப்பிட்ட வெளிச்சவீட்டு குழுவில் ரெலோவும் தானே தமிழர் விடுதலைக் கூட்டணியை- மாவை சேனாதிராஜாவை எதிர்த்துப் போட்டியிட்டது. 2004 ஆம், 2010 ஆம், 2015 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டதே? வீ.ஆனந்த சங்கரி அவர்கள்தானே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பகாலத் தலைவராக இருந்தவர். தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவான 2001 ஆம் ஆண்டுப் பொது தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் உதய சூரியன் சின்னத்தில் கீழ் ஒன்றிணைந்து போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி (தமிழர் விடுதலைக்கூட்டணியின் பங்காளிக்கட்சி) , ஈ.பி.ஆர்.எல் எப், ரெலோ என்பன பின்னால் பிரிந்த போன பின் 2010 ஆம், 2015 ஆம் ஆண்டுத் தேர்தல்களின் போது தற்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எனப் பெயர் வைத்துக் கொண்டிருக்கும் சைக்கிள் சின்னத்தையுடைய அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை (தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தை) எதிர்த்துப் போட்டியிடவில்லையா? தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் போது 2001 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட் உள்வாங்கப்படவில்லையே? 2019 இல் யுத்தம் முடிந்த பின் நடைபெற்ற வடமாகாண சபை தேர்தலின் போதுதானே புளொட் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியானது. வடமாகாணசபைத் தேர்தலின் போது வீ.ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி மீண்டும் உள்வாங்கப் பெற்றுப் பின் மீண்டும் உதறிவிடப்பட்டதே ?

2001 இலிருந்து 2015 வரை தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இப்போது ஓரங்கட்டப்பட்டுவிட்டதே?

ரெலோவும், புளொட்டும் வேறுவழியில்லாமல்தானே பல்லைக் கடித்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயர்பலகையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு (தமிழரசுக்கட்சிக்கு) எதிராகத்தானே வடமாகாண முதலமைச்சர் தமிழரசுக்கட்சி வேட்பாளராக நிறுத்தி வெற்றியிட்டிக் கொடுத்த சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்.

இந்த அரசியல் சித்து விளையாட்டுக்களையெல்லாம் சீரணித்துக் கொண்டிருக்கும் கோவிந்தம் கருணாகரத்திற்கு (ஜனாவிற்கு) எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்கள் சார்பில் அதி உச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தில் கீழ் ஒன்றிணைந்து போட்டியிட வைப்பதற்காக காலத்தின் தேவையறிந்து கிழக்குதமிழர் ஒன்றியம் எடுக்கும் தனிநபர் சாராத கட்சி அரசியல் நலன் சாராத - முழுக்க முழுக்க மக்கள் நலன் சார்ந்த முயற்சியில்தான் வயிற்றில் புளிக் கரைக்கின்றது. அதனால்தான் கட்டுரையாளர் கிழக்கு தமிழர் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன என்று கேட்டதற்கு அது ஒரு உதவாக்கரை என ஒரே வார்த்தையில் ஜனா பதில் அளித்திருக்கிறார் போலும்.

மேலும் 22.08.2018 அன்று மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் நடந்த கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஒரே இடத்தினை சந்திப்பின் இறுதி தீர்மானமான கிழக்குத்தமிழர் ஒன்றியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிணைந்து

தயாரித்து அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கும். அக்கட்சிகளின் பின்னுட்டல்களைப் பெற்ற பின்னர் கிழக்குத் தமிழர் ஒன்றியம் தனது இறுதி முடிவை மக்களிடம் கொண்டு செல்லும் என்பதை அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த தமிழரசுக்கட்சியின் செயலாளர் நாயகம் கி. துரைராசசிங்கத்துடனும் தனது கட்சி ரெலோ சகாலான பிரசன்னவுடனும் சேர்ந்து ஜனாவும்தானே ஏற்றுக் கொண்டார். அக்கூட்டத்தில் துரைராசசிங்கம் அவர்களைத் தான் நூறுவீதம் ஏற்றுக் கொள்வதாகத்தானே பகிரங்கமாக ஜனா கூறுகிறார். இக்கூட்டம் பற்றி துரைராசசிங்கம் ஊடங்களுக்குத் தெரிவிக்கும் போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை வரைவதாகவும் அந்த ஒப்பந்தம் எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் செல்லப்பட்டிருக்கின்றது. அவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கை அனுப்பி வைக்கப்படுகின்ற போது எமது கட்சி மட்டத்தில் பரிசீலனை செய்து எமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்போம் என்றுதானே கூறியுள்ளார்.

மேலும் இந்த முயற்சியில் கிழக்குத்தமிழர் ஒன்றியம் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் தனித்தனியே சந்தித்துப் பேசிய போது ரெலோ உடனான சந்திப்பு 22.07.2018 அன்று வவுனியாவில் நடைபெற்றது. அச்சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோருடன் ஜனாவும், பிரசன்னாவும் கூடக் கலந்து கொண்டிருந்தனர். அப்போது ரெலோவின் தலைமைப் பீடத்தினர் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் முயற்சியையும் நிலைப்பாட்டையும் வரவேற்றுப் பாராட்டியதோடு தாங்கள் இது விடயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் ஒன்று என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அழுத்தம் கொடுப்பதாகவும், ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவைத் தாங்கள் மீறமுடியாது என்றுதானே தெளிவாகத் தெரிவித்திருந்தார்கள். அப்வேளையில் பெட்டிப்பாம்பாக இருந்து அதில் ஆமோதித்த ஜனா ரெலோ தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டுக்குமாறாகவும், தான் நூறுவீதம் ஏற்றுக் கொண்டுள்ள தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராசசிங்கத்தின் கூற்றுக்கு மாறாகவும் முந்திரிகைக் கொட்டை போல் முந்திக் கொண்டு எதிர்மறையான கூற்றுக்கு தெரிவிப்பதன் பின்னணி என்ன? தலை இருக்க வால் ஆடும் அரசியலா இது என்பதே எண்ண தோன்றுகிறது. இந்த விடயயத்தில் வவுனியாச் சந்திப்பிலும், களுவாஞ்சிக்குடிக் கூட்டத்திலும் கலந்து கொண்ட ரெலோவைச் சேர்ந்த பிரசன்னா புத்திசாலித்தனமாகவே நடந்து கொண்டுள்ளார். ஜனா அரசியலில் கற்றுக் கொள்ள இன்னும் அதிகம் இருகின்றது.

மேலும் தேர்தல்கள் பற்றியும் ஆசனப்பங்கீடு பற்றியும் பரஸ்தாபிக்கிறார். இது எதனை காட்டுகின்றது என்றால் ஜனா எப்போதுமே தேர்தல் மைய அரசியல் பற்றியே சிந்திக்கின்றார் என்பதைத்தான். மக்கள் மைய அரசியலுக்கும் அவருக்கும் இடையில் நெடுந்ரம் போலும்.

நான் செயலாளராக உள்ள அகில இலங்கை தமிழர் மகா சபை கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அரசியல் நிலைப்பாட்டை பரிபூரணமாக ஆதரிக்கின்றது. அதில் என்ன தவறு இருக்கின்றது. பிள்ளையானை மீண்டும் முதலமைச்சராக ஆக்குவதற்குக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் மூலமாக நான் முயலுவதாக அவர் கூறியிருப்பது ஆதாரமற்ற விசமத்தனமான கூற்றாகும். முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று கிழக்குதமிழர் ஒன்றியம் இதுவரை சிந்திக்கவில்லையே. ஜனாவின் இத்தகைய கூற்றைப் பார்க்கும் போது மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற பழமொழி தான் என் ஞாபகத்திற்கு வந்தது. அகில இலங்கைத் தமிழர் மகாசபை என்ற அரசியல் கட்சியின் செயலாளராக இருக்கும் நான் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் இணையக்கூடாது என விதி உள்ளதா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஸ்ட துணை தலைவரான முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஞா கிருஸ்ணபிள்ளை (வெள்ளி மலை) அவர்கள் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இணைந்து செயற்படுகிறாரே அது தவறு?

கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்களின் ஒருவரான நண்பர் சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன் தமிழரசுக்கட்சியின் ஆயுள் உறுப்பினராவார். கிழக்குத்தமிழர் ஒன்றியத்தில் அவர் இருப்பதற்கு இது தடையில்லையே. மட்டுமல்ல தேசியக் கட்சிகளின் அங்கத்தவர்களாக உள்ளவர்களும் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தில் இணைந்துள்ளனர்.

கட்சி அரசியல் சாராத ஆயுள் கிழக்குத்தமிழர்களின் மேம்பாட்டின் மீது அக்கறைகொண்ட ஆர்வலர்களும் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் இணைந்துள்ளனர்.

ஆனால் கிழக்குத்தமிழர் ஒன்றியத்திற்கு தனிப்பட்ட அரசியல் கட்சியொன்றின் கட்சி அரசியலுக்கு இடமில்லை என்பதே யதார்த்தம். கிழக்குத்தமிழர் ஒன்றியம் ஒரு தனித்த அரசியல் கட்சி அல்ல என்பதே சரியான புரிதலாகும். மேலும், பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சார்பிலும் நான் தேர்தலில் போட்டியிட்டுருந்தான கூற்றும், மாகாணசபைத் தேர்தல்களில் நான் போட்டியிட்டிருந்தான கூற்றும் பொய்யானவை. எனது விம்பத்தைப் பழுதாக்கும் நோக்குடன் கட்டுரையாளர் எழுத்துக்களின் மீது எதிர்காலத்தில் நான் சட்ட நடவடிக்கைகள் கூட எடுக்கும் நிலை ஏற்படலாம். மூத்த ஊடக வியலாரான இரா.துரைரத்தினம் தனது கூற்றுக்களிலுள்ள உண்மைத்தன்மைகளின் ஆராய்ந்து எழுதவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளையிட்டு விமர்சனம் செய்வதும் அதன் அரசியல் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும் தவறு? ஜனநாயக வரம்புக்குள் விமர்சனங்களும் அடங்கும் என்பது ஜனாவுக்குத் தெரியாதா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கைளுடன் எனக்கு முரண்பாடுகள் இல்லை. அதனுடன் செயற்பாடுகளுடன் தானே முரண்பட வேண்டியுள்ளது. தமிழர் அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் போல் அல்லவா நடந்து கொள்கிது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான எனது விமர்சனங்களைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான பிரச்சாரமாக ஜனா கருதுவது அவரது அரசியல் முதிர்ச்சியின்மை மையே காட்டுகிறது. அரசியலில் மட்டுமல்ல ஓர் ஆரோக்கியமான சமூக மாற்றத்திற்கு எல்லாவிடயங்களிலும் விமர்சனமும் சுயவிமர்சனமும் அவசியமானவை என்பதையும் ஜனா விளங்கிக் கொள்ள வேண்டும்.



நாங்கள் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்ததன் பின்னர் நாம் எமக்கான அடையாளங்களை இழந்தோம். இதனை நாங்கள் எவ்வளவு தூரம் தேடிய போதிலும் இதனை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனை நாங்கள் தற்போது வாழும் தமிழ் நாட்டிலோ அல்லது எமது சொந்த நாடான இலங்கையிலோ திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதே கசப்பான உண்மையாகும்

முனையூரான்

அடையாளங்களை தொலைத்து நிற்கும் ஈழத்தமிழ் அகதிகளின் வாழ்வு

தேசிய அரசாங்கம் தாம் அளித்த வாக்குறுதிகளை ஓரளவு திருப்தியளிக்கின்ற வகையில் நிறைவேற்றியிருந்தாலும் கூட இன்றளவும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தொட்டும் தொடாமலும் இருப்பது தமிழ்மக்களிடையே அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளது. வடகிழக்கு வாழ் மக்களின் தேவையாக, இன்றுதமிழ் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இராணுவத்தினரின் கைவசமிருக்கின்ற காணிகளை மீளப்பெறல், தங்களது சொந்தக் காணிகளில் மீள் குடியேறல், வாழ்வாதாரப் பிரச்சினை, இராணுவத் தலையீடற்ற சுதந்திர வாழ்வு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கான விடுதலை, அகதிகளின் மீள்வருகை முதலான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே முக்கிய தேவையாகக் காணப்பட்டது.

மேற்படி தமிழ் மக்கள் குறித்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிய தீர்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் அவை முற்றுப் பெறாத முடிவாகவே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடத்திவரும் பேச்சுவாடத்தைகளுக்கு செவி சாய்ப்பதுடன், இதனைப் பொறுப்பேற்று உடன் தீர்த்துவைப்பது இன்றைய அரசின் கையில் தங்கியுள்ளது. உடனடித் தீர்வைப் பெறுவதே அவர்களது இன்றைய பிரதான தேவையாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்ததானது மகிழ்ச்சி ஆனால் சுதந்திரம் இன்னமும் எட்டப்படவில்லை'; ஆட்சிக்கு வந்தாலும் தமது பிரச்சினைகளில் மாற்றம் ஏற்படாது என வடக்கில் வாழும் தமிழ் மக்கள் கருதுகின்றனர். அதாவது உள்நாட்டுப் போர் முடிவடைந்ததானது தமக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற போதிலும், தமக்கான சுதந்திரம் இன்னமும் எட்டப்படவில்லை என வட கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

அவ்வகையான ஆதங்கங்களில் ஒன்றே இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த 100,000 இற்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் நிலைகுலைந்த வாழ்க்கையாகும். உள்நாட்டில் வாழும் மக்களுக்கே ஆட்சிமாற்றத்தின் பின் தீர்வு கிடைக்காத நிலையில் போராடிவரும் இச்சூழ்நிலையில், இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளின் நிலைப்பாடு பற்றியும் அவர்களது மனோநிலைகள் பற்றியும் அறிந்தவரையில் அம்மக்களுக்கு தமது சொந்த நாட்டில் வைத்துள்ள எண்ணப்பாடுகள் மிகத்தெளிவாக புலப்படுகின்றது.

அந்தவகையில், இந்தியாவின் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் 100,000 உட்பட்ட ஈழத்தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர். இங்கு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்துவருகின்றனர். தாம் தற்போது வாழும் அகதி முகாமானது ஒருபோதும் தமக்கான சொந்த வீடாகாது என்பதை இவர்கள் நன்கறிந்துள்ளனர். எனினும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பிச் சென்று தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்புவது என்பது இவர்களுக்கு பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இவர்களைப் பொறுத்தளவில் தாம் வாழும் அகதி முகாம் மட்டுமே தற்போது இவர்களுக்கான வீடாக உள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து எட்டாவது ஆண்டு நிறைவு விழா கடந்த மே 18ம் திகதி அன்று நினைவுகூரப்பட்டது. இந்நிலையில் தங்களின் எதிர்காலத்தை இருட்டாக்கிக் கொண்ட ஈழத்தமிழ் அகதிகளின் எண்ணப்பாடுகள் இவ்வாறாக அமைந்திருந்தமை அவர்களின் எதிர்காலம் குறித்து அனைவரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. (மூலம்- களஆய்வுக் கட்டுரையாளரிடமிருந்து)

ஒரு பேராசிரியராக வரவேண்டும் என்ற கனவுடன் தனது 20வது வயதில் இலங்கையை விட்டு வெளியேறி தமிழ்நாட்டின் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்தவரான எஸ்.மூர்த்திக்கு தற்போது 54 வயது. இவர் நான்கு மகன்களின் தந்தையார். ஆனால் பேராசிரியராக வரவேண்டும் என்கின்ற இவரது கனவு உள்நாட்டு யுத்தத்தால் சிதைவுற்றது. இவர் தற்போது சென்னையிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் சிறிய பலசரக்குக் கடை ஒன்றை நடத்துகிறார். சிறிலங்காவின் வடக்கிலுள்ள திருகோணமலையிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான நாளை எதிர்பார்த்து நாதன் காத்திருக்கிறார். ிகடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். இந்த முகாமில் 25 ஆண்டுகளுக்கும் மேல் வசித்து விட்டேன். சிறிய கடையையும் நடாத்தி வருகிறேன். இந்நிலையில் எனது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு அனைத்தையும் இலகுவாகப் பெற்றுவிட முடியும் என நான் நினைக்கவில்லை. அங்கு சிறந்த வாழ்வொன்றை நான் வாழ்வதற்கு பல இடர்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்' என நாதன் தெரிவித்தார். மேலும் அவர், 'திருகோணமலையிலுள்ள எனது கிராமத்தில் 1980 களில் 55 குடும்பங்களுக்கும் மேலிருந்தன. தற்போது அங்கு மூன்று குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இந்தக் கடையை நான் அங்கு நடத்தினால் என்னால் போதியளவு வருமானத்தைச் சம்பாதிக்க முடியாது' எனவும் தெரிவித்திருந்தார்.

அந்த முகாமில் வசிக்கும் 60 வயதான பெண்மணியான ஜி.லக்ஸ்மி தனது சொந்த ஊரான மன்னாருக்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். 'எனது மூத்த மகள் கடந்த ஆண்டு ஊருக்குச் சென்றிருந்தார். ஆனால் அவரால் அங்கிருக்க முடியாததால் மீண்டும் இரண்டு மாதத்தில் இங்கு வந்துவிட்டார். எனது இளைய மகள் இந்த மாதம் தனது கணவரின் இடத்திற்குச் செல்லவுள்ளார்' என லக்ஸ்மி தெரிவித்தார்.

'இங்கிருக்கும் தற்போதைய தலைமுறையினர் உள்நாட்டிலிருந்து வெளியேறிய போது சிறுவர்களாகவே இருந்தனர். அல்லது சிலர் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாகவும் உள்ளனர். உண்மையில் அவர்களின் சொந்த நாடாக இந்தியாவே உள்ள போதிலும் அவர்களும் அகதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர்' என போரின் இறுதிக்கட்டத்தில் நீண்டகாலம் தங்கியிருந்தவர்கள் என்ற வகையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு இவர்கள் தமக்கான உடைமைகள், அடிப்படைச் சேவைகள், உரிமைகள், தமக்கான அடையாளம், தொழில்வாய்ப்பு போன்றவற்றை மீளவும் பெற்றுக்கொள்ள முடியுமா என கேள்வியெழுப்புகின்றனர். போரின் போது தனது அனைத்து ஆவணங்களையும் தொலைத்தமையாலும் நிதி நெருக்கடி உள்ளதாலும் தன்னால் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் இடரை எதிர்நோக்குவதாக தமிழ்நாட்டு அகதி முகாமிலிருந்து அண்மையில் வன்னியிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிச் சென்ற 42 வயதான தமிழர் ஒருவர் தெரிவித்திருந்தார். இவர் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதால் மீண்டும் கும்மிடிப்பூண்டி அகதி முகாமிற்குத் திரும்பிச் சென்றுள்ளார். 'நாங்கள் ஒரு தடவை அகதி ஆகியதால் எப்போதும் அகதிகளாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்' எனவும் தெரிவித்திருந்தார்.

'நாங்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்ததன் பின்னர் நாம் எமக்கான அடையாளங்களை இழந்தோம். இதனை நாங்கள் எவ்வளவு தூரம் தேடிய போதிலும் இதனை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனை நாங்கள் தற்போது வாழும் தமிழ் நாட்டிலேயோ அல்லது எமது சொந்த நாடான இலங்கையிலோ திரும்பப் பெற்றுக்கொள்ள

முடியாது' என அகதியாக வாழும் ஈழத்தமிழரகள்; மனவேதனையுடன் தெரிவித்துவரும் கருத்தானது, அவர்களின் ஒட்டுமொத்த விரக்திநிலையை எடுத்தியம்புகின்றது.

எனவே இவர்களின் இவ்வாறான கருத்துக்களுக்கும் விரக்திநிலை தோன்றுவதற்கு காரணமான இலங்கைச் சமூகமே இவர்களும் இலங்கைத் தமிழர்களே அடையாளத்தை மீண்டும் வழங்கி உறுதி செய்து, அவர்களும் சொந்த மண்ணில் கால்பதித்து எதிர்காலத்தை ஒளிமயமாக்க தாமதியாது விரைந்து செயலாற்ற வேண்டும் என்பதே அனைத்து வாழ் அகதிகள் உட்பட நாட்டு மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இலங்கை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

வன்முறைகள் எல்லாம் முஸ்லிம்களால் மறக்க முடியாத அண்மைய சம்பவங்களாகும்.

இதேபோல் 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வடக்கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளால் துரத்தப்பட்ட சம்பவங்கள் எல்லாம் இந்த நாட்டில் மூன்றாம் சமுகமாக வாழும் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மறக்க முடியாத வடுக்கள் என்றே கூறலாம். ஒரு நாட்டின் ஆதிகால வரலாற்றைக் கொண்ட ஒரு சமுகத்தின் மீது அவர்களின் வரலாற்றை அறிந்த கொள்ளாத இனவாத சக்திகள் இவ்வாறு அவர்களின் இருப்புக்களை அழிக்கத் துடிப்பதனை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்களே.

தற்கால சூழ் நிலையில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அரசியல், பொருளாதார ரீதியாக பலவாறான பிரச்சினைகளுக்கு பாரியளவில் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகள் காணப்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம் இனவாதம் என்ற விடயமே. ஒருசிலரின் அரசியல், பொருளாதார சுகபோகங்களுக்கு இந்த நாட்டில் இறைமையுடன் வாழும் ஒரு சமுகத்தினை அழித்து தமது இருப்புக்களை தக்க வைத்துக் கொள்ளும் கபடத்தனமான சிந்தனைகளே மூலகாரணமாக அமைகின்றன.

மனிதன் ஆறறிவுடன் நாகரீக வளர்ச்சியின் காணரமாக முன்னேற்றப் பாதையில் சகல இன மக்களுடனும் சமுகத்தில் ஒன்றினைந்து வாழ வேண்டியவனாக படைக்கப்பட்ட நிலையில் அதனை இல்லாது செய்து நாகரீகமற்ற வகையில் குழப்பங்களை ஏற்படுத்தி சமுகத்தில் ஒரு வகையான அச்ச நிலைமைகளை உண்டாக்கி தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட ஆறறிவின் தன்மைகளை இழக்கும் ஒரு கீழ்த்தரமான நிலைமைகளுக்கே இனவாத சக்திகள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றனனர்.

இவ்வாறானதொரு போட்டித் தன்மைகளுக்குள் அரசாங்கமும், பல சமய, சமுக அமைப்புக்களும் இந்த நாட்டில் பூதாகாரமாகி வரும் இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த அல்லது தடுப்பதற்கான பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு இந்த நாட்டில் ஒரு நிரந்தர சமாதானத்தையும், இன நல்லிணக்கத்தையும் கொண்டுவர முன்னோக்கி நகர்கின்றனர். என்றாலும் தீய சக்திகளின் கபடத் தனங்கள் சகல விதமான சமாதான செயற்பாடுகளுக்கும் முட்டுக்கட்டையான கோணத்திலேயே செல்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சமாதானத்தை நிலை நாட்டி இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட இந்த அரசு கடந்த காலங்களில் தமது இலக்குகளில் முயற்சிகளை மேற்கொண்டாலும் அது ஆமை வேகத்திலேயே நகர்ந்து வந்ததை நாம் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் மக்களோ சமாதானத்தின் செயற்பாடுகள் விடயத்தில் அதீத நம்பிக்கை கொண்டு அரசாங்கம் எப்படியாவது சமாதானத்தை உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையில் இருந்தாலும் மேற்குறிப்பிட்டவாறு இனவாத சக்திகள் தமது இலக்குகளை அடைவதில் செயற்படுவதில் தமது முனைப்புக்களை மேற்கொள்வதையிட்டு சமாதான தரப்பினரால் விஷனம் தெரிவிக்கப்பட்டும் வருகின்றன எனலாம்.

இவ்வாறான நிலையில் இலங்கை வாழ் முஸ்லிம் சமுகம் தமக்குள் இருக்கின்ற பாரிய பிரச்சினைகள் விடயத்தில் அரசாங்கத்தினையே நம்பி நிற்கின்றனர். கடந்த யுத்த வெற்றிக்குப் பின்னர் முழுமையான நம்பிக்கையில் தமக்கான தீர்வு கிட்டும் என்ற விடயத்தில் நம்பியிருந்தும் அது இன்று வரை கைகூடவில்லை என்பதே இந்தச் சமுகத்தின் ஆதங்கமாகும். குறிப்பாக இலங்கை வாழ் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு என்ற விடயம் அரசாங்கத்திற்கு சங்கிலித் தொடரான பிரச்சினையாகவே வலம் வந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக சர்வதேசம் வரை இலங்கையின் இனப்பிரச்சினை சென்று இலங்கைக்கு பல கோணத்திலும் அதனைத் தீர்த்து வைக்குமாறு அழுத்தங்களும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயத்தினையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகவும் இருக்கின்றது.

நியோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 73வது பொதுச் சபைக்கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் சர்வதேச சமுகத்திடம் இலங்கையை புதிய கண்ணோட்டத்தில் பாருங்கள், இன நல்லிணக்கம், ஜனநாயக சுதந்திரத்தை மீள நடைமுறைப் படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள், மனித உரிமைகள் சட்டமும், ஒழுங்கும், ஜனநாயக சுதந்திரம், சமத்துவ சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் வழங்கி வரும் முழுமையான ஆதரவு பற்றிய விடயங்களை அவர் சர்வதேச சமுகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

மேற்படி விடயம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இந்த நாட்டில் இனப் பிரச்சினை என்பது முற்றுப் பெறாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இதற்கான அடித்தளம் என்பது இன்னும் சரியான முறையில் இடப்பட வில்லை என்ற விடயத்தை சமுக ஆர்வளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசாங்கம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ சமாதான விடயங்களில் முழுமையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது விடயத்தில் மக்களுக்கு எந்த விதத்திலும் பின்னடைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் ஒரு இறுக்கமான குறிக்கோலுடன் காய்களை நகர்த்த வேண்டியுள்ளமை காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில் இலங்கை வாழ் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் கடந்த மூன்று தஸாப்த யுத்தம் காரணமாக யுத்தம் இடம் பெற்றபோது வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்டு இன்று வரை மீள் குடியேர முடியாது துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயம் ஒரு புறமும் மறுபுறம் ஒட்டுமொத்த இலங்கை வாழ் முஸ்லிம்களும் சமய ரீதியாக இனவாத செயற்பாடுகளுக்குள் சிக்குண்டு முஸ்லிம் சமுகம் தமது இருப்பு விடயத்தில் ஆபத்தானதொரு நிலைக்குச் சென்று கொண்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இவ்வாறு இந்த நாட்டில் பல பிரச்சினைகளுக்கு உள்ளான இந்தச் சமுகத்தின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றதை காண முடிகின்றது. இந்த வகையில் இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகள் விடயத்தில் அரசாங்கம் அதீத கவனஞ் செலுத்தி இந்தச் சமுகத்தின் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைத்து ஏனைய சமுகங்களுடன் ஒன்றினைந்து வாழ்வதற்கான சூழ் நிலைமைகளை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு என்பது இங்கு முக்கியமானதாகும்.

எனவே அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சர்வதேசத்திடம் வழங்கி வரும் உறுதி மொழிகள் விடயத்தில் அதீத கவனஞ் செலுத்தி இனியும் காலந்தாழ்த்தாது அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதுடன் இழுபட்டுக் கொண்டு செல்லும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் விடயத்திலும் அதீத கவனஞ் செலுத்தி அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் என இலங்கை வாழ் முஸ்லிம்கள் அரசாங்கத்திடம் தமது கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

புலிகளை நசுக்க இந்திய மத்திய அரசு ஆரம்பித்த முதல் போர்

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பேரினவாத ஆட்சியாளர்களால் காலத்துக்காலம் உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் எதிர்கொண்டுள்ள நிலையில் தற்பொழுதும் உரிமைகளுக்காகப் போராடி வருபவர்கள். உரிமைப்போராட்டம் எந்த வகையில் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்காக எமது தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவினை வழங்கக்கூடிய இனவிடுதலை தொடர்பான உயரியசிந்தனையும் தேசப்பற்றும் கொண்டவர்கள். அவ்வறிருக்க 1987 ஒக்டோபர் 5ஆம் திகதி. அந்த நாளையும் அதன் கொடும் துரோகத்தையும் எமது மனங்களில் ஆழப் படிந்துவிட்ட துயரத்தையும் மறந்து கடந்து செல்லவோ தவிர்த்துவிட்டு சிந்திக்கவோ எங்களால் முடியாமலிருக்கின்றது. அதற்குப் பின்னரும் எத்தனையோ துரோகங்களை, நயவஞ்சகங்களை தமிழ் இனம் கண்டிருந்தாலும் அந்த ஒக்டோபர் 5ஆம் திகதி 1987ஆம் ஆண்டின் சதிப்பின்னலும் அதன் விளைவாக லெப்.கேணல் குமரப்பா, லெப் கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரண்டு விடுதலைப் புலிகள் சயனைட் அருந்தி வீரமரணத்தை தழுவிக் கொண்டது என்றுமே அழிக்கமுடியாத ஒன்றாக எமது சிந்தனைகளில் படிந்துவிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ்த் தேசத்தின் விடுதலையை மட்டுமே ஆழமாக நேசிப்பவர்களாகவும் அந்த இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களாகவுமே இந்திய உளவு மற்றும் வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்களால் பலவிதமான பரிசோதனை முயற்சிகளுக்குப் பின்னர் அடையாளம் காணப்பட்டனர். விடுதலைப்புலிகள் பலமான நிலையில் இருக்கும்வரை தமிழரின் சுதந்திரமான நிம்மதியான வாழ்வைத்தவிர வேறு எதையுமே தீர்வாக திணிக்க முடியாதென இந்திய மத்திய அரசு முழுதாக நம்பியது.

விடுதலைப்புலிகள் இல்லாத ஒரு போராட்டத்தையே இந்திய அரசு விரும்பியது. அவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்த முனைந்து தோல்வியுற்ற நிலையில் தான் விடுதலைப்புலிகளை மிகவும் பலம் குறைந்த அமைப்பாக மாற்றுவதற்கு திட்மிடல்களை மேற்கொண்டது. அதற்கான காய்நகர்த்தல்களும் சதிகளும் விடுதலைப் புலிகளின் தலைமை இந்தியாவில் நின்ற காலங்களிலேயே ஆரம்பித்துவிட்டது. அந்த சதிகளும் அவதூறு முயற்சிகளும் வெற்றியளிக்காமல் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டதால்தான் 1987ஆம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை வலிந்து உருவாக்கி திணித்திருந்தது

திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் சதிகளும் தோல்வியில் நிறைவேறியதனால் வெளிப்படையாக ஒப்பந்தம் என்ற போர்வையில் ஏற்பட்டடுத்தப்பட்ட சதியே இந்திய-இலங்கை ஒப்பந்தம். இரண்டு அயல்நாடுகளின் மத்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட உடன்படிக்கை தமிழ்மக்களுக்கு எதையும் பெற்றுத்தராது என்பதை விடுதலைப்புலிகள் தீர்க்கதரிசனமாகச் சிந்தித்திருந்தனர். இதனை தமிழ் மக்கள் திலீபனின் உண்ணா விரதத்தின் மூலம் தெளிவாக புரிந்து வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நியாயமாக அமுல்ப்படுத்தும்படி குறைந்தபட்ச கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து பின்னர் மரணம் அடைந்தவுடன் இந்திய மத்திய அரசின் கோரமுகம் தமிழ் மக்களுக்கு தெரியத் தொடங்கியது. வந்து இறங்கி நிற்பது அமைதிப்படை அல்ல. எம்மை அடைவு வைக்கும் படை என்று மக்கள் தெளிவாக இரண்டு மாதங்களுக்குள்ளாகவே தெரிந்து கொண்ட பொழுதில்தான் என்றுமே மறக்க முடியாத நிகழ்வு நடந்தது.

1987 ஒக்டோபர் 3ஆம் திகதி வானம் வெளித்த ஒரு காலை நேரத்தில் பருத்தித்துறை கடலுக்கு மேலாக நீரைக் கிழித்துக்கொண்டு வந்துகொண்டிருந்த கடல்புறா வள்ளம் திடீரென கடற்படைக் கப்பலால் இடைமறிக்கப்பட்டது. அது ஒரு கூட்டுச்சதியின் ஆரம்பக்கட்டமாக இருந்தது. அந்தக் கடல்ப்பரப்பில் மிகவும் கோழைத்தனமாகவும் நயவஞ்சகமாகவும் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு விரோதமாகவும் பொதுமன்னிப்பை மீறும் விதமாகவும் விடுதலைப்புலிகளின் தளபதிகள் சிறைபிடிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முதன் நிலைத் தளபதிகளும் மிகச்சிறந்த கடலோடிகளும் கடற்போராளிகளையும் கொண்டிருந்த மிகச்சிறந்த அந்த அணியை மிகமிக கூர்மையான அவதானிப்பின் பின்னரே இலக்குவைக்கப்பட்டு கடலில் சிறைப்பிடிக்கப்பட்டனர். யுத்தத்தின் போது வீழ்த்த முடியாத, பிடிக்க முடியாத ஓர்மம் நிறைந்த அந்த அற்புதப் போராளிகள் ஒப்பந்தப் பொழுதொன்றில் பிடிக்கப்பட்டனர். ஒப்பந்தத்தில் உறுதி தந்த இந்திய மத்திய அரசு ஏதுவுமே நடக்காதது போன்று செயற்பட்டது. கடலில் தடுக்கப்பட்ட போராளிகள் பலாலியில் உள்ள இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒரு நச்சுவலை ஆயுதப் போராட்டத்தின் மீது வீசப்பட்டுள்ளதை அப்போதே விடுதலைப் புலிகள் இயக்கம் புரிந்து கொண்டது.

தெருவெங்கும் அலைந்து பெரும் மக்கள் சக்தியை உருவாக்கிய தியாகதீபம் திலீபனின் இழப்பினால் பெரும்துயரில் மூழ்கியிருந்த விடுதலைப் புலிகளுக்கு பத்து நாட்களுக்குள்ளாக அடுத்த பேரிடியாக போராளிகளின் கைது அமைந்தது. இரண்டு ஆதிக்க சக்திகளும் தமது கூர்ந்தபற்களை நீவிவிட்டுக் கொண்டு பேரம்பேசி தமிழீழ தேசிய ஆன்மாவை அடக்கம் செய்ய ஆயத்தமானார்கள் என்பது தெள;ளெனப் புலப்பட்டது.

பலாலி முகாமின் பாதுகாப்பை இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் கூட்டாக பொறுப்பெடுத்திருந்தன. அதிலும் விடுதலைப்புலிகளின் போராளிகள் பதினேழுபேரும் அடைத்து வைக்கப்பட்டிருந்த மண்டபத்தை சூழவும் இந்தியப் படைகளே நின்று பாதுகாப்பை வழங்கியிருந்தன. இந்தியப்படைகளுக்கு வெளிச் சுற்றாகவே இலங்கை இராணுவப் படைகள் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தகர். ஒக்டோபர் 4ஆம் திகதி நிலைமைகள் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரின் அறிக்கை பத்திரிகைகளில் வெளிவருகிறது. அறிக்கையின் அதிகமான செற்கள் இந்திய அரசுக்கும் அமைதிப் படைகளுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவும் செய்தியாகவுமே காணப்பட்டது.

அறிக்கையின் இறுதியில் பிரபாகரன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்துள்ளது. இவ்வாறு நிலைமை இருக்கும் போது இலங்கை அரசு எம்மை கைது செய்யும் கட்டத்தில் எம்மை பாதுகாக்கும் கடமைப்பாடு இந்தியாவினுடையதாகும். இந்தக் கடமைப்பாட்டில் இருந்து இந்தியா தவறினால் ஆபத்தான விளைவுகள் ஏற்படும் என்று தெளிவாக குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இதற்கிடையில் பலாலிமுகாமில் தடுத்து வைக்கப்பட்ட போராளிகள் பதினேழுபேரும் தங்களை கொழும்புக்கு கொண்டு செல்ல முற்பட்டால் இயக்க மரபுக்கு இணங்கவும் விடுதலைப் போராட்டத்தின் இரகசியங்களை காப்பதற்காகவும் எல்லாவற்றிலும் மேலாக உன்னதமான விடுதலையின் மீதான உயரிய செய்தியாகவும் தங்களை அழிக்க தயாராக இருப்பதாக தலைமைக்கு கடிதங்கள் மூலம் அறிவித்தனர். ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் 5ஆம்திகதி வரை தமிழீழப் பரப்பு நான்கு முனைகளில் ஒரு வரலாற்றுத் திருப்பத்திற்காக அவதிப்பட்டது என்றே கூறவேண்டியுள்ளது. ஒரு முனையில் இந்திய- இலங்கை ஆதிக்கசக்திகள் பேரம்பேசி விடுதலைப் பேராட்டச் சுவாலையை தணிக்க முயன்றது. மறுமுனையில் எப்படியாவது இந்த போர்க்குணம் மிக்க போர்த் தளபதிகளையும் போராளிகளையும் மீட்டுவிட விடுதலைப்புலிகள் தலைமை முயன்று நின்றது. இன்னுமொரு முனையில் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் இருந்த தளபதிகளும் போராளிகளும் தங்களுடைய முடிவில் உறுதியாக நின்றனர். நான்காவது முனையில் தமிழ்மக்கள் தங்களை பேரினவாதத்தின் கொடூரங்களிலிருந்து காப்பாற்ற அர்ப்பணத்துடன் போர் புரிந்த தளபதிகள் போராளிகளின் நிலை என்னவாகுமோ என்ற பதைப்புடன் இருந்தனர்.

இதற்குள்ளாக அந்த நாளும் வந்தது. ஒக்டோபர் 5ம் திகதி காலை 7 மணியளவில் தளபதிகளையும் போராளிகளையும் இலங்கை அரசு கொழும்புக்கு கொண்டுசெல்ல இருப்பதாகவும் தங்களால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதாகவும் இந்தியபடை அதிகாரிகள் அறிவித்தனர். அதன் மூலம் பேரம் பேசவே இந்தியப் அமைதிகாக்கும் படை விரும்பியது. பதினேழு போராளிகளையும் கொழும்புக்கு கொண்டுசெல்வதையும் சுதந்திர போராட்டத்தையும் ஒரு தராசின் இரு தட்டுகளில் வைத்து இந்திய மத்தியர அரசு பேரம் பேசியது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தைகளில் பிரகாரம் கூறுவதானால் காலை-7 மணிக்கு கொடுக்கப்பட்ட காலக்கேடு பின்பு காலை-10 மணியாகி, பிற்பகல்-2 மணியாகி இறுதியில் மாலை 5 மணியாக நிச்சயிக்கப்பட்டது. தென் பிராந்திய இந்தியத் தளபதி திபேந்தர்சிங்கும் இந்திய தூதர் தீக்சித்தும் இலங்கை ஜனாதிபதியுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் மாலை 4:45 அளவில் ஜனாதிபதியுடனான பேச்சு தோல்வியடைந்து விட்டதாக அறிவித்தனர். (இதே இந்திய தளபதி தீபிந்தர்சிங் இந்திய அமைதிப் படை வெளியேறிய பின்னர் 1992இல் எழுதிய வுடந ஐகமுகு ஐண ஞசடையமெய என்ற புத்தகத்தில் ராஜிவ்காந்தியின் அரசும் அதன் முதன்மை இராணுவதளபதியாக இருந்த ஜெனரல் சுந்தர்ஜி அவர்களும் இந்த சதியில் எவ்வளவு ஈடுபாடு காட்டினார்கள் என்பதை வெளிப்படையாகவெ எழுதியிருக்கிறார்)

தடுத்து வைக்கப்பட்டிருந்த போராளிகளின் பாதுகாப்புக்காக அந்த கட்டடத்தை சுற்றிநின்ற இந்தியப்படை மத்திய அரசின் நேரடி உத்தரவின் படி விலகிக் கொண்டனர். மாலை 5.05இற்கு திடீரென அந்தக் கட்டடத்துக்குள் இராணுவம் பலவந்தமாக உள்நுழைய முயற்சிப்பதைக் கண்ட தளபதிகளும் போராளிகளும் சயனைட்டை கடிக்கிறார்கள். தமிழீழ தாயகம் என்ற சத்தம் எங்கும் நிறைகிறது. உள்நுழைந்த இராணுவம் போராளிகளின் கழுத்துக்களை இறுக்கியும் அடித்தும் சயனைட் உள்செல்வதை தடுத்து எல்லோரையும் உயிருடன் கொழும்பு கொண்டு செல்ல முயல்கின்றனர்.

அந்நியன்

போராளிகள் வெறும்கைகளால் திருப்பித் தாக்குகிறார்கள். முடிவில் பன்னிரண்டு புலிகள் வீர மரணமாகிறார்கள். ஒரு சிறிய தேசிய இனம் தன்னுடைய விடுதலைக்கான போராட்டத்தில் மிகமோசமாக நம்பவைத்து கழுத்தறுக்கப்பட்ட சம்பவம் ஒன்றின் சாட்சியமாக அந்தக் கட்டடம் நின்றது. அந்த மகத்தானவர்களின் வீரமரணச் செய்தி ஒலி பெருக்கிமூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டபோது அனைத்துப் பிரதேசமுமே ஒருகணம் அதிர்ந்து அழுதது. ஒவ்வொரு பெயர்களாக அறிவிக்கப்பட்டபோது அந்த உன்னதங்களின் ஈகத்தை எங்குமே மீட்டியது. லெப்.கேணல் குமரப்பாவும் லெப்.கேணல் புலேந்திரனும் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆரம்பகாலம் முதலாக இருந்தவர்கள். 1970களின் இறுதிப் பகுதியில் இருந்து இயக்கத்தை கட்டிவளர்ப்பதில் தலைவருடன் தோளோடு, தோள் நின்று எல்லாவிதமான இன்னல்களையும் எதிர்ப்புகளையும் தாங்கியவர்கள். பிரபாகரனைப் போன்றே சிந்திக்க தெரிந்தவர்கள். நீண்டகால கெரில்லா முறையிலான போர்முறையில் வாழ்ந்து போராடி அனுபவம் பெற்றவர்கள். மிகப்பெரிய படையணிகளை நடாத்தும் அனுபவத்தை தங்கள் பட்டறிவின் மூலம் பெற்றுக்கொண்டவர்கள். நுண்ணிய உணர்வுகளின் சொந்தக்காரர்கள். மிகவும் மென்மையானவர்களாகவும் அதே நேரம் எதிரிகளால் மிகவும் அச்சத்துடனும் கலவரத்துடனும் பார்க்கப்பட்வர்களாகவும் இவர்கள் இருந்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக திருமணம் முடிந்து சிலமாதங்களே ஆகி இருந்தது. மேஜர் அப்துல்லா, கப்டன் பழனி, கப்டன் ரகு, கப்டன் மிரேஸ், கப்டன் கரன், கப்டன் நளன், லெப்.அன்பழகன்,லெப்.ரெஜினோல்ட், லெப். தவக்குமார், 2ஆம் லெப்.ஆனந்தகுமார் என்ற அணி கடற்புலிகள் என தனியாக அமைக்கப்படாத அந்தக் காலகட்டத்தில் போராட்டத்தின் கடல்சார் செயற்பாடுகளில் இந்த வீரர்களின் செயற்திறனும் அர்ப்பணிப்பும் எப்போதும் தயாரான நிலையும் இன்னும் காலகாலத்திற்கும் நினைவு கூறவேண்டியது. ஈடிணையில்லாத பேரிழப்பு என்ற பிரபாகரனின் அறிக்கையிலுள்ள அந்த ஒரு சொல்; இந்த மகத்தான வீரர்களின் ஈகத்தை எந்தநாளும் சொல்ல போதுமானதொன்றே.

எல்லா உலகவிடுதலைப் போராட்டங்களும் சதிகளாலும் காட்டிக் கொடுப்புக்களாலும் நிறைந்தே காணப்பட்டாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவை அதிகமாக காணப்படுவதற்கு இந்திய மத்திய அரசின் துரோகங்களும் சதிகளுமே முக்கிய காரணமாகும். ஆனாலும் இவைகளைக் கடந்தே இவைகளை வெற்றிகண்டே நாம் தொடர வேண்டும். நாம் ஏதுமற்ற தட்டையான ஒரு இனம் அல்ல. எம் முன்னே பல்லாயிரம் உயிரிழப்புக்கள் வரலாறாய் பாதைகாட்டி நிற்கிறது. நாடிழந்து, வீடிழந்து, நிலமிழந்து, உடலுறுப்புக்களை இழந்து, உறவுகள் உடமைகளை பறிகொடுத்து, தாயகத்தில் அகதிகளாக, புலத்தில் ஏதிலிகளாக, உரிமைகள் மறுக்கப்பட்டதால் தனிமனித கௌரவம் இழக்கப்பட்டவர்களாக, அரசியல் அனாதைகளாகத் தனித்து விடப்பட்ட தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக என்றுமே சோரம்போக மாட்டார்கள் என்பது உறுதி.

குற்றமே நடைபெறாவிட்டால்

ஐ.நா.பொதுவிசாரணைக்கு அனுமதிக்காதது ஏன்?

பழ.நெடுமாறன் கேள்வி

தலைமையிலான இலங்கை அரசு நடத்தவில்லை என்றும் தெரிவித்திருப்பது தமிழகத்தில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இறுதிக்கட்டப் போரின்போது, போர்க் குற்றங்கள் எதுவும் நடக்கவில்லை என்றும் ராஜபக்சே தமது உரையில் குறிப்பிட்டார்.

இதுகுறித்து உலகத்தமிழர் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கின்றன. அதை மீறிப் போர்க்குற்றம் நடக்கவில்லை என்று சொன்னால், மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக் கமிஷனை அனுமதிக்க மறுப்பது ஏன்? ஜெர்மனியில் கூடிய மக்கள் தீர்ப்பாயம் போன்ற பொது அமைப்புகள் இதுகுறித்து விசாரணை நடத்தின.

பேரமைப்புத் தலைவர் பழ. நெடுமாறனிடம் பேசினோம். 'இலங்கையில் 2009-ம் ஆண்டு நடைபெற்ற போரில் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் நடந்தது குறித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையம் குற்றம்சாட்டியிருக்கிறது. அதுகுறித்து பொது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அப்போது ஐ.நா. மனித உரிமை ஆணையராக இருந்த நவநீதம் பிள்ளை, நேரடியாக இலங்கைக்குப் போய், நிலைமையைப் பார்த்துவிட்டு வந்து, அவர் வெளியிட்ட அறிக்கையிலும் அதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார். 'பொதுவிசாரணை நடத்தப்பட வேண்டும். அப்பட்டமான மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதுகுறித்து விசாரிக்க வேண்டும்' என்று சொன்னபோது, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தை விசாரிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று இதே ராஜபக்சே சொல்லிவிட்டார். இப்போது 'போர்க்குற்றமே நடக்கவில்லை' என்று சொன்னால் எப்படி? ஐ.நா. மனித உரிமை ஆணையம் போர்க்குற்றம் நடக்கவில்லை என்றால், தாராளமாக விசாரணை நடத்துங்கள் என்றுதானே சொல்லியிருக்க வேண்டும்.

மேலும், பிரிட்டிஷ் காமன்வெல்த் பிரதமர்களின் மாநாடு கொழும்புவில் நடைபெற்றபோது, பிரிட்டன் பிரதமர் அங்குச் சென்றார். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் சென்றபோது, ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கூடி, தங்களின் கணவரைக் காணோம்; மகன்களைக் காணோம் என்று கூறி, புகைப்படங்களைக் காட்டி, புகார் செய்தார்கள்.'கைது செய்து கொண்டு போகப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பதே சொல்ல மறுக்கிறார்கள்' என்று தெரிவித்தனர். பிரிட்டிஷ் பிரதமர் கொழும்பு திரும்பிய பின், ராஜபக்சேவை அவர் கண்டித்தார். 'உடனடியாக அவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்' என்றார். லண்டனுக்குத் திரும்பிச் சென்றபிறகும் கூட, பிரிட்டிஷ் பிரதமர் பகிரங்கமாக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் குற்றம்சாட்டிப் பேசினார். 'காணாமல் போனவர்கள் குறித்த பட்டியலை இலங்கை அரசு வெளியிட வேண்டும்' என்று வெளிநாடுகளில் வாழக்கூடிய ஈழத்தமிழர்கள், அந்தப் போரின்போது உயிர் தப்பி வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் எல்லாம் மேற்கண்ட தீர்ப்பாயங்களில் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை எல்லாம் அளித்திருக்கிறார்கள். அதையொட்டி, தீர்ப்பாயங்கள் அளித்த தீர்ப்பிலும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. மனித உரிமை மீறல்கள் நடந்திருக்கின்றன. இதுகுறித்து பொது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இரண்டு தீர்ப்பாயங்களும் சொல்லியுள்ளன. டப்ளின் மக்கள் தீர்ப்பாயத்தில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த ராஜேந்திர சச்சாரும் அங்கம் வகித்தார். இரண்டு நீதிபதிகளில் அவரும் ஒருவர். இதையெல்லாம் விசாரிக்க வேண்டும் என்று அவரும் சேர்ந்துதான் சொல்லியிருக்கிறார். இப்படியெல்லாம் சொன்னபிற்பாடும் ராஜபக்சே , போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை என்று சொல்வது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் மழுப்பல் போன்றதாகும்'' என்றார் மிகத்தெளிவாக.

விகடன்

இந்திய...

II ஆம் பக்கத் தொடர்ச்சி

இருந்த இவர்களைக் கைதுசெய்வதன் மூலம் தமிழ் மக்களையும் விடுதலைப் போராட்டத்தையும் அழித்துவிட எண்ணி பல சதிகளைச் செய்தனர்.

சிறையிலும் எதுவித தளர்வுகளும் இன்றி தமிழர்களின் உரிமைக்காகவே வாதாடினார்கள். இரண்டு நாட்கள் பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு அது நடைபெறும் சமநேரத்தில் விடுதலைப் புலிகள் அவர்களை மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியப் படைகளுடன் பேச்சுவார்த்தையும் நடாத்திப் பார்த்தனர். அதுவும் பயனற்றுப் போய்விட்டது.

குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளையும் கொழும்பு சிறைச்சாலைக்கு கொண்டு செல்ல அரசு திட்டமிட்டிருந்தது. 1987ம் ஆண்டு ஒக்ரோபர் 5ம் நாள், தமிழ் மக்கள் மீதும் தாயக மண் மீதும், தலைவர் மீதும் கொண்ட பற்றினால் அங்கு நின்ற இராணுவத்துடன் தங்களால் இயன்றவரை அவர்களுடன் மோதி இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீர மரபினைக் காக்க சயனைட் அருந்தி பன்னிரு வேங்கைகளும் அந்த மண்ணில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தனர்.

அன்றைய நாட்களில் அச்சம்பவம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஆனாலும், விடுதலைப் போராட்டம் இன்னும் வீச்சுடன் முன்னகர்ந்தது. தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் போரிடும் வல்லமையை தூண்டியது.

பலாலி இராணுவ முகாமில் வைத்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்த லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் மற்றும் ரகு, நளன், ஆனந்தக்குமார், மிரேஸ், அன்பழகன், றெஜினோல்ட், தவக்குமார், கரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளின் வித்துடல்களும் யாழ்ப்பாணம் வடமராட்சி தீருவிலிற்கு எடுத்துவரப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் போராளிகள் முன்னிலையில் தீயில் சங்கமமாகின.

எமது வீரர்களைச் சாவின் பொறிக்குள் தள்ளியது. இந்தியா எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றமாகும். புலேந்திரன் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் வீரச்சாவு ஒரு பெரும் வல்லரசை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தை எமக்கு ஏற்படுத்தியது என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அன்று தெரிவித்தார். இந்திய அரசாங்கத்தின் துரோகத் தனமான செயற்பாடுகள் தமிழ் மக்களை அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தது. 1987 ஒக்டோபர் 10ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையிலான யுத்தம் வெடித்தது. அன்று முதல், 1990 களில் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து திரும்பிச் செல்லும் வரை அவர்களால் ஈழத்தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொலைகள், கைதுகள், துன்புறுத்தல்கள், கற்பழிப்புக்கள் போன்ற துன்பியல் சம்பவங்கள் ஏராளம் ஏராளம். அவையனைத்தும் இன்றுவரை தமிழர்களின் நெஞ்சில் நீக்காத வடுக்களாக பதிந்துள்ளன.

1987 ஒக்டோபர் 10 அன்று இடம்பெற்ற சில சம்பவங்களை முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர் தங்க முகுந்தன் பின்வருமாறு விபரிக்கின்றார், 27 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற மறக்க முடியாத நிகழ்வு! அப்போது நாம் இந்து இளைஞர் மன்றத்தின் அங்கத்தவராக நிர்வாக சபையில் இருந்த காலம். யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை - நல்லை ஆதீன தொண்டர்களாகப் பணிபுரிந்த நேரம்!

அன்று வழமைபோல வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் சனீஸ்வர பகவானுக்கு எள் எண்ணெய் எரிப்பவர்களுக்கு வசதியாக எமது தொண்டர்கள் எரிந்து முடிந்த சிட்டிகளை எடுத்து துப்பரவு செய்வது வழக்கம். காலையிலிருந்து எமது தொண்டைச் செய்து கொண்டிருந்தோம். இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சண்டை ஆரம்பித்த நாள்! மதியம் 12 மணிக்கு மேல் குண்டுச் சத்தங்கள் கேட்கவும் நாம் கோவில் பூட்டிய பின்னர் வீடு திரும்பினோம்! அப்போது ஆதீனத்திலும் - கந்தர்மடம் பிள்ளையார் கோவில் ஐயா வீட்டிலும் - ஊரெழு சிவஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களது வீட்டிலும் தங்குவது வழமை.

வழமைபோல பழம்நோட் பிள்ளையார் கோவில் ஐயா வீட்டிற்குச் சென்ற சில நிமிடங்களில் சில தொண்டர்கள் நகரத்தில் பலர் காயமடைந்து இருப்பதாகவும் அவர்களுக்கு உதவ ஆட்கள் தேவையெனவும் வந்து செய்தி தெரிவிக்க, நானும் அவர்களுடன் சைக்கிளில் ஏறிச் சென்றேன். ஸ்ரான்லி வீதியிலிருந்து பஸ் நிலையத்திற்குச் செல்லும் குறுக்குப் பாதையால் நாம் போன நேரத்தில் ஒரு ஷெல் வந்து வைரவர் கோவில் முன்பாக புதிய சந்தைக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் விழுந்து வெடித்தது. எம் கண்முன்னேயே ஒரு 12, 13 வயதுடைய இளைஞன் அதில் காயமடைந்து உதவிக்கு எம்மை அழைத்தார். நாம் எமது சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு அவருக்கு அருகில் சென்றபோது மீண்டும் ஒரு ஷெல் அதே இடத்தில் விழுந்தது - அச்சிறுவனும் சைக்கிளும் துண்டுதுண்டாக சிதறின. ஒரே புகை மண்டலம்.

எமது காது கிண்ணென்று ஒலித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் எமது உடைகளிலெல்லாம் ஒரே இரத்தம். எனக்கு வாயில் ஒரு விதமான உணர்வு எற்பட்டது. முகமெல்லாம் ஷெல் துண்டுகள். வலது காலில் 2 இடங்களிலும் காதுப்பகுதியிலும் காயங்கள். எனக்கு எனது இரத்தத்தைப் பார்த்த பிறகு நடக்க முடியவில்லை. அந்த இடத்திலேயே அமர்ந்து விட்டேன். பின்னர் டிரக்டரில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டேன். அன்று இரவு சராமாரியாக ஷெல் தாக்குதல்கள்! நாம் கட்டிலில் படுக்காமல் கீழே ஒளிந்து கொண்டிருந்தோம்.

காலையில் மேலும் பலர் அனுமதிக்கப்பட்டனர். உயிர் பிரிந்த நிலையில் பலரது உடல்கள் கொண்டுவரப்பட்டு வெளியே கிடத்தி வைக்கப்பட்டன. பாதிரியார் ஒருவர் தனியாக அவர்களுக்காகப் பிரார்த்தித்தார். நானும் அவருக்கருகில் நின்று இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தேன். அனேகமானவை இயக்கத்தினருடையவை. சிகிச்சைக்கா சத்திர சிகிச்சைக் கூடத்துக்குள் கொண்டு செல்லப்பட்டோம். நாம் உள்ளே கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்கப்பட இருந்த வேளையில் பலரை தள்ளுவண்டிகளிலும் தூக்கிக்கொண்டும் ஓடி வந்தார்கள்.

ஒரு 65 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் நடந்து தமது வயிற்றுப் பகுதியிலிருந்து வெளியே வந்த சதைகளைப் பிடித்தபடி வர நான் எனது இருக்கையை விட்டு எழுந்து எனக்கு மருந்து கட்ட முற்பட்ட தாதியிடம், இவர்களுக்கு முதலில் சிகிச்சை அளியுங்கள். எமக்கு சிறுகாயங்கள் எனச் சொல்லிவிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறி சிதறியிருந்த யாழ்ப்பாண நகரைக் கடந்து நொண்டியபடி பழம்நோட் பிள்ளையார் கோவில் ஐயா வீட்டை அடைந்தேன். அப்போது தான் அவர்களுக்குத் தெரியும் நான் காயமடைந்த விடயம். 5ம் சனி 17ல் மூளாயில் எமது வீட்டுக்குச் சென்ற பின்னர் தான் வீட்டாருக்கு நான் காயப்பட்ட விடயம் தெரியும்.

உடனேயே மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மயக்க மருந்து அற்ற நிலையில் எனது காலைக் கிளறியபோது, என்ரை சிவனே என நான் அலறவும் எனது தந்தையார் மயக்கமடையவும், எனது தம்பி வைத்தியருடன் சண்டைபிடிக்கவும் - இப்படி நடைபெற்ற சம்பவம் என்னால் ஒரு போதும் மறக்க முடியாது!

மேத்யூஸின் 'உலகசாதனை' என்ன தெரியுமா? அதனால்தான் அவரை அணியிலிருந்து நீக்கினோம்: ஹதுரசிங்க விளக்கம்

இலங்கை அணியின் கேப்டன்சி பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட அஞ்சேலோ மேத்யூஸ், தற்போது அணியிலிருந்தும் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை இலங்கை பயிற்சியாளர் ஹதுரசிங்க வெளியிட்டுள்ளார்.

ஆசியக் கோப்பையிலிருந்து படுதோல்வியடைந்து வெளியேறியது இலங்கை, இதனையடுத்து மேத்யூஸை நீக்கும் முடிவை எடுக்க அதற்கு இவரும் பெரிய கடிதம் மூலம் 'தான் பலிகடாவா' என்று கேட்டு இலங்கை கிரிக்கெட் வாரியத்தை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் அணியிலிருந்து தான் நீக்கப்படுவோம் என்று மேத்யூஸ் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதற்கான காரணங்களையும் ஹதுரசிங்க வெளியிட்டுள்ளார்.

அதாவது பந்துவீச்சை நிறுத்தி விட்ட மேத்யூஸ், பேட்டிங்கில் சகவீரர்களின் விக்கெட்டுகளை எடுத்துக் கொண்டிருந்தார் அதனால்தான் நீக்கம் என்று சூசகமாகத் தெரிவிக்கிறார் பயிற்சியாளர் ஹதுரசிங்க.

விக்கெட்டுகளுக்கிடையே ஓடுவதில் மேத்யூஸ் மந்தமாக இருப்பதோடு எதிர்முனை வீரர்களையும் ரன் அவுட் ஆக்கி 'விக்கெட்டுகளை'எடுத்து விடுகிறார் மேத்யூஸ் என்பதே ஹதுரசிங்கவின் காரணமாக உள்ளது.

இதனை இலங்கை அணியின் தேர்வுக்குழு தலைவர் கிரேம் லெப்ராய் ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ இணைய தளத்துக்கு தெரிவித்துள்ளார்.

மேத்யூஸ் ரன் ஓடுவதில் மந்தமாக இருக்கிறார் என்பதோடு லெப்ராய் நிறுத்திக் கொள்ள, பயிற்சியாளர் சந்திகா ஹதுரசிங்க இன்னும் ஒரு படி மேலே போய் தனது மோசமான ரன் ஓட்டத்தினால் தன்னுடன் ஆடுபவர்களை ரன் அவுட் ஆக்கி விடுகிறார் மேத்யூஸ் என்று குற்றம்சாட்டினார்.

ரன் அவுட்டில் இவர் பங்கேற்பாளராக இல்லை மாறாக எதிர்முனை பேட்ஸ்மென் ரன் அவுட் ஆவதற்கும் மேத்யூஸ் காரணமாக விளங்குகிறார் என்கிறார் ஹதுரசிங்க.

மேலும் 50 ஓவர்கள் களத்தில் பீல்ட் செய்வதற்கும் பிறகு பேட்டிங் செய்வதற்குமான உடற்தகுதி மேத்யூஸிடம் இல்லை. அணி வீரர்களே அவரைச் சுமையாகக் கருதுகின்றனர் என்ற குண்டையும் ஹதுரசிங்க தூக்கிப் போட்டுள்ளார்.

64 ரன் அவுட்டுகளில் மேத்யூஸ் பங்கு உள்ளது, இதில் 49 முறை எதிர்முனை பேட்ஸ்மென் இவரால் ரன் அவுட் ஆகியுள்ளார். இது உலக சாதனை. இது போன்ற விஷயங்களைத் தான் நாங்கள் பார்க்கிறோம். ஆனால் அவர் விரைவில் இந்தக் குறைகளைச் சரிசெய்து கொண்டு மீண்டும் இலங்கை கிரிக்கெட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்றே விரும்புகிறோம். என்கிறார் ஹதுரசிங்க.

ஐபிஎல் கிரிக்கெட்டா?, இந்திய அணியா? முடிவெடுங்கள் தோனி: விளாசிய கவாஸ்கர்

பேட்டிங்கில் இழந்த பார்மை மீட்க தோனி உள்நாட்டுப் போட்டிகளில் அதிகமாகக் கவனம் செலுத்தி விளையாட வேண்டும், ஐபிஎல் போட்டிக்குப்பின் தோனியின் பேட்டிங் சரியில்லை என்று சுனில் கவாஸ்கர் கடுமையாக விளாசியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் தோனி, டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு அறிவித்து, ஒருநாள் மற்றும் டி 20 போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார். அதிலும், கடந்த ஐபிஎல் போட்டிக்கு பின் தோனி ஒருநாள் போட்டிகளில் மிகவும் மோசமாக விளையாடி வருகிறார்.

2 ஆண்டுகள் தடைக்குப் பின் வந்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு கேப்டனாக தோனி பொறுப்பேற்று 16 ஆட்டங்களில் விளையாடி 455 ரன்கள் சேர்த்தார். இதில் 3 அரை சதங்கள் அடங்கும். இவரின் சராசரி 75.83 ரன்களாகும். ஆனால், ஒருநாள் போட்டிகளைக் பொருத்தவரை கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம்தேதி இலங்கையுடன் தர்மசலா நகரில் நடந்த போட்டியில் 65 ரன்கள் சேர்த்துள்ளார்.அதன்பின் 16 போட்டிகளில் விளையாடியுள்ள தோனி ஒரு போட்டியில்கூட அரை சதம் அடிக்கவில்லை.

இந்த 16 போட்டிகளில் 7 போட்டிகளில் தோனி களமிறங்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்கிற போதிலும், மீதமுள்ள இந்த 9 போட்டிகளில் அதிகபட்சம் 42 ரன்கள் மட்டும்தான், இந்த 9 ஆட்டங்களில் மொத்தம் 189 ரன்கள் சேர்த்துள்ளார். இதன் சராசரி 27 ரன்கள் மட்டும்தான். தோனி, 37, 42, 0, 33, 8 என்ற ரன்கள் சேர்த்துள்ளார்.

மேட்ச்வின்னர் என்று அழைக்கக்கூடிய தோனி சமீபகாலமாக மிக மோசமாக பேட் செய்வதும், ரன் சேர்க்க திணறிவருவதும் அவரின் ரசிகர்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. இன்னும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு 6 மாதங்களே இருக்கும் நிலையில், குறைவான ஒருநாள் போட்டிகளே இருப்பதால் பேட்டிங் பார்மையும், ரன் குவிக்கும் திறமையையும் பட்டை தீட்ட வேண்டிய கட்டாயத்தில் தோனி உள்ளார்.

இது குறித்து முன்னாள் கேப்டனும், முன்னாள் வீரருமான சுனில் கவாஸ்கர் தோனியை சாடி இணையதளம் ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

தோனியின் பேட்டிங் ஃபார்ம் கடந்த சில மாதங்களாக மிகவும் மோசமாக இருந்து வருகிறது. ஒரு நாள் போட்டிகளில் அவரின் ரன் குவிக்கும் வேகம், திறமை மழுங்கி வருகிறது. இங்கிலாந்து தொடரிலும், ஆசியக் கோப்பையிலும் ரசிகர்கள் அவரின் பேட்டிங் திறமையையும், வழக்கமான அதிரடி ஆட்டத்தையும் மிகவும் எதிர்பார்த்தார்கள் ஆனால், அவர் வழக்கத்துக்கு மாறாக விளையாடினார்.

ஐபிஎல் போட்டித் தொடரில் சிறப்பாக பேட் செய்து ரசிகர்களின் கண்களுக்கு விருந்தளித்த தோனி, ஒருநாள் போட்டிகளில் ஜொலிக்க முடியாதது ஏன். இதில் உடனடியாக முடிவெடுக்க வேண்டும் ஏனென்றால், உலகக்கோப்பைப் போட்டிக்கு இன்னும் குறுகியகாலமே இருக்கிறது.

இதற்கு முன் இருந்த இந்திய வீரர்கள், மூத்த வீரர்கள் பேட்டிங்கில் ஃபார்ம் குறையும் போது, உள்நாட்டுப் போட்டிகளில் அதிகமாக விளையாடுவார்கள். தங்கள் பேட்டிங் திறமையை மெருகேற்றிக்கொண்டார்கள்.

ஆனால், தோனி தனது பேட்டிங் ஃபார்ம் மங்கி இருந்தபோதிலும்கூட அவர் உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடுவதில் ஆர்வம்காட்டவில்லை. உள்நாட்டுப் போட்டிகளில் தோனி அதிகமாக விளையாடுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக 4 நாள் ஆட்டங்களில் அவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்தி விளையாட வேண்டும். அவ்வாறு தோனி விளையாடும் போது, அவருக்கும் அது உதவியாக இருக்கும், வளர்ந்துவரும் வீரர்கள் தோனியுடன் விளையாடும் போது ஊக்கம் பெறுவார்கள்.

தோனி மற்ற அணிகளுடன் விளையாடுவதைக் காட்டிலும் ஜார்கண்ட் மாநில அணியுடன் இணைந்து விளையாடினால்தான் இளம் வீரர்களுக்கு இன்னும் உற்சாகத்தையும், தார்மீக நம்பிக்கையையும் அளிக்கும்.

50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டியில் குறைவான வாய்ப்புகளே இருக்கின்றன. ஆனால், 4 நாள் ஆட்டங்களில் விளையாடும்போது, நீண்ட இன்னிங்ஸை நாம் விளையாட முடியும், பேட்டிங்கில் நிலைத்து ஆடும் திறமையை வளர்த்துக் கொண்டு களத்தில் நின்று விளையாட முடியும். இந்தத் திறமைதான் 50 ஓவர்கள் ஒருநாள் போட்டிக்கு உதவியாக இருக்கும்.

இந்திய அணியில் தோனி 4-வது வீரராகக் களமிறங்கி விளையாடுகிறார். எதிர்வரும் உலகக்கோப்பையை மனதில் வைத்து தோனி தனது பேட்டிங்கில் அதிகமான கவனத்தை செலுத்த வேண்டும்.

அதற்கு உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடுவதைத் தவிர வேறு எதுவும் வழி இல்லை. உலகக்கோப்பைக்கு இந்தியஅணி தயாராவதற்கு இன்னும் குறைந்த அளவிலான போட்டிகளே இருப்பதால், அதிகமான நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் தோனி தன்னை தயார்படுத்த வேண்டும்.

இவ்வாறு சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

ஏழாவது முறையாக ஆசியக் கோப்பையைக் கைப்பற்றிய இந்திய அணி

ஆசியக் கோப்பைத் தொடரின் இறுதிப் போட்டியில் வங்கதேசத்தை வீழ்த்தி, ஏழாவது முறையாக இந்திய அணி ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியது.

ஆசியக் கோப்பைத் தொடரின் இறுதிப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி, பந்து வீச்சைத் தேர்வுசெய்தது. முதலில் பேட் செய்த வங்கதேச அணி, 48.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 222 ரன்கள் எடுத்தது. அடுத்து களமிறங்கிய இந்திய அணியில் தொடக்க வீரராகக் களமிறங்கிய தவான் 15 ரன்களில் ஆட்டமிழந்தார்.

நிதானமாக ஆடிய கேப்டன் ரோஹித் சர்மா 48 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். தினேஷ் கார்த்திக் 37 ரன்களிலும் தோனி 36 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்தடுத்த வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். கடைசி மூன்று ஓவரில் 13 ரன்கள் எடுக்க வேண்டிய சூழல் இருந்தது. 5 விக்கெட்டுகள் மீதமிருந்தது. ஜடேஜா 21 ரன்களிலும் புவனேஸ்வர் 20 ரன்களிலும் களத்தில் நின்றனர். ரூபேல் வீசிய அந்த ஓவரில், இரண்டாவது பந்தில் ஜடேஜா 23 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். அதையடுத்து, அணிக்கு நெருக்கடி அதிகரித்தது. அடுத்து, 48-வது ஓவரில் முஸ்தவிஷர் வீசிய பந்தில் புவனேஸ்வர் 21 ரன்களில் ஆட்டமிழந்தார்.

7 விக்கெட்டுகளை இழந்த நிலையில், கடைசி ஒரு ஓவரில் 6 ரன்கள் எடுக்கவேண்டிய நிலை இருந்தது. கேதர் ஜாதவ்வும் குல்தீப் யாதவ்வும் களத்தில் இருந்தனர். இறுதி ஓவரில் முதல் இரு பந்துகளில் தலா ஒவ்வொரு ரன் கிடைத்தது. மூன்றாவது பந்தில் இரண்டு ரன்கள் கிடைத்தன. ஐந்தாவது பந்தில் கிடைத்த ஒரு ரன்னின் மூலம் போட்டி ட்ராவானது. இறுதி ஒரு பந்தில் ஒரு ரன் எடுக்கவேண்டிய சூழல் இருந்தது. மைதானத்தில் தொற்றிய பதற்றத்துக்கிடையில், ஒரு ரன்னை அடித்து இந்திய அணி வெற்றிபெற்றது. அதையடுத்து, இந்தியா ஏழாவது முறையாக ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியது. வங்கதேசம் அணி சார்பில் முஸ்தவிஷர் ரஹ்மான் மற்றும் ரூபெல் ஹோசைன் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

துபாயில் அடுத்து டி10 போட்டி: 64 கிரிக்கெட் வீரர்களுடன் 10 அணிகள் பங்கேற்பு

கிறிஸ் கெயில், ஜாகீர் கான், லசித் மலிங்கா, மோர்ன் மோர்கல், ரஷித் கான் உள்ளிட்ட 64 சர்வதேச வீரர்கள் பங்கேற்கும் டி10 கிரிக்கெட் போட்டி துபாயில் நவம்பர் 23 முதல் டிசம்பர் 2-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டு தொடரில் 6 அணிகள் பங்கேற்ற நிலையில், இந்த ஆண்டு 8 அணிகள் பங்கேற்கின்றன, இந்தப் போட்டிகள் அனைத்தும் ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் நடக்கின்றன. சர்வதேச கிரிக்கெட் வாரியம்(ஐசிசி) அங்கீகாரத்துடன் நடத்தப்படும் டி20 போட்டிகள் பல்வேறு நாடுகளில் பிரபலம் அடைந்துவரும் நிலையில், துபாயில் டி10 போட்டிகள் 2-வது ஆண்டாக நடத்தப்பட உள்ளன.

இந்த போட்டியில் இந்திய வீரர்கள் ஜாகீர் கான், முகமது ஷமி ஆகியோரைத் தவிர வேறு எவரும் இடம் பெறவில்லை . இந்திய கிரிக்கெட் கிரிக்கெட் வாரியம் வீரர்களை விளையாட அனுமதிக்கவில்லையா அல்லது டி10 போட்டிகளுக்குஆதரவு அளிக்கக்கூடாது என்று முடிவு செய்துவிட்டதா எனத் தெரியவில்லை.

திறமை உள்ள இந்திய வீரர்கள் வாய்ப்புக்காக இந்திய அணியை எதிர்நோக்கி இருக்கும் போது, இதுபோன்று ஐசிசி ஆதரவுடன் நடத்தப்படும் பல்வேறு லீக் போட்டிகளில் விளையாட பிசிசிஐ அனுமதிக்க வேண்டும். வெளிநாட்டு வீரர்கள் அனைவரும் ஐபிஎல் போட்டியில் பங்கேற்க சிவப்பு கம்பளம் விரிக்கும் பிசிசிஐ , இந்திய வீரர்கள் மட்டும் வெளிநாட்டு லீக் போட்டிகளில் விளையாடத் தொடர்ந்து பாரா முகமாக இருந்து வருகிறது.

கடந்த ஆண்டு கேரளா கிங்ஸ், பஞ்சாப் லெஜன்ட்ஸ், மராத்தா அரேபியன்ஸ், பெங்கால் டைகர்ஸ், தி கராச்சியன்ஸ், ராஜ்புத்ஸ், நார்தன் வாரியர்ஸ், பக்துன்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. இந்த ஆண்டு புதிதாக தி கராச்சியன்ஸ், நார்த்தன் வாரியர்ஸ் ஆகிய அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு சாம்பியன் பட்டம் வென்ற கேரள கிங்ஸ் அணியில் இந்த ஆண்டு கெயில், ஜுனைத் கான், சந்தீப் லாமிச்சானே, டாம் கரன், பேபியன் ஆலன், நிரோஷன் டிக்வெலா, பென்னி ஹோவல், இம்ரான் நசீர் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

பஞ்சாப் லெஜன்ட்ஸ் அணியில் ஜோர்டன், லியாம் பிளங்கெட், லூக் ரோஞ்சி, முகமமது ஷமி, ஜாகீர் கான், உமர் அக்மல், மெக்லனஹன், டாம் மூர்ஸ், அன்வர் அலி, ஜேட் டெர்ன்பாச், ஹசன் கான் ஆகியோர் உள்ளனர்.

பெங்கால் டைகர்ஸ் அணியில் மோர்கல், அமீர் யாமிந், முகம்மது நபி, குஷால் பெரேரா, ஷெர்பேன் ரூதர்போர்டு, கெவின் கூப்பர், டான் கிறிஸ்டியன், அலிகான், ரியாத் எம்ரிட், ஜேஸன் ராய், சாம் பில்லிங்ஸ், ஆசிப் அலி ஆகியோர் உள்ளனர்.

மராத்தா அரேபியன்ஸ் அணியில் ஆப்கான் வீரர் ராஷித்கான், அலெக்ஸ் ஹேல்ஸ், கம்ரான் அக்மல்,ஜேம்ஸ் பாக்னர், லசித் மலிங்கா, ஜேம்ஸ் வின்ஸ், லியாம் லிவிங்ஸ்டோன், பிரென்டன் டெய்லர், ஆடம் லித், வேன் டெர் மெர்வ், நஜ்புல்லாஜத்ரன், ரிச்சார்ட் கிளீசன் ஆகியோர் உள்ளனர்.

பக்துன் அணியில் லியாம் டாஸன், முகமது இர்பான், டேவிட் வில்லி, கோலின் முன்ரோ, ஆன்ட்ரூ பிளட்சர், சோஹைல் கான், சர்புதீன் ஆஷ்ரப், வால்டன், ஷாபூர் ஜத்ரன், கேமரூன் டெல்போர்ட், குல்பாதின் நயிப் இடம் பெற்றுள்ளனர்.

ராஜ்புத் அணியில் முகமது ஹபிஸ், ரிலி ரோஸ்ஸா, முகமது ஷேசாத், மில்ஸ், பிராத் வெய்ட், ராஹத் அலி, சமித் படேல், குவாஸ் அகமது, பென் டங்ஸ், பீட்டர் ட்ரீகோ, ஷான் மசூத் உள்ளனர்.

கராச்சி அணியில்ஜோப்ரா ஆர்ச்சர், திசாரா பெரேரா, பென் கட்டிங், முகமது நவாஸ், டேவிட் மலான், பவாத் அகமது, இசுரு உதானா, ஜோ கிளார்க், சமிமுல்லா ஷென்வாரி, முகம்மது இர்பான் ஆகியோர் உள்ளனர்.

நார்த்தன் வாரியர்ஸ் அணியில் ரவி போபரா, ரோமன் பாவெல், ஹாரி குமே, கிறிஸ் கிரீன், மெக்கோய், லென்டில் சிம்மன்ஸ், காரே பியாரே, கென்னார் லிவிஸ், டிவைன் ஸ்மித், நிகோலஸ் பூரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்திய அணியிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்: ஷோயிப் மாலிக் கருத்து

துபாயில் நடைபெற்றம் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் லீக் மற்றும் சூப்பர் 4 சுற்றில் இந்தியாவிடம், பாகிஸ்தான் அணி படுதோல்விகளை சந்தித்தது. ஆப்கானிஸ்தானுக்கு எதிராக கூட அந்த அணி போராடியே வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியின் பேட்டிங்கை விட பந்து வீச்சு கடும் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்நிலையில் அந்த அணியின் மூத்த வீரரான ஷோயிப் மாலிக் கூறியதாவது:

அணியை கட்டமைப்பதற்கு நேரம் தேவை. ஆனால் பயம் கொள்வதற்கோ, வீரர்களை மாற்றுவதற்கோ இது நேரம் இல்லை. அதிக அளவிலான வீரர்களை மாற்றினால், புதிய வீரர்கள் செட்டில் ஆவதற்கும் நேரம் தேவை.

இந்திய கிரிக்கெட் அமைப்பு முறைகளை நாம் பார்க்க வேண்டும், அவர்கள் எந்த முறையில் வீரர்களை முன்னேற்றுகிறார்கள் என்பதையும் காண வேண்டும். அணி நிர்வாகம், கேப்டன், தேர்வுக் குழுவினர் தேர்வு செய்த வீரர் களுக்கு நம்பிக்கையை கொடுக்க வேண்டும்.

போட்டி முடிவடைந்த பிறகு எங்களது அறைக்கு வாரிய தலைவர் வருகை தந்து, எங்களுக்கு நம்பிக்கையை கொடுத்தார். சிறந்த ஆட்டத்தை கொடுக்க வேண்டும் என அவர், எங்களிடம் கேட்டுக் கொண்டார். இத்தகைய விஷயங்கள் விளையாட்டில் நடை பெறும். அணியில் வீரர்களிடம் நம்பிக்கை குறைந்துள்ளது என் பதை மறுக்கவில்லை.

இந்திய அணியுடன் ஒப்பிடும் போது நமது வீரர்களுக்கு உள்ள அனுபவத்தின் வித்தியாசத்தை யாரும் புறக்கணிக்க முடியாது. ஜஸ்பிரித் பும்ரா, புவனேஷ்வர் குமார் எந்த வகையில் பந்து வீசுகிறார்கள் என் பதை நாம் கற்றுக்கொள்ள வேண் டும். இந்திய அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் பலர் உள்ளனர். பல போட்டிகளில் விளையாடிய வீரர் கள் மற்றும் தங்களுடன் விளை யாடும் இளம் வீரர்களிடம் இருந்து மட் டுமே எங்களது வீரர்களால் கற்றுக் கொள்ள முடியும். 200 போட்டிகளில் விளையாடியவர்கள் 5 முதல் 10 ஆட் டங்களில் விளை யாடியவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள முடியாது என்பது இல்லை. யாரும் யாரிடம் இருந்து வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம்.

அணியில் நீங்கள் மூத்த வீரராக இருந்தால், உங்களது பணி சிறந்த செயல்திறனை வெளிப்படுத்துவது மட்டும் கிடையாது. இளம் வீரர் களுக்கு உதவ வேண்டும், அவர் களுக்கு நம்பிக்கையை கொடுக்க வேண்டும். வெற்றி தேடிக்கொடுப் பது எப்படி கடமையோ, அதே போன்று இளம் வீரர்களுக்கு உதவி செய்வதும் கடமைதான். இது நிகழ்ந் தால் அதன் பின்னர் அணி சரியான பாதையில் பயணிக்கும்.

இவ்வாறு ஷோயிப் மாலிக் கூறி னார்.

இந்திய அணியில் வீரர்களை விட சேவகர்கள் அதிகம் இருக்கிறார்கள்!

துபாயிலேயே அத்தனை போட்டிகளிலும் ஆடிய இந்திய அணிக்கும், மாறி மாறி வெயிலில் பயணம் செய்து துபாய், அபுதாபி என்று ஆடி களைப்பில் அதிருப்தி வெளியிட்ட மற்ற அணிகளுக்கும் உள்ள வித்தியாசம் சர்சையாகக் கிளம்பிய நிலையில் ஸ்ரீகாந்த் இந்திய அணியை லேசாக வர்ணனையில் கிண்டல் செய்தார்.

வங்கதேசத்தின் மேக் ஷிப்ட் தொடக்க வீரர்களான லிட்டன் தாஸ், மெஹதி ஹசன் மிராஸ் சுமார் 27 ஒருநாள் போட்டிகளுக்குப் பிறகு வங்கதேசத்துக்கு தொடக்க விக்கெட்டுக்காக சதக் கூட்டணி அமைத்தனர். விக்கெட் விழாத முதல் 15-20 ஓவர்களிலேயே இந்திய வீரர்கள் களைப்படைந்தது தெரிந்தது.

மற்ற அணிகள் புகார் எழுப்பியபோது பலரும் பழகிய வெயில் தானே, பழகிய இடம்தானே தோல்விக்குக் காரணம் கட்டுகிறார்கள், சப்பைக் கட்டு கட்டுகிறார்கள் என்றெல்லாம் வாசக எதிர்வினை வந்த நிலையில் துபாயில் ஆடிக்கொண்டிருக்கும் போதே இன்றைய இறுதிப் போட்டியில் இந்திய அணி வீரர்களுக்கு குளிர்பானம், ஐஸ்பேகுகள் என்று வந்து கொண்டிருந்தன.

இதனையடுத்து வர்ணனையில் இருந்த ஸ்ரீகாந்த், 'இது என்ன எனக்கு புரியவில்லையே, இந்த கிளைமேட்டைப் பார்த்தால் நம்ம சென்னை கிளைமேட் மாதிரித்தான் உள்ளது. இதற்கு ஏன் இவர்கள் இப்படி ஃபீல் பண்றாங்க. வர வர இந்தியன் டீமில் பிளேயர்ஸை விட சப்போர்ட் ஸ்டாப் தான் அதிகம் இருக்கிறார்கள், ஒன்னும் புரியலையே என்று ஐஸ்பேக் கொண்டு வந்து ஒத்தடம் கொடுத்த சம்பவத்தை குறிப்பிட்டுச் சொன்னார்.'

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

செங்கலடி - ஏறாவூர் பற்று பகுதிகளில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்க தடை; தீர்மானம் நிறைவேற்றம்!

கே.சுபஜன்

மட்டக்களப்பு செங்கலடி - ஏறாவூர் பற்று பகுதிகளில் மண் அகழ்வதற்குறிய அனுமதிப்பத்திரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி இல்லாமல் வழங்க முடியாது என தீர்மானம் இணைத்தலைமைகளினால் நிறைவேற்றப்பட்டது.

ஏறாவூர் பற்று பகுதிகளில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாகவும் இரவு வேளைகளிலும் மணல் சட்டவிரோதமான முறையில் அகழப்படுவதாகவும் விவசாயிகள் மற்றும் மக்கள் இக் கூட்டத்தில் குற்றம் சாட்டினர். இது தொடர்பாக கூட்த்தில் வெகுவாக ஆராயப்பட்டு பிரதேச ஒருங்கிணைபின் அனுமதி இல்லாமல் மறுஅறிவித்தல் வரையும் மணல் அனுமதிப்பதிரம் வழங்கமுடியாது எனவும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கமுடியாது எனவும் தீர்மானம் இணைத்தலைமைகளினால் நிறைவேற்றப்பட்டது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவிக்கையில் ஏறாவூர் பற்று பகுதிகளில் மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப்பட்டடியல் உடனடியாக இணைத்தலைமைகளுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும். எந்த அமைச்சர் எந்த பாராளுமன்ற உறுப்பினர்களின், அரசஅதிகாரிகளின் சிபாரிசில் வழங்கப்பட்டுள்ளது என் பதை முழுமையாக வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் செங்கலடி பிரதேசசெயலகத்தில் இணைத்தலைமைகளான எம்.எஸ்எம். அமீர்அலி மற்றும் எஸ். வியாழேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன் ஆகியோரும் கலந்துகொண்டடிருந்தனர்.

கூட்டத்தில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வுள்ள அபிவிருத்திகள் குறித்து ஆராயப்பட்டதுடன் தற்போது முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப் பட்டது. அத்துடன் பிரதேசத்தில் காணப்படும் பொது மக்களின் பொதுவான பிரச்சிணைகள் வாழ்வாதாரம் தொழ்லாவாய்ப்பு பற்றியும் ஆராயப்பட்டது அத்துடன் குடிநீர் சுகாதாரம் மீன்பிடி விசசாயம் ஏனைய கைத்தொழில் துறைகளில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றிற்கான தீர்வுகளை பெற்றுக்காடுப்படுதொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஏறாவூர்பற்று கார்மலை பகுதியில் திடிரென அமைக்கப்பட்டுள்ள 50 கி.மீ க்கும் நீளமான கிரவல் வீதிதொடர்பிலும் இவ் வீதியை அமைத்தவர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அதிகாரிகள் இது தொடர்பாக கவணம் செலுத்துவதுடன் பிரதேசசெயலாளர் நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் இணைத்தலைமைகளினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

கிழக்கு தந்தி

ஊடகவியலாளர் சதீஷுக்கு சாமஸ்ரீ தேசமான்ய தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது

க.விஜயரெத்தினம்

அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சமூக சேவையாளர்களுக்கான சமஸ்ரீதேசமான்ய தேசிய விருது வழங்கும் நிகழ்வானது மட்டக்களப்பு ஏறாவூர் அலிஹார் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் சாமசிறி நிசாந்த தர்சன ஜெயசிங்க தலைமையில் நடைபெற்றபோது மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் சபாநாயகம் சதீஸ்குமார் சாமசிறி தேசமான்ய விருதினைப் பெற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமு மொழிகள் பிரதியமைச்சர் அலிசாஹிர் மௌலானா,மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் வனவளம் பெருக்கல் திட்டம்

சேனையூர் நிருபர்

24.9.2018 பௌர்ணமிதின திருவிளக்குப் பூசை கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பூசை உபயகாரர் லிங்கேஸ்வரன் - திருமலைநாயகி குடும்பத்தினர் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த சமயநிகழ்வில் கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் அவர்களால் ஆலய நிர்வாகத்தினரின் 2018ஆம் ஆண்டு வருடாந்த வனவளம் பெருக்கல் திட்டத்துக்கான முதல் மரக்கன்று ஆலய சூழலில் நடப்பட்டது.

நாட்டுக்கு மிகஅவசியமான வனவளம் பெருக்கல் திட்டங்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் அளித்துவரும் பங்களிப்பை வெகுவாகப் பாராட்டிய பாராளுமன்ற உறுப்பினர், காடுகள் அருகிவரும் இன்றைய காலகட்டத்தில் ஆலய நிர்வாகத்தினரின் இந்த அரும் முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது எனக் குறிப்பிட்டார். ஆலயவளர்ச்சிக்கும், ஆலயத்தைச் சூழவுள்ள இயற்கைச் சூழலின் மேம்பாட்டுக்கும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்த அவர், ஆலய வளர்ச்சியின் போது அங்கு நிலவும் அழகிய இயற்கைச் சூழல் எந் தவித்திலும் பாதிக்கப்படக் கூடாது என வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு மேலும் பேசிய அவர், கட்டிடங்கள் நிரம்பிய சூழலில் அமைந்திருக்கும் ஆலயங்களைவிட, கானகத்தின் மத்தியில் அமைதியாக அமைந்திருக்கும் இம்மாதிரியான வழிபாட்டுத் தலங்களில் இறைவனின் பிரசன்னத்தை மேலும் பலமாக உணரமுடிகின்றது எனக் குறிப்பிட்டார்.

இயங்காற்று சித்திரக்காட்சியும் கைவினைப் பொருட்காட்சியும்

துறைநீலாவணை நிருபர்

நாவிதன்வெளி பிரதேச செயலகம்,கலாசார மத்திய நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இயங்காற்று சித்திர ஓவிய கைவினை மற்றும் பாரம்பரிய பொருட்காட்சி, பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதனினால்

அண்மையில்திறந்து வைக்கப் படுவதையும் அதிதிகள் பார்வையிடுவதையும் கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம்.

ஏழைத் தொழிலாளியின் மரணத்திற்கு யார் பொறுப்பு?

கிணறு பதிக்கும்போது திடீரென ஏற்பட்ட விபத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஏழைத் தமிழ்த்தொழிலாளியொருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் சம்மாந்துறை இறக்காமப் பிரதேசத்திற்கு மத்தியிலிருக்கும் நயினாகாட்டை அடுத்துள்ள குடியிருப்பு என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

தமண பொலிஸ் பிரிவுக்கும் அம்பாறை நீதிமன்ற பரிபாலனத்திற்கும் உட்பட்ட பிரதேசம் இது. இந்தச்சம்பவம் கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம் பெற்றுள்ளது.

அன்றுமாலை நீதிவான் வந்ததும் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு பிரேதம் கொண்டுசெல்லப்பட்டது. மறுநாள் பூரணை. அன்று பிரேதபரிசோதனையோ விசாரணையோ இடம்பெறவில்லை. ஆதலால் சட்டவைத்தியஅதிகாரியின் சோதனை பிரேத பரிசோதனை மற்றும் பொலிசார் விசாரணையின்பின்னர் பிரேதம் விடுவிக்கப்படவிருந்தது. அதன்படி (25) செவ்வாய்க்கிழமை பகல் 2.30மணியளவில் பிரேதம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு அன்று மாலை 5.30மணியளவில் முனைக்காட்டில் அடக்கம் செய்யப்பட்டது. கரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறிலும் அங்கு சென்று தமது உதவியையையும் வழங்கி இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பலியானவர் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முனைக்காட்டைச்சேர்ந்த 51வயதுடைய சீனித்தம்பி சந்திரசேகரம் என்பவராவார். 1.10.1967இல் பிறந்த இவருக்கு 3பெண்பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளையுண்டு. முனைக்காட்டைச்சேர்ந்த இவர்கள் தொழில் நிமித்தம் வீரமுனைக்குவந்து 3வருடகாலம் தந்தையும் தாயும் கூலித்தொழில்செய்து பிள்ளைகளைக் காப்பாற்றிவருகின்ற வேளை இத்துயரசம்பவம் சம்பவித்துள்ளது.

அவரது திடீர் இழப்பால் இவ் ஏழைக் குடும்பம் ஆடிப்போயுள்ளது. அவரது மனைவி சூரியமலர்(வயது39) அவரது பிள்ளைகளான றேணுகா(வயது22) தினேசா (வயது20) சபேஸ்கா(வயது 17) கௌதம்(வயது2) ஆகியோர் அநாதைகளாக மாறியுள்ளனர்.

இந்த பரிதாபச் செய்தியை அறிந்ததும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் அவர்களது வீட்டிற்குச்சென்று ஆறுதல் கூறியதுடன் அடக்கத்திற்கான முழுச் செலவையும் பொறுப்பேற்றுள்ளார். அவர் அங்கு கூறுகையில், பிறப்பு தற்செயலானது இறப்பு நிச்சயமானது. நடந்தது நடந்துவிட்டது. ஆனால் அவரைக்கூலித்தொழிலுக்காக அழைத்துச் சென்றவர் அவரது மரணத்தின் பின்னர் நடந்துகொண்டவிதம் முற்றிலும் ஏற்றுக்கொள்ளமுடியாதது.

ஏழையென்பதற்காக நீதி செத்துவிடக்கூடாது. சட்டம் மரணிக்கக்கூடாது. அவரது மரணத்திற்கு நீதி வேண்டும் என்றார். பலியானவரின் மனைவி சூரியமலர்(39) கையிலே 2வயது கடைசி ஒரேயொரு மகனைக்கிடத்திவிட்டு அழுதழுது கூறுகையில், வெள்ளிக்கிழமை இரவு 7.30மணியளவில் சம்மாந்துறையைச்சேர்ந்த அந்த முஸலிம் முதலாளி தொலைபேசி அழைப்பை எடுத்து நாளை காலை நயினாகாட்டிற்கு புல்லுப்பிடுங்கச் செல்ல வேண்டும். கணவனை தயாராக இருக்கச்சொல் எனக்கூறினார். வழமைபோல நானும் ஓம் என்றேன்.

மறுநாள் சனிக்கிழமை காலை 7மணியளவில் சைக்கிளில் எனது கணவர் முதலாளியிடம் சென்றுள்ளார். அங்கிருந்து முதலாளி இவரை மோட்டார்சைக்கிளில் ஏற்றிக்கொண்டு நயினாகாட்டிற்குச் சென்றுள்ளார். நான் வழமைபோல 10.30 மணியளவில் கணவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தேன். பதிலில்லை. 12மணிமட்டில் மீண்டும் எடுத்தேன். அப்போதும் பதில் இல்லை. எனக்கு மனதுக்குள் ஒருவித பயமும் வந்தது. ஆனால் பிள்ளைகளிடம் கூறவில்லை. மாலை 4மணியளவில் அதே முதலாளி தொலைபேசி அழைப்பை எடுத்து சந்திரன் நிக்கிறாரா? என்று கேட்டார். நீங்கள்தானே கூட்டிற்று போனது.என்னிடம் கேட்கிறதென்ன? என்று பதிலுக்குக் கேட்டேன். கிணற்றுக்கொட்டு பதிக்கும்போது அவர் மோசம் போயிட்டார் என்று அவர்கூறியதும் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. அலறியடித்துக்கொண்டு நாம் மூவர் ஆட்டோவில் சம்பவஇடத்திற்குச்செல்வதற்காகச் சென்றோம். செல்லும் வழியில் ஒருவளைவில் ஆட்டோ தடம்புரண்டது. அதில் எனக்கு கையில் பல காயங்கள். இருந்தும் தொடர்ந்து சம்பவ இடத்திற்கச்சென்றுபார்த்ததும் எம்மை துக்கிவாரிப்போட்டது.

கிணற்றுக்கொட்டுச்சுற்றவர தொம்பல் அதற்குள் கழுத்துவெட்டப்பட்ட நிலையில் எனது கணவர் புதையுண்டிருப்பதைக் கண்டேன். பின்பு அங்கு பொலிசார் கொரணல் நீதிவான் எல்லாம் வந்து இரவு 7மணியளவில் சடலத்தை அம்பாறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றார்கள். எனது 4பிள்ளைகளையும் அநாதையாக தவிக்கவிட்டுச்சென்றுவிட்டார். நான் என்ன செய்வது? என அழுதார்.

மேலும் அவர் கூறுகையில், இந்தச்சம் பவம் சனிக்கிழமை பகல் 11மணியளவில் இடம்பெற்றதாகப் பின்னர் அறிந்தேன். அப்படியானால் மாலை மணிவரை முதலாளி எம்மிடம் சொல்லாதது ஏன்? புல்லுப்புடுங்க என்று சொல்லிட்டு கிணறு கொட்டுப் பதிக்க அவரை பயன்படுத்தியது ஏன்? கிணறுதோண்டப்பயன்படுத்தப்பட்ட கவுண்டி கனரக வாகனத்தின் சாரதிக்கு லைசன்ஸ் இல்லையென்றும் அறிந்தேன். நீதிபதி என்னிடம் கணவரின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறதா என்று கேட்டதற்கு நான் ஓம் என்றேன். அடுத்த தவணை 10.10.2018 இல் நடைபெறும் என பொலிசார் கூறினர். எனது கணவரையிழந்து நாம் நிற்கிறோம். நாம் ஏழைகள்.சம்பந்தப்பட்டவர்கள் வந்து இதுவரை எம்மைப்பார்த்ததுமில்லை. உதவியதுமில்லை. அவர்களுக்கு சட்டம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பது எமக்குத்தெரியாது. இந்த மரணத்திற்கு நீதிவேண்டும் என்றார்.

சம்பியனானது சிசிலியா

கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பிரபல பாடசாலைகளான வின்சன்ட் உயர்தர பாடசாலை மற்றும் புனித சிசிலியா பெண்கள் கல்லூரிகளுக்கிடையில் சிநேக புர்வமாக எட்டாவது தடவையாக நடாத்தப்பட்டுவரும் 'பாடு மீன்களின் சமர்' என வர்ணிக்கப்படும் கிரிக்கட் சமர் புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி அருள் மரியா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

20 ஓவர்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சமரில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற வின்சன்ட் தேசிய உயர்தர பாடசாலை அணியினர் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்ததனைத் தொடர்ந்து துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரி அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வின்சன்ட் தேசிய உயர்தர பாடசாலை அணியினர் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 20 ஓவர்களின் நிறைவில் 94 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

அதனடிப்படையில் 24 ஓட்டங்களால் புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரி அணியினர் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர். ஏலவே ஏழு தடவைகளாக நடைபெற்ற போட்டிகளில் 3 போட்டிகளில் புனித சிசிலியா பெண்கள் கல்லூரி அணியினரும் 4 போட்டிகளில் வின்சன்ட் உயர்தர பாடசாலை அணியினரும் வெற்றி பெற்றிருந்த நிலையில், இம்முறை புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரி அணியினர் வெற்றிபெற்று சம்பியனாகியுள்ளனர்.

8 வது தடவையாக நடைபெற்ற இச்சமரினை தம்வசப்படுத்தி வெற்றியீட்டிய புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரி அணிக்கும் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்ட வின்சன்ட் தேசிய உயர்தர பாடசாலை அணியினருக்குமான வெற்றி கிண்ணங்களை நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் அலிசாகீர் மௌலானா வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம்.

திருகோணமலையில் முத்தமிழ் கதம்ப நிகழ்வு

சேனையூர் நிருபர்

திருகோணமலை தென்கயிலை ஆதீன கலை பண்பாட்டு அமைப்பும், திருக்கோணமலை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையும் இணைந்து நடாத்தும் 'முத்தமிழ் கதம்ப நிகழ்வு - 2018' என்ற அரங்காற்றுகை நிகழ்வானது 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முதன்மை விருந்தினராக எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து சிறப்பிக்கின்றார். விழாநிகழ்வில் கண்ணகியின் வரலாற்றினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுடன் தொடர்புபடுத்தி 'மண்ணும் மகளும்' என்ற தலைப்பில் அரங்காற்றுகை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்கயிலை ஆதின வளர்ச்சி நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந் நிகழ்வினை பார்வையிடுவதற்காக மாண வர்களுக்கான வாய்ப்பினை 28ஆம், 29ஆம் (28.09.2018, 29.09.2018) திகதிகளில் வழங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பௌசரிலிருந்து பெற்றோல் திருட்டு

சேனையூர் நிருபர்

பெற்றோல் பௌசர் சீல் உடைத்து திருட்டில் ஈடுபட முயற்சி செய்த 2 சந்தேக நபர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது

திருகோணமலை சீனக்குடா ஐ.ஓ.சி வாகனங்கள் நிருத்தும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

திருகோணமலையில் இருந்து கெக்கராவைக்கு எடுத்துச் செல்ல இருந்த 6600 லீட்டர் பௌசரிலேயே திருட முயற்சி செய்தமை க்கு சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட வுள்ளனர்.

ஆவணங்களை பரிசீலித்த பின்னரே காணி விடுவிப்பு

திருக்கோவில் நிருபர்

எழுத்து மூலமான முடிவு கிடைக்கும் வரை நில மீட்பு போராட்டம் தொடரும் போராட்டகாரர்கள் தெரிவிப்பு.

அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊறணி 60ஆம் கட்டை மக்கள் 45வது நாளாகவும் தமது நில மீட்பு போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா அவர்கள் நேரடியாக விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்து கொண்டதுடன் காடுகளுக்குள் சென்று சிதைவடைந்து காணப்படும் வீடுகளையும் பார்வையிட்டுள்ளார்.

இதனைத் தொடரந்து நிலமீட்பு போராட்டம் நடாத்திவரும் மக்கள் முன் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்து இருந்தார்.

இங்கு நான் பொத்துவில் பிரதேச செயலாளர் மற்றும் வனபரிபாலன அதிகாரிகளுடன் வருகை தந்து நிலைமைகளை அவதானித்துள்ளேன். உங்கள் பிரச்சினையை முறையாக ஆய்வு செய்து அரச அதிகாரி என்ற வகையில் நிரந்தர தீர்வினை வழங்க வேண்டியுள்ளது.

இங்கு மக்கள் வாழ்ந்ததுக்கான அடையாளங்கள் அவதாணிக்ககூடியதாக இருக்கின்றது இருந்தும் நாங்கள் முறையாக சட்டரீதியான ஆவணங்களை தேடி விசாரணைகள் முன்னெடுத்த தீர் வவை வழங்க முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது.

காணிகளை வழங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றது இங்கு காணிகள் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற ஆவணங்களை தற்போது நாங்கள் ஒழுங்குபடுத்தி வருகின்றோம். ஆவணங்களை முறையாக சேகரித்த பின்னனே உண்மைத் தன்மையை கண்டறிந்து உங்களுக்கான காணிகளை விடுவிப்பது தொடர்பாக முடிவுகளை வழங்க முடியும்.

இவ்வீடுகள் வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நிதி வழங்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது எனவே இது தொடர்பான ஆவணங்கள் அவர்களிடத்திலும் இருக்கும் உங்களிடத்திலும் ஆவணங்கள் இருக்கும் எல்லாவற்றையும் முறையாக பரிசிலித்து இவ் பிரச்சினைக்கு விரைவில் ஒரு நிரந்தர தீர்வை வழங்க முடியும் என நான் எதிர் பார்க்கின்றேன் என தெரிவித்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து போராட்டகாரர்கள் கருத்து தெரிவிக்கையில் எமது நிலமீட்பு போராட்டம் 45வது நாளாகவும் தொடர்கின்றது இன்று அரசாங்க அதிபர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார். இருந்தும் எமக்கு சரியான முடிவினை அவர் வழங்கவில்லை. இருந்தும் எமக்கு விரையில் தீர்வு ஒன்றை பெற்றுத் தருவதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எமக்கு எழுத்து மூலமான ஒரு உறுதிமொழி கிடைக்கும் வரை எமது நிலமீட்பு போராட்டத்தினை கைவிடுவதாக இல்லை என நிலமீட்பு போராட்ட எற்பாட்டாளராக செயற்படும் புஞ்சிமாத்தயா ரங்கத்தனா தெரிவித்துள்ளார்.

இவ் மக்களுடனான சந்திப்பில் அரசாங்க அதிபருடன் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீர், வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர்.

உலக சுற்றுலா தினம் அறுகம்பையில் கொண்டாடப்பட்டது

எம்.என்.எம்.அப்ராஸ்

இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுலா தினம் 2018 நிகழ்வு மன்றத்தின் தலைவர் ஏ.எம். ஜவ்பர் தலைமையில் அறுகம்பை பசிபிக் ஹோட்டலில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான சட்டமுதுமானி றவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம், மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி விஜேவிக்ரம, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நசீர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.எம்.எல். பண்டாரநாயக, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.அப்துல் வாசித், பொத்துவில் பிரதேச செயலாளர் ஏ.எம். நசீல், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நுவான் ஜே. வெதசிங்க, அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜேசேகர மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'சுற்றுலாவும் டிஜிட்டல் உரு மாற்றமும்' என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த உலக சுற்றுலா தின நிகழ்வின்போது கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் துறைகளில் 10 வருடத்திற்கு மேல் சேவையாற்றியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இதன்போது சுற்றுலாத் துறை சார்ந்த விழிப்புணர்வு நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. அத்தோடு கலந்து சிறப்பித்த அதிதிகளுக்கு ஞாபகச் சின்னங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பாண்டிருப்பில் 06 வீதிகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு தமிழ் கிராமத்தில் 60 இலட்சம் ரூபா செலவில் ஆறு வீதிகளை புனரமைப்பு செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களின் அனுசரணையில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அவர்களின் அங்கீகாரத்துடன் கல்முனை மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தி ஊடாக இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம், இவ்வீதிகளின் புனரமைப்புக்காக 60 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், கல்முனை உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஜெயரூபன், ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.றஸ்ஸாக் உட்பட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளும் கோவில்களின் தர்மகத்தாக்களும் பங்கேற்றிருந்தனர்.

இத்திட்டத்தின் கீழ் பாண்டிருப்பு பெரிய தம்பிரான் வீதியின் முதலாம் குறுக்குத்தெரு மற்றும் இரண்டாம் குறுக்குத்தெரு, மாரியம்மன் வீதி மற்றும் அதன் முன் குறுக்குத்தெரு, திருவள்ளுவர் வீதியின் ஐந்தாம் குறுக்குத்தெரு மற்றும் ஏழாம் குறுக்குத்தெரு என்பனவே புனரமைப்பு செய்யப்பட வுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர் எம்.விநாயக மூர்த்தி தெரிவித்தார்.

உதுமாலெப்பையின் கூற்று அப்பட்டமான பொய்: அதாஉல்லா அழிவுச் சத்தியத்திற்கு தயாரா?

முன்னாள் அமைச்சர் சுபையிர் காட்டம்

கல்முனை நிருபர்

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை 30 மில்லியன் ரூபா பணங்களை ஒரு அரசியல் கட்சியிடம் பெற்றுக்கொண்டு புதிய அரசியல் கட்சி அமைக்கப் போவதாக, தேசிய காங்கிரசின் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் நான் தெரிவித்ததாக உதுமாலெப்பை தெரிவித்து வரும் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தனது பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் தெரிவித்து வரும் கருத்து தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தேசிய காங்கிரஸ் கட்சியில் தான் வகித்த பதவிகளை இராஜினமா செய்துவிட்டு, தனது ஆதரவாளர்கள் மத்தியில் குறித்த இராஜினமா தொடர்பில் விளக்கமளிக்கும் போதும், தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதும் தனது பெயரைக் குறிப்பிட்டு அப்பட்டமான பொய்களைக்கூறி என்மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார் இதனை நான் முற்றாக மறுக்கின்றேன்.

உதுமாலெப்பை கூறுவது போன்று அவரது உண்மைக்குண்மையான விசுவாசமுள்ள தலைவர் அதாஉல்லா ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சுபையிர் மேற்கண்டவாறு என்னிடம் தெரிவித்தார் என கூறுவாராக இருந்தால் நான் அழிவுச் சத்தியம் செய்வதற்கும், உதுமாலெப்பையின் வீடு தேடிச்சென்று மன்னிப்பு கோரவும் தயாராகவுள்ளேன்.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தேசிய காங்கிரஸ் கட்சியில் தான் வகித்த சகல பதவிகளையும், அண்மையில் இராஜினமா செய்திருந்தார். அதன் பின்னர் சில தினங்களாக அவர் தனது தொலைபேசியினையும் நிறுத்தி வைத்திருந்தார். இதனால் அவரது கட்சி மட்டத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் உதுமாலெப்பை தேசிய காங்கிரசில் வகித்த பதவிகளை இராஜினமா செய்துள்ளதாகவும், அவர் கட்சி தாவப் போவதாகவும் சமூக வலயத்தளங்கள் ஏட்டிக்குப் போட்டியாக செய்திகளை வெளியிட்டன. உதுமாலெப்பை தனது பதவிகளை இராஜினமா செய்வதற்கும், தனக்கு விருப்பமான கட்சி ஒன்றில் இணைந்துகொள்வதற்கும் அவருக்கு உரிமையுள்ளது. அது அவரது தனிப்பட்ட விடயமாகும்.

கிழக்கு மாகாண சபையில் நீண்டகாலமாக உதுமாலெப்பையோடு ஒன்றாக செயற்பட்டவன் என்ற வகையிலும், அவர் எனது நெருங்கிய நண்பர் என்ற வகையிலும் பலர் என்னை தொடர்புகொண்டு அவரது இராஜினமா தொடர்பில் வினவினர். குறித்த இராஜினமா சம்மந்தமாகவும், அதன் உண்மைத்தன்மைகளை அறிந்திராதவன் என்ற வகையிலும் என்னால் யாருக்கும் பதில் வழங்க முடியாமல் போனது.

இருந்தபோதிலும், என்னால் உதுமாலெப்பையை தொடர்புகொள்ள முடியாத போதிலும், குறித்த இராஜினமா தொடர்பில், சமூக வலயத்தளங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் உதுமாலெப்பைக்கு நெருக்கமானவர்களை தொடர்புகொண்டு விசாரித்தேன். அவரது இராஜினமா தொடர்பான உண்மையான விடயத்தினையும் அறிந்துகொண்டேன்.

இது இவ்வாறிருக்க, உதுமாலெப்பை 30 மில்லியன் பணங்களை பெற்றுக் கொண்டு வேறுறொரு கட்சி அமைக்கப் போவதாக தேசிய காங்கிரசின் தலைவர் அதாஉல்லாவிடம் நான் தெரிவித்ததாக உதுமாலெப்பை ஊடகங்களில் தெரிவித்து வரும் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும். அவ்வாறு நான் ஒருபோதும் அதாஉல்லாவிடம் கூறவில்லை.

குறிப்பாக, நீண்டகால நண்பர் என என்னை விழிக்கும் உதுமாலெப்பை குறித்த சம்பவம் தொடர்பில் என்னை தொடர்புகொண்டு பேசாமலும் அதன் உண்மைத்தன்மையினை அறியாமலும் தனது ஆதரவாளர்கள் மத்தியில் எனது பெயர் குறிப்பிட்டு பேசியமை கவலையான விடயமாகும். சிரேஸ்ட அரசியல் வாதியும், அரசியல் முதிர்ச்சி மற்றும் நீண்டகால அரசியல் அனுபவங்களை கொண்ட உதுமாலெப்பை இந்தவிடயத்தில் சிறுபிள்ளைத்தனமாக செயற்பட்டுள்ளதுடன், அவரது அரசியல் முதிர்ச்சி, அனுபவம் என்பனகேள்விக்குறியாகியுள்ளது.

உதுமாலெப்பை தனது உரையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நான் தேசிய காங்கிரசின் தலைவர் அதாஉல்லாவுடன் பேசவில்லை என்பதுடன், அதனை அவரது கட்சித்தலைவர் உண்மையாக கூறினார் என்பதனை உதுமாலெப்பை ஆதாரங்களுடன் நிருபிக்க வேண்டும். அல்லது அவர் என்மீது சுமத்திய போலிக் குற்றச்சாட்டை வாபஸ் பெறவேண்டும்.

அம்பாரை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உதுமாலெப்பை எந்தக்கட்சியில் இருந்தாலும் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அதனால் எனக்கு இலாபமும் கிடையாது. அவர் எங்கிருந்தாலும் எனது நீண்டகால நண்பர் என்பதே எனது நிலைப்பாடாகும் எனவும் சுபையிர் மேலும் தெரிவித்தார்.

நுண்கடன்களால் அதிகளவில் மரணங்கள் ஏற்படுகின்றன

துறைவேந்தியமேடு நிருபர்

கிழக்கு மாகாணத்தில் நுண்கடன் காரணமாக பல மரணங்கள் நடைபெறுவதாகவும் அதனை தடுப்பதற்கான வழி வகையினை பொறுப்பு வாய்ந்த அரச திணைக்களங்களின் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென சமுக ஆர்வலர்கள் கோரிக்கையினை முன் வைக்கின்றனர்.

குறைந்தளவான பணத்தினை வட்டிக்கு பெற்று அவற்றின் இரு மடங்கான பணத்தினை வட்டியாக செலுத்தும் நுண்கடன் திட்டத்தினால் அதிகளவு பாதிக்கப்படுவது கீழ் தர வர்க்க மக்களே இவ்வாறான கடன் திட்டமானது மனித உயிருக்கு மரணத்தினை ஏற்படுத்தி வருவதாகவும் இதனை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரதேச பொது அமைப்புக்கள் அரச அதிகாரிகளிடம் கோருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலங்களாக இடம்பெற்று வருகின்ற தற்கொலை மரணங்களின் அதிகள வானவை நுண்கடன் பிரச்சினையால் ஏற்பட்டவை என மரணம் தொடர்பான விசாரணை அறிக்கைகளில் பதிவாகியிருக்கின்றன.வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களின் தேவையினை பூர்த்தி செய்வதற்கு நுண்கடன் திட்டமானது உதவுகின்ற போதிலும் அதற்காக நாளாந்தம் செலுத்தப்படுகின்ற வட்டி வீதமானது இரட்டிப்பாகின்ற போது வருமானத்திற்கு மேலாக செலவு ஏற்படுவதனால் பணத்தினை மீளச் செலுத்த முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ வேண்டிய வயதில் தற்கொலைக்கு நுண்கடன் வழி வகுப்பதாகவும் இவ்வான நுண்கடன் திட்டத்தினை குறைந்த வட்டி வீதத்துடன் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டுமென சமுக ஆர்வலர்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

கல்விச் செயலமர்வு

துறைவேந்தியமேடு நிருபர்

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்த கடந்த கால க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறு தொடர்பாக பட்டிருப்பு கல்வி வலயத்தினை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் பிரதான பாடங்களான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு களுதாவளை கலாசார மண்டபத்தில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ நிஸாம் தலைமையில் நடைபெற்றது.

செயலமர்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதான பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் செயற்பாடே அவர்களின் கற்றலை ஊக்கப்படுத்தும்

துறைவேந்தியமேடு நிருபர்

சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்துகின்ற செயற்பாடுகள் சிறுபராயத்திலிருந்து முன்னெடுக்கப்படுகின்ற போது விருப்போடு கற்றல் நடவடிக்கையினை பிள்ளை முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இது வெற்றி கரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தூண்டுதலாக அமையும்.கற்றல் செயற்பாடுகள் விளையாட்டுச் செயற்பாடுகளுடன் நிகழ்கின்ற போது குறித்த விடயமானது மனதில் ஆழமாகப் பதிந்து கொள்வதுடன் மாணவரிடையே புரிந்துணர்வு இவிட்டுக்கொடுப்புஇ போட்டி மனப்பாங்கினை தோற்றுவிக்கும் நேரான சிந்தனைக்கு வழிவகுக்கும்.

இவ்வாறு அண்மையில் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே போரதீவுப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் எல்.அருள்ராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சிறுபராயத்தில் கற்றுக் கொள்கின்ற விடயங்கள் ஒரு மனிதன் முதுமை அடைகின்ற நிலையிலும் பார் போற்றும் அளவிற்கு உயர்நிலை பெறும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற கொள்கைக்கு அமைவாக இன்றே சிறுவர்கள் நல்ல முறையில் வழி நடத்தப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு பெற்றோரினைச் சார்ந்தது. பாடசாலையில் மாணவர்கள் மிகக் குறுகிய காலத்தில் மாத்திரமே தமது கற்றல் செயற் பாட்டினை முன்னெடுக்கின்றனர் அதிகளவான காலத்தினை பிள்ளை தமது வீட்டுச் சூழலில் செலவு செய்கின்றது.ஆசிரியர்கள் தமது சேவையின் நிமிர்த்தம் குறுகிய காலத்தினுள் பல விடயங்களை மாணவர்களுக்கு சென்றடையக் கூடிய வகையில் தமது பணியினை செவ்வனே மேற்கொள்கின்றமை உண்மையில் வரவேற்கத்தக்கது.

கல்வி அமைச்சு ஆரம்பப் பிரிவு மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் சிறுவர் விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தியது மாத்திரமல்லாது அதனை சிறப்பான முறையில் பயிற்று விப்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சியினையும் வழங்கி வருகிறது. காரணம் பிள்ளை தமது கற்றல் சூழலுக்கு வருவதற்கு ஆரோக்கியம், சுறுசுறுப்பு மிகவும் முக்கியமானது சிறந்த ஆரோக்கியமான பிள்ளையினால் மாத்திரமே முழுமையான கற்றல் செயற்பாட்டினை முன்னெடுக்க முடிவதுடன் விருப்புடன் கற்றலின் பால் ஈர்ந்து எடுக்கக் கூடிய தூண்டு கருவியாக விளையாட்டு அமைவது சிறப்பான விடயமாகக் கருதப்படுவதாகத் தெரிவித்தார்.

கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான ஆயுதமும் சக்தியும் மக்களின் மனங்களில் தங்கியுள்ளது

அரசாங்க ஒருங்கிணைப்பு முகாமையாளர் க.ஏகலைவன்

துறைவேந்தியமேடு நிருபர்

ஆண்டாண்டு காலமாக அடி வருடியாக இருந்த சமுகம் எமது சமுகம் அதனை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்புடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான ஆயுதமும் சக்தியும் மக்களின் மனங்களில் உள்ளது. அதனை சிறந்த முறையில் சந்தர்ப்பத்திற்கு அமைவாக பிரயோகிக்கும் போது கடன் தொல்லையிலிருந்து விடுபட்டு சிறந்த சமுதாயக் கட்டமைப்பினை உருவாக்க முடியும். எம்மத்தியில் உறுதியான நம்பிக்கையினை கட்டியெழுப்ப வேண்டும்.அதற்கு ஏற்ற வகையில் குடும்பப் பொறுப்பினை ;ஏற்கும் தலைவிகள் உருவாக வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இவ்வாறு கடன் சுமையிலிருந்து மீண்டெழுவோம் எனும் தொனிப் பொருளில் களுவாஞ்சிகுடியில் நடை பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரசாங்க ஒருங்கிணைப்பு முகாமையாளர் க.ஏகலைவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடன் சுமை எனும் நச்சு வட்டத்திலிருந்து ஒவ்வொருவரும் விடுபடுவதற்கான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு பொருளாதாரத்தினை வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தினை வகுத்துக் கொள்ள வேண்டும்.மாறாக கடன் எனும் ஒரே காரத்தினை மையமாகக் கொண்டு தூக்குக் கயிறு பரிகாரம் தேடுவதனை நிறுத்த வேண்டும். கடன் என்னும் மாயைக்காக உயிரினை மாய்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.மரணங்கள் எதற்காக நடைபெறுகின்றது. என அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு தற்கொலைகள் நடைபெற்று வருகின்றன.இவ்வாறான மன நிலையிலிருந்து மீண்டு எழவேண்டும்.

எம்மத்தில் அண்மைக்காலமாக தொலைபேசிக் கலாசாரம் பரவியுள்ள நிலையில் சாப்பிடுவதற்கு பொருளாதாரம் கஷ்டமாக உள்ள நிலையிலும் கடன் வாங்கியாவது காட் வாங்கும் நிலை எம்மை அறியாது நடைபெற்று வருகின்றன.இவ்வாறான பணம் விரையம் செய்யப்படுகின்ற செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.உழைப்புக்கு ஏற்ற வகையில் செலவு செய்வோமானால் மற்ற வரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படாது.

அது மாத்திரமன்றி மட்டு மாவட்டத்தில் தொழில் செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் மிகக் குறைவாகக் காணப்படுவதனால் பொருளாதாரத்தினை மேம்படுத்த முடியாத நிலை இவ்வாறான பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய முழு அதிகாரமும் பெண்களிடம் வழங்கப்பட்டுள்ளது அதற்கு ஏற்ற வகையில் பெண் தலைவிகள் தமது ஊதியத்தினை பெருக்கிக் கொள்ளக் கூடிய வகையில் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கல்முனையில் வீதிகளிலுள்ள வீட்டுப்படிகளை அகற்ற ஒரு மாத கால அவகாசம்; மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை!

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுப்படிகளை ஒரு மாத காலத்திற்குள் அகற்றுமாறு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விசேட அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பல வீதிகளில் வீடுகளின் நுழைவாயில் படிகள் அவ்வீதியோரங்களில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதானது வீதிகளின் அகலத்தை குறைத்திருப்பதுடன் போக்குவரத்திற்கும் பெரும் இடைஞ்சலாக இருப்பதை எல்லோரும் அறிவோம். இந்த சட்ட விரோத கட்டுமானங்கள் தொடர்பில் கல்முனை மாநகர சபைக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

எனவே, இந்த சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்போர் அப்படிகளை தாமாகவே அகற்றி, வீதிப் போக்குவரத்துகளில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல்களையும் விபத்துக்களையும் தவிர்ந்து கொள்வதற்கு உதவுமாறு மாநகர முதல்வர் என்ற ரீதியில் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன். இதற்காக எமது மாநகர சபையினால் சம்பந்தப்பட்டோருக்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்படுகிறது.

தவறும் பட்சத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட ஏற்பாடுகளின் கீழ் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறித்த கட்டுமானங்கள் மாநகர சபையினால் அகற்றப்படும் என்பதுடன் அதற்கான செலவுகள் மற்றும் வழக்குச் செலவுகள் என்பவற்றுடன் தண்டப்பணமும் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டியேற்படும் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

ஆகையினால் மேற்படி எமது அன்பான அறிவுறுத்தலுக்கு செவிசாய்த்து, படிக் கட்டுமானங்களை குறித்த கால அவகாசத்தினுள் அகற்றி, சீரான வீதிப் போக்குவரத்துகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு மீண்டும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நதிகள் தினத்தை முன்னிட்டு முதூர் பிரதேசத்தில் விசேட நிகழ்வு

மூதூர் நிருபர்

சர்வதேச நதிகள் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு குளங்களை பராமரித்து நீரினை சேமித்து வைப்பது தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்வு மூதூர் கிழக்கு பள்ளிக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி ஜௌபர் சேர் அவர்களும் மூதூர் பிரதேச செயலாளர் எம்.தாஹீர், மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம். அறூஸ்,மாவட்டசிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ரசிகரன் மூதூர் பிரதேச நீர்ப்பாசன பொறியியாளர் கே.அகிலன், மொரவெவ பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.ராஜ்குமார், கந்தளாய் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் லக்மால் மற்றும் மூதூர், சேருவில பிரதேச விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டதோடு மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் ஆரம்ப கால நதிகளின் தோற்றங்கள் அதன் வளர்ச்சிகள் மற்றும் இன்றைய காலகட்டத்தில் நதிகள், ஆறுகள் , நீர் நிலைகளை பாதுகாப்பதும் அதன் முக்கியத்துவம் சம்பந்தமாகும் கலந்து கொண்டோருக்கு தெளிவான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூறியதோடு பிரதேச விவசாயிகளின் நீர்பாசனம் சம்பந்தமான தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

'மஸ்டா'வின் மகஜர்

மூதூர் நிருபர்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இற்றை வரைக்கும் வீடு கிடைக்காதவர்களுக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு மூதூரை பிரதிநிதித்துவப்படுத்தும் 31 சமூக சங்கங்களின் ஒப்பத்துடன் 13 உயர் மட்டங்களுக்கு 'மூதூர் ஐக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்' (மஸ்டா) வினால் இது சம்பந்தமான பூரண விளக்கங்கள் கொண்ட மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு நிரந்தர வீடு கிடைக்கும் வரைக்கும் 'மஸ்டா' ஒன்றியமானது தொடர்ச்சியான முன்னெடுப்புக்களை துரிதமாக முன்னெடுக்கும் என அதன் தலைவர் உட்பட இதன் பிரதான ஆலோசகர்கள் மற்றும் அனைத்து அங்கத்தவர்களும் உறுயளித்துள்ளனர்.

பாடசாலை புத்தகங்கள் வழங்கி வைப்பு

சிரேஸ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம்.முஜீப் அவர்களின் மறைந்த தந்தையின் பெயரில் இயங்கும் DR.M.L.M.AMEEN .FOUNDATIONஅனுசரனையில் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் நலன் கருதி 'கல்வி அடைவு மேம்பாட்டு செயற் திட்டம்-2018' தி/கிண்/அலிஹார்-மகா-வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச் செயற் திட்டத்தின் முதல் கட்டமாக இவ் வருடம் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் இப்பாடசாலை மாணவர்களுக்கு தமிழ் பாட த்திற்கான மாதிரி பயிற்சிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

களுவாஞ்சிகுடியில் 'கடன் சுமையிலிருந்து மீண்டெழுவோம்' விழிப்பூட்டல் நிகழ்வு

துறைவேந்தியமேடு

களுவாஞ்சிகுடி விஷன் பன்ட் லங்கா நிறுவனம் ஏற்பாடு செய்த கடன் சுமையிலிருந்து மீண்டெழுவோம் எனும் தொனிப் பொருளிலான விழிப்பூட்டல் நிகழ்வு சீ.மூ.இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் விஷன் பன்ட் லங்கா நிறுவனத்தின் களுவாஞ்சிகுடிக் கிளை முகாமையாளர் சுந்தரலிங்கம் அன்ரனிஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விஷன் பன்ட் லங்கா நிறுவனத்தின் கிழக்குப் பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் டிக்ஷன் ராகல் இசிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரெனில் லொஸ் மற்றும் உதவி செயற்பாட்டு முகாமையாளர் வீரப்பன் சந்திரகுமார்இ அரசாங்க ஒருங்கிணைப்பு முகாமையாளர் க.ஏகலைவன் இநாவிதன்வெளி பிரதேச வேள்வி ஷன் நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.செல்வபதி இவிஷன்பன் லங்கா நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனத்தின் அங்கம் வகிக்கும் கொத்தணிக் குழுக்களின் தலைவர்கள் இதரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பயனாளிகளின் பிள்ளைகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அதிதிகளினால் கொத்தணித் தலைவர்கள் மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பயனாளிகள் பிள்ளைகள் நினைவுப் பொருட்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் பொது மக்கள் கடன் சுமையிலிருந்து எவ்வாறு மீண்டெழுவது தொடர்பான அறிவுரைகள் அதிதிகளினால் தெளிவான முறையில் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புதிய மீன் சந்தைக் கட்டிட தொகுதி திறந்து வைப்பு

உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட கச்சக் கொடித் தீவில் தவிசாளர் கே.எம்.நிஹார் மற்றும் உறுப்பினர்கள் செயலாளர் சுகதார அதிகாரி பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பங்கு பற்றுதலுடன் மீன் கடை, இறைச்சி கடை திறந்து வைக்கப்பட்டது.

கல்நந்தி புல்லுண்டு வெள்ளையரை விரட்டியடித்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டம்

வயிரமுத்து துசாந்தன்

திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டில் பல சிவ தலங்களும்; அமைந்து இணையில்லா அற்புதங்களையும், அருளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. கிழக்கிலங்கையிலே மீனினங்கள் கவிபாடும் இயற்கை எழில் கொஞ்சும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே 18கிலோ மீற்றர் தொலைவில் மருதநில மண்வாசமும், கிராமத்து அழகுடனும் கொக்கட்டிச்சோலையில் சுயம்பாக தோன்றி அளவில்லா அற்புதமும், அருள் மழையும் பொழியும் வரலாற்று சிறப்புமிக்க ஆலயமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆகும்.

இவ்வாலயத்தின் வரலாறு மிகப்பழமையானது என்பதை கல்வெட்டுக்கள் மூலமாகவும், கர்ணபரம் பரைகதைகள் ஊடாகவும், நூல்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. அவ்வகையிலையே குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பினை ஆளும் போது கலிங்க ஓரிசா தேசத்தை அரசு புரியும் குகசேனனுடைய புத்திரியாகிய உலகநாச்சி என்பவள் மண்முனையை சிற்றரசு புரிந்த வேளையில் கொக்கட்டி மரங்களால் சூழப்பட்ட ஒரு வனத்திலே திகடன் எனும் வேடுவன் தேன் எடுக்கச் சென்று அங்கு மரத்தினை வெட்டியபோது அதிலிருந்து இரத்தம் பாய்ந்து ஓடுவதைக் கண்டுக் வேடுவன் பயமடைந்து ஓடிச்சென்று அரசி உலகநாச்சியிடம் தெரிவித்தான். பிற்பாடு உலகநாச்சி அதை பார்வையிட்டு அது ஒரு சிவலிங்கம்தான் என உணர்ந்து முதலில் ஒரு கொத்துப்பந்தலிட்டு ஒரு ஆலயம் அமைத்து வடநாட்டில் இருந்து பட்டர்கள் மூவரை அழைத்து பூசை செய்தனர் என்பது வரலாறு.

கி.பி.12ம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த வீர சைவ வழிபாடு இங்கு

தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. வீர சைவம் என்பது சாதி முறைக்கு எதிராக சமத்துவத்தை பேண வேண்டும் எனும் இலட்சியத்தோடு பசவேசரால் கர்நாடகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இச்சமயம் கலிங்கமாகோனால் கி.பி.13ம் நூற்றாண்டில் இவ்வாலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. இங்கு பூசை செய்பவர்களை சங்கமர் என அழைக்கும் மரபும் உண்டு.

இவ்வாலயத்தின் உற்சவமானது ஆவணி மாதத்தில் வருகின்ற வளர்பிறை பிரதமையும் உத்தர நட்சத்திரமும் கூடிய திருநாளில் திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சகல குடித்திருவிழாக்களும் நடைபெற்று பூரணைக்கு பிற்பாடு வரும் ஞாயிற்றுக்கிழமை தேரோட்டமும் அன்றிரவு திருவேட்டையும் மறுநாள் காலை தீர்தோற்சவமும் நடைபெறும்.

கிழக்கிலங்கையில் தேரோடும் ஓர் ஆலயம் என்பதினால் இவ்வாலயத்தின் உற்சவத்தினை தேரோட்டம் என மக்கள் அழைப்பதுமுண்டு. இத் தேர்கள் தர்மசிங்க மன்னனால் சோழநாட்டில் இருந்து கி.பி 958ல் சிற்பிகளை வரவழைத்து மூன்று தேர்;களையும் அமைத்தான் என மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்றது. அதில் தேரோட்ட நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தெய்வக் குற்றம் காரணமாக ஓர் தேர் தேரோடும் பாதையை விட்டு விலகி ஆலயத்திற்கு தென்மேற்கு திசையில் உள்ள மதிலை உடைத்து ஆற்றுக்குள் விழுந்து விட்டதாக முன்னோர்கள் குறிப்பிடுகின்றனர். மிகுதியாக உள்ள இரண்டு தேர்களும் இன்றுவரை தேரோட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. பல கலைசிற்பங்கள் நிறைந்த சித்திரத்தேரிலே உமையவள் சகிதம் சிவபெருமானும் மற்றைய சிறிய தேரில் பிள்ளையாரும் எழுந்தருளி பக்தர்களால் வடம்பிடித்து வீதிவலம் இழுத்து வரும் காட்சி அற்புதமாய் இன்றுவரை இடம்பெற்று வருகின்றது.

முக்குக தேசம் என அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலே படுவான்கரைப்பிரதேசம் முழுக்க முழுக்க கலிங்க ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாகும். இப்பகுதியின் பல முக்கிய கோயில்களும் கலிங்க மகோன் வகுத்த சட்ட திட்டங்களே இன்றும் நடைமுறையிலுள்ளன. கலிங்கமாகோன் வகுத்த வன்னிமைகளும், மாகோன் வகுத்த கோயில் நிர்வாகமுறைகளுமே இன்றும் உள்ளன இவ்வாலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் ஆலயத்தின் நிருவாகிகளை வண்ணக்குமார் என அழைக்கும் பாரம்பரியமும் உண்டு.

மாகோன் வகுத்த நிர்வாக முறைகளையும், பாரம்பரிய பண்புகளையும் பேணி வருகின்ற இவ் வாலயத்தின் சுயம்புலிங்கம் பல்வேறு திருவிளையாடல்களையும் நிகழ்த்தி வருவதும் அற்புதமே. போர்த்துக்கேயர் காலத்தில் பல இந்துக்கோயில்கள் இடித்தழிக்கப்பட்டது. அவ்வகையில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் போர்த்துக்கேயரின் பார்வைக்கு உள்ளாகி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு போர்த்துக்கீசர் வருகை தந்து பூசை செய்து கொண்டிருக்கும் குருக்களிடம் நந்தியினைப் பார்த்து இது என்னவென வினவ நந்தியென நடுக்கத்துடன் குருக்களும் கூறி நிற்க இக்கல் நந்தி புல்லுண்ணுமா என போர்த்துக்கீச தளபதி மீண்டும் கேட்டான். அதற்கு குருக்களும் என்னசெய்வதென்று அறியாது ஆம் என பதிலளித்தார். பின் இன்று பூசை முடிந்துவிட்டது. நாளை வாருங்கள் என குருக்களும் கூறி அனுப்பினார். போர்த்துக்கீச தளபதி சென்றதும் குருக்களும் இறைவனை வணங்கி நின்றார். மறுநாள் போர்த்துக்கீசர் கூறிய நேரத்திற்கு கோயிலுக்குள் நுழைத்தான் குருக்களிடம் புல்லை நந்திக்கு வழங்குமாறு கூற நந்தியும் எழுந்து புல்லையுண்டு, சாணம் இட்டு சத்தமிட்டது. இதைக்கண்ட போர்த்துக்கீசனும் அவ்விடம் விட்டு ஓடினான் இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்த ஆலயமாக கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் போற்றப்படுகின்றது.

இவ்வாலயத்தின் இவ்வருடத்திற்கான மகோற்சவம் கடந்த 11ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 2018.09.30 திகதி பி.ப.04.00மணிக்கு தேரோட்டமும், இரவு திருவேட்டைநிகழ்வும் 01.10.2018ம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும், கொடியிறக்கமும் இடம்பெற்று மகோற்சவம் நிறைவுபெற உள்ளது.

சுயம்பாய் தோன்றி நிற்கும் எம்பெருமானின் தேரோட்டத்தில் கலந்து அவர் அருள் பெறுக.

காத்தான்குடி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

காத்தான்குடி நிருபர்

ஒக்டோபர் மாதம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காத்தான்குடி நகர சபையின் பொது நூலகத்தினால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வருகின்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை இவ் வருடமும் மிகச் சிறப்பாக பல விஷேட செயற்திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபையின் நகர முதல்வர் எஸ்.எச்.முஹம்மது அஸ்பர் தெரிவித்தார்.

காத்தான்குடி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 26 இன்று தொடக்கம் ஒக்டோபர் 30 வரை இடம்பெறவுள்ள தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 2018-ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் செப்டெம்பர் இம்மாதம் 26,27 திகதிகளில் வாசகர் வட்டத்தை புணரமைப்பு செய்தல்,நூலகங்களை சிரமதானம் செய்தல், ஒக்டோபர் மாதத்தில் 1ம் திகதி பதாதைகளை தொங்கவிடல், பொது நூலகத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நிகழ்வுகளின் ஆரம்ப பதிவேடு அறிமுகம்,தேசிய வாசிப்பு மாத செயற்திட்டங்களை பத்திரிகையில் பிரசுரித்தல்,சமூக மட்டத்தில் காணப்படும் சகல தரப்பினர் மத்தியில் வாசிப்பு தொடர்பான பிரகடனத்தை மேற்கொள்ளல்,தரம் 2 மாணவர்களுக்கான சித்திரப் போட்டி, 2ம் திகதி முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான அன்பளிப்பு வழங்கலும் வாசிப்பை ஊக்குவித்தலும்,5ம் திகதி வாசிப்பு தொடர்பாக ஜூம்ஆ பிரசங்கத்தின் மூலம் விழிப்புணர்வூட்டல்,8ம் திகதி கலை,கலாச்சார இலக்கிய குழு வினை அமைத்தல்,9ம் திகதி கல்வியின் முக்கியத்துவமும் பெற்றோரின் பங்களிப்பும் எனும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு,15ம் திகதி தரம் 10 மாணவர்களுக்கான கவிதை எழுதுதல் போட்டி நடாத்தல்,கொடி தினம்,18ம் திகதி வாசிப்பு விழிப்பூட்டல் தொடர்பான ஊர்வலம்,பதாதை காட்சிப்படுத்தல்,பத்திரிகை பிரசுரம்,துண்டுப் பிரசுரம் வெளியிடல்,22ம் திகதி புத்தகக் கண்காட்சி,29ம் திகதி கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான அறிவுக் களஞ்சியம்,30ம் திகதி இறுதி நாள் நிகழ்வுகள், வாசிப்பிற்கு துணை நிற்பவர் தாயா தந்தையா பட்டிமன்றம்,வாசகர் கௌரவிப்பு,பரிசு வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு காத்;தான்குடி நகர சபையின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களிலும் அங்கத்தவர்களை அதிகரித்தலும், நூல் அன்பளிப்புக் கோரலும்,தேசிய வாசிப்பு மாதத்தில் அங்கத்தவர்களை அதிகரிக்கும் நோக்கில் அங்கத்துவ புதுப்பித்தல் கட்டணங்களில் நகர முதல்வரின் அனுமதியுடன் குறித்ததொரு கழிவுத் தொகையை வழங்கல்,நூலக வளங்களை பேணும் பொருட்டு நூலகத்தில் உள்ள பழுதடைந்த நூல்களில் பயன்படுத்தக்கூடிய நூல்களை தெரிவு செய்து சீர் செய்தல்,நடமாடும் நூலக சேவையினை விஸ்தரிப்புச் செய்தல் திட்டத்தின் கீழ் நூலகங்களைக் கொண்டிராத பாடசாலைகளுக்கு நடமாடும் நூலக சேவையினை வழங்கல் போன்ற சேவைகள் மாத்திரம் ஒக்டோபர் மாதம் முழுவதும் வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒலுவில் கடலரிப்பை தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும்

பிரதி அமைச்சர் பைசல் காசீம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

ஒலுவில் கடலரிப்பை உடனடியாகத் தடுக்கும்வகையில் ஆழ்கடலில் இருந்து மண்ணை அகழ்ந்து கரையோரத்தை மீள்நிரப்பும் செயற்திட்டத்தை உடன் மேற்கொள்ளுமாறு சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசீம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டபோது அது அப்பகுதி மக்களுக்கு விடிவைக் கொண்டு வரும் என்று எல்லோரும் மகிழ்ச்சியடைந்திருந்தனர். ஆனால்,அது அழிவையே கொண்டு வரும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை.

இதன் நிர்மாணப் பணிக்காக மக்கள் காணிகளை இழந்தது ஒரு புறமிருக்க அவர்களை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கும்வகையில் இப்போது நாலாயிரம் மீனவர்களின் வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது.கரை வலை மூலம் மீன் பிடித்து வாழ்வை நடத்தி வந்த இம்மக்களின் வாழ்வு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தத் துறைமுக நிர்மாணத்தின் போது கடலினுள் பாரிய கருங்கற்களால் தடை அமைக்கப்பட்டது. இந்தத் தடை ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் ஒலுவில், நிந்தவூர், பாலமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு போன்ற ஊர்களில் கரைவலை மீன்பிடி கிட்டத்தட்ட இல்லாமலேயே போயுள்ளது.

இயற்கையாக இடம்பெற்று வந்த கரை நீரோட்டம் பாதிக்கப்பட்டதனால் கரையோரத்தின் சமநிலை பாதிக்கப் பட்டுள்ளது.வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓடும் கடல்நீர் துறைமுக வாயிலை அடைப்பதுடன் துறைமுக்கத்தின் தென்பக்கம் மணலைக் கொண்டு வந்து சேர்க்கின்றது.துறைமுக வாயில் அடைபடுவதனால் துறைமுகத்தினுள் மீன்பிடி படகுகள் நுழைய முடியாமல் உள்ளன.

இதனால் துறைமுகத்தின் வடக்கு திசை பாரிய கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதனால் வெளிச்ச வீடு மற்றும் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் போன்றவை பாதிக்கப்பட்டதால் இவற்றைப் பாதுகாப்பதற்காக அதிகாரசபை கடலினுள் வடக்கு தெற்காக அலைத்தடுப்பு வேலி ஒன்றினை அமைத்தது.

இந்த வேலி அமைக்கப்பட்டதன் பின் வடக்கில் இருக்கும் கிராமங்களான அட்டப்பள்ளம், நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு மற்றும் சாய்ந்தமருது போன்ற ஊர்கள் பாரிய கடலரிப்புப் பிரச்சினைக்கு உள்ளாகி விட்டன. இதனால் இவ்வூர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றன.

15 ஆயிரம் கரைவலை குடும்பங்கள் பாதிப்பு,கடல் தாவரங்கள் அழிவு,கரையோரத்தில் இருந்த வயற் காணிகள் மற்றும் தென்னந்தோப்பு உள்ளிட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட ஏக்கர் காணி கடலுக்குள் உள்ளீர்ப்பு,கடல் ஆமைகளின் இணைப்பெருக்கம் பாதிப்பு,கடற்பாறைகள் வெளித்தள்ளப்பட்டு மீனவர்களின் வேலைகளுக்கு பாதிப்பு போன்ற பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பில் நான் கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர,துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அழைத்துச் சென்று காண்பித்துள்ளேன்.இருப்பினும்,நிரந்தரத் தீர்வுகள் எவையும் முன்வைப்படவில்லை.இதனால் கடலரிப்பின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

பாறாங்கற்களைப் போட்டு இதைத் தடுக்க முடியாது.அவை கரைவலை மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே,வென்னப்புவ போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிபெற்ற ஆழ்கடலில் இருந்து மண்ணை அகழ்ந்து கரையோரத்தை மீள்நிரப்பும் செயற்பாட்டின் மூலமாகே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும்.

ஆகவே,இந்தத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் ஊர்களையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களிடம் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திகள் தொடர்பில் சந்திப்பு

கிண்ணியா நிருபர்

சேர்ஃப்-லங்கா நிறுவனத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளருமான இஞ்சினியர் இஹ்ஸான் ஜவாஸன் அவர்களுக்கும் டியர்ஸ் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு தோப்பூரில் இடம்பெற்றது.

கடந்த காலங்களில் இஞ்சினியர் இஹ்ஸான் ஜவாஸன் அவர்களினால் சமூக சேவைகள் தொடர்பான பல நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தோப்பூர் பிரதேசத்தின் தேவைகள் மற்றும் தோப்பூர் மக்களின் தேவைகள் தொடர்பான அறிக்கைகள், முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே இந்த ஆய்வுக்குழுவினர் தோப்பூரிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் தோப்பூர் பிரதேச மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விதவைகள், அநாதை பிள்ளைகள், நோயாளிகள், முதியவர்கள், வறியவர்கள், வேலையற்ற இளைஞர்கள், உலமாக்கள், அங்கவீனர்கள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் பற்றியும் தோப்பூர் பிரதேச வைத்தியசாலை, பாடசாலைகள், முன்-பள்ளி பாடசாலைகள், பள்ளிவாசல்கள், மையவாடி, மத்ரஸாக்களது தேவைகள் பற்றியும் பல விளக்கங்களை சேர்ஃப்-லங்கா நிறுவனத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளருமான இஞ்சினியர் இஹ்ஸான் ஜவாஸன் வழங்கினார்.

தரமற்ற கடினப் பந்து தரைத்தளம்

கிண்ணியா நிருபர்

கடினப் பந்து தளம் தரமற்றது கிண்ணியா பெரியாற்று முனையில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் மேற்பார்வையில் ரேன்ஞர்ஸ் மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடின பந்துக்கான தளம் தரமற்றதாக காணப்படுவதாக விளையாட்டு வீரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதனை சூழவுள்ள பகுதிகளில் நூல் வலைகளை கொண்ட பகுதிகள் அடைக்கப்பட்டுள்ளது எனவும் இதற்காக கம்பியினால் ஆன பிளாஸ்டிக் நெட் அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நிதி 291000(இரண்டு இலட்சத்து தொன்னூற்றி ஓராயிரம்) குறித்த திட்டத்தின் கணக்கறிக்கையூடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய நிதியில் பாரிய மோசடி இடம் பெற்றுள்ளதாகவும் தரக் குறைவான கொங்ரீட் அளவுகளும் இடப்பட்டுள்ளது.

பெரியாற்று முனை கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக இவ் வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான சகல திட்ட வரைபுகளையும் கிண்ணியா பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரின் மேலொப்பமிட்ட அனுமதியுடன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தகவல் தொழில் நுட்ப உதவியாளர்,தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் வேலைகள் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது விடயம் தொடர்பில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத் அவர்களுடன் தொடர்பு கொண்டு வினவிய போது.

உரிய முறைப்படி திட்ட வரைபின் படி பிளாஸ்டிக் கம்பியிலான நெட் அமைக்கப்படல் வேண்டும். உரிய பகுதியில் இரவு நேரங்களில் அதனை இட்டால் திருடி விடுவதாகவும் அதற்கான வேலைத் திட்டம் நிறைவடைந்ததும் அதனுடைய தரங்களை பரிசோதித்ததன் பின்னரே கொடுப்பனவுகளை வழங்குவோம் என்றார்.

சர்வதேச செவிப்புலன் வலுவற்றோர் தின நிகழ்வு

எம்.எம்.ஜபீர்

சர்வதேச செவிப்புலன் வலுவற்றோர் தினத்தை முன்னிட்டு இலங்கை செவிப்புலன் வலுவற்றோர் மத்திய சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு, சமூக சேவை திணைக்களம், இலங்கை தேர்தல் ஆணைக்குழு, அம்பாரை மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

செவிப்புலன் வலுவற்றோர்களுக்கான வாக்குரிமை தொடர்பாக தேர்தல் திணைக்கள அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டதுடன், செவிப்புலன் வலுவற்றோர்களிடையே மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட சித்திரம், நடனம், ,நாடக போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு இலங்கை செவிப்புலன் வலுவற்றோர் மத்திய சம்மேளத்தின் தலைவர் பிறைன் சுசந்த கொடிதுவக்கு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கஇ தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சமன் ரத்னாயக்க, அம்பாரை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் திலின விக்கிரமரத்ன, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா உள்ளிட்ட திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் என மேலும் பலர் கலந்து கொண்டனர்.

கரையோர வீதி அமைக்கும் பணிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு

கிண்ணியா நிருபர்

தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாக கூறப்பட்டது போன்று தனது பெரியாற்று முனை கரையோர வீதிக்கான கொங்ரீட் அமைக்கும் வேலைத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கிண்ணியா நகர சபையின் உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹரூப் அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

100 நாட்களில் 200 வேலைத் திட்டம் எனும் நோக்கில் 100 மீற்றர் தூரம் கொண்ட கொங்ரீட் வீதியானது 10 இலட்சம் ரூபா செலவில் புதிய கொங்ரீட் வீதி அமைக்கப்படவுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வின் பின் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹரூப் பெரியாற்று முனை பகுதியில் உள்ள சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் வீடு அற்ற அனைவருக்கும் வீடு வழங்கப்பட நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் குடியிருப்புக்கான வீடற்ற எந்தக் குடும்பமும் இருக்க முடியாது இது தொடர்பான பட்டியலை தருமாறு நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட்டை கேட்டுக் கொண்டார்.

ரேன்ஞர்ஸ் மைதான அபிவிருத்திக்காக 10 இலட்சம் நிதியை கம்பரலிய திட்டம் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காஸிமின் ஏற்பாட்டில் பதியத்தலாவை கல்ஓயா வித்தியாலயத்தில் இலவச வைத்திய முகாம் ஒன்று இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றதோடு அவர்களுக்கு இலவசமாக மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன. மருந்துகளுக்கு மேலதிகமாக 450 மூக்குக் கண்ணாடிகள்,10 நீர்த்தாங்கிகள்,8 சக்கர நாட்காலிகள் மற்றும் 8 தையல் இயந்திரங்கள் போன்றவையும் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த வைத்திய முகாமில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.202 பேர் சிறுநீரக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3.86 மில்லியனில் ஏழு செயற்திட்டங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 387 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 3.86 மில்லின் ரூபாசெலவில் ஏழு செயற்திட் டங்கள் முன்னெடுக்கப்;பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசா யப்பணிப்பாளர் அற்புதச்சந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயச் செய்கையை விருத்தி செய்யும் வகையில் பல்வேறு நிதியீட்டங்கள்ஊடாக பல செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இவ்வாண்டுக்கான மாகாண குறித்தொ துக்கப்பட்ட நிதியின்கீழ் ஏழு செயற்திட்டங் கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதாவது, 3.86 மில்லியன் ரூபா செலவில் 387 பயனாளிகள் தெரிவு செய்;யப்பட்டு இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிட்ட அவர், உவர் நிலங்க ளில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு உவர் நிலப்பயிர்நிலங்க ளில் பயிர் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 0.74 மில்லியன் ரூபாசெலவில் விதைநெல் வழங்கப் பட்டுள்ளது.

கைவிடப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் 205பயனாளிகள் தெரிவு செய்;யப் பட்டு உழுந்து நிலக்கடலை பயறு மற்றும் விவசாய உபகரணங்கள் 0.947 மில்லியன் ரூபாசெலவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேபோல வெங்காயத்திற்கான கொட்டகைகள் அமைத்தல்போன்;ற பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டிருப்பதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்

கடட்டணம் அதிகரிப்பு

வட மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் முடி வெட்டுதல் உட்பட அழகக செயற்பாடுகளுக்காக புதிய விலை யினை அறிமுகப்படுத்தியுள்ளது என வவுனியா மாவட்ட அழகக சங்கத்தின் தலைவர் விவேகானந்தன் அருண் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரி விக்கையில்,

பொருளாதார ஏற்றத்திற்கு ஏற்ப அழ கக சங்கம் தமது அங்கத்தர்களின் ஆலோ சனைப்படி விலை அதிகரிப்பொன்றினை செய்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் இவ் அதிகரிப்பு இருக்காது என நாம் எதிர்பார்ப்பதுடன் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தின் அடிப்படையில் இதனை அதிகரிக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இதன் பிரகாரம் அனைத்து அழககங் களிலும் (சலூன்) குறித்த விலைப்பட்டி யிலை வாடிக்கையாளர்கள் பார்வையிட முடியும் என்பதுடன் அழககங்களின் சே வை நேரங்களும் காட்சிப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல்லை பெற்றுத் தாருங்கள்

வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கான நிதியைப்பெற்றுக் கொள்வதற் கும் ஜனாதிபதி பிரதமர் விவச ராய அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதும், இதுவரை எந்தவிதமான பதில்க ளும் கிடைக்கவில்லை என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந் தையா சிவநேசன் அவர்கள் தெரி வித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக வடக்கு மாகாணத்தில் நிலவும் வறட்சிகாரணமாக விவசாயச்செய் கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பாதிப்புக்களால் விவசாயிகள் தமக்கான விதைநெல் இல்லாத நிலையில் பெருமளவான விவசாயிகள் காணப்படுகின்றன.

தற்போது காலபோக செய்கைக் கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், தமக்கான விதைநெல் பெற்றுத்தர விடுத்த கோரிக்கை யினை எவரும் செவி சாய்க்க வில்லை என பாதிக்கப்பட்ட விவ சாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் அவர்கள்ளி டம் இது தொடர்பாகக் கேட்ட போது, கடந்த மூன்று வருடங்களாக இந்த வறட்சி நிலமை நீடிக்கின்றது, இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட் டிருக்கின்றார்கள், இவர்களுக்கான விதைநெல் பெற்றுக்கொள்ளுவதும், அதற்கான நிதிபெற்றுக்கொள் வதிலும், விவசாயிகள் பாதிக்கப்பட் டுள்ளனர்.

இம்முறை ஜனாதிபதி பிரத மர் விவசாய அமைச்சர் ஏனைய சகல தரப்பினரிடமும் எழுத் துமூலம் இந்தக்கோரிக்கையினை முன்வைத்திருக்கின்றோம், ஆனால் எந்தஒரு சாதகமான பதிலும் கிடைக் கவில்லை என்று அவர்மேலும் தெரி வித்துள்ளார்.

வவுனியா நகரசபையினால் திருத்தி அமைக்கப்பட்ட குளாய்க்கிணறு பழுது

வவுனியா நகர மத்தியிலுள்ள குளாய்க்கிணறு நகரசபையினால் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. அண்மையில் அக்குளாய்க்கிணறு திரும்பவும் பழுத டைந்து 20 நாட்களாகியும் திருத்தப்ப டவில்லை. திருத்தி அமைத்துத்துதரு மாறு நகரசபையினரிடம் கோரியபோது எழுத்து மூலம் கடிதம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கி ழமை நகர சபை உப தவிசாளர் சு.குமா ரசாமியிடம் முறையிடப்பட்டபோதும் இன்று வரையில் திருத்தப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரி யவருகையில், வவுனியா நகர மத்தி யில் கொப்பேகடுவ சிலைக்கு அருகே காணப்படும் குளாய்க்கிணறு நீண்ட காலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்துள்ளது. இதையடுத்து பலரின் முறைப்பாடுகளின் பலனாக அக்கிணறு கண்டுபிடிக்கப்பட்டு திருத்தி அமைக்கப் பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப் பட்டது.

அண்மையில் திரும்பவும் பழுதடைந்து காணப்பட்ட குறித்த குளாய்க்கிணறை திருத்தித்தருமாறு நகரசபையினரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டபோது எழுத்து மூலமாக முறையிடுமாறு கோரப்பட் டது. இந்நிலையில் கடந்த புன்கிழமை நகர சபை உப தவிசாளர் சு.குமாரசுவா மியிடம் தொலைபே சியில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட் டபோது அன்றைய தினமே திருத்துவதற்கு முறைப்பாடு ஆவண செய்வதாக தெரிவித்தி ருந்தார்.

எனினும் இன்று பல நாட்கள் கடந்த நிலையிலும் நகரசபை தவிசாளர் மற் றும் உப தவிசாளரினால் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் எவையும் நிறைவேற் றப்படவில்லை. இவ்வாறு ஒரு குளாய்க் கிணறை திருத்தி மக்கள் பாவனைக்கு கையளிக்க முடியாதவர்கள் எவ்வாறு நகரத்தின் அபிவிருத்திகள் மற்றும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா தண்ணீர் தாங்கியை மக்கள் பாவனைக்காக கையளிப்பதில் சிக்கல்

பேராறு நீர்த்தேக்கத்திலிருந்து வவு னியா நெளுக்குளம் தண்ணீர் தாங்கிக்கு நீர் கொண்டு வருவதற்கு குழாய் பதித்தல் நடவடிக்கைகள் பூரணமாக நிறைவடை யாது உள்ளதால் நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கி மக் கள் பாவனைக்கு கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மன்னார்,வவுனியா உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத்திட்ட முகாமையாளர் எந்திரி வே. உதயசீலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கி தொடர்பாக தகவல்களை தகவல் அறியும் சட்டத்தினுடாக கேட்கப்பட்ட தகவல்க ளுக்கே இவ்வாறு பதில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

ஆசிய அபிவிருத்தி வங்கி அனுசரணை யினூடாக உலர் வலய நகர நீர் மற்றும் சுகா தாரத்திட்டத்தில் அமைக்கப்பட்ட தண்ணீர் தாங்கியின் பணிகள் பௌதீகளவில் 97சத வீதம் நிறைவடைந்துள்ளது.

செலவளிக்கப்பட்ட நிதியின் விபரம் பொறியியல் சிட்டை அளவுகளின் படி மொத்த மதிப்பீடு ரூபா 294,792,195.00 இதனுடன் நெளுக்குளம் நீர்த்தாங்கி அமைக்கப்படவிருக்கும் இடத்தைத் துப் பரவு செய்தல், இயந்திர உபகரணங்கள் வழங்கல் மற்றும் விநியோகித்தல் மின் உபகரணங்கள் பொருத்தல் நீர் சேமிக் கும் தாங்கி மற்றும் பாதுகாவலாளிக்கான விடுதி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் இறுதிக்கொடுப்பனவுகள் முடிவடைந்த பின்னர் செலவளிக்கப்பட்ட மொத்த நிதியின் விபரங்கள் பெற முடியும்.

இவ்வளவு பணிகள் நிறைவடைந்தும் இன்றுவரையில் மக்கள் பாவனைக்கு கைய ளிக்கப்படவில்லை. அதற்கான காரணமாக பேராறு நீர்த்தேக்கத்திலிருந்து நெளுக்குளம் தண்ணீர் தாங்கிக்கு நீர் கொண்டு வருவதற் கான குழாய் பதித்தல் வேலைகள் பூரண மாக நிறைவடையாது உள்ளதால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வனப்பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியுள்ள 21பேரை வெளியேறுமாறு அறிவுறுத்தல்

வவுனியா இராசேந்திரன்குளம் வன இலகாப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் காணி அபகரித்து குடியேறி யுள்ளவர்களில் 21பேரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. இதையடுத்து மத் திய கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவசரக்கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் அர சாங்க அதிபர் தலைமையில் இடம்பெற் றுள்ளது.

வவுனியா இராசேந்திரன்குளம் பகுதி யில் வனத்திணைக்களத்திற்கு உரித்தான ஒதுக்குகாடு 1921ஆம் ஆண்டு ஒதுக்கி எடுக்கப்பட்டுள்ளது. அதில் 3500 ஏக்கர் விக்ஸ்காடு, பாவற்குளம் போன்ற பகுதி களில் வன இலகா பகுதிகள் விடுவிக்கப் பட்டு மக்கள் குடியேற்றத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

சூடுவெந்தபிலவு பகுதியில் சொற்ப நிலமே வன இலகாவினரின் கட்டுப்பாட் டிலிருந்து வருகின்றது.

இதில் 50 ஹெக்டேர் விடுவிக்கப் பட்டு குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இப்பகுதிகள் இரண்டு பிரதேச செயலகப்பிரிவுகளுக்குள் வரு கின்றன. வெங்கலச் செட்டிகுளம்பிரதேச செயலகப்பிரிவிற்கும், வவுனியா பிரதேச செயலகப்பிரிவிற்கும் என இரண்டு பிர தேச செயலகப்பிரிவுகளைக் கொண்டுள்ள து. சூடுவெந்தபிலவு பகுதியில் கடந்த வருடம் தேக்க மரம் நாட்டுவதற்குச்செ ன்ற வன இலகாவினரை அப்பகுதியில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்கள் அனுமதிக்கவில்லை. பாவற்குளம் வைத் தியசாலைக்கு அருகிலுள்ள 6ஆம் கட்ட வீட்டுத்திட்டம் பகுதியில் விவசாயம் மேற்கொள்வதற்காகத் தெரிவித்து சட்ட விரோதமான முறையில் வன இலகாவின ரின் பகுதியில் குடியேறியுள்ள 21 பேரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு கொழும் பு, பத்தரமுல்ல வனப் பாதுகாவல் ஆணையாளர் நாயகத்தினால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அப்பகுதி மக்கள் கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டு அவரின் உதவியை நாடியுள்ளனர். அதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை மாலை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத் தில் இடம்பெற்ற அவசரக் கலந்துரையா டலில் மாவட்ட அரசாங்க அதிபர், மேல திக மாவட்ட அரசாங்க அதிபர், உதவி மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட வன உத்தியோகத்தர், உதவி மாவட்ட வன உத்தியோகத்தர், வவுனியா வட்ட வன உத்தியோகத்தர், வவுனியா, வெங்க லச் செட்டிகுளம் பிரதேச செயலாளர்கள், மாவட்ட கமநல உதவி ஆணையாளர், ஆகியோர் கலந்துகொண்டதுடன் அப்ப குதியை விடுவிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரச அதிகாரிகளுக்கு அமைச்சரினால் பணிப்புரைகள் வழங்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி அப்பகுதி யைச் சென்று பார்வையிட்டு களப்பரிசோ தனை செய்வதற்கு விஷேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு காட்டுப்பிர தேசமாக காணப்பட்டு தற்போது காடுகள் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள் வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதையடுத்து வனத்திணைக்களத் திற்கு அச்சுறுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனத்திணைக்களத்திற்கு அமைச்ச ராக ஜனாதிபதியே காணப்படுகின்றார் இலங்கையில் 32 வீதாசாரத்தில் நிலப்பகு திகளில் காடுகளை அதிகரிப்தற்கு பிரயச்சி த்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலை யில் காடுகள் அழிக்கப்பட்டு சட்டவி ரோத குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமைக்கு ஜனாதிபதி தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என வும் இராசேந்திரன்குளம் பகுதியிலுள்ள பொதுக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் குடும்ப பெண்ணை காணவில்லை

கிளிநொச்சியில் குடும்ப பெண்ணை காணவில்ல என கணவர் பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளார். கிளிநொச்சி இராமநானத் பாம் மருதநகர் பகுதியை சேர்ந்த 46 வயதான ஐந்து பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு காணமல் போயுள்ள தாக கணவர் கிளிநாச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த 13ம் திகதி வீட்டிலிருந்து சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்கு சென்றுதிரும்புவ தாக தெரிவித்து சென்ற குறித்த குடும்ப பெண் வீடு திரும்பவில்லை என கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த பெண்ணை தமது உறவினர்கள் வீடுகள் உள்ளிட்ட பல இடங்களில் தேடிய புாதிலும் இன்றுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என குறித் பெண்ணின் கணவர் தெரிவிக்கின்றார். குறித்த தனது மனைவி தொடர்பான தவல்கள் கிடைக்குமிடத்து தந்துதவுமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுக்கின்ற னர். மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கிளிநொச்சி பொலிசாரும் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வரு கின்றமை குறிப்பிடதக்கது.

இதேவேளை அண்மைக்காலமாக குடும்ப பெண்கள் வெளிநாடுகள் செல் வதும், காணாமல் போனதன் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவங்களமு் தொடர்ந்தும் இடம்பெற்ற வரும் நிலை யில், காணாமல் போன குறிதத் குடும்ப பெண் தொடர்பில் தகவல் கிடைக்கு மிடத்து தந்துதவுமாகு குடும்பத்தினர் கோருகின்றனர்.

காணாமல் போன பெண் மருதநகர் பகுதியை செர்ந்த மஞ்சுளா என அழைக் கப்படும் நாகராசா முனியம்மா என்ற குடும்ப பெண் என குடும்பத்தினர் தெரி விக்கின்றனர்.

இவர் தொடர்பான தகவல்கள் கிடைக்குமிடத்து அவரின் கணவ ரான இராசதுரை நாகராசா என்பவரை 0776753485 எனும் தொலைபேசி இலக் கதுடன் தொடர்புகொண்டு தெரிவிக்கு மாறும் கோருகின்றனர்.

சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

வடமாகாணத்திலுள்ள தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்பாளர்கள் தமக்கு சம்பள அதிகரிப்பு வழங்குமாறு கோரி கடிதம் ஒன்றினை அரசாங்க அதிபர்கள், வடமாகாண முதலமைச்சர், வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண ஆளுநர், வடமாகாண கணக் காளர் அமைச்சு, வடமாகாண விவசாயம், நீர்வழங்கல், கால்நடை அமைச்சு ஆகியோ ருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். எனினும் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை இதையடுத்து அப்பிரதிகளை ஊடகங்களுக்கு அனுப்பிவைத் துள்ளனர்,

அவர்களது கோரிக்கை தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடமாகாணத்திலுள்ள அர சாங்க அதிபர் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளி லுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவையிலுள்ள நாங்கள்,

வடபகுதியிலுள்ள பாதுகாப்பு சேவை நிறு வனங்கள் மட்டும் குறைந்த ஊதியத்தினையே வழங்கிவருகின்றன. கொழும்பிலுள்ள ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் நாள் ஒன்றிற்கு ஊதியமாக 1000ரூபா பெறுகின்றார். வடபகு தியில் 700ரூபாவில் ஊழியர்கள் சேமலாப நிதி கள் கழிக்கப்பட்டு 657ரூபாவாகும் தொழில் திணைக்களத்தின் கணக்கின்படி நாள் ஒன்றிற்கு 843 ரூபா வழங்கப்பட வேண்டும் ஆனால் வடபகுதி கேள்வி அறிவித்தலில் 580ரூபா வினை நிறுவனங்கள் கேள்வி மூலம் பெற்று வருகின்றன. எமக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவு என தொடர்புபட்ட அதிகாரிகளிடம் கேட்டால் எமது வேலை பறிபோகும் நிலை காணப்படுகின்றது. கேள்வி அறிவித்தலை நடாத்தும் அரச திணைக்களங்களின் தலைமை அதிகாரிகளுடன் இதனைக்குறிப்பிட்டால் அவர்கள் பொறுப்பற்ற பதிலினை வழங்கிவரு கின்றனர்.

இவ்வாறு வழங்கும் பதில்கள் எமது வாழ் விற்கு கொள்ளி வைப்பதாகவே அமைகின்றன. எமது மாவட்டத்தில் காற்றினைத்தவிர எல் லாப் பொருட்களும் தண்ணீர் உட்பட பணம் கொடுத்தே பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. எங்களின் நிலைமைகளை ஒருகணம் எண்ணிப் பார்த்து தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு இது சம்பந்தமான அறிவித்து எங்களின் வாழ்விற்கு ஒளி தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது எரிபொருட்களின் விலை உயர்வு, உணவுப் பொருட்களின் விலையேற்றம் காணரமாக குறைந்த ஊதியத்தில் தமது குடும் பத்தையும் பாடசாலை செல்லும் பிள்ளை களையும் நடாத்திச் செல்வதில் பெரும் சி ரமத்தை எதிர்கொண்டு வருவதாகவும் தமது கோரிக்கைக்கு சாதகமான பதிலினைப் வழங் குமாறும் தொடர்புபட்டுள்ள அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

பேராயருடன் பொறியியல் பீடாதிபதி சந்திப்பு

யாழ்.பல்கலைக்கழக பொறியல் பீட பீடாதிபதி மற்றும் மாணவர் களுடன் பேராயர் சந்திப்பொன்று இன்று இடம்பெற்றது. குறித்த சந் திப்பு இன்று திங்கட்கிழமை இடம் பெற்றது. கிளிநொச்சி அறிவியல்ந கர் பகுதியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக பொறியல் பீடத் தில் குறித்த சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையா டப்பட்டது. யாழ் பல்கலைக்கழக பொறியல் பீடாதிபதிஅ.அற்புதரா ஜா, பல்கலைக்கழக சமூகத்தினர் என பலர் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர். குறித்த சந்திப்பு மிக வும் ஆரோக்கியமானது எனவும், பல் கலைக்கழகத்திற்கும் தென்னிந்திய திருச்சபைக்குமிடையில் நீண்டகால தொடர்பு உள்ளதாகவும் திருச்சபை யின் பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் செ.தியாகராஜா குறிப்பிட் டார். எதிர்காலங்களில் பல்கலைக் கழகத்தில் திருச்சபைசார் எவ்வித உதவிகளையும் செய்வதற்கு ஆதீனம் தயாராகவே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் விவசாய கிணறுகளை அமைப்பதற்கும், புனரமைப்பதற்கு நிதி தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் 259 புதிய விவசாயக்கிணறுகளை அமைப்பதற்கும் 202 வரையான விவசாயக்கிணறுகளை புனரமைப் பதற்கும் 103 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மாவட்ட கமந லஅபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் அவர்கள் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய செய்கைகளை ஊக்கிவிக் கும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக புதிய விவசாயக்கி ணறுகள் மற்றும் கைவிடப்பட்ட மற்றும் சேதமடைந்த விவசாயக்கி ணறுகளை புனரமைக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றன இது தொடர்பில் விவசாயிகளால் புதிய கிணறுகளை அமைத்து தருமாறு அதேபோன்று சேதமடைந்த கிண றுகளை புனரமைத்துதருமாறும் கோரிக்கைகள் முன் வைக்கப்படு கின்றன.

இது தொடர்பில் கருத்துத்தெரி வித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் 259 வரையான விவசாயக்கிணறுகளின் தேவைப்பாடுகள் காணப்படுகின் றன.

இதற்கான மதிப்பீடாக 77 மில் லியன் ரூபா தேவைப்படுகின்றது.

இதேபோன்று 202 வரையான விவசாயக்கிணறுகளை புனரமைத் துக் கொடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றன.

இதற்காக 26 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப் பட்டுள்ளன.

இவ்வாறு புதிய விவசாயக்கிண றுகளை அமைப்பதற்கும் சேதம டைந்த கைவிடப்பட்ட கிணறுகளை புனரமைப்பதற்கும் 103 மில்லியன் ரூபா நிதி தேவைபெயன மதிப்பி டப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கவனயீர்ப்புப் போராட்டம்

சமுக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு அழைப்பு

உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று, அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனே ரத்துச் செய் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஞாயிற்றுக்கிழமை 30.09.2018 அன்று மு.ப. 10. 00 மணியளவில் மாத்தளை நகரில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை ஆதரிக்கின்ற அரசியல் கட்சிகள்இ பொது அமைப்புகள் மற்றும் ஆர்வலர்களைபோராட்டத்தில் கலந்துக்கொள்ளுமாறு சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு அழைப்பு விடுக்கின்றது. மேலதிக தகவல்களுக்கு உக்குவளை பிரதேச சபை உறுப்பினரும், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளருமான டேவிட் சுரேன் (0779839164) அவர்களுடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இளைஞர் யுவதிகளின் குழப்ப நிலைக்கு அரசியல் பின்புலமும் காரணமாக இருக்கலாம்; சி.வி.விக்னேஸ்வரன்

இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையில் சில தீய சக்திகளின் ஊடுறுவல் குழப்ப நிலையை தோற்று வித்துள்ளது. இதில் அரசியல் பின்புலமும் காரணமாக இருக்கலாம் என வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் டில்ஹோ ஹோட்டலின் சோழா மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற நல்லிணக்கச் செயன் முறையில் இளையோரை வலுப் படுத்தல் எனும் தேசிய இளைஞர் மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ் வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

அடுத்த வருடமும் நீங்கள் முதல மைச்சராக நிகழ்வுக்கு கலந்து கொள்ள வேண்டும் என இவ் நிகழ்வின் போது ஒருவர் குறிப்பிட்டார். அடுத்த வருடம் எப்படி வருவேனோ தெரியாது.

காலத்தின் தேவை அறிந்து இளைஞர் யுவதிகளின் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவது சிறந்தது.

சமூகத்தின் சீரிய வழிகாட்டியாகவும் கட்டுக் கோப்பானவர்களாகவும் இளைஞர் யுவதிகள் முன்வர வேண்டும் அவர்களுடைய பிரச்சினைகளை இளைஞர் யுவதிகளே தீர்க்க வேண்டும். இதனை நிறுவனங்களோ முதியோர்களோ தீர்க்க முடியாது.

பல பிரச்சினைகளை இளையோர் யுவதிகள் எதிர் நோக்குகின்றனர் தொழில் கல்வி, இன மத சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கும் சவால்களையும் எதிர் நோக்குவதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆய்வுகளை ஆய்வு செய்வதில் மாத்திரம் நின்று விடாது இளையோர் யுவதிகளின் பிரச்சினைகளை இணங் கண்டு ஆராய்ந்து தீர்க்க முன்வர வேண்டும். சமூக மட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

யுத்த சூழ் நிலையின் பின்னரும் இளையோர்களால் வால் வெட்டுக் கள்,மதுபாவனை, போதைப் பொருள் பாவனை போன்றன காணப்படுவதும் இதற்காக அரசியல் பின்புலங்களும் குழப்ப நிலைகளுக்கு காரணமாக உட் புகக் கூடும்.

மாயத் தோற்றங்கள் அவர்களை மாற்றி விடுகின்றன சரியான வழிகாட்டல்களுடன் வாழ அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

சாதாரண தரப் பரீட்சையில் தாம் நினைக்கும் பெறுபேறுகளை எட்ட வில்லை என்றால் தன்னம்பிக்கை இழந்து சமூகத்துக்கு பாரமாக மாறுகிறார்கள் சரியான தொழில் கல்வி முறைகளை வழிகாட்ட தன்நம்பிக்கையை வழிகாட்ட முன்வர வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை இளைஞர் யுவதிகளுக்காக செய்ய முன்வந்திருக்கும் விழுது அமைப்புக்கு நன்றிகளும் எனது பாராட்டுக்களும் என்றார்.

வவுனியாவில் 20 வருடம் காணி அனுமதிப்பத்திரம் இன்றி வசிக்கும் குடும்பங்கள்

வவுனியா காத்தார்சின்னக்குளம் 215பி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 10 குடும்பங்கள் சுமார் 20 வருடமாக காணி அனுமதிப்பத்திரம் இன்றி வசித்து வருகின்றனர். இதனால் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை மற்றும் தமது தேவைகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை கோரி வருகின்றனர்.

இதனால் பல்வேறு அடிப்படைத் தேவைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது எனவே நாங்கள் குடியிருக்கும் காணிக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருவதுடன் வீட்டுத்திட்டங்களையும் வழங்குமாறு கோரி இன்று நண்பகல் வவுனியா தேசிய வீடமைப்பு அதிகாரி சபையின் அலுவலகத்திற்கு குறித்த 10 குடும்பங்களும் சென்று தமது நிலைப்பாடுகள் தொடர்பாக வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகரைச்சந்தித்து கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வியடம் குறித்து அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கும்போது,

காத்தார் சின்னக்குளம், ஸ்ரீராமபுரம் வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் நாங்கள் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை பொதுத் தேவைக்கு ஒதுக்கப்படாத காணியில் கடந்த 20 வருடமாக குடியிருந்து வருகின்றோம். அந்த நேரத்தில் அக்காணியினை தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் கேள்வி கோரல் மூலம் அறிவித்தல் கோரப்பட்டது. நாங்கள் வசித்து வரும் காணிக்கு கேள்வி கோரல் போடப்பட்டுள்ளதால் எமது பகுதியை விடுத்து வேறு பகுதியிலிருந்து கேள்வி கோரல் மூலம் பலர் விண்ணப்பித்துள்ளனர்.

இதையடுத்து நாங்கள் வீடமைப்பு அதிகாரசபையினரிடம் சென்று இவ்விடயம் குறித்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்திற்குச் சென்று கேட்டபோது குறித்த கேள்வி கோரல் அறிவித்தல் அப்படியே கைவிடப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் எமது காணி விடயம் குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. நாங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சென்று எமது காணியின் ஆவணப்பத்திரம் குறித்து கேட்டு வருகின்றோம்.

ஆளுநர் பிரதேச செயலாளர், கிராம அலுவலகர் அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பியிருந்தோம் எவரும் பதில் அனுப்பவில்லை நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. கொழும்பு தலைமையகத்திலிருந்து எமக்கு இன்னும் பதில் வரவில்லை என்று தெரிவித்து வருகின்றனர். கடந்த இருபது வருடமாக எங்களுக்கு எவ்விதமான முடிவுகளையும் பெற்றுத்தரவில்லை. எமது தேவைகள் குறிப்பாக பாடசாலையில் மாணவர்களைச் சேர்ப்பது முதல் கிராம அலவலகரின் தேவைகளுக்குச் சென்றால் கூட காணி அனுமதிப்பத்திரங்களைக் கோரி வருகின்றார்கள்.

நங்கள் வசித்துவரும் பகுதியில் நாட்டப்பட்ட தென்னைமரத்திற்குக்கூட அவர்களுக்கு பதில் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நாட்டப்பட்ட 14 தென்னை மரங்களையும் எங்களை வைத்து அகற்றியுள்ளனர். மலசலகூடம் அமைக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளதுடன் மூன்று குடும்பங்களுக்கு இன்று வரையில் மலசலகூடம் அமைக்கப்படவில்லை மறைப்புக்களை வைத்துக்கொண்டே பயன்படுத்தி வருகின்றோம். கிராம சேவையாளரிடமிருந்து எமக்கு எவ்வித வாழ்வாதர உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எமக்கு காணி ஆவணம் பெற்றுக்கொள்வதற்கும் இன்று ஒரு முடிவினைப்பெற்றுக்கொள்ளவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து வருகை தந்திருக்கின்றோம்.

எமக்கு நிரந்தரமாக அக்காணியினை பெற்றுத்தரவேண்டும் வீட்டுத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படவேண்டும். குறித்த 10குடும்பங்களுக்கும் அக்காணியினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மேலும் கோரியுள்ளனர்.

இதுகுறித்து அப்பகுயிலுள்ள 10 குடும்பத்தினரையும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளரைச் சந்தித்த போது, அமைச்சரவை அனுமதியுடன் 10பேர்ச் காணியினையே பெற்றுக்கொள்ள முடியும் இவர்கள் குடியிருக்கும் பகுதி தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்கு பாரப்படுத்தப்பட்ட காணி எனினும் பிரதேச சபையினரின் அனுமதியுடன் 20 பேர்ச் காணியினை பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கத்தின் சுற்றறிக்கைக்கு மாறாக நாங்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. இவர்கள் அக்குடியிருப்புக்குள் விடப்பட்ட பொதுக்காணியில் அத்து மீறிக் குடியேறியவர்கள் என்றும் சொல்லாம். இவர்களுக்காக வேலையைச் செய்வதற்கு எங்கள் மட்டத்தில் எதனையும் செய்துகொள்ள முடியாது தலைமை காரியாலயத்திலுள்ள சொத்து முகாமையாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து வடக்கு புனர்வாழ்வு மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் கே. காதர் மஸ்தானின் கவனத்திற்கு அப்பகுதியிலுள்ளவர்களினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதையடுத்து பிரதி அமைச்சர் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடியதுடன் இன்று கொழும்பிலுள்ளதாகவும் ஓரிரு தினங்களில் தேசிய வீடமைப்பு அதிகார சபை, குறித்த 10 குடும்பங்கள், பிரதி அமைச்சர் ஆகிய முற்தரப்பினரையும் ஒன்றிணைத்து ஒரு கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

யாழில் வீடுகள் கையளிப்பு

அரீஷ் ஹரன்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அளவெட்டி தெற்கு , பலாலி தெற்கு ஒட்டகப்புலம் ஆகிய வறுமைக்கோட்டுக்குட்பட்ட இரண்டு குடும்பங்களுகுக, யாழ். மாவட்ட பாதுகாப்பு படைக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி அவர்களின் ஆலோசனைகக ம் வழிகாட்டுதலுக்கும் அமைய, இராணுவத்தின் 2ஆவது கெமுனு மற்றும் 7ஆவது கஜபா படைப்பிரிவுகளின் உதவியோடு வீட்டுக்குத் தேவையான அடிப்படைஉபகரணப்பொருட்கள் சகிதம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாதுகாப்பு படைக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, மற்றும் 51 ஆவது படைப்பிரதேசத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் றொஷான் செனவிரட்ண, தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, மற்றும் கிராம சேவையாளர்கள், இராணுவத்தின் சிரேஸ்ட அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பிரதேச மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான 3 நாள் ஆங்கில பயிற்சிப்பட்டறை

மேற்பட்ட 2018 இல் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

ஆங்கிலம் மட்டுமில்லாது தலைமைத்துவம், ஆளுமை வளர்ச்சி என்பனவும் கற்பிக்கப்பட்டன. அத்துடன் பல்கலைக்கழத்தில் தற்போது பயிலும் மாணவர்கள் தங்கள் பல்கலைக்கழக வாழ்க்கை அனுபவத்தை பங்குபற்றிய மாணவர்களுடன் பகின்றனர்.

இதற்கான நிதியுதவியினை - வில்நவ் பிரான்கோ தமிழ் சங்கம் (பிரான்ஸ்), வில்நவ் சூப்பர் கிங்க்ஸ் கிரிக்கெட் அணி (பிரான்ஸ்) மற்றும் ஜெயக்குமார் கிசோகுமரன் (ஜெர்மனி) ஆகியோர் வழங்கி இருந்தனர்.

ஆற்றல் அமைப்பினரால் நடாத்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான 3 நாள் ஆங்கில பயிற்சிப்பட்டறைஆனது 22, 23 மற்றும் 24 திகதிகளில் ஸ்டான்லி வீதியிலுள்ள ஹட்ச் களத்தில் நடைபெற்று இனிதே நிறைவுற்றது.

முற்றுமுழுதாக இலவசமாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் 75 இற்கு

தபால் சேவைகள் விழிப்புணர்வு செயற்திட்டம் இன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது தபால் சேவைகள் விழிப்புணர்வு செயற்திட்டம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. தபால் சேவைகள் தொடர்பில் மக்கள், மாணவர்களை விழிப்பூட்டும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. கிளிநொச்சி தபால் நிலைய ஊழியர்களின் ஏற்பாட்டில் பிராந்திய அஞ்சல் அதிபர் உள்ளிட்ட பலரின் பங்குபற்றலுடன் குறித்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்பட்டது. டிப்போ சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வு செயற்திட்டம் பொது சந்தை, பேருந்து நிலையம், பாடசாலை உள்ளிட்ட பல பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டு, கரடிபோக்கு சந்தியில் நிறைவு பெற்றது. இதன்போது தபால் நிலையங்களில் மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பில் துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

பிராயச்சித்தம்!

‘அடிமை, பொண்டாட்டிதாசன், பொம்பளை, மதுரை’ என்று, கீர்த்திவாசனுக்கு பல பெயர்கள் உண்டு.

ஆனாலும், அதைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்பட்டதோ, கோபப்பட்டதோ இல்லை. மாறாக, புன்முறுவலோடு ஏற்றுக் கொள்வார்.

ஐம்பது வயதை நெருங்கும் கீர்த்திவாசனுக்கு ஒரே மகன் ரகு. இப்போது தான் பி.இ., முடித்து, வேலையில் சேர்ந்திருக்கிறான்.

அதற்குள் பெண்ணை பெற்றோர் பலர், அவரையும், அவர் மனைவி மீனாட்சியையும் மொய்க்கத் துவங்கி விட்டனர்.

நகரில் பெரிய வீடு, பிக்கல் இல்லாத குடும்பம், படிப்பு, வேலை, நல்ல தோற்றம் என்று எந்தக் குறையும் இல்லாத மாப்பிள்ளை; யாருக்கு கசக்கும்!

‘என்னங்க... காலாகாலத்துல பையனுக்கு கால்கட்டு போடறது நல்லதுன்னு படுது,’ என்றாள், மீனாட்சி.

‘கரெக்ட். நீ முடிவெடுத்தா சரி. ரகுகிட்ட பேசுறேன்; நீயும் பேசு,’ என்று வழக்கம் போல் ஆமோதித்தார், கீர்த்திவாசன்.

மாலையில், ரகுவிடம் இதைப்பற்றி பேசிய போது,‘அப்பா... கொஞ்ச வருஷம் பேச்சிலர் லைப் என்ஜாய் பண்றேனே...’ என்றான் ரகு.

‘எனக்கு உன் அம்மா முடிவு ரொம்ப

சிறுகதை

முக்கியம். அதேமாதிரி உனக்கும் இருக்கணும். இந்த குடும்பத்தின் ஆணி வேர் அவ தான்,’என்றார்.

அப்பாவின் பதில், ரகுவிற்கு வெறுப்பை தந்தது.

‘ஏம்ப்பா... உங்களுக்குன்னு எந்த விருப்பமும் கிடையாதா... இப்படி அம்மாவுக்கு ஜால்ரா போட்டு வாழ்றது போரடிக்கல?’ என்றான் கிண்டலாக!

சிரித்தார் கீர்த்திவாசன்.

‘ரகு... நம்ம வாழ்க்கையில நடக்கிற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் உண்டு. எனக்குன்னு வாழ்க்கையில ஒரே ஒரு ஆசை தான் இருக்கு. அது, முடிஞ்ச வரைக்கும் நேர்மையா வாழணும். அதுக்காக எவ்வளவு வேணும்னாலும் விட்டுக் கொடுப்பேன். அதுல உங்கம்மாவோட,’அட்ஜஸ்ட்’ பண்ணிக்கிட்டு போறதும் ஒண்ணு!‘என்றார்.

அப்பாவின் பதிலில், ரகுவிற்கு திருப்தி ஏற்படவில்லை; அம்மாவோ பிடிவாதக்காரி.

‘ரகு... உன் ஆசைப்படி ஆறு மாசம் பேச்சிலரா இரு’வர்ற தை மாசம் நம்ம வீட்டுக்கு மருமக வந்தாகணும்,’என்றாள், கறாராக மீனாட்சி.

ஞாயிற்றுக் கிழமை -

அண்ணன் வீட்டிற்கு வந்திருந்த சாவித்திரி, வந்ததும், வராததுமாக, ‘அண்ணே... உன் மருமகள நினச்சா பயமா இருக்கு... என்ன தான் வேலைன்னாலும் ராத்திரி, 8:00 மணி, 10:00 மணின்னு வீட்டுக்கு வர்றா. சரியா சாப்பிடறதில்ல. சொன்னா கோபப்படற. எனக்கு தெரியாதாங்கறா. ஆம்பள இல்லாத குடும்பம்; எப்படி அடக்கறதுன்னு தெரியல. காலா காலத்துல அவள ஒருத்தன் கையில பிடிச்சு கொடுத்தாத்தான் நிம்மதி. எனக்கு வேற யாருண்ணே இருக்காங்க. நீங்க தான் முன்ன நின்னு செய்யணும்,’ என்றாள்.

கீர்த்திவாசனும், அவன் தங்கையும் அவர்கள் வீட்டிற்கு ஆசைக்கும், ஆஸ்திக்குமாக பிறந்தவர்கள். அப்பாவின் தவறான பழக்கத்தால், சாவித்திரிக்கு நல்ல இடத்தில் வாழ்க்கை அமைய வில்லை. விளைவு, ஒரு பெண் குழந்தையை தந்து விட்டு அவள் கணவன் மறைய, சாவித்திரியின் வாழ்க்கை சங்கடமாகவே ஓடியது.

கீர்த்திவாசனின் பெற்றோரும் மறைந்த பின், மகளுடன் தனி வாழ்க்கை வாழத் துவங்கினாள் சாவித்திரி. வேலைக்கும் சென்றாள். அதனால், தங்கையிடம், ‘உன் பொண்ணோட வாழ்க்கைக்கு நான் பொறுப்பு...’ என்று வாக்குறுதி அளித்திருந்தார், கீர்த்திவாசன்.

சாவித்திரியின் மகள் நல்ல அழகு; ஓரளவு படிக்கவும் செய்தாள். இப்போது, ஒரு பெரிய கம்பெனியில் வேலை பார்க்கிறாள். இயல்பாகவே கொஞ்சம் பிடிவாதமும், கர்வமும் கொண்டவள். அது, அவள் அப்பாவின் ஜீன்.

சாவித்திரியின் கவலையில் நியாயமிருப்பதை உணர்ந்த கீர்த்திவாசன், மீனாட்சியை பார்த்தார்.

‘கொஞ்சம் உள்ள வாங்க...’ என கண்ணால் சைகை செய்தாள், மீனாட்சி.

‘கொஞ்சம் இரு..’தங்கையிடம் சொல்லி, உள்ளே சென்றார்.

‘இப்ப உங்க தங்கச்சிக்கு என்ன சொல்லப் போறீங்க... நம்ம பையனுக்கு கல்யாணம் செய்யலாம்ன்னு நெனச்சுட்டு இருக்கையில, இவ வந்து கண்ண கசக்கிட்டு நிக்கறா. பேசாம நான் சொல்றபடி சொல்லுங்க...’என்றவள் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

‘சொல்லு மீனாட்சி...’என்றார் மெதுவாக!

‘இன்னும் ஒரு வருஷம் போகட்டும். அதுவரைக்கும் அமைதியா இருன்னு சொல்லுங்க,’ என்றாள் கட்டளை தொனியில்!

வெளியில் வந்த கீர்த்திவாசன், தங்கையிடம், ‘சாவித்திரி... நீ எதுக்கும் கவலைப்படாத. வர்ற தையில உம் பொண்ணு என் வீட்டுக்கு மருமகளா வருவா. நிம்மதியா வீட்டுக்கு போ,’என்றார்.

ஆச்சரியமும், மகிழ்ச்சியும் ஒரு சேர, ‘உண்மையாவா சொல்றீங்க?’ என்று கேட்டாள், சாவித்திரி.

‘பின்ன பொய்யா சொல்றேன். இது எப்படவோ முடிவு செஞ்சது. அதோட இது என்னோட கடமை... எதுக்கும் உன் மகள ஒரு வார்த்தை கேட்டுக்க...’ என்றார்.

கணவன் பேசியதைக் கேட்டு அணுகுண்டு தாக்கியதைப் போல் நிலை குலைந்தாள் மீனாட்சி.

‘என்ன இந்த மனுஷன்... கல்யாணமானது முதல் பெட்டிப் பாம்பாக கிடந்தவர்; மிக முக்கியமான நேரத்தில என் சொல்லை மீறி இப்படி ஒரு உறுதி தர்றாரே... அதுவும் என் முன்னாடி...’ என்று நினைத்தவள், அதிர்ச்சியில் பேச்சு வராமல் நின்றாள்.

தங்கை சந்தோஷமாக விடை பெற்று சென்றதும், மனைவியின் ரியாக்

ஷனை எதிர் கொள்ள தயாரானார், கீர்த்திவாசன். அதே நேரம் ரகுவும் வர, விஷயத்தை கேட்டு அவனும் திகைத்து நின்றான்.

‘என்னாச்சு உங்களுக்கு... நான் உள்ளே அவ்வளவு சொல்லியும், இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கீங்க... இதுக்கு ரகு சம்மதிக்க வேணாமா... ஏன் இப்படி சொன்னீங்க?’ என்று, பட படவென்று கேள்விகளை அடுக்கினாள் மீனாட்சி.

உடனே, ரகு,‘அப்பா... இது, 21ம் நூற்றாண்டு’ நாங்க, உங்கள மாதிரி இல்ல’ தந்தை சொல் மந்திரம்ன்னு கண்ண மூடி நம்ப. எப்படி நீங்களா ஒரு பொண்ண எனக்கு முடிவு பண்ணுவீங்க?’என்றான், கோபத்துடன்!

இருவரையும் சிறிது நேரம் அமைதியாக பார்த்த கீர்த்திவாசன், மனைவியின் பக்கம் திரும்பி,‘இதோ பார் மீனாட்சி... இந்த விஷயத்துல எனக்கு நீ சம்மதம் சொல்லித் தான் ஆகணும்,’ என்றார், கண்டிப்பாக!

அவள் ஏன் என்பது போல் முழிக்கவும்‘புரியல... நமக்கு கல்யாணமான புதுசுல நாம ஒரு ஒப்பந்தம் போட்டோமே ஞாபகமிருக்கா... இனிமேல் வாழ்க்கையில எல்லா விஷயத்துலயும் நீ சொல்றபடி நான் நடப்பேன்னும் ஆனா, ஒரே ஒரு விஷயத்துல மட்டும், நீ, எனக்கு ஒத்துழைப்பு தரணும்ன்னு பேசி நீயும், நானும் சத்தியம் செஞ்சுகிட்டமே மறந்து போயிருச்சா... நான் செய்த சத்தியப்படி இது நாள் வரைக்கும் உனக்கு நான் எதுலயும், ‘நோ’ சொன்னதில்ல. அதுமாதிரி நீயும், உன் சத்தியத்த காப்பாற்றணும். இல்ல... சத்தியம் சக்கர பொங்கல்ன்னு நீ நெனச்சா, இனிமே உன் தாசனா நான் இருக்க மாட்டேன். நான், என் ஆதிக்கத்த காட்ட ஆரம்பிப்பேன். நல்லா யோசி.அப்புறமா உன் முடிவ சொல்லு,’ என்றார் உறுதியான குரலில்!

இதைக் கேட்டதும் மிரண்டாள் மீனாட்சி. ‘இவர் சொல்வது உண்மை தான். இதுவரை என் பேச்சை மறு பேச்சின்றி கேட்டு நடந்தவர், இப்போது தன் பங்கை கேக்கிறார். வேறு வழியில்ல; சத்தியத்திற்கு கட்டுப்பட வேண்டியது தான்....’என நினைத்த படியே, ‘உங்க இஷ்டம்,’என்று சொல்லி, அறைக்குள் சென்றாள்.

தன் பெற்றோர் பேசுவது புரியாமல் மலங்க மலங்க விழித்த ரகுவிடம், ‘ரகு... நீ சொன்னது மாதிரி காலம் வேணா மாறலாம்; ஆனா, அன்பு, பாசம், கடமை, நல்லது, கெட்டது, பசி, தூக்கம் இதெல்லாம் மாறாது. நான் சொல்றத முழுசா கேளு... எங்கப்பா, தான் வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலையில, கடன் கொடுத்தவரோட குடிகார மகனுக்கு, தெரிஞ்சே என் தங்கைய கல்யாணம் செய்து கொடுத்து, கணவனை திருத்தட்டும்ன்னு வியாக்கியானம் பேசினாரு. குடிகார புருஷனோட சரியா வாழாம, கொஞ்ச நாள் பிரிஞ்சுருந்தா என் தங்கச்சி. அப்புறம், ஊர் உலகத்துக்கு பயந்து, நாங்க பக்க பலமா இருப்போம்ன்னு நம்பி வாழ ஆரம்பிச்சா. ஒரு கட்டத்துல கணவன், அப்பா, அம்மான்னு எல்லாரும் இறந்து போன நிலையில, ஒத்தப் பொம்பளப் பிள்ளைய வச்சுக்கிட்டு இருக்கிற அவளுக்கு, இப்ப உறவுன்னு சொல்லிக்க அண்ணன்காரன் நான் ஒருத்தன் தான் இருக்கேன். அப்பாவோட பாவ, புண்ணியங்கள்ல மகனுக்கும் பங்கு உண்டுன்னு நம்பறவன் நான்.

‘எங்கப்பா செஞ்ச பாவம் சாவித்திரியோட கல்யாணம். அதுக்கு மகன்கிற முறையில நான் பிராயச்சித்தம் செய்ய நினைக்கிறேன். அதுக்கு ஒரே வழி, சாவித்திரி வாழ்க்கையோட ஒரே எதிர்காலமான அவ மகள கடைசி வரை நல்லா பாத்துக்குறது தான். அதனால தான், அவ என் மருமகள்ன்னு தீர்மானிச்சுட்டேன். தங்கைக்காக நான் ஆதங்கப்படறது, ஒரே பையனான உனக்கு புரியறது கஷ்டம். உறவுகள் குறைஞ்சுகிட்டு வர்ற காலம் இது.

‘என்னை மாதிரியே நீயும் நினைச்சா, என் பிராயச்சித்தத்துல பங்கெடுத்து, உன் அத்தை மகளை மனைவியா ஏத்துக்க. இல்ல, அப்பாங்கறது சாதாரண உறவு; அவரோட கடமை, குறிக்கோள், ஆசை, இதுல மகனுக்கு சம்பந்தம் கிடையாது. பெத்தவங்க வளர்த்துத் தான் ஆகணும். எல்லாத்தையும் விட தனி மனித சுதந்திரம் தான் முக்கியம். இந்த குடும்ப சென்டிமென்ட் எல்லாம் முட்டாள்தனம்ன்னு நீ நெனச்சா, தாராளமா உன் விருப்பப்படி யாரை வேணும்ன்னாலும் கல்யாணம் செஞ்சுக்க,’ என்றார் உறுதியான குரலில்!

இதுவரை எல்லாவற்றிற்கும் ஆமாசாமி போடும் தன் அப்பா, இன்று தன் கருத்தில் உறுதியோடு பேசியதைக் கேட்டு சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பின்,‘அப்பா... நான் உங்க பிள்ளை,’ என்றான் கனிவுடன்!

மகனின் வார்த்தையைக் கேட்ட கீர்த்திவாசனின் கண்களில், ஆனந்தக் கண்ணீர் பெருகியது. தான் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் தேடுவது சிறந்தது என்றால், மற்றவர்களுக்காகவும் பிராயச்சித்தம் தேடுவது தெய்வீக பண்பு. அதை, தன் மகன் உணர்ந்து கொண்டதில், மிகவும் பெருமை அடைந்தார், கீர்த்திவாசன்.

கீதா சீனிவாசன்

புதுமைப்பித்தன்;காலத்தில் மழுங்காத மேதமை



‘சந்தின் பக்கத்தில் ஒருவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாக‘கண்’ வைத்திருந்தான். இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்கு பால் கஞ்சி வார்க்கத்தான். என்னவோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே இதுதான் ஐயா பொன்னகரம்’ என்னும் வரிகள், அந்தக் கதை எழுதப்பட்ட காலம் கடந்தும் ஒருவிதமான அதிர்வை உண்டாக்கவே செய்தது; செய்கிறது. ‘பொன்னகரம்’ கதை இரண்டரைப் பக்கங்களில் முடிந்துவிடுகிறது. அம்மாளுவை அவர் இரண்டாவது பக்கத்தின் இறுதியில் அறிமுகப்படுத்துகிறார். அடுத்த பத்தியில் கதை முடிந்து விடுகிறது. கதாபாத்திரங்களுக்கிடையில் எவ்வித உரையாடலுமில்லை. பெரிய விவரணைகளும் கிடையாது. ஆனால் நான்கே வரிகளில் நெஞ்சில் தைக்கிற மாதிரி ஒரு உண்மையை உணர்த்த அவரால் இயன்றிருக்கிறது.

பொன்னகரம் மட்டுமல்ல. கவந்தனும் காமனும், இது மிஷின் யுகம், தெருவிளக்கு உள்ளிட்ட சில கதைகளை புதுமைப்பித்தன் சொற்பமான இரண்டு மூன்று பக்கங்களில் எழுதி முடித்திருக்கிறார். சில கதைகளில் பிரதானக் கதாபாத்திரத்துக்குப் பெயரில்லை. ஒன்றரைப் பக்கக் கதையான ‘இது மிஷின் யுகம்’ என்னும் கதை, சில உதிரியான உரையாடல்களுடன் நிறைவடைகிறது. அளவில் சிறியதான இந்தக் கதைகளில் புதுமைப்பித்தன் நகர வாழ்வின் இருளான பக்கங்களை மிகச் சாதுரியமாக வாசகனுக்குக் கடத்திவிடுகிறார். இது தேர்ந்த கவிஞனுக்கேயான சாதுரியம்.

பாரதி, மாதவய்யா, வேதநாயகம் பிள்ளை, வ.வே.சு. அய்யர் போன்றோரை முன்னோடிகளாகக் கொண்ட புதுமைப்பித்தன், மரபின் தாக்கம் விலகியிராத ஒரு காலகட்டத்தில் எழுதத் தொடங்கியவர். தந்தையுடன் ஏற்பட்ட மனக்கசப்பில் வீட்டை விட்டு விலகிச் சென்னைக்கு வந்து எழுத்து வாழ்க்கையைத் தொடங்கிய அவர், தனது எழுத்துக்கான சூழலை அமைத்துக்கொள்ளக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

குறைந்த அவகாசத்தில் எழுதிய கதைகள்

‘சிறுகதைகளின் திருமூலர்’ என்று மௌனியை வர்ணித்த பித்தன், மௌனியைப் போல் முற்றிலும் கனவுலகத்தில் சஞ்சரித்தவரில்லை. கண்முன் கண்ட நடப்புகளை அவரே கூறிக்கொள்ளும் ‘தவளைப் பாய்ச்சல்’ நடையில் கதைகளாக்கினார். அதில் கோபாவேசமும், கிண்டலும் இழையோடியிருந்தன. கதை கூறல்முறையில் அவர் ஒற்றையடிப் பாதையில் பிரயாணித்தவரல்ல. அடுத்த கதையை அவர் இன்ன வடிவத்தில் தருவாரென எவராலும் கணிக்க முடிந்ததில்லை. பத்திரிகை அலுவலகத்தில் காத்திருக்கும் பதினைந்து நிமிஷ இடைவெளியில் வெற்றிலைக் காம்பைக் கிள்ளிப் போட்டுக்கொண்டு ஒரு தரமான கதையை எழுதிவிடக் கூடிய திராணி அவருக்கிருந்தது.

1930-40களில் தேசமெங்கும் சுதந்திர வேட்கை எனும் அனல்காற்று வலுவாக வீசிக்கொண்டிருந்தது. அது இலக்கிய உலகிலும் எதிரொலித்தது. ஆயிரக்கணக்கான பக்கங்களில் லட்சியவாதமும், சாகசமும், காதலும் அட்சரங்களாக உருண்டோடிக்கொண்டிருந்தன. புதுமைப்பித்தனின் கதைகளில் இந்த அம்சம் தென்படாததை சிலர் விமர்சனமாகவே வைக்கின்றனர். கலையில் பிரசங்கம் கூடாதென்பதில் அவர் உறுதியாக இருந்ததையே இது காட்டுகிறது. அதேபோன்று காசநோயால் கடைசிவரை அவதிப்பட்ட அவர், கழிவிரக்க மிகுதியால் அப்படியான பாத்திரங்களைத் தன் கதைகளில் உருவாக்கியதே இல்லை. இதை ஜெயமோகன் ஓரிடத்தில் சுட்டிக்காட்டுகிறார்.

வடிவ சாத்தியங்களை முயற்சித்த முன்னோடி

வடிவ ரீதியாகப் பரீட்சார்த்தமான முயற்சிகளைக் கையாண்டு பார்த்த முதல் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளியாகப் புதுமைப்பித்தனை விமர்சகர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அதில் மிகையில்லை என்றே தோன்றுகிறது. பின்நவீனத்துவமோ, பேன்டஸியோ, மேஜிகல் ரியலிஸமோ, மறுவாசிப்பு உத்திகளோ - அவை இன்னவென்று அறிந்திராத காலத்தில் புதுமைப்பித்தன் தன்னுடைய கதைகளில் அவற்றைப் பிரயோகித்துப் பார்த்திருக்கிறார். இதையே அவரில் குறையாகக் காணும் விமர்சனமும் வந்துள்ளது. ஆனால் மேற்படி உத்திகள் செல்வாக்குப் பெற்றுள்ள இக்காலகட்டத்தில், எளிய வாசகனிடத்தில் அவர் இன்னும் ஒரு பிரமிப்பை உருவாக்கிவிடுகிறார். எனினும் புதுமைப்பித்தன் கதைகளின் சிறப்பம்சம் எதுவென விவாதிக்கையில், இந்த வடிவ உத்திகளை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு பிரதானமாக நிற்பவை உள்ளடக்கமும் சமூக விமர்சனமும்தான்.

மனிதப் போலிகளையும், ஜாதி, மதக் கூடாரங்களையும், நிறுவனமயமாக்கலையும், நகர வாழ்வின் அவலங்களையும் அவர்போல் எள்ளிநகையாடியவர் எவருமில்லை என்பது போலவே, அவரளவு விமர்சனத்துக்குள்ளான படைப்பாளியுமில்லை. தான் அறிந்த வாழ்க்கைப் பின்னணியிலிருந்து கதைகள் எழுதியதற்காக சைவ வெள்ளாள சாதி அபிமானமுள்ளவராக விமர்சிக்கப்பட்டார். அவருடைய சுயசாதி விமர்சனத்துக்கு அவர் உருவாக்கிய டாக்டர் விசுவநாத பிள்ளை (நாசகாரக் கும்பல்) பாத்திரமே மிகப் பெரிய சான்று. பிள்ளை மாருன்னா என்ன கொம்பு மொளச்சிருக்கா? பிரிட்டிஸ் ராச்சியமா என்ன? என்று மருதப்பர் பாத்திரத்தைக் கேட்க வைத்தவர் அவர். சாதி அடக்குமுறையிலிருந்து தப்பிப்பதற்காக இஸ்லாம் மதத்திற்கு மாறும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் முடிவைத் தன்னுடைய கதையின் முடிப்பாகவும் அமைத்துக் காட்டியவர் புதுமைப்பித்தன்.

நிறைவேறாத ஆசை

‘ஒருநாள் கழிந்தது’ புதுமைப்பித்தனின் சுயவிமர்சனத் தன்மையிலான கதை. அதில் வரும் முருகதாசர் என்னும் எழுத்தாளனுக்குள் எழுத்தையே நம்பி வாழும் எண்ணற்ற எழுத்தாளர்களை அடையாளம் காணலாம். முருகதாசர் அந்தக் கதையில் தனது ‘நாவல் எழுதும்’ஆவலை அடிக்கடி வெளிப்படுத்துவார். பித்தனின் நிறைவுறாத நாவல் ஆசையைத் தெரிவிக்கும் உத்தியாகவும் இதைக் கருத வாய்ப்பிருக்கிறது. மேலும் 32 பக்கங்கள் மட்டுமே எழுதி அவர் விட்டுவைத்த ‘அன்னை இட்ட தீ’ நாவலும், அவருடைய குறுநாவல் தன்மையிலான பல கதைகளும், முயன்றிருந்தால் சிறந்த நாவலாசிரியராகவும் அவரால் விளங்கியிருக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. 1942-ம் ஆண்டில் நடந்த ஆகஸ்ட் புரட்சி வரைக்குமான நாடு தழுவிய அரசியலின் பின்னணியில், நான்கு பாகங்கள் கொண்ட ஒரு நாவலை எழுத அவர் திட்டமிட்டிருந்ததாகவும் அறிகிறோம்.

தாம்பத்ய வாழ்வின் அச்சாணி

பலரும் அபிப்ராயப்படுவது போல ‘செல்லம்மாள்’ கதைதான் புதுமைப்பித்தனின் ‘மாஸ்டர் பீஸ்’ என்று நானும் கருதுகிறேன். செல்லம்மாளை வாசிக்க நேர்ந்த தருணங்களில் கண்களைக் கண்ணீர் நனைக்காமல் இருந்ததில்லை. அதைக் காதல் கதை என்று சிலர் மதிப்பிடுகின்றனர். ஆனால் இன்றைக்குப் பிடி தளர்ந்துகொண்டிருக்கும் தாம்பத்ய வாழ்வின் அச்சாணியாக பிரம்மநாயகம் பிள்ளை - செல்லம்மாள் தம்பதியினரை என்னால் காண முடிகிறது. மொழிநடையும், தங்கு தடையற்ற சித்தரிப்பு முறையும் ‘செல்லம்மாள்’ கதையை இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நவீன அடையாளத்து டனேயே வைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

புதுமைப்பித்தனின் விமர்சன முகம்

புதுமைப்பித்தன் கலை இலக்கியத்தின் சகல துறைகளிலும் கால் பதித்தவர். கவிதைகள் எழுதியபோது வேளூர் வெ.கந்தசாமிப் பிள்ளையாக அவதாரமெடுக்கிறார். விமர்சகர் விருத்தாசலமாக மாறும்போது இந்தச் சௌந்தர்ய உணர்ச்சியற்ற பாழ்வெளி எப்பொழுதும் இம்மாதிரி ஒன்றுமற்றதாகவே போய்விடாது என்று நம்பிக்கை தெரிவிக்கிறார். ‘பக்த குசேலா’, ‘சார் நிச்சயமா நாளைக்கு’போன்ற நாடக ஆக்கங்களைத் தன்னுடைய சிறுகதைகளின் சாயலில் உருவாக்கினார். ‘தி ஹிஸ்டாரிக்கல் ரோல் ஆஃப் இஸ்லாம்’ என்னும் எம்.என்.ராய் புத்தகத்திற்கு மதிப்புரை எழுதும்போது, ‘ஹிந்து நாகரிகப் பண்புகளை உணர்ந்து அனுபவிக்க அதன் தற்போதைய பிரதிநிதிகளை மறந்தால்தான் இயலும். அதைப் போல முஸ்லிம் நாகரிகத்தை ரசிக்க வேண்டுமெனில் அதன் தீவிரக் குரல்களை மறந்தால் தான் சாத்தியம்’ என தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடுகிறார்.

42 ஆண்டுகளே வாழ்ந்த ஒரு உன்னதமான எழுத்துக் கலைஞன் புதுமைப்பித்தன். கலைஞன் தான் வாழ்ந்த காலத்தைப் படைப்புகளில் பிரதிபலிப்பவன் என்பதற்கு மிகச் சரியான உதாரணங்கள் அவருடைய கதைகள். ஆனால் காலத்தையே விஞ்சி நிற்க புதுமைப்பித்தன் போன்ற ஒருசில மேதைகளால் மட்டுமே இயலும்.

கீரனூர் ஜாகிர்ராஜா
கட்டுரையாளர், எழுத்தாளர்,
‘துருக்கித் தொப்பி’நாவலின் ஆசிரியர்.
தொடர்புக்கு:
keeranur1@gmail.com

படப்பிடிப்பில் கலந்துகொள்ளாமல் முரண்டு பிடித்த ஹீரோயின் காலில் விழுந்து தனது யாத்ரா படத்தை முடித்தாராம் இயக்குனர் எம்.கே.முருகன்.

நடிகையின் காலில் விழுந்த இயக்குநர்

ஸ்ரீசாய் லக்ஷ்மி பிக்சர்ஸ் சார்பில் எம்.கே.முருகன் தயாரித்து, இயக்கியிருக்கும் திரைப்படம் யாத்ரா. புதுமுகங்கள் அர்ஜுன், யோகேஷ், மாயா உள்ளிட்டோர் இப்படத்தில் நடித்துள்ளனர்.

காமெடி கலந்த திகில் படமாக உருவாகியுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு, கோவை, பொள்ளாச்சி, நாமக்கல் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது. படப்பிடிப்பு முடிந்து தற்போது இறுதிக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இப்படத்தின் இயக்குனர் எம்.கே.முருகன் ஒன்இந்தியாவிடம் படம் குறித்த சில முக்கிய தகவல்களை பகிர்ந்துகொண்டார். அவர் கூறியதாவது,

சினிமா துறையில் நான் கடந்த 9 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். உதவி இயக்குனர், உதவி ஒளிப்பதிவாளர், புரோடக்ஷன் மேனேஜர் என எல்லா வேலைகளையும் செய்துள்ளேன்.

அந்த அனுபவத்தின் அடிப்படையில் தான் இந்த படத்தை தயாரித்து இயக்கியுள்ளேன். தன்னை கொன்றவர்களை பழிவாங்கும் பெண்ணின் ஆவி தான் படத்தின் மையக்கரு. இது வழக்கமான பேய் கதை தான் என்றாலும், மிகவும் ஜாலியாகவும், சுவாரஸ்யமாகவும் எடுத்துள்ளோம். பேய் பழிவாங்கும் காட்சிகள் மிகவும் வித்தியாசமாக இருக்கும். படப்பிடிப்பின் போது பல இன்னல்களை நாங்கள் சந்தித்தோம். படக்குழுவில் யாருக்காவது ஏதாவது ஒன்று நடந்துகொண்டே இருந்தது. மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ந்து படப்பிடிப்பு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த படத்தின் ஹீரோயின் மாயா பல பிரச்சினைகளை கொடுத்துவிட்டார். ஒரு நாள் நாமக்கல்லில் படப்பிடிப்பு நடத்திக்கொண்டிருந்தபோது, திடீரென பெட்டியை தூக்கிக்கொண்டு வீட்டுக்கு போவதாகக் கூறிவிட்டு கிளம்பி சென்றுவிட்டார். எவ்வளவு கெஞ்சியும் அவர் படப்பிடிப்பில் கலந்துகொள்ளாமல் பிரச்சினை செய்தார். ஒருவழியாக அவரது காலில் விழுந்து கெஞ்சி கூத்தாடி அவரை நடிக்க வைத்தேன். போதும் போதும் என்றாகிவிட்டது. இப்போது கூட பட புரொமோஷன்களுக்கு வராமல் பிரச்சினை செய்கிறார். பெரும்பான்மை படத்தொப்பு முடிந்து டப்பிங் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு முதல் மாதத்தில் யாத்ரா திரைக்கு வரும், என நம்பிக்கையுடன் கூறினார் அவர்.

'அர்ஜுன் ரெட்டி' படத்தின் இந்தி ரீமேக்கில், கியாரா அத்வானி ஹீரோயினாக நடிக்கிறார்.

சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் கடந்த வருடம் வெளியான தெலுங்குப் படம் 'அர்ஜுன் ரெட்டி'. ஹீரோவாக விஜய் தேவரகொண்டாவும், ஹீரோயினாக ஷாலினி பாண்டேவும் நடித்துள்ளனர். கடந்த வருடத்தின் மிகப்பெரிய பிளாக் பஸ்டர் ஹிட்டாக அமைந்தது இந்தப் படம். 5 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம், 50 கோடி ரூபாயை வசூலித்தது.

தெலுங்கு ரசிகர்களைத் தாண்டி மற்ற மொழி ரசிகர்களையும் இந்தப் படம் ஈர்த்ததால், பிற மொழிகளிலும் இதை ரீமேக் செய்து வருகின்றனர். சந்தீப் ரெட்டியே இந்தியில் ரீமேக் செய்யப் போகிறார். முரட் கெதானி மற்றும் அஸ்வின் வர்தே இருவரும் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கின்றனர்.

இந்தியில், ஹீரோவாக ஷாகித் கபூர் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக கியாரா அத்வானி நடிக்கிறார். 'எம்.எஸ்.தோனி' படத்தில், அவருடைய மனைவி சாக்ஷி கதாபாத்திரத்தில் நடித்த கியாரா, 'பரத் அனே நேனு' படத்தில் மகேஷ் பாபு ஜோடியாக நடித்துள்ளார்.

தமிழிலும் 'அர்ஜுன் ரெட்டி' படம் 'வர்மா' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. பாலா இயக்கியுள்ள இந்தப் படத்தில், துருவ் விக்ரம், மேகா, ஈஸ்வரி ராவ் ஆகியோர் நடித்துள்ளனர்.

மகிழ்ச்சியில் நந்திதாதாஸ்

நந்திதாதாஸ் இயக்கத்தில் நவாஸுதீன் சித்திக் நடித்த 'மன்ட்டோ' திரைப்படம், ரசிகர்கள், விமர்சகர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்தியா கண்ட மகத்தான எழுத்தாளர்களில் ஒருவரான மன்ட்டோ படைத்த பாத்திரங்களை இதுவரை அவருடைய எழுத்து வழியே தரிசித்தவர்கள் இந்தப் படத்தில் மன்ட்டோவையே ஒரு பாத்திரமாகத் திரையில் பார்க்கும்போது நெகிழ்ந்துபோகிறார்கள்.

'மரண வெயிட்டிங்'

மரண வெயிட்டிங்கில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார் விஜய் தேவரகொண்டா.

'அர்ஜுன் ரெட்டி' மற்றும் 'கீதா கோவிந்தம்' தெலுங்குப் படங்களின் மூலம் புகழ் பெற்றவர் விஜய் தேவரகொண்டா. இவர் தமிழில் அறிமுகமாகும் படம் 'நோட்டா'. 'அரிமா நம்பி', 'இருமுகன்' படங்களை இயக்கிய ஆனந்த் சங்கர், இந்தப் படத்தை இயக்கியுள்ளார். இதன் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய விஜய் தேவரகொண்டா, முதல் பத்திரிகையாளர் சந்திப்பின்போது மற்றவர்கள் பேசுவது எதுவும் புரியாத நிலையில், அதைக் கவனிக்காமல், 'எண்ணித் துணிக கருமம்' என்ற திருக்குறளை திரும்பத் திரும்ப மனப்பாடம் பண்ணிக்கொண்டு இருந்தேன். ஆனால், இப்போது தமிழில் நானே திருக்குறள் ஒப்பிக்கும் அளவுக்கு வந்துவிட்டேன். இயக்குநர் ஆனந்த் சங்கருடன் பணியாற்றியது ரொம்ப ஈஸியாக இருந்தது.

இந்தப் படம் குறித்து ட்விட்டரில் அடிக்கடி 'மரண வெயிட்டிங்' என கமெண்ட் போடப்பட்டு இருந்தது. அதேபோல் நானும் இந்தப் படத்திற்காக மரண வெயிட்டிங். இந்தப் படத்தின் மூலம் தமிழ் மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதுதான் என் ஆசை என்றார்.

மணிவண்ணனை போல் புதிய பாணி

மணிவண்ணனைப் போல புதிய பாணியை அரசியல் படத்தில் இயக்குநர் புகுத்தியிருக்கிறார் என சத்யராஜ் கூறியுள்ளார்.

ஆனந்த் சங்கர் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'நோட்டா'. தமிழ், தெலுங்கில் உருவாகியுள்ள இந்தப் படத்தில், ஹீரோவாக விஜய் தேவரகொண்டா நடித்துள்ளார். மெஹ்ரீன் ஹீரோயினாக நடித்துள்ள இந்தப் படத்தில், 'பிக் பாஸ்' யாஷிகா ஆனந்த், சத்யராஜ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய சத்யராஜ், நடப்பு அரசியலை அதிரடியாகப் படமாக எடுக்கும் தைரியம் இயக்குநர் மணிவண்ணனுக்கு மட்டுமே இருந்தது. 'அமைதிப்படை', 'கோ' என அரசியல் படங்களில் புதிய பாணியைப் புகுத்தியது போல, இந்தப் படத்திலும் புகுத்தியிருக்கிறார் இயக்குநர் ஆனந்த் சங்கர்.

எனக்குப் பொதுவாகவே வேறு மொழியில் பேசி நடிப்பதுதான் கொஞ்சம் கஷ்டமான விஷயம்.'நண்பன்' படத்தின் தெலுங்கு வெர்ஷனுக்காக, தெலுங்கைத் தமிழில் எழுதி வைத்துக்கொண்டு ஈஸியாகப் பேசிவிடலாம் என நினைத்தேன். ஆனால், ஒருநாள் முழுவதும் முயன்றும் என்னால் ஒரிஜினல் தெலுங்கில் பேசவே முடியவில்லை.

ஆனால், இந்தப் படத்தின் ஹீரோ விஜய் தேவரகொண்டாவோ, அழகான தமிழ் உச்சரிப்புடன் வசனங்களைப் பேசியதுடன், நான்கு பக்க வசனங்களை ஞாபகமாக வைத்துப் பேசுவது கண்டும் பிரமித்துப் போனேன். நீண்ட நாட்களாகவே எந்த மேக்கப்பும் இல்லாமல் இயல்பான கெட்டப்பில் நடிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. அந்த ஆசையை இதில் நிறைவேற்றி வைத்துவிட்டார் ஆனந்த் சங்கர் என்றார்.

பா…

மணிரத்ன… இணையும் 14-… வானம்'. அவ… பயணத்தையும… பகிர்ந்துகொள்… 'உலகம் மு…

சீன ந… ஜோ… கீர்த்தி…

சீன நடிகர் ஒருவருக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இயக்குநர் பிரியதர்ஷனின் கனவுப் படம் 'மரக்கார்: அரபிக்கடலிண்டே சி… டில் கேரளாவில்… தலைவனான குஞ்… வாழ்க்கை வரலா… பிரிட்டிஷ்காரர்க… வர் இவர்.

குஞ்சலி மரக்க… லால் நடிக்கிறார்… கதாபாத்திரத்தில், … பிரணவ் மோகன்… யக் கதாபாத்திரத்… 'சிறைச்சாலை' பட… டங்கள் கழித்து … வரும் இந்தப் பட… நடிக்கின்றனர்.

இந்தப் படத்தி… ரத்தில் கீர்த்தி சுரே… கோழி 2', 'சர்க… பிஸியாக இருக்கு… யாளத்தில் தன்னை… பிரியதர்ஷன் என்ப… மறுக்காமல் ஒப்பு… தப் படத்தில் அவ… ஜோடியாக நடிப்ப…

மலையாள சி… இல்லாத அளவுக்… டில் இந்தப் படம்…

சன் பிக்சர்ஸுக்கு கைகொடுக்குமா 'சர்கார்'

விஜய் நடித்துள்ள 'சர்கார்' படம், சன் பிக்சர்ஸுக்கு கைகொடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

திமுக ஆட்சியில் இருந்தபோது, கடந்த 2008-ம் ஆண்டு கலாநிதி மாறனால் தொடங்கப்பட்ட நிறுவனம் சன் பிக்சர்ஸ். நகுல், சுனைனா நடிப்பில் வெளியான 'காதலில் விழுந்தேன்' படத்தின் மூலம் விநியோகத்தைத் தொடங்கிய சன் பிக்சர்ஸ், ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி தியேட்டர்களை வளைத்துப்போட்டு, பெரும்பாலான பெரிய படங்களை வாங்கி ரிலீஸ் செய்தது.

திமுக ஆட்சியில் இருந்த 2008 முதல் 2011-ம் ஆண்டு வரை ஏகப்பட்டப் படங்களை வாங்கி ரிலீஸ் செய்தது 'சன் பிக்சர்ஸ்'. ஆனால், ரஜினி நடிப்பில், ஷங்கர் இயக்கிய 'எந்திரன்' என்ற ஒரே ஒரு படத்தை மட்டும்தான் சொந்தமாகத் தயாரித்தது.

அதிமுக ஆட்சிக்கு வந்தபிறகு, சன் பிக்சர்ஸ் அமைதியானது. வருடத்துக்கு ஒரு படத்தைக்கூட வாங்கி, வெளியிடவில்லை. இந்நிலையில், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு மறுபடியும் சன் பிக்சர்ஸ் புத்துயிர் பெற ஆரம்பித்துள்ளது.

விஜய் நடிப்பில் 'சர்கார்', ரஜினி நடிப்பில் 'பேட்ட', ராகவா லாரன்ஸ் நடிப்பில் 'காஞ்சனா 3'ஆகிய படங்களை ஒரே நேரத்தில் தயாரித்து வருகிறது சன் பிக்சர்ஸ். அத்துடன், அடுத்த வருடம் (2019) முதல், மாதத்துக்கு ஒரு படத்தை வாங்கி வெளியிடவும் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சன் பிக்சர்ஸ் தயாரித்துவரும் 3 படங்களில், முதலில் வெளியாக இருப்பது 'சர்கார்'. வருகிற தீபாவளி விடுமுறைக்கு இந்தப் படம் ரிலீஸாக இருக்கிறது. சன் பிக்சர்ஸைப் பொறுத்தவரை, இது கிட்டத்தட்ட ரீஎன்ட்ரி மாதிரி. பழைய மாதிரி அசுர பலத்துடன் களமிறங்கும் வேலைகளில் இறங்கியுள்ளது. எனவே, சன் பிக்சர்ஸுக்கு கைகொடுக்குமா 'சர்கா'? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கியுள்ள 'சர்கார்' படத்தில், விஜய் - கீர்த்தி சுரேஷ் ஜோடியாக நடித்துள்ளனர். முக்கியக் கதாபாத்திரங்களில் வரலட்சுமி சரத்குமார், யோகிபாபு, ராதாரவி, பழ.கருப்பையா ஆகியோர் நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ள இந்தப் படத்தின் இசை வெளியீடு, வருகிற அக்டோபர் 2-ம் தேதி நடைபெற இருக்கிறது.

'திமிரு புடிச்சவன்' படத்தை வாங்கிய சன் டிவி

விஜய் ஆண்டனி நடித்துள்ள 'திமிரு புடிச்சவன்' படத்தை சன் டிவி வாங்கியுள்ளது.

எஸ்.எஸ்.ராஜமௌலியிடம் உதவியாளராகப் பணியாற்றியவர் கணேஷா. ஸ்ரீகாந்த், சுனைனா நடித்த 'நம்பியார்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். தற்போது விஜய் ஆண்டனியை வைத்து 'திமிரு புடிச்சவன்' என்ற படத்தை இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில், போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார் விஜய் ஆண்டனி. அவர் போலீஸாக நடிக்கும் முதல் படம் இது. இதில் நிவேதா பெத்துராஜும் போலீஸாக நடித்துள்ளார். விஜய் ஆண்டனி ஃபிலிம் கார்ப்பரேஷன் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

இந்தப் படத்தில் இடம்பெறும் ஆக்ஷன் காட்சிகளுக்காக, சிலம்பம் கற்றுக்கொண்டு நடித்திருக்கிறார் விஜய் ஆண்டனி. மோட்டார் சைக்கிள் ஓட்டும் காட்சிகள் இருப்பதால், நிவேதா பெத்துராஜுக்கும் பயிற்சி கொடுத்த பின் படமாக்கியுள்ளனர்.

மார்ச் மாதம் தொடங்கிய இதன் படப்பிடிப்பு முடிவடைந்து, போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இந்தப் படத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை சன் டிவி வாங்கியுள்ளது.

மேற்கத்திய பாடகியாகும் ஆண்ட்ரியா

நடிகை ஸ்ருதிஹாசன் இசைக்குழு நடத்தி வருகிறார். நடிப்பிலிருந்து ஒதுங்கியிருக்கும் அவர் இசையில் கவனம் செலுத்தி வருகிறார். சமீபத்தில் லண்டனில் நடந்த இசை நிகழ்ச்சியில் மேடையில் பாப் இசை பாடல் பாடி பரபரப்பை ஏற்படுத்தினார். சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளில் இது போன்ற இசை நிகழ்ச்சிகள் நடத்தி பாப் பாடகியாக புகழ் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் தற்போது தீவிரமாக உள்ளார்.



அந்த வரிசையில் இணைந்திருக்கிறார் நடிகை ஆண்ட்ரியா. திரைப்படங்களில் நடிப்பதுடன் இசை அமைத்து பாடல்கள் பாடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார் ஆண்ட்ரியா. சமீபத்தில் அவரே எழுதி பாடிய 'ஹானஸ்ட்லி' என்ற ஆங்கில பாடலை இணைய தளத்தில் வெளியிட்டார். அது அவருக்கு வரவேற்பை பெற்றுத்தந்திருக்கிறது.

கீர்த்தியை கூல் செய்த விஷால்

விஷால், கீர்த்தி சுரேஷ் நடிக்கும் படம் 'சண்டகோழி 2'. லிங்குசாமி இயக்குகிறார். யுவன் சங்கர்ராஜா இசை அமைக்கிறார். இதில் நடித்ததுபற்றி கீர்த்தி சுரேஷ் கூறும்போது, 'இப் படம் மூலம் எனக்கு நல்ல நண்பராக விஷால் கிடைத்திருக்கிறார். சாவித்ரி வாழ்க்கை சரித்திர படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோதுதான் இப் படத்திலும் நான் நடித்து வந்தேன். அந்த படத்தில் சோகம், ஆக்ரோஷம் என பலவிதமான காட்சிகளில் நடித்து டென்ஷனாக இருப்பேன்.

இதற்கிடையில் சண்டகோழி 2ம் பாகம் படப்பிடிப்புக்கு வரும்போது ரொம்பவும் ஜாலியான சூழல் நிலவும். விஷால், லிங்குசாமி எல்லோருமே படக்குழுவை உற்சாகப்படுத்தி ஷூட்டிங் நடத்திச் செல்வார்கள். இதனால் சாவித்ரி படத்தில் நடித்தபோது ஏற்பட்ட டென்ஷன் இதில் குறைந்து ரிலாக்ஸ் ஆகிவிடுவேன்' என்றார். விஷால் கூறும்போது,'சண்டகோழி 2ம் பாகம், முதல் பாகத்தைவிட இன்னும் நன்றாக வந்திருக்கிறது.

சுந்தர்.சி.யின்…

வி.இசட் துரை இயக்கத்தி…

பு… த…

'க… லும்' ப… வுட் பட… கூறியத…

பாராட்டுவார்கள். அடிக்கடி நானு… பது எனக்கு பழக்கமாக இருந்து… கதாபாத்திரத்துக்காக எனது தலை… என்று இயக்குனர் கூறினார். சரி… செய்துகொண்டபிறகு எனது தோற… து. எனது கூந்தலை நானே மிஸ்… என் அம்மா, தங்கை ஏற்றுக்கொ… முடியவில்லை. 'நீ விக் வைத்திரு… செய்துவிட்டாயா? என்றார். நிஜ… முகம் வாடிவிட்டது. பிறகு என்ன… யின் புது ஹேர் ஸ்டைல் நன்றாக… பிடிக்க ஆரம்பித்துவிட்டது. பாட்… ரெடியாவதற்கு சற்று தாமதம் ஆகி… றேன். அதில் மற்றொரு படத்தில்… அதற்காக நான் மேக் அப் அணிவ… வேலையை சிகை அலங்கார நிபுண… ரமமாகவே உள்ளது. குறைந்த வே… கை அலங்கார நிபுணருக்கு ஒவ்வெ… கிறேன். இவ்வாறு யாமிகவுதம் க…

டல்களை கையாள்வதில் வல்லவர் மணிரத்னம்

த்துடன் ஏ.ஆர்.ரஹ்மான் வது படம் 'செக்கச் சிவந்த ருடனான 26 ஆண்டுகள் , அதன் அனுபவத்தையும் கிறார் ரஹ்மான்.

ழுவதும் குறிப்பிட்ட சில

இயக்குநர்கள், தொடர்ந்து குறிப்பிட்ட இசையமைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள். 80-களில் இருந்த ஜான் வில்லியம்ஸ் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் குடன் தொடர்ந்து பல வருடங்கள், ஏராள மான படங்களில் பணியாற்றினார். இத் தகைய இணைப்புக்கு எங்களிடையே உள்ள பரஸ்பர மரியாதைதான் காரணம்' என்கிறார் தனக்கே உரித்தான சிரிப்புடன்.

'நாயகன்' நாட்கள்

'செக்கச் சிவந்த வானம்' இசை வெளி யீட்டு விழாவில் பேசிய ரஹ்மான், 'நாய கன்' நாட்களுகே மணிரத்னம் சென்றுவிட் டார் என்றார். அதுகுறித்துப் பேசியவர், 'கடந்த காலங்களில் அவர் மேற்கொண்ட படங்களில் இருந்து இந்தப் படம் முற்றி லும் வித்தியாசப்பட்டிருக்கும்.

அவரின் படைப்பு ஆக்கத்தையும், எழுச்சியையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவருக்கு எவ்வளவு உறு துணையாக இருக்க முடியுமோ அதை இசை வழியாக அளித்திருக்கிறேன்.

படத்தின் கதை பற்றியோ, மற்ற தக வல்களையோ என்னால் கூற முடியாது. அதே நேரம் ஒன்றை மட்டும் என்னால் பகிர முடியும். படத்தின் ட்ரெய்லரைப் பார்த்தவுடன் சமகாலத்திய வகையில் இரண்டு கூடுதல் பாடல்களுக்கு இசை அமைத்துவிட்டேன்.

மணி சார் கோவாவில் உள்ள ரிசார்ட் டுக்குத் திடீரென என்னை அழைத்துச் சென்றார். அங்கே இணையத் தொடர்பு அறவே இல்லை. கடல் மட்டுமே எங்க ளுடன் தொடர்பில் இருந்தது. அது அத் தனை அழகாய் இருந்தது.

ரிசார்ட்டில் பிறந்த 'மழை குருவி' பாடல்

இரண்டு நாட்களுக்குள் 10 வித இசைக் கோர்வையை உருவாக்கி, மணி சாரிடம் காண்பித்தேன். இதில் பிடித் ததை எடுத்துக் கொள்ளச் சொன்னேன். அதில் ஒன்றுதான் 'மழை குருவி'.

அதற்கு வைரமுத்துவின் கவிதையில் ஒன்று பொருத்தமாக இருக்கும் என்று மணி சார் நினைத்தார். அதை வித்தி யாசமாகப் பயன்படுத்தினார். சொல்லப் போனால் படத்தில் அவர் பாடல்களைப் பயன்படுத்தும் விதம் என்னைக் கவர்ந்த விஷயங்களில் ஒன்று.

ஒரே பாணி இசையைக் கேட்கும் இயக்குநர்கள்

சில இயக்குநர்கள் என்னிடமிருந்து புதியவற்றை எதிர்பார்க்கிறார்கள். மற்ற வர்கள் ஏற்கெனவே முயற்சித்த பாணி இசையையே கேட்கிறார்கள். ஒரு பாடல் சூப்பர்ஹிட் ஆகும்போது அதே பாணி யில் இசையமைக்கச் சொல்கின்றனர். ஆனால் நான் அதைச் செய்வதில்லை'' என்கிறார்.

தன்னுடைய சில பாடல்களுக்குக் கலவையான விமர்சனங்கள் எழுவது குறித்து ரஹ்மானுக்குத் தெரிந்திருக்கிறது. அதுகுறித்தும் பேசுபவர், ''எப்போதும் நாங்கள்(இயக்குநர், இசையமைப்பாளர், நடிகர், கொரியோகிராபர்) எங்களையே சுயபரிசோதனை செய்துகொள்கிறோம்.

சில நேரங்களில் கலவையான விமர் சனங்கள் கிடைக்கின்றன. அனுபவத்தின் காரணமாக பெரும்பாலான நேரங்களில் இசை பாராட்டப்படுமா, விமர்சிக்கப் படுமா என்பதைக் கணித்துவிடுவேன். சில நேரங்களில் எதிர்பாராததும் நடந்து விடும்'' என்று சிரிக்கிறார் ரஹ்மான்.

மணிரத்னத்துடனான நட்பு, சந் திப்பு குறித்தும் பேசியவர், 'இருவருமே பிஸியாக இருப்போம் என்பதால் வேலை தவிர்த்து அதிகம் சந்தித்துக் கொண்டதில் லை. ஆனால் எப்போதாவது என் மனை வியும் ஹாசினி மேடமும் பேசிக் கொள் வார்கள்' என்கிறார்.

தெலுங்கு சினிமாவில் இசையமைப் பது குறித்துத் தன்னுடைய எண்ணங்க ளைப் பகிர்ந்துகொண்ட அவர், 'ஏராள மான விஷயங்கள் இதில் இருக்கின்றன. தனித்துவமான கதை வரும்போது தெலுங்கு சினிமாவில் வேலை பார்க்கத் தயாராக இருக்கிறேன். தெலுங்கு ஓர் இனிமையான மொழி. அங்கே கே.விஸ் வநாத், ராகவேந்திர ராவ் மற்றும் ராஜ மௌலியின் தனித்துவத்தைக் கண்டு வியந்திருக்கிறேன்.

அதே நேரம் டப்பிங் படங்களில் வேலை பார்க்கும்போது, ஒரிஜினல் படங் களுக்கு அளிக்கும் உழைப்பை அதற்கும் கொடுக்கிறேன்' என்று புன்னகைக்கிறார் ரஹ்மான்.

டிகருக்கு டியாக சுரேஷ்

ம்ஹம்'. 16-ம் நூற்றாண் வாழ்ந்த கடற்படைத் சலி மரக்கார் என்பவரின் றுதான் இந்தப் படம். ளத் தீவிரமாக எதிர்த்த

ார் வேடத்தில், மோகன் அவருடைய இளம் வயது மோகன்லாலின் மகன் லால் நடிக்கிறார். முக்கி தில் பிரபு நடிக்கிறார். த்துக்குப் பிறகு 22 வரு மாகன்லால் - பிரபு இரு த்தின் மூலம் இணைந்து

ல், முக்கியக் கதாபாத்தி ஷ் நடிக்கிறார். 'சண்டக் ர்' ஆகிய படங்களில் ம் கீர்த்தி சுரேஷ், மலை ன அறிமுகப்படுத்தியவர் தால், அவர் கேட்டதும் க் கொண்டுள்ளார். இந் ர் சீன நடிகர் ஒருவருக்கு தாகக் கூறப்படுகிறது. னிமாவிலேயே இதுவரை து மிகப்பெரிய பட்ஜெட் தயாராக இருக்கிறது.

விஷ்ணுவை புகழும் அமலா பால்

ராட்சசன் படத்தில் நடித்திருப்பது குறித்து அமலாபால் பேசும் போது, 'ஹாலிவுட் படங்களுக்கு நிகராக நம் ஊரில் தயாராகியுள்ள இப்படம் எனக்கு முக்கி யமான படம். முதலில் இப்படத்தின் கதையை இயக்குநர் சொன்னபோது சரியாக புரியவில்லை. பிறகு விஷ்ணுவிடம் தொடர்ந்து பேசியபோது, அவர் கதைக்களத்தைப் பற்றிச் சொன்னவிதம் வித்தியாசமாக இருந்தது. எனக்கு மட்டுமல்ல விஷ்ணுவுக்கும் இது மிக முக்கியமான படமாக இருக்கும். 'ராட்சசன்' படத்துக்குப் பிறகு விஷ் ணுவுக்கு இன்னும் புகழ் கூடிவிடும்' என்றார்.

'பரியேறும் பெருமாள்' தமிழ் சினிமாவில் ஒரு மைல் கல்

'பரியேறும் பெருமாள்' தமிழ் சினிமாவில் ஒரு மைல் கல்.

தமிழ் சினிமாவில் நிகழ்ந்துள்ள ஓர் அற்புதம் என்று எழுத்தாளர் சாரு நிவே திதா கூறியுள்ளார்.

கதிர் - ஆனந்தி ஜோடியாக நடித் துள்ள இந்தப் படத்தில், யோகி பாபு முக்கியக் கதாபாத்திரத்தில் நடித் துள்ளார். இயக்குநர் பா.இரஞ்சித்தின் நீலம் புரொடக்ஷன்ஸ் இந்தப் படத் தைத் தயாரித்துள்ளது.

திருநெல்வேலி சுற்று வட்டாரப் பகு தியை சார்ந்த ஒரு கிராமத்து இளைஞ னின் வாழ்வில் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்களை அடிப்படையாக கொண்டு இக்கதை உருவாக்கப்பட்டுள்ளது.

பரியேறும் பெருமாள் படம் நாளை ரிலீஸாக உள்ள நிலையில், பல்வேறு பிரபலங்களுக்காக படத்தின் சிறப்புக் காட்சி திரையிடப்பட்டது. இந்நிலையில் இப்படம் குறித்து எழுத்தாளர் சாரு நிவேதிதா முகநூலில் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

'பரியேறும் பெருமாள் தமிழ் சினிமாவில் ஒரு மைல் கல். தமிழ் சினிமா வில் நிகழ்ந்துள்ள ஓர் அற்புதம். சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் கதை சொல்லும் முதல் தமிழ்ப் படம். தலித் அழகியலை முன்வைக்கும் முதல் படமும் கூட. ஆனால் பிரச்சாரம் இல்லை. கலைப் படம் என்ற பாவனை இல்லை. ஒரு நொடி கூட அலுப்புத் தட்டவில்லை. ஒரு அற்புதமான உலகத் தரமான படம் பார்த்த திருப்தியைத் தந்தது பரியேறும் பெருமாள். இயக்குனர் மாரி செல்வராராஜ். உனக்கு என் அன்பான முத்தங்கள்' என்று சாரு நிவேதிதா தெரிவித்துள்ளார்.

புதிய படத்தின் முதல் பார்வை வெளியீடு

விஜிசட் துரை இயக்கத்தில் சுந்தர்.சி. ஹீரோவாக நடிக் கும் படம் படத்துக்கு இருட்டு என தலைப்பு வைக்கப்பட் டுள்ளது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டது.

'முகவரி', 'தொட்டி ஜெயா', 'நேபாளி', '6 மெழுகுவர்த் திகள்' உள்ளிட்ட படங்களை இயக்கியவர் வி.இசட். துரை. இவருடைய '6 மெழுகுவர்த்திகள்' படத்துக்கு விமர்சகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

அதற்குப் பிறகு சாம் ஜோன்ஸ், சமுத்திரக்கனி, அதுல்யா ரவி உள்ளிட்டோர் நடிப்பில் 'ஏமாலி' படத்தை இயக்கினார். ஜெயமோகன் வசனம் எழுதிய இப்படம் பிப்ரவரி 2018-ல் வெளியானது. இப்படம் போதிய வரவேற்பைப் பெறவில்லை.

இந்நிலையில் சுந்தர்.சியை கதை நாயகனாக வைத்து இருட்டு என்ற படத்தை வி.இசட் துரை இயக்குகிறார். இதில் சுந்தர்.சி போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார். திகில் படமாக உரு வாகும் எனத் தெரிகிறது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளி யிடப்பட்டது.

கிருஷ்ணசாமி ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு க்ரிஷ் இசையமைக்கிறார். இந்திரா சௌந்தர்ராஜன் வசனம் எழுது கிறார். ஸ்க்ரீன் சீன் மீட்யா என்டெர்டெயின்மென்ட் இருட்டு படத்தைத் தயாரிக்கிறது. விரைவில் கதாநாயகி குறித்த தகவல் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தெலுங்கில் ஹிட்டடித்த 'அத்தரண்டிகி தாரேதி' படத்தை தமிழில் சுந்தர்.சி ரீமேக் செய்கிறார். இதில் சிம்பு நாயகனாக நடிக்கிறார். இதைத் தொடர்ந்து விஷால்- தமன்னா நடிக்கும் பெயரிடப்படாத படத்தை இயக்க உள்ளார். இதனிடையே ல் சுந்தர்.சி நாயகனாக நடிப்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் அமெரிக்கா திரும்பிய துருவ் விக்ரம்

'வர்மா' படத்தின் டப்பிங் முடிந்துவிட்டதால், மறுபடியும் அமெரிக்காவுக்கே திரும்பிவிட்டார் துருவ் விக்ரம் எனத் தகவல் கிடைத்துள்ளது.

சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் வெளியான சூப் பர் ஹிட் தெலுங்குப் படம் 'அர்ஜுன் ரெட்டி'. கடந்த வருடம் வெளியான இந்தப் படத்தில், விஜய் தேவர கொண்டா - ஷாலினி பாண்டே ஜோடியாக நடித்தனர். 10 மடங்குக்கு மேல் லாபம் சம்பாதித்துக் கொடுத்தது இந்தப் படம்.

'அர்ஜுன் ரெட்டி' படத்தைத் தமிழில் 'வர்மா' என்ற பெயரில் ரீமேக் செய்துள்ளார் இயக்குநர் பாலா. விக்ரமின் மகன் துருவ் விக் ரம், இந்தப் படத்தின் மூலம் ஹீரோவாக சினிமாவில் அறிமுகமாகி றார். அவருக்கு ஜோடியாக மேகா என்ற மாடல் நடிக்க, முக்கியக் கதாபாத்திரத்தில் ஈஸ்வரி ராவ் நடித்துள்ளார்.

துருவ் விக்ரமுக்கு, தற்போது 22 வயதுதான் ஆகிறது. அமெ ரிக்காவில் ஃபிலிம் மேக்கிங் கோர்ஸ் படித்துவரும் துருவ், விக்ரம் கேட்டுக் கொண்டதற்காகத்தான் 'வர்மா' படத்தில் நடிக்க ஓகே செ ான்னார். அத்துடன், அவர் இன்னொரு வேண்டுகோளையும் தந்தை யிடம் வைத்திருக்கிறார். இப்போதைக்கு 'வர்மா' படத்தில் மட்டுமே நடிப்பேன், படிப்பு முடிந்த பிறகுதான் வேறு படங்களில் நடிப்பேன் என்பதுதான் அது. விக்ரமும் அதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்.

தற்போது 'வர்மா' படத்தின் படப்பிடிப்பு முடிந்து, தன்னுடைய போர்ஷனுக்கு டப்பிங்கும் பேசிவிட்டார் துருவ். எனவே, படிப்பைத் தொடர மறுபடியும் அமெரிக்கா சென்றுவிட்டார். 'வர்மா' ரிலீஸின் போது இங்குவந்து புரமோஷன் பணிகளில் ஈடுபடுவார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

து ஹேர் ஸ்டைல்; தந்தை வருத்தம்

வரவம்', 'தமிழ்ச்செல்வனும் தனியார் அஞ்ச டங்களில் நடித்திருப்பவர் யாமி கவுதம். பாலி டங்களில் தற்போது நடித்து வருகிறார். அவர் ாவது: எனது ஹேர் ஸ்டைல் பற்றி பலரும ம் தலைமுடியை தொட்டு தடவியபடி இருப் வந்தது. 'உறி' இந்தி படத்தில் ஏற்றிருக்கும் முடியை பாப் கட்டிங் செய்ய வேண்டும் ன்று சொல்லிவிட்டேன். ஆனால் கட்டிங் ற்றம் பலருக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ள செய்கிறேன். எனது புதிய ஹேர்ஸ்டைலை ண்டனர். ஆனால் என் தந்தையால் ஏற்க க்கிறாயா அல்லது நிஜமாகவே ஹேர் கட் ாகவே கட் செய்திருக்கிறேன் என்றதும் அவர் னைப்பற்றி தந்தையிடம் பேசுபவர்கள் யாமி இருப்பதாக சொல்லச் சொல்ல அவருக்கும் கட்டிங் வைத்திருப்பதால் படப்பிடிப்புக்கு கிறது. 2 படங்களில் தற்போது நடித்து வருகி நீண்ட கூந்தலுடன் நடிக்க வேண்டி உள்ளது. து கொஞ்சம் கடினமாகவே உள்ளது. இந்த ணர்தான் பார்க்கிறார். அவருக்கும் இது சி ஹர் ஸ்டைலை நீண்ட கூந்தலாக மாற்றும் சி வாருமுறையும் நான் நன்றி கூறிக்கொண்டிருக் றினார்.

தனுஷின் புதிய படம்

'வேலையில்லா பட் டதாரி-2' படத்தை தயாரித்த கலைப்புலி எஸ்.தாணு தனுஷ் நடிப்பில் மற்றுமொரு படத்தை தயாரிக்க உள்ளார். இந்த படத்தை முண்டாசுப் பட்டி படத்தை இயக்கிய ராம்குமார் இயக்க உள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளது. படப் பிடிப்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தொடங்க உள்ளது. முண்டா சுப்பட்டி படத்தை தொடர்ந்து ராம் குமார் இயக்கியுள்ள படம் ராட்சசன்.

விஷ்ணுவிஷால், அமலா

பால் முக்கிய கதாபாத் திரத்தில் நடித்துள்ள இந்த படம் அக்டோபர் 5-ஆம் தேதி வெளியா கிறது. இந்த படத்தை தொடர்ந்து தனது மூன் றாவது படமாக தனுஷ் நடிக்கும் படத்தை இயக் குகிறார் ராம்குமார். இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கபட்டுகிறது.

கோபியின் சுறுசுறுப்பு

'அறம்' படத்தைத் தொடர்ந்து ஜெய் நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார் கோபி நயினார். வடசெ ன்னையின் சில முக்கிய பகுதிகளில் இதன் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. நாயகியாக ஐஸ்வர்யா ராஜேஷும், டேனியல் போப், 'கல் லூரி' வினோத் மற்றும் அங்குள்ள சில கால் பந்தாட்ட வீரர்களும் இதில் முக்கியமான கதாபாத்திரங்க ளில் நடித்து வருகிறார்கள்.

காதோடு... காதாக...

ஒரு இளம் வாரிசு நடிகர் டப்ஸ்மாஷ் செய்து ஹீரோ வானதாக தயாரிப்பாளர் கூறியதை கேட்டு தான் கோலி வுட்காரர்கள் சிரிக்கிறார்கள். திறமையான நடிகர் ஒருவர் தனது மகனை தன் வழியில் ஹீரோவாக்கிவிட்டார். அந்த வாரிசு நடித்துள்ள படம் ரிலீஸாவதற்குள் ஒரு சர்ச்சையில் சிக்கிவிட்டார். இந்நிலையில் வாரிசு நடிகருக்கு இந்த பட வாய்ப்பு எப்படி கிடைத்தது என்பது தெரிய வந்தது. வாரிசு நடிகர் ஒரு டப்ஸ்மாஷ் செய்து வீடியோ வெளி யிட்டாராம். அந்த வீடியோவை பார்த்து தான் அவரை ஹீரோவாக்கியதாக தயாரிப்பாளர் தெரிவித்தார். சூப் பர் ஹிட் படத்தின் ரீமேக் உரிமையை வாங்கி வைத்துக் கொண்டு யாரை ஹீரோவாக போடலாம் என்று யோசி த்துக் கொண்டிருந்தபோது அந்த டப்ஸ்மாஷ் வீடியோவை பார்த்தாராம் அவர். தயாரிப்பாளர் அப்படி பெருமையாக புகழ்ந்து பேசிய டப்ஸ்மாஷில் அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை. அதை பார்த்துவிட்டு வாரிசு நடிகரை ஹீரோ வாக போட்டதாக தயாரிப்பாளர் கூறியது நம்பும்படி இல் லை. வாரிசு நடிகரை தான் நடிக்க வைத்த நினைத்தோம், படத்தை எடுத்தோம் என்று உண்மையை சொல்லாமல் எதற்காக இந்த தேவையில்லாத பொய் என்று விபரம் அறிந்தவர்கள் கலாய்க்கிறார்கள். படத்தின் டீஸரை பார்த் தவர்கள் வாரிசு நடிகரை பாராட்டினாலும் ஒரிஜினல் படத்தில் நடித்தவருடன் ஒப்பிடும்போது அந்த அளவுக்கு இல்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது. மேலும் ஹீரோ யினுடைய முகபாவனைகளும் சரி இல்லை என்று கூறப் படுகிறது. வாரிசு நடிகரை பார்க்கும்போது அவர் அப் பாவை சின்ன வயதில் பார்த்தது போன்றே இருக்கிறது. இந்த டப்ஸ்மாஷ் காமெடி ஒரு புறம் இருக்க வாரிசு நடிக ரின் அப்பா மறுபுறம் காமெடி செய்தார். முன்பெல்லாம் மீடியாகாரர்களை பார்த்தால் சிரித்துப் பேசி சகஜமாக பழ கும் அவர் தற்போது நைசாக நழுவிவிடுகிறார். நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் மீடியா அவருக்கு எதிராக திரும் பிவிட்டதாக கூறினார் பிறகு என்ன நினைத்தாரோ அப் படியே பிளேட்டை மாற்றிப் போட்டுவிட்டார்.

★★★★★

நடிகர் ஒருவர் திருமணமான நடிகையுடன் மகிழ்ச் சியாக இருந்துள்ளார். நடிகைகளை பிக்கப் செய்வதற்கு பெயர் போனவர் அந்த திருமணமான நடிகர். அவருக்குள் இருக்கும் பல திறமைகளை பார்த்து வியக்காதவர்களே இல்லை. அதே அளவுக்கு அவர் நடிகைகளுடன் சேர்ந்து அடிக்கும் லூட்டியை பார்த்தும் அசராதவர்களே இல்லை. இந்த ஆளுக்கு மட்டும் எப்படி எப்பொழுதுமே ஓர்க்அ வுட் ஆகிறது என்று தான் வியக்கிறார்கள். ஒரு நடிகையின் மீது கண் வைத்துவிட்டார் என்றால் அவரை அடையாமல் விட மாட்டார். அவரது பேக்கிரவுண்டு வேறு பெரிதாக உள்ளதால் நடிகைகளும் மடங்கி விடுகிறார்கள். இவரை அட்ஜஸ்ட் செய்தால் நம் கெரியர் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். நடிகர் திருமணமான நடிகைகளை கூட விட்டு வைப்பது இல்லை. காதல் திருமணம் செய்த நடிகையுடன் ஜோடி சேர்ந்த போதே அவருக்கும், நடிக ருக்கும் இடையே திரைக்கு பின்னால் கெமிஸ்ட்ரி கண் டமேனிக்கு ஒர்க்அவுட் ஆனது. அதன் பிறகு இருவரும் கொஞ்சம் தள்ளியே இருந்தனர். காரணம் நடிகரின் மனை வியும், அம்மணியின் ஆளும் அவர்களை கண்காணிக் கத் துவங்கினர். பிரிந்திருந்த அந்த ஜோடி அண்மையில் ஹோட்டலில் ஏதேச்சையாக சந்தித்தது. நடிகர் படப்பி டிப்புக்காக சென்ற இடத்தில் ஸ்டார் ஹோட்டலில் தங்க அங்கு வந்த நடிகை அவரை பார்க்க பழைய விஷயம் எல் லாம் நினைவுக்கு வந்துவிட்டது. நடிகரோ, நடிகையை அழைத்துக் கொண்டு தனது அறைக்கு சென்று சில, பல விஷயங்களை டிஸ்கஸ் செய்திருக்கிறார். இரவெல்லாம் இப்படி இருவரும் பல விஷயங்களை டிஸ்கஸ் செய்ததில் நடிகையின் கன்னம், உதட்டில் காயம் ஏற்பட்டது. இதை பார்த்த கணவர் கன்னத்தில் என்னடி காயம் என்று கேட்க நடிகையோ ஏதோ சொல்லி சமாளித்துவிட்டார். நடிகரின் அட்டகாசங்கள் பற்றி தெரிந்தும் அவரின் மனைவியால் எதுவும் செய்ய முடியவில்லை. வாழாவெட்டியாக சென் றால் பெற்றோர் கவலைப்படுவார்களே என்று பொறுத் துக் கொண்டிருக்கிறாராம்.

★★★★★

இளம் நடிகை ஒருவர் திருமணமான நடிகருடன் நெருங்கி உறவாட ஏங்கித் தவிக்கிறாராம். கவர்ச்சி காட் டாமலும் ரசிகர்களின் மனதில் இடம் பிடிக்கலாம் என் பதை நிரூபித்த நடிகை அவர். ஆனால் மார்க்கெட் சரியத் துவங்கியதும் கவர்ச்சிக்கு தாவி விட்டார். தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகள் தீர்ந்து தற்போது ஸ்டெடியாகி உள்ளார். அவருக்காக ஒரு ஹீரோ உருகிக் கிடக்க நடிகையோ இந்த பழம் புளித்துவிட்டது போன்று அவரை கண்டுகொள்வது இல்லை. அதனால் அவர் பாட் டிலும், கையுமாக உள்ளார். நடிகைக்கு பட படவென்று வளர்ந்து நிற்கும் ஹீரோ மீது ஒரு கண். நிகழ்ச்சி ஒன்றில் அந்த ஹீரோ நடிகையுடன் ஜாலியாக பேச அவர் மயங்கி விட்டார். அதில் இருந்து ஹீரோவை அடைய வேண் டும் என்ற முடிவோடு உள்ளார். ஹீரோவின் செல்போன் எண்ணை வாங்கி சேட்டிங் செய்தார். ஆனால் அவர் மசிய வில்லை. ஹீரோ மசியாததை அடுத்து தனது அரைகுறை புகைப்படங்களை அனுப்பி வைத்தார். அதை பார்த்து பத றிய ஹீரோ எனனம்மா இது என்று கேட்க, இல்லை தெரி யாமல் அனுப்பி விட்டேன் என்று சமாளித்திருக்கிறார் நடிகை. பின்னர் பேச்சு வாக்கில் புகைப்படங்களில் நான் எப்படி இருந்தேன் என்று நைசாக கேட்க ஹீரோவோ கடுப்பாகி என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா. நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை என்று கூறியுள்ளார். ஹீரோ வுக்கு திருமணமாகி குழந்தை இருப்பது தெரிந்தும் அவரை அடைய நினைக்கிறார் நடிகை. ஹீரோ விலகிப் போகப் போக நடிகைக்கு அவரை மிகவும் பிடித்துவிட் டது. ஒரு கட்டத்தில் வெட்கத்தை விட்டு ஹீரோவிடம் தனது ஆசையை கூறியுள்ளார். உங்களுக்கு குடும்பம் இருப்பது தெரியும். உங்களுடன் சில காலம் ஜாலியாக இருக்க விரும்புகிறேன், என்னை தொட்டால் தான் என்ன என்று வெளிப்படையாக கூற ஹீரோ அதிர்ச்சி அடைந்து விட்டார். என்ன செய்தாலும் ஹீரோ தன்னை தொட மாட் டேன் என்று அடம் பிடிக்கிறாரே என்று நடிகைக்கு ஒரு பக்கம் வருத்தம் இருந்தாலும் இந்த ஆளுடன் எப்படியா வது நெருங்கிவிட வேண்டும் என்ற வெறியும் அதிகரித் துள்ளது. இதையடுத்து ஒரு நாள் ஹீரோவின் படப்பிடிப்பு நடந்த இடத்திற்கே நடிகை சென்றுள்ளார். அங்கு ஹீரோ கேரவனுக்குள் இருந்ததை நடிகை தெரிந்து கொண்டார். கேரவனுக்குள் நுழைந்த நடிகை ஹீரோ படுத்திருந்ததை பார்த்ததும் நேராக அவர் மீது பாய்ந்துவிட்டாராம். ஹீரோ வுக்கு உதட்டோடு உதடு வைத்து முத்தம் கொடுத்திருக்கி றார். நடிகையை அறைய கையை ஓங்கிய ஹீரோ பின்னர் தனது கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு நீங்க ஒரு நல்ல நடிகை, இப்படி பண்ணாதீங்க. நல்ல கதை கிடைத் தால் நாம் சேர்ந்து படம் பண்ணலாம் என்று கூறினாராம்.

சோகம்...சுமையா? சுகமா?

துக்கப்படுதல் என்பது எப்படித் தேவையான உணர்வாக முடியும்? இதற்கு விடை அளிக்க சார்லஸ் டார்வினைத்தான் நாம் துணைகொள்ள வேண்டும். வருத்தம் அல்லது கவலை என்பது ஏதேனும் இழப்பைத் தொடர்ந்து வருவது. எப்படி கோபம் என்னும் உணர்வு விலங்குகளை எதிரிகளிடமிருந்து காக்க உதவுகிறதோ அது போன்றே துக்கம் எனும் உணர்வு இழப்பைச் சமாளிக்க உதவுகிறது.

இழப்பினால் ஏற்படும் வலியை எதிர்கொள்ளும் காலகட்டம், இழப்புப் பருவம், அதாவது 'க்ரீஃப்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். இக்கால கட்டத்தில் எதிலும் ஆர்வமின்றி ஒதுங்கி இருப்பது, இழப்பைப் பற்றி மட்டுமே எண்ணுவது, பசி, தூக்கம் போன்றவை குறைவது, அழுவது போன்ற பல வெளிப்பாடுகள் தோன்றுகின்றன. இவை எல்லாவற்றுக்குமே பரிணாம ரீதியாகச் சில காரணங்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எதிர்கால இழப்புகளைத் தவிர்க்க

வலி என்பது நாமெல்லாம் விரும்பாத ஒரு உணர்வு. ஆனால் வலி நமக்கு ஆபத்தை உணர்த்தும் ஒரு ஆதி உணர்வு. முள் குத்துவதையோ, தீ சுடுவதையோ உணர முடியவில்லை என்றால் எவ்வளவு பாதிப்புகள் ஏற்படுகின்றன?. அது போன்றே சோகம் என்னும் உணர்வும் நமக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பைப் பற்றி நம்முடைய முழுகவனத்தையும் ஈர்த்து எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்க்கக் கவனமாக இருக்க உதவுகிறது.

இதில் வியப்பு என்னவென்றால் மூளையில், உடலில் ஏற்படும் வலியை உணரும் அதே பகுதிகள்தான் வருத்தம், சோகம் போன்ற உணர்வுகளையும் உணர வைக்கின்றன. மூளைக்கு உடல்வலி, மனவலி இரண்டுமே ஒன்றுதான் போலிருக்கிறது.

பாரம் குறைக்கும் அழுகை

அதுபோன்றே துயரப்படும்போது அழுவதற்கும் காரணம் சொல்கிறார்கள் உளவியலாளர்கள். அழுவது என்பது ஒரு இறுக்கம் தளர்த்தும் செயல். குக்கரில் அழுத்தம் அதிகமானவுடன் நீராவி விசிலடித்து வெளியேறுவதுபோல், அழுதவுடன் நமது உடல் மற்றும் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் அவற்றிற்குப் புத்துணர்வு அளிக்கின்றன. அழுதவுடன் மனம் லேசாவது அதனால்தான்.

பெண்களுக்கு இதயநோய் குறைவாகக் காணப்படுவதற்கு அவர்கள் அடிக்கடி அழுது மனம் இளகுவதும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. அழுகை இன்னொரு சமூகரீதியான அறிகுறியாகவும் பயன்படுகிறது. 'நான் இழப்பில் இருக்கிறேன். எனக்கு உதவி தேவை' என உடலின் மொழியாகச் செய்தி சொல்வதும் கண்ணீர்தான்.

சோகம் இயல்பானது

உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு சொல்வதைப் போல், சிலவகை மனரீதியான பாதிப்புகள் அவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலே குறைகின்றன. ஆக, சோகம் என்பது இன்ஜின் கூடானால் அதற்கு ஓய்வு கொடுத்துத் தண்ணீர் (கண்ணீர்) விட்டுக் குளிர்விக்க உதவும் ஒரு அத்தியாவசியச் செயல். அது இழப்பின்போது இயல்பானதும் இன்றியமையாததும்கூட. சில காலத்துக்குப் பின், இழப்பைப் பற்றி உணர்ச்சிவசப்படாமல் நம்மால் விலகி நின்று பேச முடிகிறது.

ஆனால் சிறு இழப்புகளுக்குக்கூட, அல்லது காரணமேயின்றி அதீதமாகத் துயரமும் சோகமும் அடைவது மனச்சோர்வு நோயாக மாறிவிடும் (டிப்ரஷன்). இது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் பரவலாகக் காணப்படும் பாதிப்பாகும். அதீத மனச்சோர்வு மற்றும் வருத்தத்தில் உழல்வது, எதிலும் நாட்டமின்றி இருப்பது, தூக்கமின்மை, அமைதியின்மை, உடல்சோர்வு, பசியின்மை மற்றும் தற்கொலை எண்ணங்கள் எனப் பல்வேறு அறிகுறிகள் இதனால் தோன்றுகின்றன. ஆக, வருத்தப்படுவது இயல்பானது. அது, அதீதமானால் தொந்தரவு. அவ்வளவுதான் சாராம்சம்.

அத்திப் பழத்தின் அற்புதங்கள்!

கூம்பு வடிவில், வித்தியாசமான நிறத்தில் இருக்கும் அத்திப் பழத்தின் நன்மைகளைப் பற்றி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இப்பழத்தில் கல்சியம், விற்றமின் சி, இரும்புச்சத்து, மக்னீசியம், பொட்டாசியம், சோடியம் போன்றவை உள்ளது. இத்தகைய சத்துக்கள் நிறைந்த அத்திப்பழத்தை அல்லது உலர்ந்த அத்திப்பழத்தை தினமும் காலையில் ஒன்று சாப்பிட்டு வந்தால், எண்ணற்ற பலன்களைப் பெற

லாம்.

★ உலர்ந்த அத்திப்பழத்தில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அதிகம் உள்ளது. அதிலும் மற்ற பழங்களுடன் ஒப்பிடுகையில் இதில் தான் நல்ல தரமான ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் உள்ளதாம்.

★ ஒரு உலர்ந்த அத்திப்பழமானது அன்றாடம் தேவைப்படும் கல்சியத்தில் 3 சதவீதத்தை வழங்குகிறது. இதனை தினமும் உட்கொண்டு வந்தால், எலும்புகள் வலிமையுடன் இருக்கும்.

★ அத்திப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், நீரிழிவு நோயாளிகளுக்கு நல்லது. இருப்பினும் உலர்ந்த அத்திப்பழத்தில் சர்க்கரை அதிகம் இருப்பதால், மருத்துவரிடம் கலந்தாலோசித்து பின் எடுத்துக் கொள்ள வேண்டும்

★ 3 துண்டு உலர்ந்த அத்திப்பழத்தில் 5 கிராம் நார்ச்சத்து உள்ளது. இது அன்றாடம் தேவைப்படும் நார்ச்சத்துக்களின் அளவுகளில் 20 சதவீதத்தைத் தருகிறது.

எனவே இவற்றை தினமும் காலையில் உட்கொண்டு வந்தால், செரிமானம் மேம்படுவதோடு, மலச்சிக்கல் பிரச்சனையும் நீங்கிவிடும்.

★ உலர்ந்த அத்திப்பழத்தில் இரும்புச்சத்து உள்ளது. அதிலும் ஒரு உலர்ந்த அத்திப்பழத்தின் அன்றாடம் தேவைப்படும் இரும்புச்சத்தில் 2% கிடைக்கிறது.

உடலில் ஹீமோகுளோபினை எடுத்து செல்வதற்கு இரும்புச்சத்து மிகவும் இன்றியமையாதது.

★ உப்பு அதிகம் எடுத்துக் கொள்ளும் போது, உடலில் சோடியத்தின் அளவு அதிகரிக்கும். இதனால் சோடியம் மற்றும் பொட்டாசியத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு, இரத்த அழுத்தம் அதிகரிக்கும். ஆனால் 1 உலர்ந்த அத்திப்பழத்தில் 129 மில்லிகிராம் பொட்டாசியம் மற்றும் 2 மிகி சோடியம் உள்ளது இதனால் இரத்த அழுத்தம் அதிகரிப்பதைத் தடுக்கலாம்.

★ அத்திப்பழத்தில் உள்ள அதிக அளவு ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகளால், ப்ரீ-ராடிக்கல்களின் மூலம் டி.என்.ஏ பாதிப்படைவது தடுக்கப்பட்டு, புற்று நோய் வரும் அபாயம் குறையும்.

★ அத்திப்பழத்தில் நார்ச்சத்துக்கள் அதிகம் மட்டுமின்றி, கலோரிகள் குறைவு. ஒரு துண்டு உலர்ந்த அத்திப்பழத்தில் 47 கலோரிகள் உள்ளன. மற்றும் 0.2 கிராம் கொழுப்புக்கள் உள்ளது. எனவே எடையைக் குறைக்க நினைப்போர் இதனை ஸ்நாக்ஸாக உட்கொள்வது நல்லது.

★ அத்திப்பழம் மிகவும் சிறப்பான ஓர் பாலுணர்வைத் தூண்டும் பழம். மேலும் அத்திப்பழம் கருவுறும் திறன் மற்றும் பாலுணர்ச்சியைத் தூண்டுவதற்கு காரணம், அதில் இனப்பெருக்க மண்டலத்தின் ஆரோக்கியத்திற்கு தேவையான ஜிங்க், மாங்கனீசு மற்றும் மக்னீசியம் நிறைந்துள்ளது.

★ அத்திப்பழத்தில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அதிகம் உள்ளதால், ப்ரீ-ராடிக்கல்களினால் இரத்த நாளங்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட்டு இதய நோய் ஏற்படும் அபாயம் குறையும். மேலும் இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதால், இதய நோய் வரும் வாய்ப்பு குறையும்.

உடல் எடையை குறைக்குமா கிரீன் டீ?

கிரீன் டீயில் சிறிதளவு காஃபின் (Caffeine) இருக்கிறது. இது மூளையில் உள்ள நியூரோ டிரான்ஸ்மீட்டர்களைத் தூண்டி, நரம்பு இயக்கங்களைப் புத்துணர்ச்சி அடையச் செய்கிறது. இதனால் சுறுசுறுப்பான உணர்வு கிடைக்கும். மூளை நன்றாக இயங்கும்.

கிரீன் டீ இன்சுலின் செயல்

கிரீன் டீ தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு, மறதி நோயான அல்சைமர், மூளையில் டோபோமைன் சரியாகச் சுரக்காததால் வரும் பார்கின்சன் போன்ற நோய்கள் வருவதற்கான வாய்ப்பு 25 சதவிகிதம் குறைகிறது.

பற்களில் ஸ்ட்ரெப்டோகோக்கஸ் மியூட்டன்ஸ் (Streptococcos mutans) என்ற பாக்டீரியா வளர்ந்தால், பற்கள் பாதிக்கப்பட்டு, சொத்தையாக மாறும் அபாயம் உண்டு. கிரீன் டீ குடித்தால், அதில் இருக்கும் கேட்டசின், இந்த வகை பாக்டீரியாக்களை அழித்து, பற்களைக் காக்கும்.அரசியல்

பாட்டை சிறிதளவு அதிகரிக்கும். எனவே, சர்க்கரை சேர்க்காமல் கிரீன் டீ குடிப்பது, சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லது. கிரீன் டீயைத் தொடர்ந்து குடிப்பவர்களுக்கு, டைப்-2 சர்க்கரை நோய்க்கான வாய்ப்பு குறைகிறது.

சர்க்கரை சேர்க்காமல் கிரீன் டீ அருந்தினால், உடலில் உள்ள தேவையற்ற கெட்ட கொழுப்புகள் கரையும். எனவே, உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது.

இதயத்துக்குச் செல்லும் வால்வுகளில் கொழுப்புக் கட்டிகள் சேர்வதைத் தடுக்கும் வல்லமை பெற்றது கிரீன் டீ. இதய நோய்கள் அண்டாமல் இருப்பதற்கும், பக்கவாதம் வராமல் இருக்கவும் கிரீன் டீ அருந்தலாம். கிரீன் டீயில் அமினோ அமிலங்கள் உள்ளன. இது உடல் மற்றும் மனச்சோர்வைப் போக்கக்கூடியது. எனவே, மன அழுத்தம் உள்ள சமயங்களில் கிரீன் டீ அருந்தலாம்.

கிரீன் டீ ஆன்டிஆக்ஸிடன்ட் நிறைந்தது என்பதால், உடலில் தேவையற்ற கட்டிகளை வளரவிடாது. பெருங்குடல், மார்பகம் மற்றும் ப்ராஸ்டேட் புற்றுநோய் போன்றவை வருவதற்கான வாய்ப்புகளை கிரீன் டீ குறைக்கிறது.

இரத்த சோகையை நீக்கும் பசலை கீரை

பசலை கீரையில் அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், கரிம அமிலங்கள், பாலிசாக்ரைடுகள் மற்றும் பைபிளேவனாய்டுகள் உள்ளன. வைரசுக்கு எதிராக செயல்படும் கிளைக்கோ புரதம் ஒன்றும் காணப்படுகிறது.

பசலைக் கீரையில் இரும்புசத்து அதிகம் உள்ளது, இதில் உள்ள இரும்புச் சத்து மிகவும் சுலபமாக ஜீரணமாகி உடம்பில் ஒட்டுகின்றது. எனவே ரத்த சோகை நோயாளிகளுக்கு அது மிகவும் பயன் தருகின்றது. இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களுக்கு உதவும் சிவப்புச்சத்து (ஹிமொகுளோபின்) உள்ளது. புரதங்களைப் பலப்படுத்தும் அமிலங்கள் உள்ளன. இரத்த விருத்தி உண்டாக்கும். சோடியம், போலாசின்,கால்சியம் உள்ளன ஆனால் கொழுப்பு சத்து இல்லை.

எட்டு மணிக்குள் இரவு உணவு!

நம்முடைய முன்னோர்கள் அறிவுறுத்தியபடி Early To Bed Early To Rise என்பதுதான் சரியான வாழ்க்கை முறை. ஆனால், இன்றைய நமது அன்றாட செயல்கள் எல்லாம் இன்று முழுவதும் தலைகீழாக மாறிவிட்டன.

அவற்றில் ஒன்றுதான் இரவு உணவை தாமதமாக சாப்பிடும் வழக்கமும். இதனால், வயிற்றை நிரப்புகிறோம் என்பதை தவிர, வேற எந்த பயனும் நமக்கு கிடைப்பது இல்லை.

இரவு உணவை இதுபோல் தாமதமாக சாப்பிடுவதன் மூலம் பல்வேறு பிரச்னைகளும் உண்டாகிறது.

இரவு உணவை 8 மணிக்கு முன் முடித்துவிட வேண்டும். அதுதான் சரியான நேரம். அதற்கு மேல் தாமதமாகும் போது வயிற்றில் அமிலச்சுரப்பு உண்டாகும். நெஞ்சு எரிச்சல் ஏற்படும். சாப்பிட்ட உணவு எதுக்களிக்கும். பலமணி நேரம் செரிமானம் ஆகாமல் அப்படியே தங்கியும் விடும்.

மேலும், இரவில் தாமதமாக உண்ணும் வழக்கத்தால் இயல்பைவிட, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவோம். எனவே, உடலில் கலோரி அளவும் அதிகரிக்கும். தூங்கும் நேரம் குறைந்து உடல் எடை அதிகரிக்கும். இரவில் நேரங்கழித்து சாப்பிடுவதால், உடல் எடையைக் குறைக்க முடியாது.

இரவில் தாமதமாக சாப்பிடுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என்று கூறுவதை பெரும்பாலும் யாரும் பின்பற்றுவது கிடையாது. உரிய நேரத்தில் சாப்பிடாமல் இருத்தல், சர்க்கரை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுப்பொருட்களை உண்ணுதல் போன்ற காரணங்களால் வளர்சிதை மாற்றங்கள் குறையும். இரத்தத்தில் டிரைகிளிசரைட் என்ற கெட்ட கொழுப்பின் அளவு அதிகரிக்கும். காலை, மதியம் என எந்த நேரத்து உணவாக இருந்தாலும், உரிய நேரத்தில் சாப்பிட்டு வந்தால்தான், நமக்கு அந்த உணவால் பயன் கிடைக்கும்.

அதனால் எந்த வகை உணவை, எந்த நேரத்தில், எவ்வளவு சாப்பிட வேண்டும் என்பதை நன்றாக அறிந்து, அதனை பின்பற்றி வந்தால் உணவு வேளை மற்றும் உறங்கும் நேரம் சரியான சுழற்சியில் நடைபெறும். இரவில், சீக்கிரமாக சாப்பிடுவதால் செரிமான குறைபாடு, உடல் எடை அதிகரித்தல் போன்ற எந்தவித பிரச்னைகளும் இல்லாமல் முழு உடலும் ஆரோக்கியமாக இருக்கும் என பல மருத்துவ ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக தூங்கச் செல்லும் 2 மணி நேரத்துக்கு முன்னால் சாப்பிடுவது சிறந்தது. இதன்மூலம் மாரடைப்பு போன்ற இதயம் தொடர்பான பாதிப்புகள் கட்டுப்படுத்தப்படும்.

சிறுநீரகம் ஆரோக்கியமாக இருக்கும். இரவு வேளையில் நேரங்கழித்து சாப்பிடும் பழக்கம் உடையவர்கள் களைப்பு காரணமாக உடனே படுத்து விடுவார்கள். அவ்வாறு செய்வதால் செரிமானமாக போதுமான நேரம் கிடைக்காது.

மேலும், செரிமானம் மெதுவாகவும் நடைபெறும். இதனால், குடலுக்கு தேவையில்லாத பிரச்னைகள் ஏற்படும்.

அதேபோல், இரவு உணவு தாமதம் ஆகும்போது, காலை உணவு தவிர்க்கப்படுகிறது. தலைவலி வரும். உடலில் கொழுப்பு தங்கிவிடுகிறது. ஆகவே, இரவு சாப்பாட்டை எவ்வளவு சீக்கிரமாக சாப்பிடுகிறோமோ அவ்வளவும் உடலுக்கு நல்லது.

இரவு உணவுக்குப் பின் வாழைப்பழம் உண்ணலாமா?

இரவு உணவுக்குப் பின் சிலர் வாழைப்பழம் சாப்பிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்த பழக்கம் ஒரு சிலருக்கு ஒரு சில வேளைகளில் நன்மை தந்தாலும், பெரும்பாலோனோருக்கு உடலில் கலோரி அதிகமாகி, உடல் எடை அதிகரிக்க காரணமாக அமைகிறது. இதற்கு காரணம் வாழைபழத்தில் உள்ள பிரக்டோஸ் (Fructose) என்ற சர்க்கரை சத்து கொழுப்பாக மாறி நமது உடலில் நிரந்தரமாக தங்கி விடுவதே.

இரவு உணவிற்குப் பின் வாழைப்பழம் சாப்பிடுவதால், சாப்பிட்ட உணவு விரைவில் செரிமானம் ஆகும், காலைக்கடன் எந்த சிரமமும் இல்லாமல் கழியும் என்று கூறுவதில் ஓரளவுக்கு உண்மை இருந்தாலும், வயிற்று உபாதை காரணமாக காலைக்கடன்களை முடிக்க சிரமப்படுபவர்கள் இரவு உணவிற்குப்பின் வாழைப்பழம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

அதற்கு பதிலாக நார்ச்சத்து அதிகம் உள்ள காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். யாரெல்லாம் இரவு உணவிற்குப்பின் வாழைப்பழம் சாப்பிடலாம் என்பதிலும் கட்டுப்பாடு உள்ளது. 12 வயது வரை குழந்தைகளுக்கு இரவில் வாழைப்பழம் கொடுக்கலாம்.

இவர்கள் காலை, மாலை என எந்த நேரத்திலும் இதை சாப்பிடலாம். தொடர்ந்து இரவு நேரங்களில் வாழைப்பழம் சாப்பிடுவதால் ஒருசில குழந்தைகளுக்கு சளித்தொல்லை ஏற்பட வாய்ப்பு உள்ளது. வயதானவர்களும் நீரிழிவு நோய் உள்ளவர்களும் இரவு நேரத்தில் வாழைப்பழத்தை சாப்பிடக்கூடாது.

விளையாட்டு வீரர்கள் மற்றும் உடற்பயிற்சி கூடங்களுக்கு செல்பவர்கள் இரவு உணவிற்குப்பின் வாழைப்பழம் சாப்பிடுவது நல்ல பலனைத் தரும். இதன் காரணமாக இவர்களுக்கு உடலில் கலோரி அளவு அதிகரிக்கும். எனவே, இவர்களால் களைப் படையாமல் நீண்ட நேரம் உடற்பயிற்சிகள் செய்ய முடியும்.

புதிது புதிது

பயணிகள் டிரோன்

இதுவரை பொருட்களை எடுத்துச் செல்ல மட்டுமே டிரோன்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. முதன் முதலில் இரண்டு பேர் செல்லக்கூடிய டிரோன்கள் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த டிரோன்கள் 360 கிலோ எடையை தாங்கக்கூடியது. தொடர்ச்சியாக 25 நிமிடம் பயணிக்கக் கூடியது.

சூரிய அடுப்பு

சூரிய சக்தியை பயன்படுத்தி தண்ணீரை கொதிக்கவைக்கவும் உணவு சமைக்கவும் புதிய வகை அடுப்பை வடிவமைத்துள்ளனர். ஒரு குழாயுடன் சூரிய தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் தண்ணீரை ஊற்றி சுட வைத்துக் கொள்ள முடியும். மேலும் காய்களையும் வேகவைக்கமுடியும்.

காகித விமானம்

குழந்தைகள் காகிதங்களில் விமானம், கப்பல் போன்றவற்றை செய்து விளையாடுவார்கள். ஆனால் இந்த காகித விமானத்தை நமது மொபைலில் உள்ள அப்ளிகேஷன் மூலம் இயக்கமுடியும். வேகம், எந்த திசையில் செல்லவேண்டும் என்பது உட்பட மொபைல் மூலம் இயக்கமுடியும். காகித விமானத்தில் எலெக்ட்ரானிக் சிப் பொருத்தப்பட்டுள்ளது.

தானாகப் படமெடுக்கும் கமெரா!

கூகுள் கண்ணாடியை நினைவு இருக்கிறதா? இந்த அதி நவீன மூக்குக் கண்ணாடி பரபரப்பை ஏற்படுத்திய அளவுக்கு வரவேற்பைப் பெறவில்லை. இப்போது கூகுள் வெள்ளோட்டம் விட்டிருக்கும் கூகுள் கிளிப்ஸ் கேமராவைப் பார்த்தால், கூகுள் கிளாஸ் நினைவுக்கு வருகிறது. ஸ்மார்ட் கேமரா எனப்படும் கூகுள் கிளிப்ஸ் உள்ளங்கைக்குள் அடங்கிவிடக்கூடிய சதுர வடிவ கேமராவாக இருக்கிறது.

பரிச்சயமாகும் கேமிரா

இந்த கேமராவில் சின்னஞ்சிறிய லென்ஸ் மட்டுமே இருக்கிறது. வியூபைண்டர் கிடையாது. எனவே, இதைக் கையில் வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. வீட்டில் எங்கேயாவது ஒரு மூலையில் தொங்கவிட்டால் போதும், அது தானாகப் படம் எடுத்துக் கொள்ளும். அது மட்டுமல்ல, தான் பார்க்கும் முகங்களை நினைவில் நிறுத்திக்கொள்ளும் ஆற்றலும் கொண்டிருக்கிறது. ஆக, நாளடைவில் இது முகங்களை நன்றாகப் பரிச்சயம் செய்துகொண்டு, அறிமுகம் இல்லாதவர்களைப் படம் எடுப்பதைத் தவிர்க்கவும் கற்றுக் கொண்டுவிடும் என்கிறார்கள்.

மற்றபடி வீட்டில் இருக்கும்போது, சுவாரசியமான தருணங்கள் எனக் கருதப்படும் காட்சிகளை அது படம் எடுத்தபடி இருக்கும். ஒவ்வொரு காட்சியும் ஏழு நொடிகள் ஓடக்கூடியதாக இருக்கும். இவற்றிலிருந்து தேவையான காட்சியைத் தேர்வுசெய்து ஒளிப்படமாக மாற்றிக்கொள்ளலாம். அப்படியே தொடர் படமாகவும் பயன்படுத்தலாம். ஆனால், ஒலி வசதி கிடையாது. எனவே, வீடியோ என்று சொல்ல முடியாது.

கேமராவுடன் இணைக்கப்பட்ட பிரத்யேகச் செயலி மூலம் ஸ்மார்ட்போனில் படங்களைப் பார்க்கலாம்.

அதிலேயே சேமித்துக்கொள்ளலாம். தேவையெனில் கையாலும் படமெடுக்கலாம். இதற்கான ஷட்டர் வசதி இருந்தாலும், இந்த கேமராவை அதன் போக்கில்விடுவதுதான் சிறந்தது என கூகுள் நினைக்கிறது. உதாரணத்துக்கு மழலைகள் உள்ள வீட்டில் கேமராவை ஒரு மேஜையில் பொருத்திவிட்டால், மழலையின் குறும்புகளும் மந்தகாசமான புன்னகைகளும் அழகாகப் பதிவாகியிருக்கும்.

பெற்றோர் அருகே இல்லாவிட்டால் கூட, கேமிரா கச்சிதமாகக் குழந்தையின் பொன்னான தருணங்களைப் பதிவு செய்து கொள்ளும். சும்மா இல்லை, 130 கோணங்களில் காட்சிகளைப் படமெடுக்கும். செல்லப் பிராணிகள் மீது பாசம் கொண்டவர்களும் இந்த கேமராவைப் பயன்படுத்தலாம்.

அபாயம் இல்லை

சுற்றுப்புறத்தைப் புரிந்துகொண்டு, அதில் தென்படும் முகங்களை உணர்ந்து, தானாகப் படமெடுக்கும் கேமரா, தானாகப் படமெடுக்கும்போது சிக்கக்கூடிய அற்புதமான தருணங்களை நினைத்துப் பார்த்து வியக்கவைத்தாலும், இன்னொரு புறம் இது அந்தரங்கத்தின் மீதான ஊடுருவல் என்ற அச்சத்தை உருவாக்குகிறது. கூகுள் இதை உணராமல் இல்லை. அதனால்தான் கேமரா என்று எல்லோரும் உணர்ந்துகொள்ளும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து வெளியாகும் சிவப்பு ஒளி கேமரா படமெடுத்துக்கொண்டிருப்பதை உணர்த்தும் என்பதால், எதிரே இருப்பவர்கள் அறியாமல் படமெடுக்கப்படும் அபாயம் இல்லை. தவிர, இதன் பயன்பாடு பெரும்பாலும் வீட்டுச் சூழலில் என்பதால் இதன் மீதான எதிர்பார்ப்பும் மாறுபட்டதாகவே இருக்கும்.

மேலும், இதில் பதிவாகும் காட்சிகள் வேறு எங்கும் தானாகச் சேமிக்கப்படாது. இவற்றிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட ஒளிப்படங்கள் மட்டுமே கிளவுட் வசதியில் ஒருங்கிணைக்கப்படும். எனவே, ஒளிப்படங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பும் குறைவு. இந்த கேமரா அதன் உரிமையாளருக்கே விசுவாசமாக இருக்கும். வீட்டில் தெரிந்த முகங்களுக்குப் பழகி, அவர்களைப் படமெடுக்கவே முற்படும். பூங்காவில் சென்று அமர்ந்திருக்கும் போதுகூட, மற்ற குழந்தைகளை விட்டு, உரிமையாளர் குழந்தையின் விளையாட்டையே இது பதிவு செய்ய முற்படும். எல்லாம் செயற்கை நுண்ணறிவு செய்யும் மாயம்.

தினசரி வாழ்க்கைக் காட்சிகளை இடைவிடாமல் பதிவுசெய்யும் வசதியை 'லைப் லாகிங்' என்கிறார்கள். புதுமையான கருத்தாக்கம் என்பதைக் கடந்து, இது நடைமுறை வாழ்க்கையில் இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை. ஒருவிதத்தில் கூகுள் கேமராவும் இந்தப் பிரிவின் கீழ்தான் வருகிறது. இந்த கேமரா எந்த வகையான வரவேற்பைப் பெறுகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். வீட்டை ஸ்மார்ட் இல்லமாக்கும் போட்டியில் கூகுளும் களம் இறங்கியுள்ளது. இதனால் சராசரி வாழ்க்கை மேம்படுமா என்பது மில்லியன் டாலர் கேள்விதான்!

நேரம் என்ன நேரம்!



நவீன உலகில் இரவு பகல் பார்க்காமல் உழைக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய பணித் தொடர்புகள் உலக அளவில் விரிந்திருப்பதால், நாம் பகலில் பணியாற்றும்போது, மறுமுனைவில் இரவா, பகலா என அறிந்துகொள்வது அவசியமாகிறது. இதற்கு உதவும் வகையில், உலக நேரங்களை உள்ளூர் நேரத்துக்கு மாற்றிக்காட்டுகிறது 'மைடைம்சோன்' இணையதளம். குரோம் பிரவுசருக்காக இது வழங்கும் நீட்டிப்பு சேவை மூலம் இந்த வசதியை மிக எளிதாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். உதாரணத்துக்கு இமெயில் மூலம் வெளிநாட்டில் உள்ள ஒருவருடன் சந்திப்புக்கான திட்டமிடலில் ஈடுபடும்போது, இங்குள்ள நேரத்தைக் குறிப்பிட்டு சம்மதமா எனக் கேட்கும்போது, வலப் பக்கமாக கிளிக் செய்தால், மெயிலைப் பெறுபவர் ஊரில் என்ன நேரம் என மாற்றிக்காட்டுகிறது.

இணைய முகவரி:https://mytimezone.io/

360 டிகிரி கோண வசதி

விர்ச்சுவல் ரியாலிட்டி, 360 கோணத்திலான வீடியோக்கள் தான் அடுத்த பெரிய சங்கதி. இந்த வசதியை அளிக்கும் விர்ச்சுவல் ரியாலிட்டி சாதனங்களும் வரிசையாக அறிமுகமாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த வகை உள்ளடக்கத்தைக் காண்பதில் சிக்கல் இல்லாமல் இல்லை. இந்த வீடியோக்களை டவுன்லோடு செய்த பிறகு, அவற்றைக் காண தனியே பிளேயரைப் பயன்படுத்த வேண்டும். இந்தக் குறையைப் போக்கும் வகையில், முன்னணி பிரவுசர்களில் ஒன்றான ஓபரா, விர்ச்சுவல் ரியாலிட்டி காட்சிகளுக்கான பிளேயர் வசதியையும் தனது பிரவுசரில் இணைத்துள்ளது. இதனால், பயனாளிகள் வி.ஆர். சாதனங்களை மாட்டிக்கொண்டு எந்தச் சிக்கலும் இல்லாமல் மெய்நிகர் உலகில் மூழ்கலாம். இதற்கெனத் தனி பிளேயரும் தேவையில்லை.

அழுகையின் அறிவியல்

ஆனந்தக் கண்ணீரும் பெருகலாம், சோகத்திலும் கண்ணீர் வரலாம். எல்லாம் சரி, கண்ணீர் ஏன் வருகிறது?

'ஆசாப் சயின்ஸ்'என்ற யூடியூப் சேனலைப் பார்த்தால், விடை கிடைக்கும். அழுகையின் பின்னே உள்ள விஞ்ஞானத்தை மிக எளிதாக இந்த வீடியோ விளக்குகிறது. சராசரி கண்ணீர், அனிச்சையாக வரும் கண்ணீர், ஆனந்தக்கண்ணீர், உணர்ச்சிப் பெருக்கிலான கண்ணீர் பற்றியும் பரிணாம நோக்கில் மற்றவர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்கான சமிக்ஞை கண்ணீர் என்ற விளக்கத்தையும் தெரிந்துகொள்ளலாம். வீடியோவைக் காண: https://www.youtube.com/watch?v=QGdHJSIr1Z0

ஆண்ட்ராய்டு இயங்குதளத்தில் நீங்கள் மேற்கொண்ட கூகுள் தேடல்களை, உங்களது அனுபவத்தை மேம்படுத்த கூகுள் சேமித்து வைக்கும். இவ்வாறு சேமிக்கப்பட்ட தேடல்களை அழிப்பது எப்படி?

உலகின் பிரபல தேடுப்பொறி சேவை வழங்கும் நிறுவனமான கூகுள், ஆண்ட்ராய்டு இயங்குதளத்தில் அதன் வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளும் தேடல்களை சேவை மேம்பாட்டு காரணங்களுக்காக சேமித்து வைக்கும். முன்னதாக கூகுள் சர்ச் செயலியை மேம்படுத்திய கூகுள் உங்களது தேடல்களை ஸ்கிரீன்ஷாட் முறையில் சேமிக்க துவங்கியுள்ளது. செயலியை திறந்ததும், கடிகாரம் போன்ற ஐகான் திரையின் கீழ் காணப்படும் இதனை கிளிக் செய்ததும், உங்களது தேடல்கள் ஸ்கிரீன்ஷாட் முறையில் சேமிக்கப்பட்டிருப்பதை காண முடியும்.

இந்த செயலி உங்களது அனைத்து தேடல்களையும் காண்பிக்கும். இங்கு வலது புறமாக ஸ்வைப் செய்து, தேடல்களை முழுமையாக பார்க்க முடியும். இந்த அம்சம் சிலருக்கு பயனுள்ளதாக தெரிந்தாலும், சிலர் பயனற்றதாக நினைக்கலாம். அவ்வாறானவர்கள் தங்களது தேடல்களை அழிக்கும் வழிமுறைகளை தொடர்ந்து பார்ப்போம். ஸ்கிரீன் ஷாட்களை அழிக்க கூகுள் செயலியை திறந்து, அதில் காணப்படும் ஹிஸ்ட்ரி ஐகான் கிளிக் செய்ய வேண்டும். இனி உங்களது சாதனத்தில் கடந்த ஏழு நாட்களில் மேற்கொண்ட தேடல்கள் காணப்படும். இதில் ஸ்வைப் செய்து ஸ்கிரீன்ஷாட்களை அழிக்க முடியும். - இதை செயல்படுத்த மெயின் ஸ்கிரீன் சென்று இடது புறத்தின் மேலே காண்பிக்கப்படும் மூன்று புள்ளிகளை கிளிக் செய்ய வேண்டும். இனி செட்டிங்ஸ் சென்று அக்கவுண்ட்ஸ் மற்றும் பிரைவசி ஆப்ஷன் செல்ல வேண்டும். இவ்வாறு செய்தபின் மற்றொரு திரையில் காணப்படும் எனேபிள் ரீசன்ட் ஆப்ஷனை ஆஃப் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தபின் ஸ்கிரீன்ஷாட்கள் சேமிக்கப்படாது.

உங்கள் மகன்/மகளின் செல்போன் பயன்பாட்டைக் குறைக்க புதிய வசதி

'ஃபேமிலி லிங்க்' என்னும் வசதி மூலம் பெற்றோர்கள் தங்கள் மகன்/மகளின் செல்போன் பயன்பாட்டை வரையறை செய்யலாம்.

இந்த வசதியை கூகுள் அறிமுகப்படுத்தி உள்ளது. இதைப் பயன்படுத்த கூகுள் அக்கவுண்ட் இருந்தால் போதுமானது.

இதன் மூலம் பெற்றோர்கள் தங்கள் மகனோ, மகளோ மொபைலைப் பயன்படுத்தியது போதும் என்னும்போது மொபைலை லாக் செய்ய முடியும்.

அத்துடன் செயலிகளை ப்ளாக் செய்யவோ, தரவிறக்கம் செய்வதையோ தடுக்க முடியும். முக்கியமாக தங்களின் குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் என்பதையும் கண்டறிய முடியும்.

முதல் கட்டமாக இந்த வசதி ஆண்ட்ராய்டு பயனர்களுக்கு மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இவ்வசதி 13 வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டாலும் பெரியவர்களும் இதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். 13 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்த வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட இரு தரப்பும் 'ஃபேமிலி லிங்க்' கைப் பயன்படுத்த ஒப்புதல் தர வேண்டும்.

அதே நேரத்தில் இதைப் பயன்படுத்துபவருக்குக் கண் காணிக்கப்படுவதில் விருப்பம் இல்லையெனில், பெற்றோர்களிடம் பாஸ்வேர்டைப் பகிர வேண்டியதில்லை. பாஸ்வேர்டு பகிரப்படும்போது பெற்றோரின் 24 மணி நேரக் கண்காணிப்பில் குழந்தைகள் இருப்பார்கள்.

இன்டெல்லின் புதிய சாதனை

உலகிலேயே மிக அடர்த்தியான, எஸ்.எஸ்.டி எனப்படும், 'சாலிட் ஸ்டேட் டிரைவ்' ஒன்றை இன்டெல் அறிமுகப்படுத்தியுள்ளது. மிகச் சிறிய அளவுள்ள இந்த டிரைவ், 32 டெரா பைட் அளவு தகவல் கொள்திறன் கொண்டது.

பெரும் நிறுவனங்கள் தகவல் சேகரித்து வைக்கும், 'டேட்டா சென்டர்'கள் முதல் இணையத்திற்கு பாலமாக இருக்கும் பிரமாண்ட, 'சர்வர்கள்' வரை அடியோடு மாறப்போகின்றன.

இந்த மையங்களில், சர்வர்கள் ஏராளமான இடத்தை அடைத்தபடி, நிறைய மின்சாரத்தை உறிஞ்சி, அதிக வெப்பத்தை உமிழ்ந்துகொண்டிருப்பவை. இந்த வெப்பத்தை தணிக்கவே நிறைய செலவு செய்யவேண்டும்.

இதற்கெல்லாம் வேலையே இல்லாமல் செய்யவிருக்கிறது இன்டெல்லின் புதிய, சில்லு. எஸ்.எஸ்.டி.டி.சி., பி4500 என்ற முரட்டுப் பெயர் கொண்ட இந்த சில்லுவின் நீளம், 30.5 செ.மி., அகலம், 3.8 செ.மீ. தடிமன் வெறும், 0.8 செ.மீ.,தான். பார்ப்பதற்கு இரும்பு ஸ்கேல் போலத் தெரிகிறது. ஆனால், வழக்கமான ஒரு சர்வரில் சர்க்யூட்டை பொருத்தும் 'ஸ்லாட்'டில், இன்டெல்லின் புதிய, எஸ்.எஸ்.டி., சில்லுகளில், 32 சில்லுகளை மாட்டிவிட முடியும். அதாவது மொத்தம், 1 பெட்டா பைட் தகவல்களை அத்துணூண்டு இடத்தில் அடக்கிவிட முடியும். இந்த சில்லுகள் அதிக வெப்பத்தை கக்காது. எனவே சாதாரண ஹார்டு டிஸ்கிற்கு தேவையான காற்றோட்டமே போதும் என்கிறது இன்டெல்.

முதலில் கூகுள், மைக்ரோசாப்ட், ஐ.பி.எம்., போன்ற பெருங் கணினி நிறுவனங்கள் தான் இதை வாங்கும். பிறகே, சிறு நிறுவனங்களும் இதை நாடும். தனி நபர் உபயோகத்திற்கு இது கிடைக்க, சில ஆண்டுகள் ஆகும்.

புகைப்படங்கள், வீடியோக்களின் உண்மை தன்மையைச் சோதிக்கும் ஃபேஸ்புக்

ஃபேஸ்புக்கில் பதிவேற்றப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் உண்மைத்தன்மையைச் சோதிக்கும் புரோகிராமை ஃபேஸ்புக் வெளியிட உள்ளது. இதன்மூலம் தவறான தகவல்கள் மற்றும் போலிச் செய்திகள் பரவுவது குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஃபேஸ்புக் நிறுவனம் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து புகைப்படங்களின் உண்மைத்தன்மையைச் சோதனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வந்தது. அதன் அடுத்தகட்டமாக தற்போது சர்ச்சைக்குரிய புகைப்படங்கள் அல்லது வீடியோக்களைச் சரிபார்க்கத் தன்னிடமுள்ள உண்மைத் தன்மையைச் சோதிக்கும் நிறுவனங்களுக்கு (27 third-party factchekers) அளிக்கும். அத்துடன் ஃபேஸ்புக் நிறுவனமும் உண்மைத் தன்மைக்கான சோதனையில் ஈடுபடும்.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட படங்கள் பொய்யானவை ஆகவோ, தவறாக வழிநடத்துபவையாகவோ இருந்தால், ஃபேஸ்புக் அவற்றைத் தனியாகப் பிரித்துவிடும்.

புகைப்படங்கள், வீடியோக்களின் உண்மைத்தன்மையைச் சோதிக்க காட்சி சரிபார்ப்பு நுட்பங்கள் (visual verification techniques) பயன்படுத்தப்படும். குறிப்பாக ரிவர்ஸ் இமேஜ் தேடல் மற்றும் இமேஜ் மெட்டாடேட்டா பகுப்பாய்வு ஆகிய தொழில்நுட்பங்கள் மூலம் அவற்றின் உண்மைத் தன்மை ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் மார்பக வலி!

கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு உடல் மற்றும் மனம் ரீதியாக பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. எனினும், ஹார்மோன்களினால் ஏற்படும் மாற்றங்கள் வித்தியாசமாக இருக்கும்.

இந்த மாற்றங்களில் முக்கியம் வாய்ந்ததாக கருதக்கூடியது செரிமானம், குடல் இயக்கங்களிலும் மார்பக பகுதிகளிலும் மாற்றங்கள் அதிகமாக காணப்படும்.

கர்ப்பக் காலத்தில் உண்டாகும் சில ஹார்மோன் மாற்றங்கள் பெண்களின் மார்பக வடிவத்தில் இருந்து, அதன் தன்மை வரை பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

கர்ப்பிணிகளின் உடலில் கர்ப்பம் சார்ந்த ஹார்மோன் அதிகரிப்பதால், வேறு சில சுரப்பிகளும் அதிகரிக்கும். இந்த சுரப்பிகள் அவர்களின் மார்பகத்தின் அளவை பெரியதாக்குகிறது. இதனால் கர்ப்பக் காலத்தில் பெண்கள் தங்களது மார்பகங்களை சற்று பாரமாக உணர்வார்கள்.

கருவுற்று இருக்கும் பெண்களுக்கு மார்பக பகுதியில் ரத்த ஓட்டம் அதிகமாக இருக்கும்.

எனவே ஹார்மோன்கள் மாற்றம் அடைந்து திசுக்கள் உப்பியது போல இருப்பதால், அவர்களின் மார்பகம் பாரமாக இருப்பதுடன் கொஞ்சம் வலி மிகுந்ததாகவும் உணர்கிறார்கள்.

மேலும் கர்ப்பிணி பெண்களின் மார்பக பகுதியில் நீல நிறத்தில் நரம்புகள் வெளிப்படையாக தெரியும். இதற்கு காரணமும் மார்பகத்தில் ஏற்படும் அதிகப்படியான ரத்த ஓட்டம் தான். அதற்காக பயப்பட தேவையில்லை என மகப்பேறு நிபுணர்கள் கூறுகின்றனர்.

முக அழகுக்கு ஏற்ற முடியலங்காரம்!

ஒவ்வொரு வடிவ முகத்துக்கும் ஒவ்வொரு முடி வடிவமைப்புப் பொருத்தமாக இருக்கும். அதைக் கவனமாகத் தேர்வுசெய்வதில்தான் இருக்கிறது நமக்கான ஃபேஷன். எந்த மாதிரி முகத் தோற்றத்துக்கு என்ன வகையான ஹேர்கட் செட் ஆகும் என்று பார்க்கலாம்.

நீள் வடிவ முகம்

நீள் வடிவ முகம் உடைய வர்களுக்கு, தாடைப் பகுதி நீளமாக இருக்கும். இவர்கள், முடியை லூஸ்ஹேர் விடாமல், நடு வகிடு எடுத்து, முடியை இழுத்துப் பின்னலிட்டால், முகம் எடுப்பாகத் தெரியும்.

நீள் வடிவ முகம் உடைய வர்கள், முடியை நெற்றியில் விழுவது போன்ற ஸ்டைலை முயற்சிக்க வேண்டாம். இது, உங்கள் முகத்தை மெச்சூர்டாகக் காண்பிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

முக்கோண வடிவ முகம்

நெற்றி பெரியதாகவும் தாடை சிறியதாகவும் உள்ளது எனில், உங்களுக்கு முக்கோண வடிவ முகம்.

இத்தகையவர்கள் முடியை முன்னால் வெட்டிக்கொள்வது பொருந்தாது. 'யூ' கட் அல்லது 'வி' கட் செய்து, ஹை பொனிடை போட்டுக்கொண்டால், டிரண்ட்லி லுக் பெறலாம்.

நீள் வட்ட வடிவம்

நீள் வட்ட வடிவ முகம் உடையவர்கள் அதிர்ஷடசாலிகள் என்றே சொல்லலாம். இவர்கள் எல்லா வகையான ஹேர் கட்டையும் முயன்று பார்க்கலாம்.

எந்த விதமான முடி அமைப்பிலும் நீள் வடிவ முகம் அழகாக இருக்கும்.

சதுர முகம்

நெற்றி, தாடை, கன்னங்கள் எல்லாமே சமமாக இருந்தால், உங்கள் முகம் சதுரவடிவ அமைப்பைக் கொண்டது. இவர்களுக்குத் தோள்பட்டை வரை முடியை வைத்துக்கொள்ளும் 'யூ' கட் பொருத்தமாக இருக்கும். அல்லது ஸ்கோயர் கட் முறையை முயன்று பார்க்கலாம்.

வட்ட முகம்

முன் நெற்றியையும் கன்னங்களையும் இணைக்கும் விதமாகக் காதுகளுக்குப் பின்னால் முடிவருவது போன்ற லேயர் கட் பொருத்தமாக இருக்கும். லேயர் கட்டில் 90 டிகிரி லேயர் கட், 1 டிகிரி லேயர் கட், க்ராஜுவேடட் லேயர் கட், யூனிஃபார்ம் லேயர் கட் என நிறைய வகை உள்ளன. 90 டிகிரி லேயர் கட் என்பது, நிறைய லேயர்களாக முடியை வெட்டிக்கொள்வது.

முடி அதிகம் உள்ளவர்கள் இதனைத் தேர்வுசெய்யலாம். 1 டிகிரி லேயர் கட் என்பது, லேயர்கள் குறைவாக உள்ளது.

முடியின் அடர்த்தி குறைவாக உள்ளவர்கள் இதனைத் தேர்வுசெய்யலாம்.

க்ராஜுவேடட் லேயர் கட் என்பது, சில இடங்களில் லேயர்களாகவும், சில இடங்களில் நார்மலாகவும் இருக்கும்.

யூனிஃபார்ம் லேயர் கட் என்பது, எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான லேயர்களாக இருக்கும்.

முடி அடர்த்தியாகவும் நீளமாகவும் இருப்பவர்கள் இதனை யூனிஃபார்ம் கட் தேர்வுசெய்யலாம்.

இரவில் உறங்கும் முன் செய்யக் கூடாதவை

அழகாக திகழ வேண்டுமெனில், இரவில் படுக்கும் முன், ஒரு சில செயல்களை தவறாமல் பின்பற்ற வேண்டும். ஆனால் நம்மில் பலருக்கும் சோம்பேறித்தனம் அதிகம் இருப்பதால், வீட்டிற்கு சென்றதுமே, கைக்கால்களைக் கூட கழுவாமல், அப்படியே சாப்பிட்டு, தூங்கிவிடுவோம். ஆனால் பெண்களை எடுத்துக் கொண்டால், இரவில் படுக்கும் முன் பல்வேறு பராமரிப்புக்களை தங்களின் சருமம் மற்றும் கூந்தலுக்குக் கொடுப்பார்கள்.

அதனால் தான் அவர்களுக்கு சருமம் மற்றும் கூந்தலில் எவ்வித பிரச்சனைகளும் ஏற்படுவதில்லை. இருப்பினும் நம்மை அறியாமல் ஒவ்வொருவரும் சில தவறுகளை இரவில் படுக்கும் போது செய்வோம். அந்த தவறுகளைத் தவிர்த்தால், நிச்சயம் நீங்கள் அழகாக காட்சியளிக்கலாம்.

சில பெண்கள் இரவில் படுக்கும் போது முடியை விரித்துப் போட்டு, அதன் மேல் தூங்குவார்கள். இப்படி முடியின் மீது நாம் தூங்கினால், உராய்வின் காரணமாக மயிர்கால்கள் வலிமையிழந்து, அதனால் பல்வேறு முடி சம்பந்தமான பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும்

இரவில் படுக்கும் முன் ஆல்கஹால் அருந்துவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஒருவேளை அப்படி ஆல்கஹால் அருந்தி படுத்தால், இரவில் தன்னைத் தானே பழுது பார்த்துக் கொள்ளும் சரும செல்களின் செயல்பாட்டில் இடையூறு ஏற்படும். எனவே அழகாகத் திகழ வேண்டுமெனில் இப்பழக்கத்தைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

சிலர் தூங்கும் போது குப்புற படுப்பார்கள். அப்படி குப்புறப் படுத்தால், சருமம் பாதிக்கப்பட்டு, அதிகப்படியான அழுத்தத்தின் காரணமாக மார்பகங்கள் வடிவிழந்து தொங்க ஆரம்பித்து, சுருக்கங்களைப் பெறும். எனவே நேராகவோ அல்லது இடது பக்கம் திரும்பியோ படுக்க பழகுங்கள்.

பகலில் தான் அலுவலகத்தில் ஏசியில் இருந்து சாகிறீர்கள் என்றால், இரவில் கூடவா ஏசி வேண்டும். இப்படி எந்நேரமும் ஏசியிலேயே இருந்தால், சருமசெல்கள் தான் அதிகமாக பாதிக்கப்படும். அதுமட்டுமின்றி, எப்போதும் ஏசியில் இருப்போருக்கு சருமத்தில் உள்ள எண்ணெய் பசை முற்றிலும் வெளியேற்றப்பட்டு, சருமவறட்சி அதிகரித்து, சருமமானது முதுமைத் தோற்றத்தைப் பெறக்கூடும்

எந்நேரமும் மொபைலைப் பார்த்தவாறு இருந்தால், அதனால் கண்கள் பொலிவிழந்து, கருவளையங்களுடன் தான் காணப்படும். மேலும் இரவில் காதலி அல்லது காதலுடன் நீண்ட நேரம் போனில் மொக்கைப் போட நன்றாகத் தான் இருக்கும். ஆனால் போனின் திரை தான் பாக்டீரியாக்கள் அதிகம் இருப்பதால், அதனை முகத்தின் அருகே வைக்கும் போது, பருக்கள் அதிகம் வரும். இவ்வளவு பிரச்சனைகளை தவிர்க்க வேண்டுமெனில், நள்ளிரவு சாட்டிங்கை முதலில் நிறுத்துங்கள்.

தலையணை உறையை மாற்றாமல் இருப்பது அழகாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், வாரம் ஒரு முறையாவது தலையணை உறையை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால், அதில் சேர்ந்துள்ள அழுக்குகளின் மூலமே முகத்தில் பருக்கள் மற்றும் தலையில் பொடுகு வர ஆரம்பித்து விடும்.

லிப்ஸ்டிக் போடும் போது கவனிக்கவேண்டியவை

சிவப்பாக இருப்பவர்களுக்கு எல்லா கலர் லிப்ஸ்டிக்கும் பொருத்தமாக இருக்கும். ஆனால் மாநிறமாகவோ, கறுப்பாகவோ இருப்பவர்கள் சரியான கலர் லிப்ஸ்டிக்கினை தேர்வு செய்தல் அவசியம்.

கறுப்பாக இருப்பவர்கள் மிகவும் லைட்டாகவோ அல்லது டார்க்காகவோ இல்லாமல், பொதுவான கலரில் லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம்.

மாநிறமாக இருப்பவர்கள் இயற்கையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், அழகாக இருக்கும்.

வெயில் காலங்களில் இரண்டு கலர்களை சேர்த்து லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக இருக்கும்.

லிப்ஸ்டிக் போட்டவர்கள் அதிக நேரம் வெயிலில் அலைவதோ, ஒரு லிப்ஸ்டிக்கை ஆறு மாதத்துக்கு மேல் பயன்படுத்துவதோ கூடாது.

முதலில் லிப் லைனரால் உதடுகளை அவுட் லைன் செய்து, பிறகு, அதன் மூலமே உதடுகளை நிரப்பவும். முதலில் லிப்ஸ்டிக்கை தடவி, பிறகு லிப் லைனரால் அவுட் லைனும் செய்யலாம். இம்முறை உதடுகளை மென்மையானதாக, கவர்ச்சியானதாக காட்டும்.

அதிகமாகிவிட்டால்?

திருமணம், திருவிழா ஏதேனும் பார்ட்டி என்று வந்தால் மேக் அப் போட்டு கொண்டு அழகாய் வலம் வருவோம். நாம் போட்டு இருக்கும் மேக் அப் கலைந்து விடாமல் நம்மை அழகாய் காட்டவேண்டும். அழகாய் காட்டுவதற்கு நாம் போட்டு இருக்கும் மேக் அப் கலையாமல் பாதுகாக்க வேண்டும்.

மேக் அப் போடும் போது அதிகமாகிவிட்டாலும் அதனை திருத்தமாக போடுவதில்தான் இருக்கிறது அழகின் ரகசியம். மேக் அப் போட ஆரம்பிக்கும் போதே போதுமான அளவில் மேக் அப் செய்து கொள்ள வேண்டும். மேக் அதிகமாக போட்டுவிட்டோமே என்று நினைப்பவர்கள் சிறிதளவு பஞ்சு எடுத்து அதிகமுள்ள இடங்களில் துடைக்கவும், அந்த இடத்தில் காம்பாக்ட் பவுடர் போட்டு அட்ஜஸ்ட் செய்ய வேண்டும்.

அதிகப்படியான மேக் அப் செய்திருந்தால் அதனை சரி செய்ய பேஷியல் கிளன்சர் சிறந்த பொருளாகும். அதிகமாக இருக்கும் இடங்களில் கிளன்சர் போட்டு கழுவலாம். கன்னத்தில் அதிகமாக ரூஜ் அப்பிவிட்டால் பஞ்சு எடுத்து கன்னங்களில் உருட்டிவிட்டு சிறிதளவு காம்பாக்ட் பவுடர் போட்டு அட்ஜஸ்ட் செய்யலாம். கண் இமைகளின் மேல் ஐஷேடோ அதிகமாவிட்டால் சிறிதளவு கிரீம் போட்டு கழுவி விடலாம். உதடுகளில் லிப்ஸ்டிக் அதிகமாகிவிட்டால் பிளைன் டிஸ்யூ பேப்பர் வைத்து லேசாக உதட்டின் மேல் வைத்து ஒற்றி எடுக்கலாம்.

இவ்வாறு செய்தால் லிப்ஸ்டிக் அதிகமாக போட்டது போல தெரியாது. பண்டிகை, திருவிழா மற்றும் பார்ட்டிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய பின்னர், தூங்கச் செல்வதற்கு முன்பாக மேக்கப்பை நன்றாக கழுவி விடவும். இதனால் சருமத்தின் இயல்புத்தன்மை பாதுகாக்கப்படும். மேக் அப் போட்டபடியே தூங்குவது சருமத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே சருமத்தைப் பற்றி கவலைப்படுபவர்கள் மேக் அப் கலைத்து விட்டு தூங்குவது பாதுகாப்பானது. மேக்கப்பை கழுவி சுத்தம் செய்யும் போது மிகவும் கவனமாக செயல்பட வேண்டும்.

இல்லாவிட்டால் முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்பட்டுவிடும். குறிப்பாக கண்களைச் சுற்றியிருக்கும் மேக்கப்பை கலைப்பதற்கு பேபி ஷாம்புவை பயன்படுத்துவது சிறந்ததாகும். இரண்டு சொட்டு பேபி ஷாம்புவை எடுத்து கைவிரல்களில் தடவிக் கொண்டு, கண் இமை மற்றும் கண்ணைச் சுற்றியுள்ள பகுதிகளில் தடவவும். பின்னர் நன்றாக கண்களை மூடிக் கொண்டு முகத்தை குளிர்ந்த நீரால் கழுவவும். இதன் பின்னர் தூங்கினால் நன்றாக தூக்கமும் வரும் அழகும் பாதுகாக்கப்படும்.

முகப்பரு வந்தால் செய்யக்கூடாதவை!

மன அழுத்தம் இருப்பவர்களுக்கு ஹார்மோன் இன்பேலன்ஸ் காரணமாக முகப்பரு வருவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. மலச்சிக்கல் மற்றும் வயிறு தொடர்பான பிரச்சனை இருப்பவர்களுக்கும், பொடுகு பிரச்சனை உள்ளவர்களுக்கும் முகப்பரு வரும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

பொடுகு மூலம் வரும் பருக்கள் நெற்றி, கழுத்து, முதுகுப் பகுதிகளில் பொறிப்பொறியாக வரும்.

எனவே முதலில் எந்தக் காரணத்தினால் தனக்கு பரு வருகிறது என்பதைக் கண்டுபிடித்தல் மிகவும் முக்கியம். பரு வருவதற்கான அடிப்படைக் காரணத்தை அறிந்து அதற்கான முறையான வழிமுறைகளை மருத்துவர் ஆலோசனை அல்லது அழகுக்கலை நிபுணர்கள் ஆலோசனையோடு துவக்கத்திலே செய்யத் துவங்கினால் நிரந்தரமாக இப்பிரச்சனையில் இருந்து தப்பிக்கலாம்.

★ விரல்களைக் கொண்டு பரு வந்த இடத்தை அடிக்கடி தொடுதல் கூடாது.

★ பருவினை அழுத்தி எடுக்கும் முறை தவறானது.

★ பருவை விரலால் அழுத்தத் துவங்கினால் அந்த இடம் தொற்றுக் குள்ளாகி சருமத்தில் பள்ளம் தோன்றத் துவங்கும்.

பிறகு பள்ளம் விழுந்த தோற்றம் முகத்தில் நிரந்தரமாகிவிடும்.

★ பரு உள்ளவர்கள் எலுமிச்சை, தக்காளி, ஆரஞ்சு போன்ற சிட்ரஸ் அமிலம் அதிகம் உள்ள பழங்களை முகத்தில் ஃபேஸ் பேக்காகப் போடுதல் கூடாது.

முகப்பரு வந்துவிட்டால் சுயமாக எதையாவது செய்து, சருமத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், சரும மருத்துவர்கள் அல்லது அழகு நிலையங்களில் இதற்கென முறையான பயிற்சி பெற்ற அழகுக் கலை வல்லுநர்களை அணுகி, பருவில் இருக்கும் மார்க்கை முறைப்படி மெஷின் வைத்தும் எடுக்கலாம்.

சருமத்திற்கு பூசணி தரும் அழகு

பூசணிக்காயை சமையலுக்கு மட்டுமின்றி சரும அழகுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதிலிருக்கும் வைட்டமின் ஏ, சி மற்றும் ஆன்டி ஆக்சிடெண்டுகள் சரும வளர்ச்சிக்கு புத்துணர்வூட்டும். பூசணிக்காயை துருவலாக்கி அதனுடன் தேன் சேர்த்து முகத்தில் பூசிக்கொள்ள வேண்டும். 15 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவிவிட வேண்டும்.

வாரம் இருமுறை இவ்வாறு செய்துவரலாம்.

எண்ணெய் பசை சருமம் கொண்டவர்கள் 3 டேபிள்ஸ்பூன் பூசணி சாறுடன் 2 டேபிள்ஸ்பூன் கடலை மாவு, தலா ஒரு டேபிள்ஸ்பூன் எலுமிச்சை சாறு, மோர் ஆகியவற்றை கலந்து பிசைந்து முகத்திலும், கழுத்திலும் பூசி வரலாம். அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவிவிட வேண்டும்.

சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி பளிச் தோற்றத்தை பெறுவதற்கு பூசணி சாறுடன் தயிர், முட்டை சேர்த்து பயன்படுத்த வேண்டும். ஒரு டேபிள்ஸ்பூன் பூசணிக்காய் சாறுடன் முட்டையின் வெள்ளைக் கரு மற்றும் 1 டேபிள்ஸ்பூன் தயிரை கலந்து முகம் மற்றும் கழுத்து பகுதியில் பூசி மசாஜ் செய்ய வேண்டும். 20 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விடலாம். வாரம் இரண்டு முறை செய்துவந்தால் சருமம் அழகாகும்.

முயல் தன்னுடைய கழிவையே சாப்பிடுவது ஏன்?

தாவர உணவைச் சாப்பிடக் கூடியது முயல். தாவரங்களிலுள்ள நார்ச்சத்து, செல்லுலோஸ் போன்றவை எளிதில் ஜீரணமாவதில்லை. அதனால் கழிவிலும் சத்துகள் இருக்கும்.

உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போது, உடலில் சக்தி குறைவாக இருப்பதாகத் தோன்றும்போது முயல்கள் தங்களது கழிவைச் சாப்பிட்டு, சக்தியைப் பெற்றுக்கொள்கின்றன.

அறிவியல் ஆயிரம்

காற்றில் நைட்ரஜன் 78.08 சதவீதமும், ஆக்சிஜன் 20.95 சதவீதமும் உள்ளன. இவை தவிர ஆர்கான், கார்பன் டை ஆக்சைடு, நியான், ஹீலியம், மீத்தேன், கிரிப்டான், நைட்ரஜன் ஆக்சைடு, ஹைட்ரஜன், ஜெனான், ஓசோன் ஆகிய வாயுக்களும் காற்றில் கலந்திருக்கின்றன.

அதுமட்டுமல்ல, நீராவியும், தூசு தும்புகளும், மாசுபாடுகளும் கலந்திருக்கின்றன. இவை மட்டும் இடத்துக்கு இடம் மாறுபடும். நாம் காற்றை மூக்கு வழியே சுவாசித்ததும், அது மூச்சுக் குழாய் வழியே நுரையீரலை அடைகிறது. நுரையீரலில் மரங்களின் வேர் போல விரிந்திருக்கும் மிக, மிக நுண்ணிய குழாய்களை காற்று அடைந்ததும், அங்கு வேதியியல் மாற்றத்தால் ஆக்சிஜன் மட்டும் சிறிதளவு நம் ரத்தத்திலுள்ள ஹீமோகுளோபினுடன் கலக்கிறது. பிறகு, ஆக்சிஜன் தோய்ந்த ரத்தம் உடலெங்கும் உள்ள செல்களுக்கு அனுப்பப்படுகிறது. காற்றில் அதிகமாக உள்ள நைட்ரஜன், உடலில் எதனுடனும் வினை புரியாத தன்மை உள்ளது.

எனவே, எந்த அளவுக்கு நைட்ரஜன் நம் சுவாசத்தில் உள்ளே போகிறதோ, அதே அளவு வெளிமூச்சு வழியே வெளியேறுகிறது. இதைத் தவிர கார்பன் டை ஆக்சைடும் வெளியேற்றப்படுகிறது.

கண்ருபிடியுங்கள் பார்க்கலாம்

மேலே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள நாடு. உலகின் மிகப் பெரிய 11-வது நாடு.
2. இந்த நாட்டின் முந்தைய பெயர் ஸைர் (Zaire).
3. இதன் தலைநகரம் கின்ஷஸா. இதுவே இந்த நாட்டின் மிகப் பெரிய நகரம்.
4. ஆட்சி மொழி பிரெஞ்சு என்றாலும் ஸ்வாஹிலி மொழியைப் பெரும்பாலானவர்கள் பேசுகிறார்கள்.
5. 2001-ம் ஆண்டிலிருந்து இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக ஜோசப் கபிலா இருக்கிறார்.
6. இயற்கை வளம் கொட்டிக் கிடக்கும் நாடு. நிலையற்ற அரசாங்கக் கொள்கைகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன.
7. ஜூன் 30, 1960-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.
8. வைரம், செம்பு, கச்சா எண்ணெய், காபி, கோபால்ட் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்.
9. இந்த நாட்டில் பாயும் நதி ஆப்பிரிக்க கண்டத்தின் இரண்டாவது நீளமான நதி. இந்த நதியின் பெயரே இந்த நாட்டின் பெயர்.
10. இங்குள்ள மழைக் காடுகளில் மனிதக் குரங்கு, மலை கொரில்லா, ஒகபி, வெள்ளைக் காண்டாமிருகம் போன்ற அரிய விலங்கினங்கள் காணப்படுகின்றன.

விடை: காங்கோ ஜனநாயகக் குடியரசு

குழந்தைகள் நீண்ட நேரம் தூங்கலாமா?

அளவுக்கு அதிகமான தூக்கம் நிச்சயம் உடல் நலத்தைப் பாதிக்கும். மனிதர்கள் தூங்குவதற்காக மட்டுமே பிறந்தவர்கள் அல்ல. நல்ல உணவை மூன்று வேளை சாப்பிடுகிறோம். அதற்கு ஏற்றார்போல் வேலை செய்து கலோரிகளை எரித்துவிட வேண்டும். கோலா போன்ற பிராணிகள் குறைந்தது 20 மணி நேரம் தூங்குகின்றன. காரணம், அவை சாப்பிடும் உணவில் மிகக் குறைந்த அளவு சக்தியே கிடைக்கும். வேகமாக ஓடியாடி வேலை செய்யத் தேவையான சக்தி இருக்காது.

அதனால் கிடைக்கும் சக்தியைக் கொண்டு, குறைவான நேரம் விழித்திருந்து, மீதி நேரத்தைத் தூங்கியே கழிக்கின்றன. மனிதர்களில் குழந்தைகள் 10 மணி நேரமும் உங்களைப் போன்ற மாணவர்கள் 8 மணி நேரமும் தூங்கினால் போதுமானது. தினமும் நீண்ட நேரம் தூங்கினால் நீரிழிவு, இதயக் கோளாறு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதேபோல மிகக் குறைவான நேரம் தூங்குவதும் நல்லதல்ல. 8 மணி நேரம் தூங்கி, ஆரோக்கியமாக இருங்கள்.

பாம்புக்கு தடை விதித்த ராஜா

பறம்பூர் நாட்டு ராஜாவான பழையனுக்குப் பாம்பு என்றால் அப்படி ஒரு பயம். அதனால் அவருடைய அரண்மனையைச் சுற்றி அகழி கட்டி, பாதுகாப்பாக இருந்தார். யாராவது அவரிடம் பாம்பு என்று சொல்லி விட்டாலே போதும். அப்படியே துள்ளிக் குதித்து ஓடுவார். இத்தனைக்கும் பாம்பை அவர் நேரில் பார்த்ததில்லை. அதனால் மந்திரிகள் யாரும் ராஜா பழையனிடம் பாம்பு என்ற வார்த்தையை உச்சரிக்கக்கூட மாட்டார்கள். ஆனால் அறிவியல் மந்திரி மட்டும் சொன்னார்:

இயற்கையில் பாம்பு, பல்லி, பூச்சி, புழு, மனிதன் என எல்லோரும் சமமானவர்கள். ஒருவர் பாதையில் ஒருவர் குறுக்கிடாமல் இருந்தால் போதும். விபத்துகள் நேராது.

அவர் சொன்னதை யாரும் கேட்கவில்லை. அவர் அரண்மனையிலிருந்து வெளியேறி விட்டார். பறம்பூர் விவசாய நாடு. மலையடிவாரத்தில் இருந்தது. எனவே அடிக்கடி காட்டிலிருந்து யானை, மிளா, மரைமான், காட்டுப்பூனை, நரி, காட்டு நாய் என்று நாட்டுக்குள் வந்துவிடுவது உண்டு. மக்கள் அந்த விலங்குகளைத் தாரை தப்பட்டை அடித்து, காட்டுக்குள் விரட்டி விடுவார்கள். ராஜாவோ மந்திரிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள். அவர்கள் எல்லோரும் பத்திரமாக அரண்மனைக்குள் இருப்பார்கள்.

ஒரு நாள் ராஜா தன்னுடைய மாளிகைப் பூந்தோட்டத்தில் நடந்துகொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த சரக்கொன்றை மரத்தின் கிளையில் ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. பச்சை நிறத்தில் அழகாக இருந்தது. அவர் அந்தக் கயிற்றைப் பிடித்து இழுத்தார். கையில் வழுவழுவென்று நெளிந்தது. அவ்வளவுதான்! பாம்பு, பாம்பு என்று அலறினார். கைகளை உதறினார். அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். அவர் உதறியதில் பாம்பு எங்கேயோ போய் விழுந்து விட்டது.

ராஜா பழையன் மறுநாள் மாலைதான் கண்விழித்தார். எழுந்ததும் கேட்ட முதல் கேள்வி, பாம்பு எங்கே?.

காட்டு மந்திரி உடனே, அதை அப்பவே கொன்னு புதைச்சாச்சு! என்று சொன்னார்.

பறம்பூர் நாட்டில் ஒரு பாம்பு கூட இருக்கக் கூடாது. அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்று ஆணையிட்டார் ராஜா.

அதைக் கேட்ட மந்திரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

முக்கிய மந்திரி நாடு முழுவதும் பாம்புகள் ஊருக்குள் வராமலிருக்க யாகம் நடத்தச் சொன்னார். உடனே தெருவுக்குத் தெரு ஆல மரக்குச்சிகளையும் அரசமரக் குச்சிகளையும் போட்டு, லிட்டர் கணக்கில் நெய்யை ஊற்றி, மந்திரங்களைச் சொல்லி யாகங்களை நடத்தினார்கள். புகை மூட்டத்தில் பொந்துகளில் ஒளிந்திருந்த பாம்புகள் வெளியே வந்து தெருக்களில் அலைய ஆரம்பித்தன. யாகம் நடத்தியவர்கள் அலறியடித்து ஓடி விட்டனர். அவர்கள் ஓடுவதைப் பார்த்த பறம்பூர் நாட்டு மக்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். இப்படி முக்கிய மந்திரி கஜானாவில் பாதியைக் காலி செய்தார்.

காட்டு மந்திரி பாம்பாட்டிகளைக் கொண்டு பாம்புகளைப் பிடிக்கப் போகிறேன் என்று ராஜாவிடம் சொன்னார். பாம்பு பிடிப்பவர்கள் தெருக்களில் மகுடி ஊதினார்கள். அவர்களுக்கு முன்னால் பத்துப் பாம்புகள் தலையசைத்து ஆடின. பாம்பு பிடிப்பவர்கள் கொண்டுவந்த சாக்குப்பையில் அந்தப் பாம்புகளைப் பிடித்து அடைத்தார்கள். மறுநாளும் அவர்கள் வேறு தெருவுக்குப் போய் ஊதினார்கள். அதே பத்துப் பாம்புகளைப் பிடித்தார்கள். இன்னொரு தெருவுக்குப் போனார்கள். அங்கேயும் அதே பத்துப் பாம்புகளைப் பிடித்தார்கள். இப்படிப் பத்துப் பாம்புகளை வைத்து ஆயிரம் பாம்புகளைப் பிடித்ததாகக் கணக்குக் காட்டினார் காட்டு மந்திரி.

சாலை மந்திரி சும்மாயிருப்பாரா? ஊரில் உள்ள தெருக்களில் எல்லாம் பாம்புக் கோயில்களைக் கட்டினார். மூன்று வேளையும் பூஜை நடத்தச் சொன்னார். அதில் கஜானாவிலிருந்து கால்வாசியைக் காலி செய்தார்.

விவசாய மந்திரி, விவசாயிகள் இனிமேல் தங்களுடைய நிலங்களில் விதைக்கக் கூடாது. எந்தப் பயிரையும் பயிர் செய்யக் கூடாது. பயிர் செய்தால்தானே தவளைகளும், எலிகளும், பூச்சிகளும், பறவைகளும் வருகின்றன. பின்னாலேயே அவற்றைத் தின்பதற்காகப் பாம்புகளும் வருகின்றன. எனவே பயிர் செய்யாமல் நிலத்தைத் தரிசாகப் போடுங்கள் என்று ஆணையிட்டார். மக்கள் மன்றாடினார்கள். விவசாயம் இல்லை என்றால் மக்களுக்கு உணவு கிடைக்காது.

அவர்கள் மட்டும் இல்லை ராஜா, மந்திரிகள், மக்கள் யாருமே வாழ முடியாது. என்றார்கள்.

உணவு தானியங்களை நாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்று பதில் சொன்னார் ராஜா.

பறம்பூர் நாட்டில் யாரும் விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயம் செய்தால் தண்டனை. உணவு கிடைக்கவில்லை. மக்கள் அரண்மனைக்குச் சென்று போராட்டம் செய்தனர். ராஜா பழையனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அந்தப் போராட்டத்துக்குப் பழைய அறிவியல் மந்திரி தலைமை தாங்கி நின்றார்.

வேறுவழியில்லாமல், என்ன செய்ய வேண்டும் அறிவியலாளரே? என்று ராஜா பழையன் கேட்டார்.

அறிவியல் மந்திரி உடனே, பாம்புகள் மிகவும் குறைவான அறிவுத்திறன் கொண்டவை ராஜா. அவற்றுக்குக் காது கேட்காது. எந்த உணவையும் மென்று தின்கிற மாதிரி அவற்றின் வாயோ, தொண்டையோ கிடையாது. உணவுக்காகவும் பாதுகாப்புக்காகவும் மட்டுமே அவை கடிக்கும். ஞாபக சக்தி கிடையாது. எனவே பழிவாங்க, ஞாபகம் வைத்திருக்கத் தெரியாது. எல்லாப் பாம்புகளுக்கும் விஷம் கிடையாது. நாம் அதன் வழியில் குறுக்கிடக் கூடாது. அவையும் நம் வழியில் குறுக்கிடாது. இயற்கையில் யாரும் யாரைப் பார்த்தும் அச்சப்படத் தேவையில்லை என்று விளக்கமாகச் சொன்னார்.

பறம்பூர் நாட்டு ராஜா பழையனுக்குப் புரிந்துவிட்டது. பிறகு பறம்பூர் நாட்டு மக்களும் பாம்புகளும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

அரீஷ் ஹரன்

இன்று அதிகமாக உலகில் கஷ்டப்படுபவர்கள் சிறுவர்கள் தான். பல சிறுவர்கள் பட்டினியால் வாடுகிறார்கள். தாய், தந்தையை இழந்து அனாதைகளாக நிற்கும் சிறுவர்கள் ஏராளம் . அன்றாடம் உணவுண்ண பிச்சை ஏந்தி பிழைக்கும் நிலைமை. அடியாட்கள் சொல்லும் வேலைகளை செய்து அவர்கள் கொடுப்பதை உண்ணும் நிலைமை இப்படி நீண்டு கொண்டே செல்கிறது சிறுவர்களின்இன்றைய நிலைமை .

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். நாளைய எதிர்காலம் நன்றாக அமைய இன்றையசிறுவர்களை நல்ல ஒரு பிரஜையாக உருவாக்க வேண்டும் .ஒவ்வொரு ஆண்டும் ஒக் டோ பர் மாதம் 01 ஆம் திகதி உலக சிறுவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

நாளைய தலைவர்கள் தான் இன்றைய சிறுவர்கள் அவர்களுக்கு போதிய கல்வியறிவை புகட்டுவதன் மூலம் தான் எதிர்காலத்தில் அவர்கள் நல்ல பிரயைகளாக வாழ முடியும் . எல்லா பிள்ளைகளும் நல்லவர்கள் ஆவதும், தீயவர்கள்ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்று சொல்கிறார்கள். அதை தீர்மானிப்பது அவர்களின் குடும்ப சூழ்நிலையும் , வீட்டு சூழ்நிலையும் தான். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்ல பண்புள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

சிறுவர்கள் துன்புறும் சம்பவங்கள் எல்லா நாடுகளிலும் நடக்கிறது தான் . ஆனால், சில வெளிச்சத்துக்கு வருகின்றன. சில வருவதில்லை . சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவன் கொண்டு வரும் பணத்தை தந்தை பறித்து மது அருந்த கொண்டு போவதும், சிறுவர்களை கடத்தி பெற்றோர்களிடம் கப்பம் பெறுவதும் இப்போதெல்லாம் நடக்கிறது .

அறியா வயது, அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் என்னதான் செய்ய முடியும் . பெற்றோர்சிறுவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை பழக்க வேண்டும் . சிறு வயதிலே அவனை கண்டித்து வளர்க்க வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்களும் பிள்ளைகளை அன்புடனும், கண்டிப்புடனும் பாடங்களை சொல்லி கொடுத்து நல்ல விடயங்களை கற்பித்து கொடுக்க வேண்டும் .

நாளைய தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் தான் உண்டு. நீங்கள் மாணவர்களுக்கு கற்பித்து கொடுக்கும் விதத்தில் உள்ளது. அதே போல் பெற்றோர்களின் கையிலும் உள்ளது. ஒருவன் நல்லவனாவதும், கெட்டவனாவதும்

அவன் இருக்கும் சூழல், குடும்ப நிலைமை , அவனுடைய நண்பர்கள் போன்ற காரணங்கள் ஆகும் .

இன்று சர்வதேச ரீதியாக பல்வேறு வகைகளில் சிறுவர்கள் பாதிப்பை அடைந்து வருகிறார்கள். பாடசாலை இடைவிலகல், வறுமை, போஷாக்கின்மை, பாலியல் வன்முறைகள், தொழிலுக்குச் செல்லும் இடத்தில் கொடுமைகள், எனச் சிறுவர்களின் பாதிப்பு நீண்டு கொண்டே செல்கிறது . மாமனால் கொடுமை , தந்தையால் கொடுமை , உற்றார் உறவினர்களால் கொடுமை

இன்று வறுமையின் காரணமாக தாய்மார்கள் வெளியூர் வேலைக்குச் செல்வதால் சிறுவர்கள் அந்நியரால் பல்வேறு கொடுமைகளை அனு பவிக்கின்றனர். போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் விற்பனை அல்லது அந் நட வடிக்கைகளில் ஈடு படுவதில் இருந்து விலகியிருப்பதற்கான உரிமை சிறுவர்களுக்கு உண்டு. பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுதல், அல்லது பாலியல் ரீதியாகத் தவறான பயன்களைப் பெறுதல், மற்றும் சட்டவிரோத பாலியல் நடவடிக் கைகளுக்காக தூண்டப் படுதல் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

சிறுவர்களுக்கான பல தொண்டு நிறுவனங்கள் பல உதவிகள் செய்தாலும் அவை எல்லோரையும் சென்றடைவதில்லை . வசதி உடைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சின்ன வயதிலே சேமிப்பு கணக்கை ஆரம்பித்து மாத, மாதம் பணத்தை வைப்பில் இடுகின்றனர். அவர்கள் வளர்ந்ததும் அவர்களின் தேவைக்கு பயன்படும்படி பெற்றோர் வைப்பில் இடுகின்றனர். இது ஒரு நல்ல விடயம். ஆனால் எல்லா பெற்றோர்களும் வசதி உடைய வர்களா ? இல்லையே .

போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் விற்பனை அல்லது அந் நட வடிக்கைகளில் ஈடு படுவதில் இருந்து விலகியிருப்பதற்கான உரிமை சிறுவர்களுக்கு உண்டு. பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுதல், அல்லது பாலியல் ரீதியாகத் தவறான பயன்களைப் பெறுதல், மற்றும் சட்டவிரோத பாலியல் நடவடிக் கைகளுக்காக தூண்டப் படுதல் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

தந்தை குடிப்பவராக, சிகரட் பத்துபவரக இருந்தால் அதை வீட்டில் பிள்ளைகளுக்குமுன்னால் குடிப்பதை நிறுத்தவேண்டும் . சிறுவர்களை கூடுதலாக கண்டித்தும் வளர்க்க கூடாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கூடுதலாக ஏசுவது,அடிப்பதை தவிர்த்து நல்ல புத்திமதிகளை கூறி , அன்பாக பிள்ளைகளை வளர்க்க வேண்டும் . சிறுவர்களை பெற்றோர் வேலைகளுக்கு அமர்த்துவதை தவிர்க்க வேண்டும் .

அவர்களை கஷ்டப்பட்டாவது படிக்க வைக்க வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிழைகளை எவ்வளவு கஷ்டப்பட்டாவது படிக்க வைக்கிறார்கள். எதிர்காலத்தில் தங்கள் பிள்ளைகள் தன செலவுகளுக்கு நிக்க வேண்டும். பிறரை நம்பி இருக்க கூடாது .என்று நினைத்து கஷ்டப்பட்டாவது தமது பிள்ளைகளை படிக்க வைப்பார்கள். ஆனால் சில பெற்றோர் பிள்ளைகளை சிறு வயதிலேயே தங்கள் கஷ்டத்தின் நிமித்தம் வேலைக்கு விடுகிறார்கள்.

நாம் பட்ட கஷ்டம் நம்மோடு போகட்டும். பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரவேண்டுமென பெரும் பாலான பெற்றோர் நினைக்கின்றனர்.அதை புரிந்து கொண்டு பிள்ளைகள் பெற்றோரின் கனவுகளை நனவாக்கவேண்டும்.தம் பிள்ளைகளை உலகம் சான்றோன் என போற்ற வேண்டுமென தான் எல்லா பெற்றோரும் விரும்புவர். சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். சிறுவர்களை கடத்தல், கப்பம் பெறுதல் , சில சட்டவிரோத செயல்களில்சிறுவர்களை ஏடுபடுத்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும். இவற்றுக்கு துணை போபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எல்லா நாடுகளிலும் சிறுவர்களுக்கு எதிரான சட்டதிட்டங்கள் இருக்கின்ற போதும் அவை பேரளவில் இருக்கின்றனவே தவிர அவை அமுல்படுத்த படுகின்றனவா? இல்லையே. அதுதான் இவ்வளவு பிரச்சினைகளுக்கும் வழி கோலுகின்றன . இவற்றை தடுக்க வேண்டும் . நல்ல சிறுவர்களை இந்த சமூகத்தில் உருவாக்கி நல்ல பிரைஜைகளாக உருவாக்க வேண்டும் . அப்போது தான் நாட்டில் பல நல்ல பிரைஜைகளை உருவாக்க வேண்டும்.

நாம் அன்று சிறுவர்களாக இருந்தோம். இன்று பெரியவர்கள் ஆனோம். நாளை முதியவர்கள் ஆவோம். இதுதான் இயற்கையின் நியதி. இப்படித் தான் நடக்கும். இதுதான் மனித வாழ்க்கை சுற்று வட்டம். சிறுவர்கள் அனைவருக்கும் சிறுவர்தின வாழ்த்துக்கள்.

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் சப்தம , களத்திர ஸ்தானத்தில் ரவி, புதன், குரு சஞ்சரிப்பதனால் களத்திர சுகம், இல்லற நலம் நன்கு அமையும். கணவன் - மனைவி அந்நியோன்யம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு அமையும். ஆசிரியர், மாணவர் உறவு வளரும்.

இவ்வாரம் சத்துரு ஸ்தானத்தில் சுபர் சஞ்சரிப்பதனால் சத்துரு ஜெயம், ரோக நிவர்த்தி உண்டு. சிவில் வழக்கு விடயங்களில் ஜெயமளிக்கும். சப்தமத்தில் சனி பகை பெறுவதால் புருஷன், மனைவி இடையிலேயே கருத்து வேறுபாடுகள் இடையிடையே தோன்றி மறையும். செய்தொழில் விருத்தி, இலாபம் சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலைப்பழு குறையும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தலாம்.

இவ்வாரம் மாதுரு பாவத்தில் குஜன், சுக்கிரன் புத்திர ஸ்தானத்தில் குஜன், ரவி, புதன் சஞ்சாரம் செய்வதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், குடும்ப சேமம் உண்;டாகும். செய்தொழில் விருத்தி, நிதி வசதிகள் உண்டாகும். வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக செல்வாக்கு அடைவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நன்மை தரும்.

இவ்வாரம் தனலாபம், பொருள் வருவுண்டு. மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றமடைந்து புது உத்வேகம் அடைவர். விவசாயிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். விளைப்பொருட்களை சந்தைப் படுத்தலினால் அதிக லாபம் ஈட்டமுடியும்.

தன பாவத்தில் குஜன், வெள்ளி சஞ்சரிப்பதனால் தனம், பொருள், மனை, வாகன , குடும்ப விருத்தி உண்டாகும். வெள்ளி சுகத்தால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமடைந்து திருமணப் பேச்சுக்கள் தொடரும். சிலருக்கு வெளிகூட்டு சம்பந்தம் ஏற்படும். உத்தியோகப் பெண்களும் தத்தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். விவசாயிகளுக்கு அரச மானியம் உடன் வந்து சேரும்.

ஜென்மச் செவ்வாய் உஷ்ண ரோகத்தை உண்டாக்கும். தேகாபிமானம் அவசியம். தன ஸ்தானத்தில் சுபர் சஞ்சாரம் செய்வதால் நல்ல வருமானம் ஏற்படும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் பதவி செல்வாக்கு அடைவர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் அடைவர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாயம் பெறுவர். விவசாயிகளுக்கு அரச மாணியம் இலகுவில் கிடைக்கும்.

இவ்வாரம் ஏழரைச்சனி கடைக்கூறுத் தோஷமும், ஜென்மத்து வியாழன், ரவி தோஷமும் கண்டக ராகு, கேது தோஷமும் நடைபெறுவதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் , கொள்முதல்களையும் கட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக ஒத்துழைப்புகளை பெறமுடியாது.

இவ்வாரம் ஜென்மச் சனி(ஏழரை நடுகூறு) தோஷம் , 12ல் விரய வியாழ தோஷம் இருப்பதால் கிரக சாந்தி செய்ய வேண்டும். இவ்வாரம் பண விரயம், வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படும். அடிக்கடி பயணங்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் வேலைஅழுத்தம் உண்டு. வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வியாபாரம் நன்மை தராது. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை.

ஜீவன கர்ம பாவத்தில் குஜன், வெள்ளி சஞ்சரிப்பதனால் செய்யும் தொழிலால் இலாபம், மேன்மை கிட்டும். நிதிவசதிகள் வங்கியிருப்புக்கள் மன நிறைவைத் தரும். ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேலையில் கிடைக்கும்ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.

இவ்வாரம் ஜீவன பாவத்தில் சுபரல் சஞ்சரிப்பதால் தொழில் உயர்வு,மேன்மை, உண்டாகும். ஈடுபடும் கருமம், காரியங்கள் யாவும் ஜெயம் அளிக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றமடைவர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். விவசாயிகள் . விளைப் பொருட்களை சந்தைப் படுத்தலினால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர்.

இவ்வாரம் அஷ்டமத்தில் சுபர் சஞ்சரிப்பதால் ஆயுட் பலம் உண்டாகும். தர்ம, புண்ணிய பாவத்தில் புதன், ரவி,குரு சஞ்சரிப்பதால் தர்ம புண்ணிய காரியங்களில் ஈடுபாடும், நோன்பு விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் முதலியன ஏற்படும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழில் முன்னேற்றத்தால் நல்ல ஆதாயம் ஈட்ட முடியும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவி அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.

சப்தம களத்தில பாவத்தில் வெள்ளிழ, குஜன் சஞ்சரிப்பதனால் அஷ்டமத்தில் சுபர் சஞ்சரிப்பதனாலும் களத்திர சுகம், இல்லற நலம் கிட்டும். பெண்களின் மாங்கல்ய ஸ்தானம் பலமாக அமைவதனால் கணவன், மனைவிடையே கருத்து ஒற்றுமை வலுவாகும். கன்னியர்களின் காதல் விவகாரம் கைக்கூடி திருமணப் பேச்சுக்கள் தொடரும். வியாபாரிகள், விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர்.

தோஷம் போக்கிய முருகன்!

பரமேஸ்வரன் ஆனாலும் அல்லது பரந்தாமன் ஆனாலும் அவர்களும் தோஷம் நீங்க பரிகாரம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கந்தசஷ்டியின் போது முருகப்பெருமான் சூரசம்ஹாரம் செய்து, பின் மிகவும் களைப்பாகி சோர்ந்து விடுகிறார். கொல்வது என்பது யாராக இருந்தாலும் பிரும்மஹத்திதோஷம் பிடிக்கும். பரமேஸ்வரன் ஆனாலும் அல்லது பரந்தாமன் ஆனாலும் அவர்களும் தோஷம் நீங்க பரிகாரம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முருகனும் பிரும்மஹத்தி தோஷம் போக்க கீழ்வேளூர் என்ற இடத்திற்கு வந்தார். இது நாகப்பட்டினம் அருகில் இருக்கிறது. அழகான ஆறு ஒன்று அங்கு ஓடுகிறது.

முருகன் இந்தத் தலத்திற்கு வந்து தன் வேலை ஊன்ற, அந்த இடத்திலிருந்து புனிதநீர் வெளி வந்தது. அதுவே தீர்த்தமானது. அந்த தீர்த்தத்தில் நீராடி, பின் தியானத்தில் அமர்ந்தார்.

அப்போது சூரசம்ஹாரக் காட்சிகள் அவர் தியானத்தைக் கலைத்தன. உடனே முருகன் தன் அன்னை உலகமாதாவை வணங்கினார். பின் வேண்டிக் கொண்டார், தாயே, உலக நன்மைக்காக சூரசம்ஹாரம் செய்து விட்டு வந்தேன், ஆனாலும் என் மனம் நிம்மதி இல்லாமல் தவிக்கிறது, தாங்கள் தான் அருள் புரிய வேண்டும் என்றார்.

உடனே பார்வதி தேவி இத்தலத்தின் எல்லா திசைகளிலும் தன் உருவத்தைப் பரப்பி ஒரு வேலி போல் போட்டு நின்றாள். அவள் பெயர் அஞ்சு வட்டத்தம்மன் ஆயிற்று. அவள் முழு வட்டமாக தன் உருவத்தை பரப்பி நின்று முருகனைக் காத்ததால் இந்தப் பெயர்.

இதனால் பிரும்மஹத்திகள் ஓடிப் போயின. முருகனும் தவத்தை முடித்து தோஷம் நீங்கி அருள் பெற்றோர். இந்த இடம் கீழ்வேளூர் என்று ஆனது.

தண்ணீர் சிக்கனம் அவசியம்

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துபவர்களாகவும், இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் நாம் இருப்போம், இறையருளைப்பெறுவோம்!

சிக்கனம் என்பது பணத்தை மட்டும் குறிப்பதல்ல மாறாக, அல்லாஹ்வின் அருட்கொடைகளை பயன்படுத்துவதிலும் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில், பணம் மற்றும் பொருட்களை சேமிப்பதைவிட இயற்கை வளங்களை பாதுகாப்பதும் அவற்றை சிக்கனமாக செலவு செய்வதும் நம் அனைவரின் கடமையாக இருக்கிறது.

தண்ணீர், உணவு பண்டங்கள், இயற்கை வளங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தேவைக்கு உட்பட்டே செலவு செய்ய வேண்டும்.

'மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்காக வரலாம்' என்பது அறிஞர்கள் கருத்தாக உள்ளது.

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்: உண்ணுங்கள் பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில், அல்லாஹ் அளவு கடந்து வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை (திருக்குர்ஆன் 7:31)

தேவைக்கு அதிகமாக செலவு செய்வதும் வீண் விரயமாகவே கருதப்படும். இன்று நாம் பார்க்கிறோம், நம் நாட்டில் திருமணம் போன்ற விசேஷங்களில், அளவுக்கு அதிகமான உணவுகள் வீணடிக்கப்படுகின்றன. சாப்பிடும் தட்டுகளில் ஒருபக்கம் வீணாகிறது என்றால், மறுபக்கம், உணவு பரிமாற தயாராகும் பகுதிகளில் உணவுப் பொருட்கள் வீணாகிறது.

உணவு வீணாவதைப்பற்றி எவ்வித கவலையும் யாருக்கும் இல்லை. ஆனால், ஒருவேளை உணவு இன்றி இந்த உலகத்தில் வாழ்பவர்கள் எண்ணிக்கை பல கோடிகளை தாண்டுகிறது.



உணவு தயாரிப்பவர்களுக்கும், பரிமாறுபவர்களுக்கு உணவு சிக்கனத்தைப்பற்றி நாம் அறிவுறுத்த வேண்டும். அரிசி தட்டுப்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு என இயற்கை வளங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வரு கிறோம். எனவே, நாம் மிக கவனமாக இயற்கை வளங்களை கையாள வேண்டும்.

இஸ்லாம் ஒருபோதும், வீண்விரயத்தை விரும்புவதில்லை. அடுத்த தலைமுறைக்கு நாம் சொத்துகளை விட்டுச் செல்ல வேண்டும். சொத்து கள் என்பது பணம் மற்றும் வீடுகள் மட்டுமல்ல இயற்கை வளங்களும் தான்.

தன் வாரிசுகளுக்கு சொத்து சேர்த்து வைப்பதை இஸ்லாம் ஆதரிக்கிறது. இது குறித்து முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறும்போது, 'உங்கள் பிள்ளைகளை யாசகர்களாக விட்டுச் செல்வதைவிட செல்வந்தர்களாக விட்டுச் செல்வது மேலானது' என்றார்கள்.

இது நம் குடும்ப உறுப்பினர்களுக்கானது என்று மட்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது, வருங்கால சந்ததிகளை எவ்வகையிலும் ஏழைகளாகவோ அல்லது இயற்கை வளங்களை பயன்படுத்த இயலாதவர்களாகவோ ஆக்கிவிடக்கூடாது. இது ஒரு மிகப்பெரிய சமுதாய பொறுப்பாகும்.

எனவே, இயற்கை வளங்களை சிக்கனமாக பயன்படுத்தி அடுத்த சந்ததிகளும் பயன்படுத்த விட்டுக்கொடுப்போம்.

அல்லாஹ் தன் திருமறையில், 'காற்றை சூல் கொண்டதாக நாமே அனுப்புகிறோம். பின்னர் வானிலிருந்து நீர் பொழிவித்து அதனை உங்களுக்கும் புகட்டுகிறோம், நீங்கள் அதனை சேமித்து வைப்போராய் இல்லை' (15: 22) என்று குறிப்பிடு கிறான்.

தண்ணீரை சேமிக்காததால் இறைவனின் கோபமும் நம்மீது விழுகிறது. இறைவனை வணங்குவதற்கு முன்பு செய்யப்படும் 'ஒளு' கை, கால்களை தண்ணீரைக்கொண்டு கழுவி சுத்தம் செய்வது) செய்யும்போது கூட தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது அங்கிருந்த தோழர் ஒருவர், 'தண்ணீர் தான் நிறைய இருக்கிறதே' என்று கூற, அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'பொங்கி வழியும் நதிக்கரையாயிருந்தாலும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்' என்று அருளினார்கள் என்றால், தண்ணீர் சிக்கனத்தின் அவசியத்தை நாம் உணர வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தண்ணீர் அருந்தியபின், 'இறைவா! நீயே புகழுக்குரியவன், உன்னுடைய தனிப்பெரும் கருணையால்தான் நீ எங்களுக்கு சுவையான தண்ணீரை வழங்குகின்றாய். எங்கள் பாவங்களை நீ மனதில் கொண்டிருப்பாயானால், நீ உப்பு கரிக்கும் நீராகவும், கசப்பான நீராகவும் ஆக்கியிருப்பாய்' என்று பிரார்த்தனை செய்யும் வழக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துபவர்களாகவும், இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் நாம் இருப்போம், இறையருளைப்பெறுவோம்!

கர்த்தரை நம்பினால் அற்புதங்களை காணலாம்

கர்த்தருடைய ஆவியானவர் தாமே உங்களோடிருந்து உங்கள் சகல சிறையிருப்புகளையும் மாற்றி நீங்கள் இழந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஆரோக்கியத்தையும் மீண்டும் உங்களுக்கு நிச்சயம் தருவார்.

இன்றைக்கு பலவிதமான 'சிறையிருப்புகளில்' அநேகர் சிக்குண்டு எவ்வாறு வெளியே வருவது என வழி தெரியாமல் திகைக்கின்றனர்.

'சிறையிருப்பு' என்றால் என்ன?

வியாதி, பொருளாதார நெருக்கடி, வேலையில்லா திண்டாட்டம், பிசாசினால் வரும் போராட்டங்கள் இவை அனைத்தும் சிறையிருப்புகளே. இச்செய்தியை வாசிக்கிற உங்களுக்குள்ளும் சில சிறையிருப்புகள் காணப்படலாம். ஆனால் அவைகள் எல்லாவற்றிலுமிருந்து கர்த்தர் உங்களை நிச்சயம் விடுதலையாக்குவார்.

எதனால் சிறையிருப்பு

அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்தார். அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். நியாய.6:11

மேற்கண்ட வசனத்தில் தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தபோது ஆண்டவர் அவர்களை மீதியானியர் கையிலே ஒப்புக் கொடுத்தார் என வாசிக்கிறோம்.

ஆம், சில நேரங்களில் நாம் கர்த்தருக்கும், கர்த்தருடைய சித்தத்திற்கும் விரோதமாய் செயல்படும் போது சத்துரு நமக்கு விரோதமாக கிரியை செய்ய இடம் கொடுத்து விடுகிறோம். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் தான் இஸ்ரவேல் மக்களுக்கு நடந்தது. இந்த செய்தியை நீங்கள் வாசிக்கும் போது உங்களுக்கு வந்த உபத்திரவத்திற்கு காரணம் என்ன என்பதை தேவனுடைய சமூகத்தில் அமர்ந்து சற்று நிதானித்துப் பாருங்கள்.

சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால், ஒருவனையும் அவர் சோதிக்கிற வருமல்ல, அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். யாக்.1:13,14

ஆகவே தேவனுடைய பிள்ளையே! இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பானதை செய்தபோது 7 வருடம் மீதியான் கையிலே ஒப்புக் கொடுத்தார். நீங்களும் எதாகிலும் சிறையில் அகப்பட்டிருந்தால் உங்களுடைய ஆன்மிக வாழ்க்கையை சற்று சீர்தூக்கிப் பாருங்கள். நீங்கள் மனஸ்தாபப்படும் போது நிச்சயம் உங்களுக்காக மனம் இரங்குவார்.

சிறையிருப்பு கொடுமையானது

மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள்.

அவர்களுக்கு எதிரே பாளையமிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதே போவார்கள்.

அவர்கள் தங்கள் மிருக ஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள். அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும். இந்தப்பிரகாரமாக தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள். நியாய.6:2,4,5 தேவனுடைய பிள்ளையே! கர்த்தருடைய பலத்தினால் கம்பீரமாய் வாழக்கூடிய இஸ்ரவேல் மக்கள் மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக் கொண்டபடியால், குகைகளுக்கும் அரண்களுக்கும் ஓடி ஒளிய வேண்டிய சூழ்நிலை வந்தது. இஸ்ரவேல் மக்கள் நிலத்தின் விளைச்சலை மீதியானியரும், அமலேக்கியரும், கிழக்கத்தி புத்திரரும் கெடுத்து ஆசீர்வாதத்தை இழந்து போகும்படி செய்தார்கள். மேலும், இஸ்ரவேலின் ஆடு, மாடுகளையும், கழுதைகளையும் திருடிக் கொண்டு சென்றார்கள். தேவனுடைய பிள்ளையே! சத்துருவின் சிறையிருப்புக்குள் நாம் செல்லும்போது நம்மையும் நம்முடைய எல்லாவற்றையும் அழிப்பதே சாத்தானின் தந்திரமாகும்.

இயேசு சொன்னார், திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். யோவான் 10:10 ஆம் தேவ பிள்ளையே! சத்துருவின் சிறையிருப்பு மிகவும் கொடுமையானது. உங்கள் வாழ்விலும் கடன் பிரச்சினை, பாவகட்டுகள், கொடிய வியாதிகள், தீராத குடும்ப பிரச்சினைகள் இவற்றினாலே மனசோர்வோடு காணப்படுகிறீர்களா? உங்களுக்கு ஓர் நற்செய்தியை கூற விரும்புகிறேன்.

கர்த்தரை நோக்கிப் பாருங்கள்

இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். நியாய.6:6

எனக்கன்பான தேவனுடைய பிள்ளையே! உங்கள் சிறையிருப்பு சிறிதாக இருக்கலாம். பெரிதாக இருக்கலாம். எப்படிப்பட்ட கட்டுகளிலும், காவல்களிலும் நீங்கள் இருந்தாலும் உங்களை உண்டாக்கின தேவனை நோக்கி கூப்பிடுவீர்களா? நிச்சயம் நீங்கள் அவ்வாறு செய்யும்போது உங்களை விடுவிக்க அவர் வல்லவரும் உண்மை உள்ளவருமாக இருக்கிறார்.

நீங்களும் நானும் வாழ்ந்துக் கொண்டிருக்கிற இக்காலம் பரிசுத்த ஆவியானவருடைய நாட்கள். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்.சகரி.4:6.

ஆகவே கர்த்தருடைய ஆவியானவர் தாமே உங்களோடிருந்து உங்கள் சகல சிறையிருப்புகளையும் மாற்றி நீங்கள் இழந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஐசுவரியத்தையும், ஆரோக்கியத்தையும் மீண்டும் உங்களுக்கு நிச்சயம் தருவார். ஆனால் கர்த்தரை மட்டும் சார்ந்து கொள்ளுங்கள். நிச்சயம் அற்புதங்களைக் காண்பீர்கள்.

குடும்பத்தின் வழிகாட்டி முதியோர்

இன்றைய சூழலில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2050ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடுகளில், குழந்தைகளை விட முதியோர் அதிகளவில் இருப்பர். அதே போல, வளரும் நாடுகளிலும் முதியோரின் எண்ணிக்கை இருமடங்காக உயரும் என ஐ.நா., மதிப்பிட்டுள்ளது. வயதான காலத்தில், இவர்களை நன்றாக கவனிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அக்., 1ம் தேதி, சர்வதேச முதியோர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள், முதியோர்களை மகிழ்விக்கும் விதமாக சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இன்றைய விரைவான உலகில் குடும்ப உறவுகள் என்பது முன்பு இருந்ததை போல இல்லை. பெற்ற பிள்ளைகளால் கவனிக்கப்படமால் கைவிடப்பட்டு, பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்டு, அனாதைகளை போல வாழும் நிலைக்கு முதியோர் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களை பாதுகாக்க ஒவ்வொரு பிள்ளையும் முன்வர வேண்டும் என இத்தினம் வலியுறுத்துகிறது.

முதியோர் சுமையா

முதியோர் குழந்தைகளுக்கு சமம் என கூறுவார்கள். 50 வயதினை கடந்தவர்கள் முதியோராக கருதப்படுகின்றனர். உடல் மற்றும் மனதளவில் அவர்களின் செயல்பாடுகள் மாறிவிடும். முதியோர்களின் அறிவு மற்றும் வழிகாட்டி இன்றைய தலைமுறையினருக்கு மிகவும் அவசியமானது. அவர்களை சுமையாக கருதாமல், வரமாக கருதுங்கள். குடும்பத்தில் முதியோரை அரவணைத்து செல்லுங்கள். நாமும் எதிர்காலத்தில் முதியோர் ஆவோம் என்பதை நினைவில் நிறுத்தி, அந்த சுயநலத்துக்காவது முதியோர்களை கவனிக்க முன்வர வேண்டும்.

குறையுமா முதியோர் இல்லம்

பிள்ளைகள் நல்ல வசதியோடு இருந்தும், பெற்றோர்களை தாங்களே பார்த்துக்கொள்ளாமல் முதியோர் இல்லங்களில் சேர்க்கும் கொடுமையும் நம் நாட்டில் தான் நடக்கிறது. யாருடைய பெற்றோராவது முதியோர் இல்லத்தில் இருந்தால், மீண்டும் வீட்டுக்கு அழைத்துவர இத்தினத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசும் முதியோருக்கு, பென்சன் உள்ளிட்ட சிறப்பு சலுகைகளை வழங்க வேண்டும்.

பெற்றெடுத்த உனக்கு.. நாளை...



பாமரரும் ,கிராமத்தாரும்,
பண்பு மாறவில்லை,
மனசு மறக்கவில்லை,
மறந்தும் செய்யவில்லை.

படித்தவரும்,பட்டினவாசியும்,
அவசியமென நினைக்கின்றார்.
பெருமையோடு செய்கின்றார்.

தன் வசதி மட்டும் கருதி,
தாய் தந்தை வயது காட்டி,
தள்ளாடும், தடுமாறும், காலத்தில்
பெற்றோரை,
முதியோர் இல்லங்களில்
அடைகின்றார் .

பணம் மட்டும் கட்டி விட்டால்
பாசம் என்ன ,
கடைச் சரக்கா வாங்கிவிட!

ஏங்குது உள்ளம்,
எதிர்பார்ப்பது ஒரு வார்த்தை.
கொஞ்ச நினைப்பது,
பேரப்பிள்ளைகளை.

உயிர் கொடுத்து,
கல்வி கொடுத்து,
உடனிருந்து உயர்த்தியது,
உன் பெற்றோர்.
உண்மை தெரிந்தும்,
உயர்வு அறியவில்லை.

பெற்றோருக்கு இன்று ,
பெற்றெடுத்த உனக்கு நாளை .
உன் பிள்ளை உடனிருந்து
கவனிக்கிறான் உன்னை.

சர்வதேச முதியோர் தினமும் முதியோர் உரிமையும்

மனித வாழ்வின் இறுதிப் பகுதியும்இ ஒய்வுப் பகுதியுமாக முதுமைக் காலம் காணப்படுகின்றது. இக் காலப் பகுதியை அடைந்து கொண்ட மனிதர்களை முதியோர் என அழைக்கப்படுகிறது. பொதுவாக முதியோர் என்பவர்களின் வயது எல்லை 60 வருடங்களின் பின்னர் என வரையறை செய்யப்படுகின்றது.

மனிதன் பிறந்து குழந்தையாக சிறுவனாக இளைஞனாக நடுத்தர வயதுடையவனாக எல்லாம் வாழ்ந்து விட்டு கடைசியில் முதியவனாக மாறுகின்றான் இது இயற்கையின் நியதியாகும். இதில் விசேடம் என்ன வென்றால் வாழ்கையின் கடைசிக்கட்டத்தில் முதியவர்களான காணப் பட்டாலும் அவர்களின் நடவடிக்கைகள் மனிதனின் ஆரம்பக்கட்ட மான குழந்தை அல்லது சிறுவர்களின் நிலையை அடைகின்றது. இதன் மூலம் சிலர் முதியோர் மீது கோபம் கொள்கின்றனர். இது பிழையான செயற்பாடும் இயற்கைக்கு முரணான நடவ டிக்கையுமாகும்

சிறுவர் உரிமைபற்றி பேசுவது போல் முதியோர் உரிமைபற்றி அதிகம் பேசப்படுவதில்லை இதனால் முதியோர் உரிமை பற்றிய அறிவு மக்களிடம் குறைவாககாணப்படுவதை அறிய முடிகின்றது. எனவே முதியோர் உரிமை பற்றிய கட் டாயம் அனைவரும் அறிய வேண்டும்இ பேச வேண்டும். முதியோ ரின் செயற்பாடுகள் சிறுவர்களின் செயற்பாடுகளுக்கு ஒத்ததாக காணப்படுவதனால் தான் என்னவோ ஜக்கிய நாடுகள் சபை சர்வதேச முதியோர் தினத்தை சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படும் தின மான ஒக்டோபர்- 01ம் திகதி என பிரகடனப் படுத்தியுள்ளது.

சர்வதேச முதியோர் தினம் ஜக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 1990 டிசம்பர் 14ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு முதல் முதலாக 1991 ஒக்டோ பர்-01ம் திகதி கொண்டாடப்பட்டது. 2016ம் ஆண்டு 26 வது சபை சர்வ தேச முதியோர் தினம் கொண்டாப்படுகின்றது. சர்வதேச முதியோர் தினத் தினை ஜக்கிய நாடுகள் சபை 26 வருடங்களாக பல தொனிப் பொருளின் அடிப்படையில் கொண்டாடுமாறு உலக மக்களை வேண்டி வருகின்றது. இருந்த போதிலும் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தும் மதங்கள் தோன் றிய காலத்திலிருந்தும் முதியோருக்கான உரிமைகளை வழங்குமாறு மதங் கள் கூறியுள்ளன.

இஸ்லாமிய மதத்தின் இறை தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறி னார்கள் சிறியோர் மீதுஅன்புகாட்டாதவனும்இ பெரியோர்(முதியோர்) மீது மரியாதை செலுத்தாதவனும் என்னை சார்ந்தவனல்ல எனவே முதியோர் மீது மரியாதைஇ கௌரவம் காட்டாவிட்டால் அவர் மதத்தி லுள்ளவரல்லர் என்பது அதன் பொருளாக கொள்ளப்படும். இதே போன்று இந்து மதத்தின் பகவத்கீதை கூறுகின்றது மனித வாழ்வின் இறுதிக்கட்ட மான முதுமைக்காலத்தில் முதியவர்களைப் பாதுகாப்பது தர்மமாகும். மேலும் பௌத்த மதத்தின் சிங்காலோவாத சூத்திரத்தில் பின்வருமாறு கூறுகின்றது. பெற்றோருக்காக (முதியோர்) பிள்ளைகள் செய்ய வேண் டிய நலனோம்பல்களை கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும் எனக் கூறுகிறது. அதாவது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்கு தல், மதத்தை பின்பற்றுவதற்கு சுதந்திரம் வழங்குதல், மரணித்த பின்பும் அவர்களுக்காக நற்கிரிகைகள் செய்தல் போன்றவற்றை குறிப்பிடுகின்றது.

ஆனால் இன்று நடப்பது என்ன? பிள்ளைகள் தமது முதிய பெற்றோர் களை பராமரிக்காமல் முதியோடர் இல்லங்களில் சேர்ந்துவருகின்றனர். இவர்களின் பிள்ளைகளும் இதனை இவர்களுக்கு செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எனவே நாம் எவ்வாறு முதியோர்களுடன் நடந்து கொள்கின்றோமோ அவ்வாறே நாம் முதுமை அடையும் போது மற்றவர்கள் எம்முடன் ;நடந் துகொள்வார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக எமது சமுகத்தில் ஒருகதை சொல்லப்படுகின்றது.

ஒருமுதியவர் இறந்தபோதுஅவரின் பேரப்பிள்ளை ஒரு பீங்கானை (பாத்திரம்) எடுத்து பாதுகாப்பாக வைத்துள்ளது இதனை பார்த்த இறந்த வரின் மகனும் சிறுவனின் தந்தையுமான மனிதர் கேட்டார். ஏன் மகன் இதனை எடுத்து வைத்துள்ளிர் என்று அப்போது அச்சிறுவன் கூறினான் அப்பா நீங்கள் உங்கள் அப்பாவுக்கு உணவு வழங்கிய பாத்திரம் தான் இது அதனைத்தான் நான் உங்களுக்கு உணவு தரப் பயன்படுத்த வேண் டும் எனக் கூறினான். இது மிகவும் சிந்தனையூட்டும் கதையாகும். எனவே நாம் முதியவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றோமோ அவ்வாறே நாம் முதியோர்களாகும் போது மற்றவர்களால் நடாத்தப்படுவோம்.

இன்று உலகில் 60 வயதைத்தாண்டிய முதியோர் சுமார் 1.4 பில்லியன் காணப்படுகின்றனர். எனவே இவர்களின் உரிமைகளை அறிவதன் மூலம் அவர்களுக்கான உரிமையையும் கௌரவத்தையும் வழங்க முற்பட வாய்ப் புண்டு மூத்த பிரஜைகளின் உரிமைகளாக சுதந்திரம், பங்கேற்பு, கவனிப்பு, சுயநிறைவு, கௌரவம் என்பவற்றைக் கூறிப்பிட முடியும். சுதந்திரம் எனும் போது உணவு, உடை, உறைவிடம், வேலை, கல்வி, என்பற்றினை அனுபவிக்கும் உரிமைகளைக் குறிக்கும் இவற்றை சமுகப்பாதுகாப்பினூ டாக அவர்கள் சுதந்திரமாக பெறமுடியும். இதே போன்று பங்கேற்பு, கூட் டம் கூடுதல், சங்கம் அமைத்தல் என்பவற்றில் பங்குகொள்ளும் உரிமை. கவனிப்பு எனும் போது உடல், உள, உணர்வு, சுகாதார கவனிப்புகளை வேறுபாடின்றி அனுபவிக்க உரிமை. சுயநிறைவு எனும் போது ஆற்றலை வெளிப்படுத்துதல், கல்விகலாச்சார ஆத்மிகவசதிகளை சமுகத்தில் பெற் றுக்கொள்ளும் உரிமை, அதே போன்று கௌரவம் எனும் போது வயது, பால், இன, சமய இயலாமை என்பவற்றை கருத்தில் கொள்ளாது முதிய வர்களை கௌரவப்படுத்துதல்.

மேற்படி உரிமைகளின் அவசியத்தை நாம் முதியவர்களை கவனிக்கும் போதும் அவர்களுடன் உரையாடும் போது புரிந்து கொள்ள முடியும். சுதந்தி

ரத்தை அவர்கள் அதிகம் விரும்புவார்கள் ஏனையவர்கள் பாடுகள் சிறுவர்கள் கட்டுப்விதிப்பதை அவர்கள் போன்று வெறுப்பார்கள். அதே போன்று பங்கேற்பது என்பது அவர்களுக்கு மிக அவசிய மானதாகும். முதியவர்களை சந்திக்கும் போது அவர்கள் அதிகம் குறைப்படும் விடயமாக இது காணப்படுகின்றது. அவர்கள் கூறுகின்ற வார்த்தையாக நம்மல ஒன்றுக்கும் சேர்க்க மாட்டார்கள் நமது கதையை கேட்கின்றார் கள் இல்லை. என்பதாகும். முதியவர்களுக்கு காசு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை அவர்களின் கதையை சற்று நேரம் நாம் கேட்டுக்கொண்டிருந் தாலே போதும் அது அவர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சியை வழங்குகின்றது என்பது எனது அனுபவத்தின் உண்மை. எனவே அவர்களின் உரிமையை மதிக்கவும்இ கொடுக்கவும் எமது சிறுவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். அதனை நாம் மேற்கொள்வதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

பழையது தங்கம் போன்றது (Old Is Gold) என ஆங்கிலத்தில் கூறுவார்கள் உண்மையில் இது மிக வும் முக்கியமான கூற்று. அவர்களின் அனுபவங் கள் எமக்கு மிகவும் பிரியோசனமானது ஏன் எனில் அனுபவம் விஞ்ஞானத்தின் தாய் என்பார் (EX-PERIENCE IS MOTHER OF SCIENCE) எனவே நாம் அவர்களின் அனுபவத்தை பெறும் போது அது நமக்கும் நன்மை பயக்கும், அவர்களுக்கும் மகிழ்ச்சி கொடுக்கும் அதன் மூலம் முதியவர்கள் தங்களுக்கு கௌரவம், பங்கு பற்றும் உரிமை, ஏனைய உரிமைகள் கிடைக்கப் பெற்றதாக உணர்வார்கள். இதனால் முழு சமுகத்திலும் சந்தோசம் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

மேலும் மனித உரிமைகள் மேம்பாட்டாளர்கள் முதியோரின் உரிமையில் மிகவும் உணர்வு பூர்வமான ஒரு சிந்தனையை முன் வைத்துள்ளனர் அதாவது 60 வயதை தாண்டிய எமது மானிடரை முதியோர் என அழைப்பது அவர்களின் மனதுக்கு சங்கடத்தை அல் லது விருப்பமின்மையை ஏற்படுத்துமாக இருந்தால் முதியோர் எனும் சொற் பிரயோகத்திற்கு பதிலாக வயது வந்த பெற்றோர்கள் எனக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. என கருதுகின்றனர்.

கட்டுரையாளரான நானும் இதனை விரும்பிய போதிலும் பரீட்சியமான சொற் பிரயோகமான முதியோர் என்பதை பாவித்துள்ளேன் ஏனெனில் இக்கட்டுரை இச்செற்பிரயோகத்தின் மூலம் வாச கர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற் காக ஆகும்.

எனவே உலகில் நாம் நல்ல மனிதர்களாக வாழ வேண்டுமாக இருந்தால் எமது சிறுவர்கள் பெண்கள் முதியோர் உரிமைகளை வழங்கி நடக்க வேண்டும் முதியோர்களின் செயற்பாடுகளை மதித் தல் அவர்களுக்கு உதவி செய்தல் போன்றவை தர்ம மாகும் எனவே இந்த சர்வதேச முதியோர் தினத்தில் முதியோர்களை கௌரவப்படுத்தும் மக்களாக நாம் அனைவரும் செயற்பட திட சங்கற்பம் பூணுவோம் இதற்கு இறைவனின் உதவி கிட்ட பிராத்திப்போம் வாழ்க மனித நேயம்.

போதும் மகனே போதும்...

தவமிருந்துதான் பெற்றோம்
உன்னை,
தடுமாறி வாழ்கை நடத்தியபோதும்
தனித்தன்மையாய் வளர்த்தோம்,

உன் எச்சில் பட்ட
என் கண்ணங்கள்
இன்னும் குளிருதாடா..!மகனே...

உன் மழலை புன்னகையை
பிச்சை கேட்டு
பல நாட்கள் உன்னிடம்
மண்டியிட்டிருக்கிறேன் ,
என் செல்ல மகனே...,

உன் பால் வாசத்தில்
என் பாசம் உணர்ந்தேன்,

நீ கடித்து காயபடுத்திய
என் கன்னத்து தழும்பை
இன்னமும் முத்தமிடுகிறாள்
உன் அம்மா...!

என் கிழிந்த வேட்டியை
மறைத்து,மடித்து கட்டி
வேட்டி வாங்கும்
பணத்தில் வாங்கியதுதான்
உன் வெள்ளி பாலாடை...!
என் அன்பு மகனே..!

முதல் முறை
நீ பள்ளி செல்லும்போது
உன்னை மருத்துவனாகதான்
பார்த்தேன் இந்த பாவி..,

கல்லூரி செல்லும்போது
கர்வத்தோடு பார்த்தேன்...,

மணக்கோலத்தில் உன்னை
பார்த்தபோதுதான்,
உயிருடன் மோட்சமான
முதல் மனிதனானேன்..,

என் கடமை முடிந்தது
என் அன்பு மகனே...!

ஓர் இரவு,
வீட்டில் படுத்துவிட்டு
விழித்து பார்த்தால்,
நானும் உன் தாயும்
கிடந்தது
''முதியோர் இல்ல'' வாசலில்...,

பேர பிள்ளைகள்
உதைக்க காத்திருந்த
மார்பில்,
நீ உதைத்ததெப்படி..?
என் செல்ல மகனே..!
என் மகன் இப்படி ஆனதெப்படி..?

உன் தாய்
கொடுத்த பால்
விஷமானதெப்படி..?

என் மேல் சிந்திய
உன் எச்சில்
அமிலம் ஆனதெப்படி..?

போதும் மகனே போதும்..!

உயிரை கொல்பவன் மட்டும்
கொலைகாரன் அல்ல...
உணர்வை கொல்பவனும்தான்..,

நீ கொலைகாரன் ஆனதெப்படி...?

நீ செய்ததை
என் உடல் தாங்கும்...
என் உள்ளம் தாங்காது..

நான் தாங்குவேன்
உன் தாய்
தாங்கமாட்டாள்...!
பாலூட்டியவளாயிற்றே...!!!

மகனே..!
வாரம் ஒருமுறை
என் பேரப்பிள்ளைகளை
கூட்டி வா..,
இவர்கள்தான் ''தாத்தா பாட்டி''என்று
அறிமுகம் செய்,

''தாத்தா பாட்டி சாமிகிட்ட போய்டாங்க'',
என்று கூறி எங்களை
உயிரோடு எரிக்காதே...!

எங்கள் நிலை பார்த்து
உன் பிள்ளைகள்
வளர்ந்தால்தான்,
நீ எங்கள் நிலைக்கு
வராமல் இருப்பாய்..!!!

நீ மிகவும் நல்லவன்
என் செல்ல மகனே..!!!
அனாதையாக எங்களை
விட்டுவிடாமல்,
முதியோர் இல்லத்தில்...
சேர்த்தாயே...!!!

நன்றி மகனே
என் மகன் நல்லவன்...!!!

- இளையபாரதி

மட்டக்களப்பு புதூர் விக்னேஷ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், புத்தொளிசஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் பாடசாலை அதிபர் கே பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்கள் புத்தொளி சஞ்சிகையை வெளியீட்டு வைப்பதையும் படத்தில் காணலாம்.

படம்: க.விஜயரத்தினம்

மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக்கழகத்தின் 45வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள மின்னொளி உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி-2018மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் ஆரம்பமானது. இதில் முதல் போட்டியில் கல்முனை லக்கி ஸ்டார் விளையாட்டு கழகத்தை எதிர்த்து கல்முனை பிரிலியண்ட் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்தப் போட்டியில் 4-1 என்ற கோல் வித்தியாசத்தில் கல்முனை பிரிலியண்ட் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

படம்: எம்.என்.எம்.அப்ராஸ்

ஆலையடிவேம்பு சிவத்தொண்டர் சபையின் ஏற்பாட்டில் மாணவர்கள் கௌரிப்பும் நூல் வெளியிடும் அக்கரைப்பற்று கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்றபோது நூல் வெளியீடு இடம் பெறுவதையும் அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் பா.உ.செல்வம் அடைக்கலநாதன் பரிசில் வழங்கி வைப்பதையும் படத்தில் காணலாம்.

படம்: ஆலையடிவேம்பு நிருபர்

சுகவாழ்க்கைப் பேரவை அமைப்பு தேசிய ரீதியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வாரம் வெள்ளவத்தை கொழும்புத் தமிழ் சங்க கேட்போர் கூடத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதன் போது சுகவாழ்க்கைப் பேரவையின் தலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை வெற்றியீட்டிய மாணவனுக்கு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படம்: கல்முனை நிருபர்

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் கே.எம். முகம்மது அனிபா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட 24 மாணவர்களுக்கு தலைமைத்துவ சின்னம் அணிவிக்கப்பட்டது.

படம்: சேனையூர் நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.